# வீடும் வெளியும்

வல்லிக்கண்ணன்

காவேரி புத்தக நிலையம்
சென்னை-17.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வீடும் வெளியும்

வல்லிக்கண்ணன்

வல்லிக்கண்ணன்

காவேரி வெளியீடு : 20

முதற் பதிப்பு; மார்ச், 1967

விலை ரூ 3—00

அச்சிட்டோர்;
பாரதம் பிரஸ், சென்னை-17

# வீடும் வெளியும்

— வல்லிக்கண்ணன் —

# வீடும் வெளியும்

## 1. மக்கள் இட்ட தீ!

திருநகர் என்னும் அழகான பெயரையும் வளப்பு நிறைந்த தோற்றத்தையும் பெற்றிருந்த அந்த ஊர் இரண்டு மூன்று நாட்களாகப் பரபரப்புக்கு உள்ளாகி யிருந்தது. உருக்கம் நிறைந்த காட்சிகளும் வெறி மிகுந்த கூத்துக்களும் நிகழும் அரங்கமாக மாறியிருந்தது அவ்வூரின் பெரிய கடை வீதி.

அக் கடைத் தெருவில் பெரிய பெரிய ஜவுளிக் கடைகள் இருந்தன. தினந்தோறும் பெருத்த அளவுக்கு வியாபாரம் நிகழக்கூடிய இடங்கள் எல்லாம் இப்போது உணர்ச்சிகரமான செயல்களுக்கும் சோகமய நாடகங் களுக்கும் வகைசெய்யும் களங்களாக விளங்கின.

வெண்ணிற உடை தரித்த தொண்டர்களும், ஆரஞ்சு வர்ண ஆடை புனைந்த பெண்களும் ஒவ்வொரு கடைக்கும் முன்னால் அமைதியாக நின்றார்கள். துணி வாங்க வருவோரை வழிமறித்து, வணக்கம் அறிவித்து, "அந்நிய நாட்டுத் துணிகளை வாங்காதீர்கள். சுதேசித் துணிகளை வாங்குங்கள், கதரே கட்டுங்கள்!" என்று வேண்டு தல் தெரிவித்தார்கள். வழியோடு சென்றவர்களிடம் துண்டுப் பிரசுரமும் அளித்தார்கள்.

அமைதி நிறைந்த சாதாரணச் செயலாகத் தோன்றிய இந் நிகழ்ச்சி நாடெங்கும் அடக்கு முறை யையும், தடியடி தாண்டவத்தையும் தூண்டிவிட்டிருந்

தது. மக்கள் உள்ளத்திலே உணர்ச்சிக் கனலையும், ஆர்வத் தீயையும் மூட்டிவிட்டது. எங்கும் எல்லோரும் மறியலைப் பற்றியும், மக்களைச் செயலுக்குத் தூண்டி விட்ட மகாத்மாவின் சக்தி பற்றியுமே பேசினார்கள். பிரசங்கத்துக்கும் ஊர்வலத்துக்கும் குறைவே கிடையாது.

திருநகரிலும் எல்லாம் சிறப்பாகவே நிகழ்ந்து கொண்டிருந்தன. வக்கீலும், டாக்டரும், பேராசிரியரும், வியாபாரியும், மாணவர்களும், சாதாரண மக்களும் புத்துணர்வும் புதுவிழிப்பும் பெற்று, விதேசித் துணிகளைக் களைந்து தீயிட்டுப் பொசுக்கி விட்டு, ஜவுளிக்கடைகளின் முன்னே நின்று மறியல் செய்யவும், சுதேசியத்தின் சிறப்புக் குறித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும் முன் வந்த பெருமையைத் திருநகரும் கண்டு அனுபவித்தது.

அன்று முக்கியமான நாள்.

நகரின் பிரபல வக்கீல் மகாதேவனின் மனைவியும், டாக்டர் கிருஷ்ணனின் மனைவியும் மற்றும் பல மங்கையரும் மறியலில் ஈடுபடும் புனித தினம் அது. நகரத்தின் பெரும் பணக்காரரான செந்தில்நாயகத்தின் பெரிய ஜவுளிக்கடை முன்தான் அவர்கள் மறியல் புரிகிறார்கள்.

கடைவீதியில் வேடிக்கை பார்க்கும் கும்பல்கூடி நின்றது. கொடி உயர்த்தி, கோஷம் செய்து, ஊர்வலம் வந்த தாய்மார்கள் கடைகள் முன்நின்று தங்கள் வேலையை ஆரம்பித்தார்கள்.

பெரிய ஜவுளிக் கடைகளுக்கு துணிமணிகள் வாங்க வந்தவர்களில் பலர் திரும்பிச் சென்றார்கள். சிலர் கடைக்குள் போய் வியாபாரம் செய்வதில் முனைப்பாக இருந்தார்கள்.

செல்வர் செந்தில்நாயகத்தின் முகத்தில் கடுகடுப்பு கொலுவிருந்தது. "வேலையற்றவர்கள்! இப்படி வீணாக நின்று கத்திக்கொண்டிருப்பதினாலா சுயராச்சியம் வந்து விடப் போகிறது?" என்று, வாடிக்கைக்காரர் ஒருவரிடம் முனகினார். "இவர்களுக்கு விருப்பம் இல்லையென்றால்

நல்ல துணிகளை வாங்கிக் கட்டவேண்டாம். துணி வாங்க வேண்டும் என்று கடைக்கு வருகிறவர்களை ஏன் வழி மறிக்க வேண்டும்?'' என்றும் சீறினர்.

அவரைப் போல் எண்ணி வாளா இருந்து விடவில்லை அரசு. மக்களின் வலிமை மிகுந்த எதிர்ப்பை உணர்ந்த ஆட்சி விழிப்புற்று வீறு கொள்ளும் சக்தியை அடக்கிவிட முயன்றது. அடக்கிவிடலாம் என்று ஆசை கொண்டது.

வக்கீல் மனைவி மங்கையர்க்கரசியும், டாக்டர் மனைவி பாக்கியமும், மற்றும் பலரும் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் நின்ற இடத்திலே வேறு சிலர் வந்து வேலையைத் தொடர்ந்தார்கள்.

அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்த இந் நிகழ்ச்சியிலே பரபரப்பூட்டும் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

மத்தியான வேளை. பள்ளிக்கூடங்கள் இடை வேளைக்கு விட்டிருந்த நேரம். பிள்ளைகள் சாரி சாரியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். கடைவீதியில் நடமாட்டம் அதிகமாகவே இருந்தது.

அப்போது நீட்டி முழங்கும் இரட்டைச் சங்கின் ஒலி எழுந்து மிதந்தது. ''பாடை வருது... சவம் வருது'' என்ற பேச்சு அங்கும் இங்குமாக எழுந்தது.

பிணத்தை எடுத்துச் செல்லும் ஊர்வலம் விரைவாக நடு வீதியில் வந்து கொண்டிருந்தது.

''சுடுகாட்டுக்கு பிணத்தை இந்த வழியாக எடுத்துச் செல்வது கிடையாதே? இது என்ன வழக்கம் இல்லாத வழக்கமாக இருக்கிறது!'' என்று சிலர் முண முணத்தார்கள்.

கொள்ளிச்சட்டி, குடம், சங்கூதல் முதலிய சகல சம்பிரமங்களோடும் வந்த 'சவ ஊர்வலம்' செந்தில் நாயகத்தின் கடை முன்னே நின்றது. பாடையைச் சுமந்து வந்தவர்கள் மௌனமாக அதை நடுத்தெரு விலேயே இறக்கினர்கள். சட்டி சுமந்தவனும், குடம் எடுத்தவனும் அதைச் சுற்றிவந்தார்கள்: 'சவத்துக்கு'த்

தீயிட்டார்கள். முதலாளி கடை முன்னே குடத்தைப் போட்டுடைத்தான் ஒருவன்.

"அந்நிய ஆட்சி அடியோடு ஒழிக! மல் விற்கும் மண்டூகங்கள் கூண்டோடு தொலைக!" என்று ஒருவன் கூவினான்.

அப்போதுதான் இது மறியலைச் சேர்ந்த ஒரு நாடகம் என்பது அனைவருக்கும் புரிந்தது.

பிணமாகக் கிடத்தப்பட்டிருந்தது, உயர்ந்த ரக மல் துணியினால் உருவாக்கப் பெற்ற ஒரு உருவம்தான். ராஜப்பிரதிநிதியின் (வைசிராய்) பொம்மை அது. அதன்மேல் 'அந்நிய ஆதிக்கம்' என்ற சிவப்பு எழுத்துக் காணப்பட்டது.

அந்த உருவம் மட்டுமே எரியவில்லை, சுற்றிலும் நின்ற பலரும் தங்கள் சட்டைகள் துணிகளை எடுத்து தலையைச் சுற்றி, தீயில் வீசினார்கள். பள்ளியிலிருந்து திரும்பிய மாணவர்களில் அநேகர் தங்கள் சட்டைகளையும் கழற்றித் தீயில் போட்டார்கள்.

பற்றி எரிந்த 'சொக்கப்பனை' எல்லோருக்கும் உற்சாக மூட்டியது.

அவர்களுடைய உற்சாகத்தை விரட்டி அடிக்க வந்ததுபோல், கண்மூடித்தனமாகத் தடிகளைச் சுழற்றிக் கொண்டு திமுதிமு வென்று பிரவேசித்தார்கள் போலீஸ் காரர்கள். தலை, தோள்பட்டை, முகம், முதுகு என்று பாராமல் மறியல் செய்த தொண்டர்களையும் கும்பலில் நின்றவர்களையும் அடித்து நொறுக்கினார்கள்.

கும்பல் செறிந்து காணப்பட்ட கடைவீதி ஒரு சில நிமிஷங்களிலேயே வெறிச்சோடி விட்டது. ரத்தமும் அழுகையும் கலந்து தோன்றிய அக் களத்தில், மூங்கில் கழிகளும் உடைந்த குடமும் எரியும் தீயும் சுடுகாட்டுச் சாயலைச் சேர்த்தன.

ஆண் என்றும் பெண் என்றும் பெரியவர் என்றும் சிறுவர் என்றும் பாராது வெறித்தனமாக அடித்து ஆனந்தம் கண்ட போலீஸ்காரர்கள் சில பேரை இழுத்து

தங்கள் வண்டிக்குள் தள்ளிக் கதவடைத்துக் கொண்டு, அங்கிருந்து சென்றார்கள்.

"இது அக்கிரமம்! மிருகத்தனம்!" என்று சில மாணவர்கள் உறுமினார்கள்.

"நாமும் இதை எதிர்ப்போம்!" என்று துணிந்து முன் வந்தான் ஒரு இளைஞன்.

"நடராஜன், உன் அப்பா ஒரு போலீஸ்காரர் ஆச்சுதே!" என்று கிண்டலாகச் சொன்னான் அவன் நண்பன் காந்திமதிநாதன்.

"உனக்கும் மனச்சாட்சி இருந்தால், அநியாயத்தை எதிர்க்கும் தைரியம் இருந்தால், உங்க அப்பா கடை முன்னால் நின்று மறியல் செய்யேன்" என்றான் நடராஜன்.

காந்திமதிநாதன் தயங்கவில்லை. தனது புத்தகங்களையும், உடம்பில் கிடந்த சில்க் சட்டையையும், எரிந்து கொண்டிருந்த நெருப்பிலே விட்டெறிந்தான். "வந்தே மாதரம்!" என்று உவகைக் குரல் கொடுத்தவாறு, செந்தில்நாயகத்தின் கடைமுன் போய் நின்றான். மறியல் சுலோகங்களை ஆரவாரித்தான்.

மற்றும் பலரது கூவலும் அவன் குரலோடு இணைந்தது.

## 2. சொக்குக் கவிராயர்

"ஏ சொக்கையா, உன் மனசிலே நீ என்னதான் நினைச்சுக் கிட்டிருக்கிறே? சும்மா பாட்டுப் பாடிக்கிட்டு ஊர்சுற்றித் திரிஞ்சா, வீட்டுப்பாட்டை யாரு கவனிக்கிறதாம்?" வெடு வெடுத்தாள் பார்வதி அம்மாள்.

அவள் அருமை மகன் சொக்கையா கையிலிருந்த 'ஜால்ரா'வைத் தட்டி ஓசை எழுப்பினான்.

'ஆங்கிலப் பேய்களெல்லாம்
ஆ வென்று அலறுது பார்!

காந்தி எனும் பூசாரி
சத்தியக் குழை அடிச்சார்!
வெள்ளைப் பேய்களெல்லாம்
வெருண்டு மிரளுது பார்!'

என்று நீட்டி முழக்கினான்.

''சரிதாம்போ. நீ சிங்கி தட்டிக்கிட்டே இருந்தால் நாளையச் சாப்பாட்டுக்கு என்ன செய்வியோ, எனக்குத் தெரியாது'' என்று புலம்பினாள் தாய்.

'பருப்பு முள்ளங்கி சாம்பார்
பல்லாரி ஜில்லாச் சிறையில் என்பார்!
நல்லாயிருக்கு மென்று
அள்ளி உண்டு விட்டால்...'

என்று மகன் பாட ஆரம்பிக்கவும் அம்மாளுக்கு எரிச்சல் தான் ஏற்பட்டது.

''நீ எக்கேடும் கெட்டுப் போ. நான் என் வேலையைக் கவனிக்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றாள் அவள்.

சொக்கையா என்கிற சொக்கலிங்கம், ஏதோ பெரிய வேடிக்கையைக் கண்டுவிட்டவன் போல, வெடிச் சிரிப்பு சிதறினான். கண்ணாடி முன் நின்று தனது முக அழகை ரசித்துக் கொண்டான். பரட்டைத் தலை போல் தோற்ற மளித்த தலை முடியைச் சீப்புக்கு அறிமுகம் செய்து வைத்தான். ஆயினும் அது அடங்காமல் சிலிர்த்துக் கொண்டுதான் நின்றது. தொள தொள வென்றிருந்த நீண்ட சட்டையை அணிந்து, நீலமும் அல்லாத பச்சை நிறமும் இல்லாத ஆனால் இரண்டும் கலந்தது போன்ற ஒரு வர்ணம் காட்டும் பெரிய சால்வையை மேலே ஸ்டைலாகப் பரப்பிக் கொண்டான். தங்க விளிம்புக் கண்ணாடியை (இருண்ட நிறம் பெற்றிருந்த 'கூலிங் கிளாஸ்') அணிந்து, கண்ணாடியில் படிந்த தன் நிழலைப் பார்த்து, பெருமைப் புன்சிரிப்புக் காட்டி, தலையை ஆட்டினான். ஜால்ராவைத் தலைக்கு மேல் வைத்து அதை வெள்ளைக் குல்லாயினால் மறைத்தான்.

'புவி போற்றும்
கவிராச சிங்கம்
அவனியோர் புகழும்
அன்புத் தங்கம்'

என்று பாடிக்கொண்டு, வீட்டுக் கதவை இழுத்துப் பூட்டினன். சாவியை வழக்கமாக வைக்கும் ஒரு மறைவிடத்தில் வைத்துவிட்டு வெளியே கிளம்பினன்.

'ஐயாப்பிள்ளை உலகம் சுற்றக் கிளம்பியாச்சி!' என்று அவன் மனம் பேசியது. அவனுக்கு உலகம் என்பது திருநகரின் பெரு வீதிகள்தான். "சொக்குக் கவிராயர் வந்து விட்டார்! சொக்குப் புலவர் வாருரு" என்று மகிழ்ச்சியோடு வரவேற்க அன்பர்கள் எங்கும் இருந்தார்கள்.

'கவி காளமேகத்தின் வாரிசு' என்று சொல்லிக் கொண்டு, 'இம்மென்ருல் பாட்டு; ஏன் என்ருல் வேட்டு!' என்ற ரீதியில் சொல் அடுக்கியவாறு திரிந்த சொக்கையா ஆதியில் பீடி விளம்பரங்களுக்குப் பாட்டு எழுதும் பணியில் முனைந்துதான் கவிராயராகப் பரிணமித்தான்.

'ஜாடி மார்க்குப் பீடி
தேடி வாங்கு ஓடி!
ஒன்ருய் நின்று கூடி
சுவைத்து மகிழலாம் வாடி!'

என்ற தன்மையில் அவன் பாடிய பாட்டுக்கள் அவனுக்குப் புகழையும் கவனிப்பையும் பெற்றுத் தந்தன. அவ்வப்போது காப்பிக்கும் டிபனுக்கும் வகை செய்து தந்தன.

சொக்குக் கவிராயர் பீடிப் புகழ் பாடும் புலவர் நிலையிலிருந்து வளர்ந்து. காளி அம்மன் கோயில் கொடை, திருவிழாக்கள் சமயத்தில் பால்குடம் கரகம், காவடி வகையரா சுமந்து ஆடுவோர் கூட்டங்களுக்குப் பாட்டுகள் பாடும் பாவலராஞர். அவருடைய கீர்த்திக் கொடி மேலும் உயர்ந்து படபடப்பதற்கு தேசியப் போராட்டமும், மக்களின் எழுச்சியும் துணை புரிந்தன.

இருபத்தைந்து வயதுக்குள்ளேயே சொக்கையா 'திக்கெலாம் புகழும் கவிராயர்' என்ற சிறப்பைப் பெறக் காலம் உதவியது.

இப்போது வீட்டை விட்டுக் கிளம்பிய சொக்கையா கடை வீதியை நோக்கிப் போகிற பாதையில் ஒருவர் குறுக்கிட்டார். "உம்மை எசமான் கூட்டி வரச் சொன்னாக" என்றார்.

அந்த ஆளை மேலும் கீழுமாக ஏறெடுத்துப் பார்த்த கவி "எசமானா? இவருக்கு எசமான் யாருமே கிடையாதே!" என்று கிண்டலாகச் சொன்னார்.

"மேடை வீட்டுப் பெரிய எசமான் உம்மிடம் ஏதோ சொல்லணுமாம். அவர்தான் உம்மைக் கூட்டிவரச் சொன்னார்" என்று அந்த நபர் அறிவிக்கவும், சொக்கையா தலையை ஆட்டிக் கொண்டார்.

"அதுவும் அப்படியா! போய்ப் பார்த்தால் போச்சு!" என்று அலட்சியமாகச் சொல்லி மிடுக்கு நடை போடலானார்.

## 3. தந்தையும் மகனும்

தி நநகர் பெரிய கடைவீதியில் உள்ள 'காந்தி மதி விலாசம் பட்டு ஜவுளிக்கடை' முதலாளி செந்தில் நாயகம் எந்த விஷயத்தை எண்ணியும், எந்த ஒரு நிகழ்ச்சியைக் கண்டும் அதிர்ச்சி அடையக் கூடியவர் அல்லர். அவருடைய கடை முன்னாலும், மற்றுமுள்ள ஜவுளிக்கடைகளின் முன்னும் மக்கள் மறியல் என்று வழிமறித்து நின்றும், அயல்நாட்டுத் துணிகளைத் தீயிலிட்டுப் பொசுக்கியும் புது விழிப்பையும் புத்துணர்ச்சியையும் வெளிப்படுத்திய புதுமைச் செயல் கூட அவருக்கு வியப்போ வேதனையோ தரவில்லை.

போலீசார் திடியடி தர்பார் நடத்தி வெறிக்கூத்து பயில்வதைக் கண்ணால் கண்டிருந்தும் கூட, 'நம்

நாட்டினர், நம் ஊரார், நம்மவர் இவ்வாறு சித்திரவதை செய்யப்படுகிறார்களே!' என்ற உளக்கிளர்ச்சி அவருக்கு ஏற்படவே யில்லை. மாறாக, 'வேண்டியதுதான்! வெந்ததைத் தின்னுபோட்டு விதி வந்தால் சாவோமின்னு கிடக்காமல், வெள்ளைக்காரன் சர்க்காரை எதிர்த்து ஆர்பாட்டம் செய்ய ஆரம்பித்தால், அவன் சும்மாவா இருப்பான்?' என்ற ரீதியில் அவர் கெக்கலித்து மகிழத் தவறினாரில்லை.

'பணம், மேலும் பணம், மேலும் அதிகமாகப் பணம்' என்பதை மந்திரமாக உச்சரித்தும் பணம் சேர்ப்பதையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டும், உயிர்வாழ்ந்த முதலாளி ஐயாவுக்கு முதல் அதிர்ச்சியாகவும் பெரும் தாக்குதலாகவும் அமைந்தது அவருடைய மகன் காந்திமதிநாதன் அவர் கடை முன்னாலேயே மறியல் செய்யக் கிளம்பிய நிகழ்ச்சி இது அவர் எதிர்பாராதது; எவருமே எதிர்பார்க்க முடியாதது.

காந்திமதிநாதன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். செல்வமாக வளர்ந்த பையன். அது அவனுடைய தோற்றத்திலேயே தெரியும். அவன் பார்ப்பதற்கே ஒரு இளவரசன் மாதிரி காட்சிதருவான். எந்த நேரத்தில் பார்த்தாலும், கழுவி சுத்தம் செய்யப்பட்ட அழகுப் பதுமை மாதிரி அவன் தோற்றம் அளிப்பான். காலை வெயிலில் புது வனப்புடன் மிளிரும் மலர்போலவே சதா விளங்கும் அவன் முகம். உயர்ந்த ரகத்துணிகள் அணிந்து, ஜம் என்று உலா வரும் உல்லாச புருஷன் அவன் என்றே அவனைக் காணும் எல்லோரும் எண்ணுவர்.

அவனுக்கென்று உள்ளமும் உணர்வும், குறிக்கோளும் ஆசைக் கனவுகளும் தனியாக இருக்க முடியும் என்று அவனுடைய அப்பாவும் அம்மாவும்,நினைத்ததில்லை. 'அவன் சரியான அப்பா பிள்ளை' என்றே உறவினர் கருதினர், அவன் 'கல்யாணப் படிப்புப் படிக்கிறான்; பி ஏ. படித்து முடித்துவிட்டால் கல்யாணச் சந்தையில் அவனுக்கு நல்ல கிராக்கி ஏற்படும்; பெரிய இடத்திலிருந்து பணத்தோடும் நகையோடும் பெண்வரும் என்ற

எண்ணத்திஞலேயே செந்தில்நாயகம் அவனைப் படிக்க வைக்கிறார் என்று பலரும் சொல்லுவது வழக்கம். அது உண்மையாகவும் இருக்கலாம். பெற்ரோர் பலரின் வாழ்க்கை லட்சியமும் அதுதானே!

முதலாளி ஐயாவின் தனி மகன் அவன். அவனுடைய எதிர்காலம் மிகவும் ஒளி நிறைந்ததாக இருக்கும்—இருக்கவேண்டும்—என்று, வசதிகள் பலவும் படைத்த தந்தை ஆசை வளர்த்தார் என்ருல், அதில் என்ன தவறு இருக்க முடியும்?

ஆனால், அவருடைய கணிப்பே தவறு என்று அடித்துச் சொல்வதுபோல் அல்லவா பையன் செயல் புரிந்து விட்டான்!

எரியும் நெருப்பில் புத்தகங்களையும், சில்க் சட்டையையும் வீசி எறிந்துவிட்டு, "வந்தே மாதரம்! அயல் நாட்டுத் துணிகளை அகற்றுங்கள்! சுதேசியத்தை ஆதரியுங்கள்!" என்று கூவியவாறு காந்திமதிநாதன் கடைமுன் வந்து நின்றதும், கடைச் சிப்பந்திகள் "எசமான், ஐயோ சின்ன முதலாளி!" என்று பதைப்புக் குரல் கொடுத்தார்கள்.

உள்ளே எதையோ கவனித்துக் கொண்டிருந்த பெரிய முதலாளி 'என்னவோ ஏதோ என்று' பதறியபடி வெளிப் பக்கம் பார்வையைத் திருப்பிஞர். தன் மகன் மீது தடியடி பட்டிருக்குமோ, அல்லது காலிப் பயல்கள் தன் அருமை மகனைத் துன்புறுத்துகிருர்களோ என்று அவர் அஞ்சிஞர். அப்படி எதுவும் நடந்துவிடவில்லை என்பதை பையனின் சிரித்த முகமும் அமைதியான தோற்றமும் காட்டிக் கொடுத்தன.

ஆயினும், அவனுடைய அந்தக் கோலமே விபரீதமானதாய் தோன்றியது அவருக்கு. அவன் அடிபட்டு விழுந்து கிடப்பதைக் கண்டிருந்தால்கூட அவர் அவ்வளவு திடுக்கிட்டிரார்! இப்போது அவர் உள்ளத்தில் ஆத்திரம், அவமானம், பெருங்கோபம் எல்லாம் பொங்கிப் புரண்டு குழம்பின.

"காந்தி! என்ன விளையாட்டு இது! வீட்டுக்குப் போ!" என்றார் தந்தை. குழைவாக, இயல்பான குரலில் பேசுவதாகத்தான் அவர் நினைத்தார். ஆனால் அவருடைய உள்ளக் கடுகடுப்பு அனலெனக் கனன்றது, அவர் வாயிலிருந்து உதிர்ந்த சூடான சொற்களில்.

"பைத்தியக்காரத் தனத்துக்கும் ஒரு எல்லை இருக்கணும், காந்தி! ஊரில் உள்ள பைத்தியக்காரங்க கூட நீ ஏன் சேரணும்?" என்றார் அவர்.

காந்திமதிநாதன் கரம் கூப்பினான். "நம் நாட்டைச் சுரண்டிக் கொழுக்கும் அந்நிய வர்த்தகத்தை எதிர்ப்போம். நம்நாட்டு ஏழை மக்களின் வயிற்றிலடிக்கும் அயல்நாட்டு வாணிபத்தைப் பகிஷ்கரிப்போம். அந்நியச் சரக்குகளைத் தீயிட்டு எரிப்போம்!" என்று பணிவாக, ஆயினும் உறுதி கலந்த குரலில் சொன்னான்.

"காந்திக்கு ஜே! காந்திக்கு ஜே!" என்ற ஒலிபெருகிப் பரவியது, உடனே.

திருநகரின் மக்கள் அந்நேரத்தில் எந்த காந்திக்கு ஜே போட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாது விழித்தார்கள் கடைக்காரர்கள் உணர்வற்றுக் கிடந்து, அடிமைத்தனத்தையும் தவிர்க்க முடியாத இயல்பாக—வாழ்க்கை நியதி என்றே—மதித்து, உண்டு உறங்கி ஏதேதோ செய்து நாளோட்டிய நாட்டு மக்களை விழிப்புற்று விடுதலை தாகம் பெறச் செய்து, செயல் வீரர்களாக மாற்றிய அண்ணல் காந்திக்கு அவர்கள் ஜே சொல்லியிருக்கலாம். தந்தையையே எதிர்த்து, சுயநலம் உதிர்த்து அவரிடமே நல்லுரை கூறத் துணிந்த முதலாளி மகன் காந்திக்கும் அவர்கள் ஜே போட்டிருக்கக் கூடும். மக்களின் உணர்ச்சி உற்சாகம் எப்படி எப்படியோ வெளிப்பட்டுக் கொண்டிருந்த வேளை அது. அந்த இடத்திலேயே மகனைப் பிடித்து, 'நாடகமாலேய் ஆடுறே?' என்று கன்னத்தில் இரண்டு அறை கொடுத்து, அவனுக்கு புத்தி புகட்டவேண்டும் என்றுதான் முதலாளி ஐயாவுக்கு சூடு பிறந்து. ஆனால் சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் நினைவில் நிறுத்தி அவர்

மௌனமானார். அவருடைய உள்ளம் கண்ணும்புக் காளவாய் ஆக தகித்துக் கொண்டிருந்தது.

திட்டத்தின்படி மறியல் முடியும் நேரம் வந்ததும் தொண்டர்கள் புறப்பட்டு விட்டார்கள். காந்திமதி நாதனும் நடராஜனும் அவர்களோடு சென்றார்கள். அவர்களாக உடன் செல்லாவிடினும் இதர உற்சாகிகள் அவர்களைச் சும்மா விட்டுவிடுவார்களா என்ன?

ஒருகீரம் புகுந்து தடியடி கொடுத்து, சிலரைச் சிறைபபிடித்துச் சென்ற போலீசார் பிறகு தலைகாட்டவில்லை. ஒரு நாளைக்கு ஒரு தடவை தங்கள் திருவிளையாடலை நிகழ்த்தினால் போதும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்திருக்கலாம்!

" பயல் வீட்டுக்குத் தானே வருவான்! வரட்டும்!" என்று பொருமினர் முதலாளி.

அவர் வீடு சேர்ந்ததும், "பார்வதம், உன் மகன் இங்கே வந்தானா?" என்று கேட்டார். அவர் குரலும், விசாரித்த தோரணையும், முகத் தோற்றமும் அவர் மனைவியின் உள்ளத்தில் கலக்கம் உண்டாக்கியது. "ஏன்? என்ன விசயம்?" என்று வினவினாள் அவள்.

"நம்ம புத்ர பாக்கியத்துக்கு திடீர்னு சுதேசி மோகம் புடிச்சிட்டுது சில பேரை பேய் பிடிக்குமே அது மாதிரி. வைத்தியக்காரப் பயல்!" என்று கடுகடுப்பாக அலுத்துக் கொண்டார் அவர்.

பார்வதத்தம்மாளுக்கு விஷயம் எதுவும் புரியவில்லை. அவள் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பவள். 'நாம உண்டு, நம் மசோலி உண்டு ஊர் விசாரணை எல்லாம் நமக்கு என்னத்துக்கு? எந்த ராசா எந்தக் கோட்டையைப் பிடித்தால் என்ன? எந்தப் பட்டணம் எப்படிக் கொள்ளை போனால் நமக்கு என்ன?' என்ற தன்மையில் நினைத்தும் பேசியும் காலங் கழிக்கிற 'பராபரங்'களில் அவளும் ஒருத்தி. ஆகையினால், ஊரில் நடப்பது அவளுக்குத் தெரியாது. என்னவோ காந்திக்காரங் காளம்; கடை முன்னாலே நின்று 'துணி வாங்காதே; கள்ளு குடிக்காதே, என்றுகும்பிட்டுச் சொல்கிறார்களாம். என்று அரைகுறையாக அறிந்து கொண்டதோடு அவள்

திருப்தி அடைந்துவிட்டாள். இப்போது, செந்தில் நாயகத்தின் கசப்பும் கடுகடுப்பும் விளக்கம் கோரும்படி அவளைத் தூண்டின. அவரிடம் தூண்டித் துருவிக் கேட்கவும் ஒருவித அச்சம். ஆகவே அவராகச் சொல்லட்டும் என்று கணவனின் முகத்தைப் பார்த்தபடி நின்றாள் அவள்.

அந்நேரத்தில் காந்திமதிநாதன் வந்து சேர்ந்தான். 'யாரது? நம்ம காந்தியா!' என்று அம்மாவே அதிசயிக்க வேண்டிய விதத்தில் அமைந்திருந்தது அவன் கோலம். வெள்ளை வெளேர் என்று கதர் சட்டையும், கதர் வேட்டியும் அணிந்திருந்தான். அவன் தலைமீது குல்லாயும் காட்சி தந்தது. புன்னகை அவன் முகத்திலிருந்து மறையவே இல்லை.

"என்ன காந்தி இது!" என்று பதறினாள் தாய்.

அவனை எரித்துவிட விரும்புகிறவர்போல், கோபக் கனல் பார்வையில் தெறிக்க, அவனையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார், முதலாளி செந்தில் நாயகம்.

## 4. மேடை முதலாளி

பிறவிப் பெருமாள் பிறக்கும்போதே பெரிய ஆள் தான். அதில் சந்தேகமே கிடையாது. பெரிய வீட்டின் பெரிய முதலாளி அவர்.

அவருடைய தாத்தா பிறவிப் பெருமாள் 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு'வதற்குப் பதிலாக, இருந்த இடத்தில் இருந்தபடியே சொத்தும் சுகமும் சேகரம் செய்தார். மாடிக்கு மேல் மாடி கட்டினார். கிராமம் கிராமமாக வாங்கி, தன் மகன் பிள்ளைக்கண்ணுவுக்கு சகல வசதிகளும் செய்து வைத்தார்.

இப்போதைய 'மேடை முதலாளி' பிறவிப் பெருமாளின் தந்தையும், பழைய பிறவிப் பெருமாளின் மகனுமான பிள்ளைக்கண்ணு தமது ஆற்றலை எல்லாம் சேர்த்து, செலவு இனங்களைப் பெருக்கிக் கொண்டு 'தாம் தூம்' வாழ்க்கை நடத்தினார். எனினும் பெரியவர்

தேடிவைத்த சொத்து அழியவே இல்லை. பிள்ளைக் கண்ணுவின் மனைவி ஆவுடையம்மாள் கொண்டு வந்து சேர்த்திருந்த சொத்தின் அளவும் பெரிதுதான்.

செல்வர் பிள்ளைக்கண்ணு பணக்காரர்கள் கடைப் பிடிக்க வேண்டிய 'தர்மங்கள்' பலவற்றையும் வெற்றி கரமாக அனுஷ்டித்தார். அவருடைய தந்தை வாங்கிப் போட்டிருந்த கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு மாடி வீடு கட்டியதோடு, அவர் வந்து போகிற சமயங்களில் வசதிகள் செய்து இன்புறுத்துவதற்காக தனித்தனிப் பெண்மணிகளையும் ஏற்பாடு செய்து வைத்திருந்தார்.

அவர் மகன் பிறவிப் பெருமாள் ஊரில் 'மேடை முதலாளி' என்ற சிறப்பைப் பெற்று விட்டார். அதற்குக் காரணம் அவர் எப்போதும், பங்களா வீட்டின் மாடி யிலேயே வாசம் செய்ததுதான். அத்துடன், 'சும்மா பொழுதுபோக்கு ஆகவும் ஏதோ ஒரு பிசினஸ் இருக்கட் டுமே' என்று அவர் ஆரம்பித்திருந்த துணிக்கடையும் கடை வீதியில் ஒரு மாடியில்தான் அமைந்திருந்தது.

பிறவிப் பெருமாளின் தாய் அவரைக் கருவில் தாங்கியிருந்த சமயத்தில் குல்கந்தும் குங்குமப்பூவும் பாலும் அதிகமாகவே சாப்பிட்டிருந்திருக்க வேண்டும்! அதனால்தான் குழந்தை வெள்ளை வெளேரென்று பிறந்திருந்தது. பிறகும் போஷாக்கிற்கும் வளமான கவனிப்புக்கும் குறைவு எதுவும் இராத காரணத்தினாலே, பிறவிப்பெருமாள் மொழு மொழு வென்று வெண் ணெய்க் கட்டியில் உருட்டித் திரட்டிய கிருஷ்ணன் பொம்மை மாதிரி வளரமுடிந்தது.

கிளாஸ்கோ, ஆஸ்டர்மில்க் போன்ற உணவுப் பொருள் தயாரிப்பாளர்கள் விளம்பரங்களில் வெளியிடு கிறார்களே தளதளப்பான குழந்தைகளின் உருவங்களை, அவற்றோடு போட்டியிடுகிற விதத்தில்தான் பிறவிப் பெருமாளும் இருந்தார். அவருக்குத் தேவைப்படுகிற உணவுகள் எல்லாம் சீமையிலிருந்து கப்பலில் வந்து இறங்கி, பெரிய 'வெள்ளைக்காரன் கம்பெனி'யில் கொலு விருந்து விற்பனைக்கு கிடைப்பவைதான். பிரிட்டானியா பிஸ்கட்டும், ஹன்ட்லி பால்மர்ஸ் பிஸ்கட்டும் (சீமைச்

சரக்குகள் நெய் மாதிரி இருக்கும். நாவில் போட்டால் அப்படியே தனிச்சுவையாய் கரைந்து உள்ளிறங்கும்) ஓவல்டின்னும், காலிபோர்னியா அத்திப்பழ சர்பத்தும் உண்டு பெரிய ஆள் ஆனுர். ஆஸ்திரேலியாவிலிருந்து கப்பலில் வந்திறங்கிய கருநிறத் திராட்சைகளும், அதே போல்வந்த ஆப்பிள்களும் அவர் உடம்பில் அருமையான ரத்தமாக மாறின. இந்தப் பழக்க வழக்கமெல்லாம் திருநகரில் விடுதலைப் போராட்டம் தலையெடுத்த காலத்திலும் ஜாம் ஜாமென்று நடந்து கொண்டு தானிருந்தன.

அவர் அருமையான, மிகமிக நைஸான, கிளாஸ்கோ மல்தான் அணிவார். மிக உயர்ந்த ரக சீமைச் சுருட்டு தான் புகைப்பார். உயர்ந்த ரக மதுதான் அவர். வீட்டில் பாட்டில் பாட்டிலாக இருக்கும்.

ராஜபோக வாழ்க்கை வாழ்ந்த பிறவிப் பெருமாள் அவருடைய அப்பாவின் போக்கை ஆதரிக்கவில்லை. ஊருக்கு ஒரு பெண்ணை வைத்துப் போஷிப்பது 'பெரிய மனுஷத்தனம்' என்று படவில்லை அவருக்கு. அது கௌரவமாகவும் தோன்றவில்லை.

ஆகவே, தேர்ந்தெடுத்த அழகி ஒருத்தியை உள்ளூரில், தமது வீட்டுக்கு அருகிலேயே, ஒரு பங்களாவில் குடியேறச் செய்தார். 'பொன் அவிர் மேனிச் சுபத்திரை மாது' அவள். அவள் பெயரும் சுபத்ராதான், "மலையாளத்து ஆச்சி' என்று மற்றவர்கள் குறிப்பிட்டார்கள். ஆயினும், இவளுடைய அழகைப் பார்த்தும் மேடை முதலாளியின் அதிர்ஷ்டத்தை நினைத்தும் பொருமைப்பட்டுப் பெருமூச்சு எறியாதவர்கள் அந்த வட்டாரத்திலேயே அபூர்வம்தான்!

பிறவிப் பெருமாளுக்கு நண்பர்கள் பலர் இருந்தார்கள். எல்லோரும் 'பெரிய மனிதர்கள்'— அதாவது, வேலை இல்லாமல் வெட்டிப் பொழுது போக்குவதற்கு வாய்ப்பும் வசதியும் பெற்றிருந்தவர்கள். அப்பன்மார் தேடி வைத்திருந்த சொத்தும், அந்தத் தூண்டிலைக் காட்டி, பெண்ணைப் பெற்றவர்களிடமிருந்து தண்டிய சொத்தும், பண்டைப் பெருமையைச் சொல்லி கலபமாக

வாங்க முடிந்த கடன் தொகையும் அவர்களுடைய சோம்பேறி வாழ்க்கைக்கு ஊட்டம் அளித்து வந்தன.

காற்றடிக்கிற பக்கம் மூக்கைத் திருப்பிக் கொண்டு பெருமையாக நிற்கிற, கட்டிட உச்சித் திசைகாட்டும் கருவியில் உள்ள, கோழி மாதிரி, சந்தர்ப்பக் காற்றுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கிற திறமைசாலிகள் பலர் இக்கும்பலில் இருந்தார்கள்.

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் ஒரு சின்னஞ் சிறு தீவில் அமர்ந்து, உலகத்தையே கட்டியாண்ட மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் பிரதிநிதியாக இந் நாட்டுக்கு வந்து, ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஊர் திரும்புவதற்கு முன்பு, காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை அரிச்சுப் பிடுங்கி அகப்பட்டதை அள்ளிக் கொட்டிக் கொண்டு போகும் நோக்கத்தோடு வைசிராய் துரை பவனி வருகிறபோது அவருக்குக் காணிக்கை செலுத்தும் ராஜபக்தத் திருக்கூட்டத்தின் முதல் வரிசையில் இருப்பவர்கள் பிறவிப பெருமாள் அண்டு கம்பெனியார்தான். கவர்னர் துரைக்கும், கலெக்டர் துரைக்கும் 'மரியாதை' செய்வதில் போட்டியிடுகிறவர்களும் இவர்கள்தான்.

காற்று திசைமாறி வீச ஆரம்பித்துள்ளது என்பதை மேடை முதலாளியும் அவருடைய நண்பர்களும் உணராமல் இருக்க இயலுமா? உணர்ந்த போதிலும் சிலர் 'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தைக் கொண்டுள்ள பிரிட்டிஷ்காரனை காந்தியும் அவருடைய கொள்கைகளும் அவற்றைப் பின்பற்றுகிறவர்களும் ஒன்றுமே பண்ணிவிட முடியாது' என்று உறுதியாய் நம்பினார்கள்.

சிலர் 'நாம் எதையும் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை' என்றார்கள். ஆனால், எல்லோரும் காந்திஜீயின் சக்தியை வாய் உபசாரமாகப் பாராட்டுவதற்குக் கூச வில்லை.

மேடை முதலாளி மற்றவர்களைவிட ஒரு படி முன்னேறியவர் என்றே சொல்ல வேண்டும். காந்திஜீயைப் புகழ்ந்து பேசுவதில் அவர் தீவிர உற்சாகம்

காட்டியதோடு, தம் வீட்டில் காந்தி படத்தை மாட்டி வைத்தார். அத்துடன், ஊராரே வியந்து போற்றும்படி ஏதாவது செய்தே தீரவேண்டும் என்றும் திட்டம் தீட்டினார்.

தமது திட்டத்தில் அவர் தாமே ஆழ்ந்திருந்த சமயத்தில்தான், 'கவிராயர் வந்திருக்கிறார்' என்று வேலைக்காரன் அறிவித்தான்.

"கவிராயரா? யாரு அவரு" என்று கேட்டார் முதலாளி.

அங்கே தலை நீட்டிய சொக்கையாவைப் பார்த்தும், "ஓ சொக்குவா!" என்று அலட்சியமாகச் சொன்னார். அவர்.

## 5. லட்சிய வேகம்

புது உருவம் பெற்றவன் போல் புதிய உடையில் காட்சி தந்த மகனைப் பார்க்க, முதலாளி செந்தில் நாயகத்துக்கு உள்ளமும் வயிறும் பற்றி எரிவது மாதிரி இருந்தது. 'இவனை என்ன செய்தாலும் ஆத்திரம் தீராது' என்று புகைந்தது அவர் மனம்.

"ஏன்டா, உன் மூளையை எங்கே அடகு வைத்தே? இப்படி எல்லாம் காரியம் செய்வதற்கு வெட்கமாக இல்லே உனக்கு?" என்று சீறினார் தந்தை.

காந்திமதிநாதன் சீற்றம்கொள்ளவும் இல்லை; முகம் சிவந்து தலைகுனியவு மில்லை. வாடாத புன்னகையோடு நிமிர்ந்த தலையோடு தந்தையைப் பார்த்தவாறே, திடமாக அறிவித்தான் "நல்ல செயல் புரிகிறபோது நான் ஏன் வெட்கப்பட வேண்டும்?" என்று.

அவனுடைய அமைதியும், நிதானமான பேச்சும் அவருடைய ஆத்திரத்தை மேலும் அதிகமாக்கின. "திமிரைப் பாரேன். எதுடா நல்ல காரியம்? நீ செய்றது

நல்ல காரியமா? நான் நாலு பேரு மத்தியிலே கௌரவமாகவும் மதிப்பாகவும் பழக முடியுமா இனிமே?'' என்று கூப்பாடு போட்டார் அவர்.

''மெத்தப் படிச்சும் புத்தி கட்டையாப் போச்சு உனக்கு. நீ இப்படி நடந்து கொள்ளலாமா காந்தி?'' என்று அம்மாவும் பேச்சில் கலந்து கொண்டாள்.

''இவனுடைய நன்மைக்காக, இவன் நல்லாப் படிச்சு உயர்வடையணும் என்கிறதுக்காக, நான் எவ்வளவு பணம் செலவு செய்திருக்கிறேன்! இவன் எதிர்காலத்தில் நல்லபடியா வாழணும்கிறதுக்குத்தானே நான் பாடு பட்டுப் பணம் சேர்க்கிறேன்? இவன் என்னடான்னு சொன்னால், என்னையே எதிர்த்துச் செயல் செய்கிறான். தான் செய்கிறதுதான் நல்லது என்று வேறே பேச வந்து விட்டான்!'' என்று மனைவியிடம் கத்தினார் முதலாளி.

''பணத்தைவிட உயர்வான விஷயங்களும் இருக்கு அப்பா இந்த உலகத்திலே. நாமும் நம்ம மக்களும் நம்மைச் சேர்ந்தவர்களும் நல்லாயிருந்தால் போதும் என்று ஆசைப்படுவதும், தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாடுபடுவதும் மட்டுமே மாண்புக்குரிய காரியங்கள் ஆகிவிடாது. குடும்பத்தையும் வீட்டையும் தன்னையும தன்னையும்விடப் பெரியது உலகம். வீட்டைவிட உயர்ந்தது நாடு...''

மகன் பேசப் பேச, தந்தைக்கு கோபம் எவ்விக் கொண்டே போயிற்று. ''வாயை மூடுடா கழுதை! இவரு பெரிய இவரு உபதேசிக்க வந்துட்டாரு. மடையன்! தாத்தாவுக்கு, அப்பாவுக்கு இல்லாத ஞானம் இவருக்கு வந்து உதயமாய்ட்டுது; ரொம்ப உருப்படப் போறவன் மாதிரித்தான் மூஞ்சியைப் பாரு!'' என்று எரிந்து விழுந்தார் அவர்.

''தாத்தாவாக இருந்தாலும் அப்பாவானாலும், தம் மக்களைப் பற்றிக் கவலைப்படுவதோடு மட்டும் நின்று விடாமல், ஊரில் உலகத்தில் உள்ளவர்களையும் மக்களாக மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்; அதுதான் மனிதருக்கு அழகு'' என்றான் இளைஞன்.

செந்தில்நாயகம் நரசிம்மாவதாரம் எடுத்தவர் போல், கோபத்தால் முகமெல்லாம் கோரமாகத் தோன்ற வேகமாக எழுந்தார். அவனை அடிக்க விரை கிறவர் போல் முன்னே பாய்ந்தார். எனினும் ஆத்தி ரத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு "ஏய், என் கோபத்தை வீணுக் கிளறிவிடாதே. நீ புஸ்தகம் படிச்ச பெருமையை எல்லாம் என்கிட்டே காட்டவேண்டாம். எனக்கு வர்ற வரத்துலே உன்னை என்ன செய்வேனே எனக்கே தெரியாது. ஒழுங்கா, மரியாதையா, நல்ல பையனு நடக்கிறதாக இருந்தால் இங்கே இரு. முதல்லே இந்தத் துணியை அவிழ்த்து எறிந்து விட்டு, வழக்கமான உடுப்புகளைக் கட்டிக் கொள்" என்று நல்லுரை புகன்றார்.

காந்திமதிநாதன் சிரித்தான். "வெறும் வேஷம் போடும் நினைப்பில் நான் இந்த ஆடையை அணிந்து கொள்ளவில்லை. இன்று முதல் என்றும் என்னை இந்த உடையில் தான் காணலாம்" என்றான். "இனி நான் பள்ளிக்கூடம் செல்லப் போவதுமில்லை. தேசியப் பணியில் முழு மூச்சுடன் ஈடுபடப் போகிறேன்..."

"உனக்கு ஏன் இந்தப் புத்தி? தடியடி, ஜெயிலுக்குப் போவது எல்லாம்..." என்று அம்மா உணர்ச்சிப் பெருக்கோடு பேச ஆரம்பித்தாள்.

"எது வந்தாலும் நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வேன். இனி மகாத்மா காந்தியே என் தெய்வம். அவருடைய வழிதான் என் வாழ்க்கை வழி" என்று அவன் மன உறுதியுடன் கூறினான்.

"அப்படியானல் உனக்கு இந்த வீட்டில் இடமில்லை. வெளியே போ!" என்று கூச்சலிட்டார் தந்தை.

"இதுதான் எனது முதல் சோதனை. இதற்கு நான் தயங்கவோ அஞ்சவோ போவதில்லை" என்று பணிவுடன் சொல்லிவிட்டு, அவன் அப்படியே திரும்பி வெளியே நடக்கலானான்.

"காந்தி, ஏ ஐயா!" என்று அலறத் தொடங்கினுள் தாய்.

"நீ உள்ளே போ. பாணன் கழுதை பரதேசம் போனுல், தானே போய் தானே திரும்பும்! இவரு டைய சவடால் எல்லாம் எத்தனை நாளைக்கு? வயிறு காய ஆரம்பித்ததும் தானுகவே வீட்டைத் தேடி வருவான்" என்று முதலாளி உறுமினுர்.

பார்வதத்தம்மாள் கண்களைக் கசக்கியபடி அடுப்பங் கரைப் பக்கம் போனுள்.

காந்திமதிநாதன் கலக்கமோ, கவலையோ கொண்டு விடவில்லை. அவனுடைய உள்ளத்தில் உறுதி இருந்தது; உடலில் இளமை இருந்தது; எண்ணத்தில் வேகம் இருந்தது. அவனிடம் புதியதோர் ஊக்கமும் உற்சாக மும் புகுந்திருந்தன. அவன் மனம் ஆனந்த மயமான, லட்சிய ஒளி படிந்த,கனவுகளைச் சிருஷ்டித்து மகிழ்ந்தது. 'வரும் காலம் நம்முடையது. நாம் வாழ்ந்து உயர்வோம். நமக்கு நாமே துணை' என்று அவனுள் ஒரு சக்தி ஒலி செய்தது.

சூழ்நிலையும், காலவேகமும், நாட்டு மக்களின் புதிய உத்வேகமும் எத்தனை எத்தனையோ இளைஞர்களின் வாழ்க்கைப் பாதையில் திசை மாற்றம் ஏற்படுவதற்குத் தூண்டுதலாக அமைந்த காலம் அது. காந்திமதி நாதனும் அவர்களில் ஒருவன் ஆனுன்.

அவன் அந்த ஊரைவிட்டு வெளியேறி, எங்கே யாவது போய்விடலாமா என்று எண்ணினுன் முதலில். 'அப்படிச் செய்வதனுல் வீட்டுக்குப் பயந்து ஓடிவிட்டான் என்று பிறர் சிரிக்க நேரிடலாம். நாம் இங்கேயே இருந்துதான் லட்சியப் பணி புரியவேண்டும்' என்றது அவன் சிந்தனை.

நண்பன் நடராஜனைக் கண்டு பேச வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது அவனுக்கு. அவன்தானே அன்று பிற்பகலில் உணர்ச்சி வேகத்தோடு செயல் புரிந்தவன்; தன்னையும் செயலுக்குத் தூண்டியவன் என்ற நினைப்புத்

தான் அதற்குக் காரணம். கடை முதலாளியான தந்தை—சுயேச்சையாகத் தொழில் புரிந்து சுக வாழ்வு நடத்துகிறவர்—மகனின் செயலினுல் வெறித்தனம் பெற்றுவிட்டபோது, போலீஸ்காரரான ஒரு தந்தை—அரசாங்கத்தை நம்பி வாழ்க்கை நடத்துகிற மாதச் சம்பளக்காரர்—சர்க்காரை எதிர்க்கும் முயற்சியில் உற்சாகம் காட்டிய தனது மகனின் போக்கைக் கண்டும் கேட்டும் அமைதியாக இருந்துவிட முடியுமா என்ன? வீட்டில் அந்த மகனுக்கு எவ்விதமான வரவேற்பு கிட்டியது என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற இயல்பான அவா 'வெளியேற்றப்பட்ட மகனுக்கு' உண்டாயிற்று.

அவன் தெருத் தெருவாய் கடந்து, நடராஜன் வசித்த் தெருவை நோக்கி நடந்து கொண்டிருந்தான். நடராஜன் தந்தை குடியிருந்த வீடு போலீஸ் லயனில் அமைந்திருக்கவில்லை. முன்பு ஒன்றிரு தடவைகள் காந்தி நண்பனேடு அவன் வீட்டுப் பக்கம் போனதும் உண்டு. அப்போதெல்லாம் வீட்டுக்குள்' போகாமல், தெரு முனையிலேயே காத்து நிற்பதுதான் வழக்கம்.

'இப்போது வீட்டுக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்படுமோ? நடராஜன் தந்தை வீட்டில் இருந்தால் என்ன சொல்வாரோ?' என்ற குறுகுறுப்பு அவன் உள்ளத்தில் எழுந்தது. இந்த நினைப்பினுல் அவன் நடையில் தயக்கமும் தளர்ச்சியும் சேர்ந்திருந்தன.

இச் சந்தர்ப்பத்திலும் அவன் வீட்டினுள் அடி எடுத்து வைக்கவேண்டிய அவசியம் ஏற்படாதவாறு, நடராஜனே எதிரே வந்து விட்டான். அவன் பெரிய துண்டினுல் உடம்பைப் போர்த்தியிருந்தான். "என்ன காந்தி, இந்தப் பக்கம் எங்கே வந்தே?" என்று விசாரித்தான் அவன். "வா, நடந்து கொண்டே பேசலாம். இங்கே நிற்கவேண்டாம்!" என்று நண்பன் தோள்மீது கை போட்டவாறு நடக்கலானுன்.

காந்திமதிநாதன் நடந்ததைச் சொன்ஞன். நடராஜன் சிரித்தான். "இங்கும் அதே கதைதான். வெறும் ஏச்சும் பேச்சும் மாத்திரம் கிடைக்கவில்லை. சரியானபடி உதையும் கிடைத்தது. என் அப்பா இடுப்பிலுள்ள போலீஸ் பெல்ட்டைக் கழற்றி கண்ணு மூக்கு என்று பாராமல் சுழற்றிச் சுழற்றி அடித்தார். பெல்ட்டில் உள்ள ஆணி என் விலாச் சதையைப் பிய்த்துவிட்டதை விளக்கு வெளிச்சத்தில் காட்டுறேன், பாரு. நான் போட்டிருந்த கதர்ச் சட்டையைக் கிழித்து எறிந்தார். 'நீ எக்கேடும் கெட்டு நாசமாப் போடா சனியனே! என் தலைக்கு ஏண்டா வினை வைக்கிறே? என்னையும் குடும்பத்தையும் தெருவிலே நிறுத்தி விடுமேடா உன் போக்கு' என்றெல்லாம் ஏசிஞர். 'இனி இந்த ஊரிலேயே இராதே; வீட்டுப் பக்கமே தலை காட்டாதே என்று விரட்டி விட்டார். நான் உன்னைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போகலாம் என்றுதான் கிளம்பினேன்" என்று அவன் அறிவித்தான்.

"உம். நீ எங்கே போகப் போறே?" என நண்பன் பரிவுடன் கேட்கவும், நடராஜன் "எங்கே என்று சொல்வது! சித்தம் போன போக்கில் போக வேண்டியது தான்! இந்த ஊரில் நான் மறுபடியும் மறியல் செய்தால், என்னைப் பிடித்துக்கொண்டு போஞல், என் அப்பாவுக்கு வேலை போய்விடும். அதஞலே வேறு எங்காவது ஒரு ஊரில் போய் மறியலில் கலந்துகொள்வேன். நம்மைப் போலே பையன்களைப் பிடித்துக்கொண்டு போஞல், ஜெயில் தண்டனை கொடுப்பது இல்லையாம். போலீஸ் வேனில் ஏற்றிக்கொண்டு போய், நூறு மைலுக்கு அப்பால் எங்காவது காட்டு வெளியிலோ, கிராமத்துப் பக்கமோ இறக்கிவிட்டு விடுகிருர்களாம். எனக்கும் அப்படி யாத்திரை சான்சு கிடைக்கலாம். வெகு தூரம் பிரயாணம் போய்விடலாம் அல்லவா" என்று கூறி வேடிக்கையாகச் சிரித்தான்.

அவனுடைய மனேதிடம் அந்த நேரத்திலும் வியந்து போற்றப்பட வேண்டியதாகவே தோன்றியது.

# 6. தந்தையின் உதவி

''மேடை முதலாளி'' பிறவிப் பெருமாள் எதையும் பிரமாதமாகச் செய்யவேண்டும் என்று ஆசைப் படுகிறவர். தான் சம்பந்தப்படுகிற காரியம் எதுவுமே சுற்று வட்டாரத்தில் உள்ளவர்களின் கவனத்தைக் கவரும்படியாக இருக்கவேண்டும்; அத்துடன் அமையாது பலரும் ரொம்ப காலத்துக்கு எண்ணிப் பார்த்துப் பேசக் கூடியதாகவும் இருக்கவேண்டும். இது அவருடைய உள்ளக் கிடக்கை.

தமது ஆசையும் நோக்கமும் நிறைவேறுவதற்காக அவர் 'பணத்தைப் பணம் என்று பாராமல்' வாரி இறைப்பார். எதையும் எளிய முறையில் செய்யத் தெரியாது அவருக்கு. சாதாரண விஷயத்திலேகூட தடபுடல் புகுத்தப்படவேண்டும்; அப்பொழுதுதான் அவருக்குத் திருப்தி.

திருநகர் பெரிய கடைவீதியின் ஜவுளிக் கடைகள் முன்னே மறியல் நடைபெற ஆரம்பித்ததை அவர் கவனித்து, அவ்வப்போது தமது அபிப்பிராயங்களை வெளியிட்டும் வந்தார். நகரின் பிரபலஸ்தர்களும், பெரிய மனிதர் வீட்டு அம்மையார்களும் மறியலில் வெறுமனே ஈடுபட்டு விட்டதை அவரால் ரசிக்க முடிய வில்லை.

''சே! வீணாகக் கெடுத்து விட்டார்கள், மிக அருமையான சந்தர்ப்பம் இல்லையா இது? பாண்டு வாத்தியம், அதிர்வெடி முழக்கு முதலிய தடபுடல்களோடு, இவர்கள் ஊர்வலம் வந்து, மறியல் செய்திருக்கவேண்டும். அப்போது எவ்வளவு 'பப்ளிசிட்டி' கிடைத்திருக்கும்! அவர்களுக்கு மட்டும்தானா 'பப்ளிசிட்டி?' காந்தியின் போராட்டத்துக்கும் அவர் கட்சிக்கும் அருமையான விளம்பரமாக இது அமையுமே!'' என்று அவர் சொன்னார்.

''காந்திஜீ எளிமையைத்தான் விரும்புகிறார். காந்தியின் கட்சி தரித்திர நாராயணர்களின் உரிமைக் காகப் போராடுவது. அதில் இந்த விதமான தட

புடல்களுக்கே இடமில்லை'' என்று ஒரு அன்பர் சொன்னார்.

''இருக்கட்டுமே! மக்களின் மதிப்பையும், பேராதரவையும் பெறுவதற்கு உயர்ந்த கொள்கைகளுக்குக்கூட ஒரு 'ஷோ' வேண்டியதுதான். கடவுளே மக்களின் மதிப்பையும் பக்தியையும் கும்பிடுதல்களையும் பெறுவதற்காக திருவிழா என்றும், தேரோட்டம் என்றும் தடபுடல் படுத்தி நாளுக்கு ஒருவிதமாக அலங்காரம் செய்து கொண்டு, வீதிகளில் வருகிறாரே! அப்புறம் என்ன?'' என்று வாதாடினார் முதலாளி.

''சாமி அவராகவா வாறாரு? இதெல்லாம் வேணும் என்று அவரா சொல்றாரு?'' என ஒரு நண்பர் கேட்டார்.

''நாமாகச் செய்கிறதுதான் எல்லாம்!'' என்று இன்னொருவர் குறுக்கிட்டார்.

''அது மாதிரி எல்லாம் ஏன் செய்கிறோம்? மக்கள் மனசில் சுலபமாக இடம் பிடிக்கணும் என்பதற்காகத் தானே? சாதாரண ஜனங்களைக் கவர்ச்சிப்பதற்கு இதெல்லாம் தேவைதான்'' என்று அவர் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார். ''தரித்திர நாராயணர்களைப் பிரதிபலிக்க வேண்டுமா? சரி. பாண்டும் நாதசுரக் கச்சேரியும் வேண்டாம். கரகம், காவடி, சிலம்பம் இதுகளுக்கு ஏற்பாடு பண்ணு!'' என்றும் தெரிவித்தார்.

அவருடன் வாதர்டுவது வீண் விவகாரமாக முடியும் என்று அறிந்து வைத்திருந்த அவருடைய நண்பர்கள் பேச்சை வளர்க்கவில்லை. அப்படியே விட்டுவிட்டார்கள்.

ஆனால், பிறவிப் பெருமாள் தமது 'ஐடியா'வை 'ஐயோன்னு போகும்படி' விட்டுவிடத் தயாராக இல்லை. புதுமையாக ஏதேனும் செய்து தனது பெருமையை நிலை நாட்ட வேண்டும் என்ற எண்ணம் பலமாக அவரைப் பிடித்து ஆட்டலாயிற்று. அவர் ஒரு முடிவையும் கண்டு விட்டார். 'ஆகா, பேஷான திட்டம். பிரமாதமாக இருக்கும்!' என்று அவர் தன் முதுகில் தானே தட்டிக் கொடுத்துக் கொள்ளத் தவறவுமில்லை.

இந்த விஷயத்திற்காகத்தான் அவர் 'சொக்குக் கவி ராயரை வரவழைத்திருந்தார்.

"என்ன சொக்கையா, திருநகர் பூரா உன் பேரு முழங்குதே!" என்றார் முதலாளி.

"என் பாட்டும் முழங்குதே!" என்று கர்வத்தோடு பேசினார் கவிராயர். "இப்போதெல்லாம் நான் பழைய சொக்கனே, சொக்கையாவோ இல்லே. சொக்குக் கவி ராயர் இவரு! எனக்கு நேரமே இல்லே. முக்கிய சோலியாப் போயிக்கிட்டிருந்தேன். ஐயா என்னைப் பார்க்க விரும்பு வதாக தகவல் கிடைச்சுது வந்தேன். சீக்கிரம் சொல் லுங்க!" என்றும் அவசரப்பட்டார்.

சொக்கையாவின் தோரணையும் பேசுகிற தினுசும் மாறிப் போய்விட்டதை முதலாளி புரிந்து கொண்டார். "ஊம் இப்போ கவிராயர் காட்டிலே மழை பொழி யுதுன்னு சொல்லும்! பேஷ் பேஷ்!" என்று வேடிக்கைப் பேச்சு சிந்தினார்.

சொக்கையாவும் சிரித்துக் கொண்டார்.

பிறவிப் பெருமாள் சிரத்தையோடு பேசலானார்: "காலம் மாறி வருகிறது. அதுக்கு ஏற்றபடி நாமும் நம்ம பாலிசியை மாற்றிக்கொள்ள வேண்டியது தான்னு முடிவு பண்ணியிருக்கிறேன். இந்த ஊரு ஜவுளி முதலாளி களுக்கு வழிகாட்டுகிற மாதிரியும் இருக்கணும்; முதலா வதாகச் செயல் புரிந்தது போலவும் இருக்கவேணும். அதனாலே நான் என்னுடைய பட்டு ஜவுளிக் கடையை 'சுதேசி பந்தர்' ஆக மாற்றப் போகிறேன்..."

"அதுக்கு ஏன் சுதேசிக் குரங்கு ஆக மாற்றணும்? சுதேசிக் கடையாகவே மாற்றுங்க!" என்றார் கவிராயர்.

வார்த்தையை வைத்து விளையாடி ஹாஸ்யம் பண்ணியதைப் புரிந்துகொள்ள இயலாததனால், முதலா ளிக்குச் சிறிது கோபம் ஏற்பட்டது. "என்ன சொல்றே?" என்று சினந்தார்.

"பந்தர் என்றால் குரங்கு. பந்தார் என்றால்தான் கடை. நீங்கள் உங்கள் கடைப் பெயரை 'சுதேசி பந்தர்' ஆக்க வேண்டாம், 'சுதேசி பந்தார்' என்று மாற்றலாம் என்றேன்!"

சொக்கையா விளக்கியதும், முதலாளி அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். "சொக்கையா, நீ பெரிய ஆளப்பா" என்றார்.

"பின்னே? பெரிய மனிதர்களோடு பழகுவதற்கு நானும் பெரிய மனிதன் ஆகித்தானே தீரணும்! அது போகுது. நீங்க ஏன் என்னை அழைத்தீர்கள்?" என்று மீண்டும் அவசரப்படுத்தினார் கவிராயர்.

"அதைச் சொல்லிக் கொண்டிருந்தபோதுதான் நீ ஊடே கரடியை விட்டே!"

"நம்ம பேச்சிலே குரங்குதான் புகுந்தது; கரடி தலை காட்டவே இல்லை" என்று தன் சாமர்த்தியத்தை விளம்பரப்படுத்தினார் கவி.

"அது சரி. நான் சொல்றதைக் கேளு. இப்படி ஒரு மாறுதல் பண்ணுவதே பெரிய விஷயம் இல்லையா? அதை ஒரு விழா மாதிரிச் செய்யலாம்னு நினைக்கிறேன், அதுக்காக நீ நாலஞ்சு பாட்டுகள் பாடி ஜமாய்க்க வேணும்..."

கவிராயருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. "ஆமா.. இப்போது கடையில் இருக்கிற பட்டு ஜவுளிகள், மல் பீஸ்களை எல்லாம் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டு வைத்தார்.

"அதுபற்றி நான் இன்னும் முடிவு பண்ணலே. எப்பவாவது ஒரு சமயத்தில் ஏலம் விட்டால் போகுது!"

"அதைவிட இப்பவே பிரமாதமான ஒரு வேலை பண்ணலாமே! எல்லாவற்றுக்கும் தீ வைத்துவிட்டால்? உங்க நோக்கம் ரெண்டு வகையிலும் நிறைவேறும். துணிச்சலாகக் காரியம் செய்த பெருமையும் கிடைக்கும்; பழைய ஸ்டாக்கும் சுலபமாகக் காலியாகிவிடும்" என்று

சொக்கையா யோசனை சொன்னார். "அதை வைத்து அருமையான பாட்டும் எழுதிவிடலாம்.

'பற்றி எரியுதே தீ, தீ!
பாய்ந்து படருதே எங்கும்;
பளபளக்கும் பட்டு எல்லாம்
தகதகன்னு எரியுது பாரு
சிலுக்கு மல்லு வகையரா
சிரிப்பாய் சிரிக்குதே ஐயோ!'

இப்படி, இன்னும் ஜோராக இசைக்கலாம்" என்று உற்சாகமாகப் பேசினார் கவிராயர்.

பிறவிப் பெருமாள் தலையசைத்தார். "அருமையாகத்தான் பாடுறே. இதை இன்னொரு சமயம் பார்த்துக்கொள்வோம். இப்போ சுதேசிக் கடை திறக்கிறது பற்றிப் பாடினால் போதும். இன்னுமொரு சங்கதி. நம்ம திருமலையப்பனை காந்தி ஆளாக ஆக்கி விடலாம்னு பார்க்கிறேன். அதையும் சிறப்பாகச் செய்யணும். பால்குடம் எடுக்கிறது, காவடி தூக்குகிறது மாதிரி, ஊர்வலம், வழிநெடுகப் பாட்டு, ஆட்டம் எல்லாம் ஏற்பாடு செய்யப் போறேன் அதுக்கும் கவிராயர் காளமேகமாப் பொழிய வேண்டியது அவசியம்" என்றார்.

"தம்பியும் மறியல் செய்யப்போகுதா? பெரிய வீட்டுக் காந்தி செய்தது மாதிரி?" என்று வியப்போடு கேட்டார் கவி.

"இல்லே இல்லே!" என்று மேடை முதலாளி அவசரமாகப் பதிலளித்தார்.

திருமலையப்பன் அவருடைய செல்வ மகன். பத்து வரை படித்துவிட்டு, "படிப்பு ஏறவில்லை. நான் படித்து என்ன ஆகப் போகுது?" என்று சொல்லி, புத்தங்களை வீசி எறிந்துவிட்டவன். பொழுது போகாமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்த அவனுக்கு ஒரு நல்ல வழி காட்டலாமே என்று எண்ணினார் தந்தை.

அவருடைய எண்ணம் உயர்வானது என்று சொக்கையா பாராட்டாமல் இருப்பாரா? மறுவாரம் சிறப்புக் கூட்டம் ஏற்பாடாகி யிருந்தது. அதற்கு பெரிய தலைவர் ஒருவர் வருவார். அவர் முன்னிலையில் பையன் புதிய பாதையைத் தேர்ந்துகொள்வது அறிவிக் கப்படும் என்றும் கவி தெரிந்து கொண்டார், "நல்லது" என்று சொன்னார். வேறு என்ன சொல்வது?

முதலாளி தாராளமாக உதவிய ஐந்து ரூபாயை வாங்கிக்கொண்டு, சொக்குக் கவிராயர் தெருவுக்கு வந்தார்.

'உப்புச் சொத்து
அவங்க வீட்டு
அப்பன் சொத்தா?
அதுக்கு ஏண்டா வரி
சொல்லு குப்பா!'

என்று முனகியவாறே நடந்தார்.

"அண்ணாச்சி, அண்ணாச்சி யோவ்!" என்று கூப்பிடும் குரல் அவரை நிறுத்தி, திரும்பிப் பார்க்க வைத்தது. "ஓ, தொண்டர் நாதனா? வாருமய்யா!" என்று முகமலர்ச்சி காட்டினார் கவி.

## 7. தொண்டர் நாதன்

மழை பொழியத் தொடங்குகிறது. விண்ணிலி ருந்து விழும் துளிகளை முதலில் மண் தாகத்தோடு உறிஞ்சி விடுகிறது. பூமி நன்றாக நனைந்ததும், துளிகள் பல கூடி நகர ஆரம்பிக்கின்றன. தண்ணீர் நன்றாக ஓடுகிறது. பிறகு, வேகம் அதிகம் பெற்று வாய்க்கால்கள் போலவும், சிற்றோடை போலவும் தண்ணீர் பெருகிப் பாய்கிறது. பல பகுதிகளிலிருந்தும் ஓடிப் பெருகும் தண்ணீர் கால்கள் ஒன்று கூடி, பெரிய ஆற்றின் வெள்ள மெனப் புரண்டு மிகுந்த சக்தியோடு முன்னேறிச் செல் கிறது.

எந்த ஒரு இயக்கத்தின் வளர்ச்சியையும் இதற்கு ஒப்பிடலாம். சிந்தனையில் உருவாகி, செயல் வடிவம் பெறுகிற ஒரு சக்தி முதலில் சிலரைக் கவர்கிறது. பிறகு பலரால் வரவேற்கப்படுகிறது. செயல் வேகமும் ஆகர்ஷிப்புத் திறனும் அதிகம் ஆக ஆக, மக்கள் மத்தியில் உணர்ச்சி வேகத்தோடு பரவுகிறது. எங்கும் புதியதோர் உத்வேகத்தோடு உற்சாகமும் ஊக்கமும் படர்ந்து பாய்கின்றன.

காந்திஜியின் வழிகளுக்கும், திட்டங்களுக்கும் நாட்டில் இந்த விதமான வரவேற்பு இருந்தது. நாளுக்கு நாள் அவரது சக்தியின் வலிமை அதிகரித்துக் கொண்டிருந்தது. காந்திஜீயின் ஆன்ம பலத்தால் கவரப்பட்டவர்களில் செல்வர்களும் சீமான்களும் சிறப்பாக வாழ்ந்தவர்களும் சுக போகிகளும் இருந்தார்கள்; படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும் பதவிகளில் இருந்தவர்களும் ஒளி மயமான எதிர் காலத்தைப் பெறும் தகுதி பெற்றவர்களும் இருந்தார்கள். அதே போல, ஏழை எளியவர்களும் அன்றாட வாழ்க்கைக்கு அல்லாடியவர்களும் வாழ்க்கை வெயிலால் வதக்கி வாட்டப் பெற்றவர்களும் இருந்தார்கள்.

இந்த விதமான ரகத்தினர் பலரையும் திருநகரிலும் காண முடிந்தது. தொண்டர் நாதன் என்று எல்லோராலும் அழைக்கப் பெற்ற சாதாரண நபரும் அவர்களுள் ஒருவர்.

சர்வ சாதாரணத் தோற்றம். சரியான போஷிப்பு இல்லாததனால் உலர்ந்து மெலிந்த வடிவம். கூடு எடுத்த மார்பை மூடி மறைப்பதற்காக ஒரு சட்டை. இடுப்பில் அரைக்கால் சட்டை, காக்கித் துணியில். எண்ணெய் காணாத செம்பட்டைத் தலை. செருப்போடு உறவாடாத, சதா புழுதி ஏறி அழுக்காய் தோன்றும் கால்கள். ஆனால், உழைப்பின் வடிவம், சுறுசுறுப்பின் சின்னம். பணிவின், அடக்கத்தின், செயல் துடிதுடிப்பின் உயிர் உருவம். அவர் தான் தொண்டர் நாதன்.

அவர் பெயர் விசுவநாதனோ என்னவோ, அது சரியாகத் தெரியாது யாருக்கும். ஆனால், தொண்டர் நாதன் என்றால் சிறு பிள்ளைகூட நன்கு அறியும். எங்கும் இருப்பார். எல்லாக் காரியங்களையும் முகம் கோணாது கவனிப்பார். கூட்டம் என்றால் மேடை அமைப்பது, கொடி கட்டுவது, தண்டோராப் போட்டுச் செய்தி அறிவிப்பது முதலிய சிறு சிறு—எனினும், கூட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு இன்றியமையாத காரியங்களை எல்லாம் கவனித்துச் சீராகச் செய்வதில் முன்னிற்பவர் அவர்தான். ஊர்வலம் முதலிய சகல ஏற்பாடுகளிலும் அத்தியாவசியமான அலுவல்களைக் கவனிப்பவர் அவரே.

கூட்டம் நிகழ்கிற சமயத்திலும், ஊர்வலம் நடைபெறுகிற போதும், மக்களின் உற்சாகத்தைத் தூண்டுவதற்காகவும், ஈடுபடுகிறவர்களுக்கு ஊக்கம் தருவதற்காகவும், தகரக் குழாயை வாயருகே வைத்துக் கொண்டு, "போலோ பாரத் மாதா கி" "போலோ மகாத்மா காந்திக் கி—" என்று கூவி, 'ஜே' போடும்படி அடிக்கடி ஆர்வ மூட்டுகிறவரும் அவர்தான்.

"சொல்லுங்கள்-பாரத மாதாவுக்கு..." "சொல்லுக, மகாத்மா காந்திக்கு..." என்று அழகுத் தமிழில் உவகை ஒலி எழுப்புவதை விட, வட நாட்டினர் பாணியில் 'போலோ' பண்ணுவதே கௌரவம் என்ற எண்ணம் அந் நாளையத் தொண்டர்களிடம் வேரூன்றி இருந்தது. அந்த 'பாஷனை'ப் பின் பற்றி தொண்டர் நாதனும் பெருமையாக ஒலி எழுப்புவது வழக்கம்.

அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த பெரிய நாட்டின் மக்கள், 'வாராது வந்த மாமணியாய் வாய்த்த அரிய தலைவரின் சக்தியினால் தூண்டப் பெற்று, ஆள்வோருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தபோது, தங்கள் எதிர்ப்பையும் வெறுப்பையும் சிறு சிறு செயல்களின் மூலமும் வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சி கண்டார்கள். அரசுக்கு சிறு நஷ்டம் ஏற்படுத்தினாலும், தங்கள் எதிர்ப்பைக் காட்டும் செயல் நிறைவும் என்று பலர் எண்ணினார்

கள். ஆகவே அநேகர் அவரவருக்குத் தோன்றிய வகையில் 'எதிர்ப்பு'க் காட்டி வந்தார்கள்.

தொண்டர் நாதன் தினசரி தபாலாபீசில் ஒன்றிரண்டு மணியார்டர் பாரம் பெற்று, அதைக் கிழித்தெறிந்து வந்தார். சக்கரவர்த்தியின் உருவம் பொறித்த வெள்ளி ரூபாயில், அவ்வுருவின் முகத்தில் துவாரம் செய்து, தனது சாவிக் கொத்து வளையத்தில் இணைத்திருந்தார். நூல் நூற்பதற்கு, தக்ளி செய்ய சக்கரவர்த்தி உருவம் உள்ள நாணயங்களையே உபயோகப் படுத்தினார். அவ்வாறு செய்வதன் மூலம், மாட்சிமை தங்கிய மன்னர் பிரானை அவமதிப்பது போலவும் 'ராஜ பக்தி'யை அங்கீகரிக்கவில்லை என்றும் அவர் கர்வத்தோடு நம்பினார்.

தொண்டர் நாதன் தேச பக்தர் ஆகத் துணிந்ததும், அவ் இயக்கத்துக்குத் தன்னைப் பூரணமாக அர்ப்பணம் செய்து விட்டார் என்றே சொல்ல வேண்டும். அவர் 'வாழ்க்கை வசதிகள்' பெற்றவர் அல்லர். அவருக்குக் குடும்பம் இருந்தது. மனைவியும் இரண்டு பிள்ளைகளும் அவருடைய தாயாரும் அவரை நம்பியிருந்தார்கள். அவர் பிழைப்புக்காகச் சிறு கடை ஒன்று நடத்தி வந்தார். வெற்றிலை, பாக்கு, பீடி, சிகரெட் வகையரா விற்பனை. அத்துடன் அவருக்கே சர்பத் எசென்ஸ் காய்ச்சத் தெரியும். அதைத் தயாரித்துப் புட்டிகளில் அடைத்து விற்பனை செய்தார். படங்களுக்குக் கண்ணாடியும் சட்டமும் இடுகிற தொழிலையும் கவனித்து வந்தார். நன்றாக உழைக்கும் மனிதர். ஆகையால் 'போதுமான வரும்படி' இருந்தது. தேசப் பணியை அவர் மேற்கொண்ட பிறகு, அவருடைய கடை சரிவரத் திறக்கப் படாமலே போயிற்று. அதனால், வருமானம் குறைந்தது. அவருடைய மனைவியும், மக்களும் அரை வயிற்று உணவு கூடப் பெற முடியாத நிலைதான் ஏற்பட்டது.

"பெரிய லட்சியப் பணியில் ஈடுபடுகிறபோது, இந்த விதமான கஷ்ட நஷ்டங்கள் குறுக்கிடத்தான் செய்யும். உண்மையான தேசபக்தன் இதை எல்லாம் பொருட்படுத்தக் கூடாது. சுவாமி விவேகானந்தர் என்ன

அருமையாகச் சொல்லியிருக்கிறார், தெரியுமா? ஒரு தலைவர் பிரசங்கத்திலே குறிப்பிட்டார்: உண்மையான தேச பக்தன் எல்லாவிதமான துன்ப துயரங்களையும் பொறுமையோடு சகித்துக் கொள்ள வேண்டும். தன் வீடு, குடும்பம், மனைவி, மக்களை மறக்கவும், இழந்து விடவும் தயாராக இருக்க வேண்டும். தனது நலன்களைத் தியாகம் செய்ய முன் வரவேண்டும். அவசியம் ஏற்பட்டால், தனது உயிரைக் கொடுத்தும் நாட்டுப் பணியை நிறைவேற்ற வேண்டும். இப்படி விவேகானந்தர் சொல்கிறார்''என்று நாதன் அறிவிப்பார். தன்னகங்காரத்துடன் அல்ல. இதய பூர்வமான ஈடு பாட்டுடன், திடமான மன உறுதியுடன் தான்.

ஒரு பொதுக் கூட்டம் சம்பந்தமாகத்தான் அப்பொழுது நாதன் போய்க் கொண்டிருந்தார். கவிராயர் சொக்கையாவைக் கண்டதும் கூப்பிட்டார். 'என்ன அண்ணாச்சி, வரவர உங்களைக் காண்பது கார்த்திகைப் பிறையைக் கண்டு பிடிப்பது மாதிரி ஆகிவிட்டதே! உங்களை எங்கே எல்லாம் தேடுவது?'' என்றார்.

''நான் இல்லாத இடத்தில் எல்லாம் தேடினீராக்கும்? இருக்கிற இடத்தில் பார்த்தால்தான் கண்டிருப்பீரே!'' என்று கவி தமாஷாகக் குறிப்பிட்டார். ''என்ன விஷயம்? ஏன் தேடினீர்?''

''நீங்கள் மேடை முதலாளி வீட்டில் இருப்பீர்கள் என்று நான் எப்படி நினைக்க முடியும்? உங்களுக்கு இப்போ பெரிய இடங்களில்கூட வரவேற்பு கிடைக்குது போல் தெரியுது!'' என்று தொண்டர் குறிப்பிட்டார்.

சொக்கையா பெருமையாகத் தலையாட்டிக் கொண்டார். 'கவிராயருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு!' என்று கூறிப் புன்னகை புரிந்தார்.

''மறியல் பற்றி நிறையப் பாட்டுக்கள் இயற்றியிருக்கிறீர்களா? பெரிய பொதுக் கூட்டம் நடைபெற இருக்குது. அதில் பாட வேண்டும். விசேஷமாக ஏதாவது பாட்டுக்களும்..........''

"ஜமாய்த்துவிடலாம்!" என்றார்கவிராயர். "மேடை முதலாளியும் அந்தக் கூட்டத்துக்காகத்தான் பாட்டு கேட்டார்..."

"அவருக்கும் கூட்டத்துக்கும் என்ன சம்பந்தமோ?"

அவர் மகன் திருமலே தேச பக்தராக மாறுவதற்கு அன்றுதான் நல்ல நாளாம்! அதற்கு விழா மாதிரி..."

'சரிதான். பணம் பத்தும் செய்யும் என்பார்கள். அதில் இதுவும் ஒன்று போலிருக்கு!" என்று முனகியபடி, தன் வழியே போனார் தொண்டர்.

## 8. சிந்தனைக் குழப்பம்

திருநகருக்குப் பெருமை அளித்துக் கொண்டிருந்த சிறப்புகளில் 'உயர் நிலம்' என்பதும் ஒன்று ஆகும்.

ஊருக்குக் கிழக்கே, நகரத்தின் நச்சுக் காற்று படாத தொலைவில், அமைந்திருந்தது அது. நகரத்தைவிட மேடான பகுதி. பொட்டல் காடு போல் தோன்றிய அப பெருவெளியில் சதா காற்று ஜிலு ஜிலுவென வீசும். திருநகரைச் சுற்றி உள்ள வட்டாரங்களில் கடமையாற்றிய 'வெள்ளைக்காரத் துரைமார்கள்' அங்கே தங்கள் பங்களாக்களை அமைத்துக் கொண்டார்கள். அதை 'ஹை கிரவுண்ட்' என்றும் குறிப்பிட்டார்கள்.

அவர்களை 'காப்பி அடிப்பதே' கௌரவம் என்றும், வெற்றிகரமான வாழ்க்கை முறை எனவும் கருதிய 'கருப்புத் துரைகள்' சிலர் தங்களுக்கு அங்கே சிறுசிறு பங்களாக்கள் கட்டிக்கொண்டு, நாகரிகமாக வாழ்வதில் ஆர்வம் காட்டினார்கள்.

அங்கே சுத்தமான காற்று வீசுவதால் நோயாளிகளுக்கு சுகவாசஸ்தலமாகவும் அது பயன்படும் என்று டாக்டர்கள் சிபார்சு செய்தார்கள். வசதி உள்ள

பெரிய வீட்டுக்காரர்களும், நிரந்தரமான சீக்காளிகள் என்று விளம்பரப்படுத்துவதில் விருப்பமுடைய உயர் குடும்பத்துப் பெண்மணிகள் சிலரும் அந்தப் பகுதியில் வசிக்கலானார்கள்.

இந்த ரக உல்லாசிகளில் ஒருவர் 'ஹை கிரவுண்ட்' என்பதை 'மேட்டுத் தரை' என்று தமிழாக்கிப் பார்த்து, அது அழகாக இல்லை என ஒதுக்கிவிட்டு 'உயர் நிலம்' என்று பெயர் சூட்டினார். அந்தப் பெயரே அதற்கு நிலைத்து விட்டது.

'உயரமான இடம் என்பதனாலும், உயர் இனத்தவர்கள் வசிக்கும் இடம் என்பதாலும், உயர் நிலம் என்பது மிகவும் பொருத்தமான பெயர்' என்று பெயர் சூட்டியவரே பாராட்டுரைகள் வழங்கிக்கொண்டார் என்று குறும்புக்காரர்கள் சிலர் கூறுவது உண்டு.

அங்கே, வெள்ளைக்காரர்கள் பொழுது போக்கவும் குடித்து ஆடிப் பாடவும் வசதியாக 'இங்கிலீஷ் கிளப்' என்று ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்கள். மாலை வேளைகளில் டென்னிஸ், பேட்மிண்டன் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவோரும் அதில் சேர்ந்திருந்தார்கள்.

அதே பாணியில், 'இந்தியன் கிளப்' என ஒன்றை அமைத்துக் கொண்டார்கள், 'கருப்புத் துரைகள்'. ஆனால் இவர்கள் குடிப்பதுமில்லை. களிவெறியோடு குதித்தாடுவதற்கு 'துரைசாணி'கள் இங்கே வருவதுமில்லை! சரியான சோம்பேறிச் சுப்பர்கள் கூடுகிற இடம் இது. ஈசிச்சேரில் ஓய்வாகச் சாய்ந்து மாலை வெயிலின் கதகதப்பை அனுபவித்துக் கொண்டிருக்கும் 'ரிட்டயர்டு ஜென்டில்மென்'—உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற பெரியவர்கள் இங்கு பலர் இருந்தார்கள். சீட்டாடுவதும் வம்பளப்பதும் இவர்களுடைய பொழுதுபோக்கு. பந்து விளையாடுவதற்கு என்று மாலை நேரங்களில் மட்டும் வந்துபோகிற சிலரும் இதில் அங்கத்தினர்கள். அவர்களில் கல்லூரிப் பேராசிரியர்களும், வக்கீல்களும், தொழில் அதிபர்களும் உண்டு.

நாடு முழுவதும் காணப்பட்ட புது விழிப்பும், மக்களின் புதிய எழுச்சியும், அவற்றின் விளைவுகளும் 'இந்தியன் கிளப்' அங்கத்தினர்களின் உரையாடலுக்கு உரிய விஷயம் ஆவதிலிருந்து தப்பிவிட முடியுமா என்ன?

பல பிரமுகர்களும் காந்திஜீயைக் குறைகூறினார்கள். நாட்டில் கிளர்த்தெழுந்த விடுதலைப் போராட்டத்தைக் கண்டித்தார்கள். நாட்டில் நாகரிகம் பரவுவதற்கும், ரயில் தந்தி தபால் போன்ற வசதிகள் ஏற்படுவதற்கும் வகை செய்து தந்த வெள்ளைக்காரனை வெறுப்பதும் விரோதிப்பதும் சரியல்ல என்று அவர்களில் பலரும் அபிப்பிராயப் பட்டார்கள். தேசபக்தி என்பதே இந்தியாவுக்குப் புதிய விஷயம்; பிரிட்டிஷார் வரலாறும் ஆங்கிலம் மூலம் நமக்கு அறிமுகமாகியுள்ள உலக சரித்திரமும் கற்றுத் தந்த புதிய உணர்ச்சியே அது; சிதறிக் கிடந்த சிற்றரசுகளின் பரஸ்பரப் போராட்டமும் போட்டியும் பொறாமையும் காட்டிக் கொடுத்தலும் அடிமைப்படுதலுமே இந்திய நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகள் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

"பார்க்கப்போனால் இந்த விடுதலை இயக்கத்துக்கு அஸ்திவார மிட்டதே ஒரு வெள்ளையர்தான். இதை நாம் மறப்பதற்கில்லை" என்றார் ஒரு பெரியவர்.

"இருந்தாலும், மிஸ்டர் காந்தியை நாம் பாராட்டத் தான் வேண்டும். இந்த நாட்டினரின் மனோபாவத்தை நன்றாக உணர்ந்து கொண்டு செயல் புரிகிறவர் அவர். ஆத்மாவுக்கும் ஞானத்துக்கும் மதிப்பு அளிக்கிற நாடு இது. பொருளையும் உலக போகங்களையும் உடல் சுகங்களையும் பெரிதுபடுத்தி, பூஜித்து வருகிற இதர நாட்டினர் இந்தியாமீது வியப்பும் மதிப்பும் காட்டுவதற்கே நம் நாட்டினரின் இந்தப் பண்பாடுதான் முக்கிய காரணம் ஆகும். சொத்து சுகம் பட்டம் பதவி செல்வம் அனைத்தையும் அலட்சியமாகக் கருதி, எந்தக் கணத்திலும் உதறி எறிந்துவிட்டு வெளியேறக் கூடிய மனநிலை நம்மவர்களிடம் சகஜமாகக் காணப்படுகிறது. இதை மிஸ்டர் காந்தி அரசியல் துறையில் லாபகரமாகப் பயன்படுத்த முனைந்தது, அவருடைய சாமர்த்தியத்தைக்

காட்டுகிறது" என்றார் சந்திரசேகரன். அவர் ஒரு வக்கீல்.

"காந்தி மதத்தையும் அரசியலையும் ஒன்றாக இணைத்து விட்டார். தனிமனிதனின் ஆத்ம உயர்வுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சத்தியம், தூய்மை, எளியவாழ்வு, பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டாமை, கள் உண்ணாமை, எத்தொழிலையும் இழிவாகக் கருதாமை, செல்வத்தை அலட்சியம் செய்தல், உண்ணா நோன்பு, பிரமச்சரியம், துறவு போன்ற உயர்ந்த பண்புகளை அவர் அரசியல் வாதிகளுக்கு, முக்கியமாக விடுதலை இயக்கத் தொண்டர்களுக்கு, வற்புறுத்துகிறார். சாமியார்களிடமும் துறவு மார்க்கத்திலும் பக்தியும் பற்றுதலும் கொண்டுள்ள பெரிய நாட்டின் மக்களுக்கு இந்த அம்சங்கள் மிகுதியும் பிடித்து விட்டன இவை ஏகப்பட்ட பேரைக் கவர்ந்து இழுக்கும் வசிய சக்தியாக வேலை செய்கின்றன என்று புரபசர் சோமசுந்தரம் பேசினார்.

சந்திரசேகரன் குறுக்கிட்டார். "அதையேதான் நானும் சொல்கிறேன், மிஸ்டர் காந்தியை நான் போற்றத் தயாராக இருக்கிறேன். ஆனால் எப்படி? ஏசு, புத்தர் போன்ற ஞானிகளின், மதப் பெரியார்களின் வரிசையில் வைத்து!" என்று அவர் சொன்னார்.

சோமசுந்தரம் சிந்தனை நிதானத்தோடு தன் எண்ணங்களை வெளியிட்டார். "தனிமனிதனின் ஆன்மீக உயர்வுக்காக ஏற்பட்ட உயரிய சிரம சாத்தியமான, செயல்முறைகளை மொத்தமாக ஒரு நாட்டினர் பின்பற்ற வேண்டும். உடனடியாகச் செயலில் அனுஷ்டிக்க வேண்டும் என்று விரும்புவதும், திட்டமிட்டு விதி செய்வதும் புரட்சிகரமான போக்குத்தான். தனிமனிதர்கள் கூடக் கடுமையான பயிற்சியின் பிறகே ஒருவாறு வெற்றி பெறக்கூடிய இச் சாதனைகளை பல சமூகங்களும், நாடும் வெகு சுலபமாக நினைத்த மாத்திரத்தில், கையாண்டு சாதனை நிறைவு பெறமுடியுமா என்பது சந்தேகத்துக்கு உரியதே. ஆயினும் இதன் முடிவை நாம் காலத்துக்கு விட்டுவிடுவோம்...?"

"தனிமனிதர்களைக் கொண்டது தானே சமூகம்? தனிநபர்களுக்கு சாத்தியமாகக் கூடியது சமூகங்களுக்கும் ஏன் பொருந்தாது? இப்போதே நாடெங்கும் எத்தனை எத்தனையோ பேர் பட்டம் பதவிகளை உதறி எறிந்திருக்கிறார்களே. உத்தியோகத்தை, படிப்பை, சொத்தை எல்லாம் துறந்து விட்டு தேசப் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டிகிறார்களே? பிரபு மாதிரி வாழ்க்கை நடத்தியவர்கள் பலர் கஷ்டங்களை ஏற்றும், சிறையில் கிடந்து தண்டனை அனுபவிக்கவும் முன்வந்திருக்கிறார்களே? இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார்.

"இதைக் காந்திஜீயின் ஆன்மபல வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நாட்டுக்கே இயல்பான ஆன்ம வேட்கைக்கு காந்தியின் ஒளி நல்ல மருந்தாக அமைந்துள்ளது என்று சொல்லலாம். கால வேகத்தினாலும், உணர்ச்சிதூண்டுதல்களினாலும் புதுமைக் கவர்ச்சியினாலும், ஊக்கத்தோடு செயலாற்றுகிறார்கள் மக்கள். இவர்கள் எல்லோரும் லட்சியக் கொள்கைகளின் புனிதத்தைப் புரிந்துகொண்டு, உளமாற அவற்றை வாழ்க்கை தர்மங்களாக வரித்துக்கொண்டு விட்டனர் என்று முடிவு கட்டிவிடலாமா என்ன? உதாரணத்துக்கு ஒன்று கூறலாம். சத்தியமே கடவுள் என்று அறிவிக்கிறார் காந்தி. கடவுளே சத்தியம் என்று நான் சொல்லி வந்தேன்; அதை மாற்றி, சத்தியத்துக்கே உயர்வும் முக்கியத்துவமும் கொடுக்க வேண்டும் என நான் உணர்கிறேன்; அதனால், சத்தியமே கடவுள் என்று வற்புறுத்துகிறேன் என்று காந்தி கூறுகிறார். சத்தியத்துக்காக எவ்வளவோ சிரமங்களை அனுபவித்த அரிச்சந்திரனின் கதையால் வசீகரிக்கப்பட்டவர் அவர். அவர் வேண்டுமானால், அரிச்சந்திரனைப் போல், சத்தியத்துக்காக எல்லா விதமான சோதனைகளையும் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வார். அவரைப் பின்பற்றுகிறவர்கள் எதுவரினும் சத்தியத்தை விட்டுக் கொடுக்காத சீலர்களாக விளங்குவர் என்று எதிர்பார்க்க முடியுமா? மனித பலவீனங்களை உணர்ந்தவர்கள் அவ்விதம் எதிர்பார்ப்பார்களா என்ன? காந்தியின் லட்சியக் கொள்கைகளான

மதுவிலக்கு, பிரமச்சரியம் முதலிய அனைத்துக்கும் இது பொருந்தும்'' என்று சோமசுந்தரம் பேசினார்.

''என்ன நடக்கும் என்று நாம் எப்படிச் சொல்ல முடியும்? இல்லை, அது பற்றி இப்பவே நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? இன்று இந்தியா விழிப்புற்று, வீரத்துடன் செயல் புரிகிறது. சாதாரண மக்கள்கூட நெருக்கடி ஏற்படுகிற காலத்தில் ஆத்மபலம் பெற்ற மனிதர்கள் தாங்கள் என்பதை நிரூபித்து விடுகிறார்கள். இதையும் நிகழ்காலச் சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன'' என்று முடிவுரை போல் கூறினார் வக்கீல்.

## 9. கண்ணீரும் ஆசையும்

வீட்டை வீட்டு வெளியேற்றப்பட்டதற்காக காந்திமதிநாதன் சிறிதளவுகூட வருத்தப்படவில்லை. அது நல்லதுக்குத்தான் என்ற மகிழ்ச்சியே அவனுக்கு ஏற்பட்டது.

'வீட்டோடு இருந்தால், ஒவ்வொரு விஷயத்துக்கும் அப்பா என்ன சொல்லுவாரோ, அம்மா என்ன நினைப்பாளோ என்று தயங்கிக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அனுமதியை எதிர்பார்க்க வேண்டிய அவசியமும் ஏற்படலாம். இப்போது அந்தக் கவலையே கிடையாது. இஷ்டம் போல், நம் மனம் தேர்ந்த வழியில், துணிந்து செயல் புரியலாம் அல்லவா?' என்று அவன் எண்ணினான்.

பள்ளிப் படிப்பை அந்தரத்தில் விட்டுவிடுவதும், சீராக அமையக் கூடிய தனது எதிர்காலத்துக்குத் தானே குழிபறித்துக் கொள்வதும் நல்லதுதானா' என்று ஒரு சலனம் அவன் உள்ளத்தில் நிகழ்ந்தது. அதற்கும் அவனுடைய அறிவே சமாதானம் கண்டுகொண்டது.

''இன்று என் ஒருவனுடைய எதிர்காலம் மட்டுந் தானா பாதிக்கப்படுகிறது? நமது தாய் நாட்டில், பல்லாயிரக்கணக்கான மக்களின், நிகழ்காலம்கூட

வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதே! உறுதியான, வளமான, நிகழ்கால வாழ்வை தேச பக்தியின் பேரால் காவு கொடுக்க எவ்வளவோ பேர் துணிந்திருக்கிறார்களே. நிச்சயமற்ற எதிர்காலம் பற்றி இப்பவே நான் ஏன் கவலைப்பட வேண்டும்?' என்று அவன் சிந்தித்தான்.

'என் அப்பா அம்மா, என் வீடு, என் குடும்பம் என்ற குறுகிய நோக்கு வளர்வதனால்தான் தனிநபர்களில் பெரும்பாலோருக்கு சமூக நல உணர்வு ஏற்படாமலே போகிறது. சின்னதோர் கடுகு உள்ளம் பெற்றவர்கள் தங்களுடைய வருங்கால வாழ்க்கை பற்றியும், தங்கள் பெண்டாட்டி பிள்ளைகளின் நிலைமை குறித்தும் கவலைப்படுவது இயல்பு ஆகிவிடுகிறது. வீட்டுக்குள்ளேயே ஒடுங்கிக் கிடக்க விரும்பவில்லை நான். மனித சமுதாயமும், நாடும் நன்னிலை அடையவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்' என்று அவன் கூறிக் கொண்டான்.

இதையேதான் அவன் புரபசர் சோமசுந்தரத்திடமும் சொன்னான். ஒரு நாள் அவரை அவன் தற்செயலாகச் சந்திக்க நேரிட்டது. அவராகத்தான் பேச்சுக் கொடுத்தார்.

''என்ன காந்திமதிநாதன், இன்றைய வேகம் உன்னையும் சும்மா விட்டு விடவில்லை போல் தெரியுது! எல்லாம் கேள்விப்பட்டேன். படிப்புக்கு ஒரு கும்பிடு என்று பெரிய கும்பிடு போட்டு விட்டாயாக்கும்?'' என்றார் அவர்.

காந்தி வெறுமனே சிரித்தபடி நின்றான்.

''உம். உள்ளம் தேர்ந்துகாட்டுகிற வழியில் செயல் புரியக் கிளம்புவதற்குத் துணிச்சல் வேண்டியதுதான். அந்தத் துணிவு உன்னிடம் இருப்பதாகத் தெரிகிறது. இதே துணிச்சல் இன்று நாட்டு மக்களில் பலபல பேரிடமும் காணப்படுகிறது. எனவே, அதிசயிக்கத் தக்க சாதனைகள் நிகழக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். எல்லாவற்றையும் நான் அக்கறையோடு கவனித்துக் கொண்டுதான் வருகிறேன்'' என்று புரபசர் சொன்னார்.

"நீ இப்படித் திடீர் முடிவுக்கு வந்ததற்காக, என்றாவது ஒரு நாள் வருத்தப் படமாட்டாயே?" என்று சோமசுந்தரம் கேட்டார். அப்போதுதான் அவன் தன் கருத்தை வெளியிட்டான்.

அவர் அவனை முதுகில் தட்டிக்கொடுத்தார். "பேஷ்! எவன் தான் கொண்ட தீர்மானத்துக்காக, நெஞ்சுறுதியோடு, பெற்றோரை எதிர்த்து, வீட்டை விட்டு வெளியேறவும் தயாராகி விடுகிறானோ, அவன் அபாரமான காரியங்களைச் செய்தே தீருவான் என்று நம்புகிறவன் நான். உன்னிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது வாழ்க" என்று பாராட்டினார்.

புரபசர் சோமசுந்தரத்திடம் அவனுக்குத் தனி மதிப்பு உண்டு ஆகவே, அவருடைய பாராட்டு அவனுக்கு ஆனந்தமும் அதிகமான உற்சாகமும் ஊக்கமும் தந்தது.

"உள்ளம் தேறிச் செய்வினையில்
ஊக்கம பெருக உழைப் போமேல்
பள்ளம் உயாமே டாகாதோ?
பாறை பொடியாய்ப் போகாதோ?"

என்ற, அவனுக்குப் பிடித்தமான கவிதையை அவன் அடிக்கடி முணகிக் கொள்வது வழக்கம்.

இவ்வித ஊக்கமும் உழைப்பும் எண்ணற்றவர் களிடம் மலர்ச்சி பெற்றுள்ளபோது எந்த சக்தி எதிர் நிற்கமுடியும்? எதுதான் முட்டுக்கட்டை போட இயலும்? ஆகவே, நிச்சயமான வெற்றியில் அவனுக்கு நம்பிக்கை இருந்தது.

அவன் விடுதலை இயக்கத் திட்டப்படி தீவிரமாகப் பணிபுரியலானான். 'மறியல்' நின்றுவிட்ட பிறகு, அவனும் மற்றவர்களோடு சேர்ந்து கிராமம் கிராமமாகச் சென்று கதர் விற்பனை, மதுவிலக்குப் பிரசாரம், தீண்டாமை ஒழிப்பு முதலியவைகளில் ஈடுபட்டான், ஹரிஜனங்களைக் கோயிலுக்குள் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதில் அதிக உற்சாகமும் ஆர்வமும் காட்டிவந்தான். "சமபந்தி போஜனம்" என்று ஏற்

பாடு செய்வதிலும், தீண்டாதார் என ஒதுக்கி வைக்கப் பட்டவர்களின் வீடுகளில் உணவு உண்பதிலும் அவன் உற்சாகம் காட்டினான்.

இதனால் எல்லாம் அவனுடைய உறவினர்களே அவனைப்பற்றிக் கேவலமாகப் பேசினார்கள். ஒரு சிலர் செந்தில்நாயகத்திடம் மகனைப் பற்றிய செய்திகளைச் சொல்லிவிட்டு, "அவன் இப்படி மாறுவான் என்று யாராவது எண்ணியிருக்க முடியுமா? நல்ல பையன் இப்படி பெரிய குடும்பத்தின் பேரைக் கெடுத்துக்கிட்டுத் திரிகிறானே" என்று குறைப்படுவார்கள்.

முதலாளி செந்தில்நாயகம் முகத்தைக் கடு கடுப் பாக்கிக் கொண்டு "அவன் பேச்சை என்னிடம் பேச வேண்டாம். என் மகன் செத்தொழிந்தானென்று நான் கையைக் கழுவியாச்சு. அவன் என்ன செய்தால் இனி எனக்கென்ன?" என்று சொல்லி விடுவார்.

"பையன் போகிற போக்கைப் பார்த்தால், எவளாவது ஒரு பள்ளியை கல்யாணம் பண்ணிக் கொள்வான்போல் தோணுது!" என்று ஒரு பெரியவர் சொன்னார்.

'அவன் பள்ளி பறைச்சியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டும் அல்லது, எவளாவது சக்கிலிச்சியைச் சேர்த்து வைத்துக் கொள்ளட்டும்! அவன் எக்கேடும் கெட்டு எப்படியும் நாசமாகட்டும்" என்று தனது விரக் தியைச் சாதிவெறியோடு அறிவித்தார்.

தந்தையின் பேச்சும் சுடுசொற்களும் சில சமயம் காந்திமதிநாதனின் காதுகளை எட்டுவதும் உண்டு. அப் போதெல்லாம் அவன் புன்முறுவல் பூப்பது தவிர, வேறு எவ்விதமான உணர்ச்சியையும் வெளிப்படுத்துவது கிடை யாது. "பழங்காலத்து ஆட்கள் வேறு எவ்வாறு நடப்பார் கள்? இவ்விதம் தான் பேசுவார்கள்; செயல்புரிவார்கள்!" என்று அமைதியாய் சொல்லிவிடுவான்.

அவன் பொதுப்பணிகளிலும் சமூகத்தொண்டிலும் தீவிரமாக ஈடுபட்டதைப் போலவே, தனது உடல்,

உள்ளம், ஒழுக்கம் ஆகியவற்றை நல்வழியில் பயிற்று வதிலும் அதிக அக்கறை காட்டி வந்தான். அதிகாலையில் எழுந்து சிரசாசனம், சர்வாங்காசனம் போன்ற ஆசனப் பயிற்சி செய்வது, குளிர்ந்த நீரில் குளிப்பது முதல், வாரத்தில் ஒருநாள் உண்ணுவிரதமும், மௌனவிரதமும் அனுஷ்டிப்பது ஈருக சகல சிரமமான பயிற்சிகளையும் மேற்கொண்டான். அறிவு வளர்ச்சிக்காகப் பல நூல் களைப் படித்தான்.

மகாத்மா காந்தியின் "சத்திய சோதனை" சுவாமி விவேகானந்தரின் நூல்கள், சுபாஷ் சந்திர போஸின் "இளைஞன் கனவு" போன்றவை அவனைப் பெரிதும் வசீகரித்தன. தானும் விவேகானந்தரைப் போல வாழ வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான்.

"பெரிய வீட்டு" காந்திமதிநாதன் விடுதலை இயக் கத்தில் மும்முரமாக ஈடுபட்டு, சமூகப் பணியில் தீவிர மாகப் பங்குபற்றி வருவது நிருநகர் தேசபக்தர்களுக்கும் இயக்கத் தொண்டர்களுக்கும் மிக்க மகிழ்ச்சி அளித்தது. அவன் அவர்களுக்கு நல்ல துணையாகவும், லட்சியத் தொண்டனுகவும், ஊக்க மூட்டும் உற்சாகியாகவும் திகழ்ந்தான்.

அதே சமயத்தில் சிலருக்கு வேதனையும் ஏமாற்றமும் அளிப்பவனுக அவன் விளங்கினுன்—அவனது வீட்டாருக் கும் உறவின் முறையாருக்கும்தான். அவனுடைய தாய் தன் ஒரே மகன் இந்தவிதம் ஊருக்கு உழைக்கிறேன் என்று கிளம்பி, பெற்றவர்களுக்கு உதவாதவனுக போய் விட்டானே என்று எண்ணி, உள்ளம் குமைந்து நெஞ்சு புண்ணுகாத நேரம் இல்லை என்று ஆகிற்று. அவள் தன் இதய வேதனையை வெளியே அறிவிக்க அஞ்சினுள். கணவனுக்கு பயந்தாள் அவள். புலம்ப ஆரம்பித்தால், அவர் எரிந்து விழுந்து ஏசுவாரே என்ற அச்சம் அவளுக்கு. ஆகவே மௌனமாகக் கண்ணீர் சிந்திக் காலம் கழித்தாள் அவள்.

அதே போல இன்னொரு பெண்ணும் அவனுக்காக மோனக் கண்ணீர் சிந்தினுள். காந்தியின் மாமாமகள் அன்னம்தான் அவள்.

அன்னம் தன் அத்தான்மீது விருப்பம் கொண்டிருந்தாள். அக்கம் பக்கத்தினரும் உறவினரும் கேலிப் பேச்சுகளாலும் நேர்மொழிகளினாலும், சின்ன வயது முதலே, அவள் உள்ளத்தில் ஆசை வித்திட்டு வளர வைத்திருந்தார்கள். ''அவளுக்கு என்ன! ராஜா மாதிரி அத்தான் இருக்கான்'' என்றும், அத்தானுக்காக காத்திருக்கிறாள் அன்னம் என்று பலவாறாகப் பேசி அவளுக்கு இன்பமயமான எதிர்காலம் பற்றிய கனவுச் சித்திரங்களுக்கு வகைசெய்து கொடுத்திருந்தார்கள். அவளும் அவ்விதமே நம்பினாள். ''அத்தானின் படிப்பு முடிந்ததும், அத்தானுக்கும் எனக்கும் கல்யாணம் நிகழும்'' என்று அவள் ஆசைப்பட்டாள்.

காந்தி, மற்றவர்கள் எதிர்பார்க்க முடியாத விதத்திலே செயல்புரிய ஆரம்பித்த பிறகு உறவுக்காரர்கள் அவனைக் கரித்துக் கொட்டினார்கள். அன்னத்தின் அப்பாவும் அம்மாவும் கூட அவனைப் பழித்தார்கள். அந்தப் பேச்சுகள் அந்த யுவதியின் உள்ளத்தில் சுடுசரமாய் பாய்ந்தன.

''நம்ம அத்தான் ஏன் இப்படி மாறணும்?'' என்று குழம்பினாள் அவள். காந்தியை ஒரு தடவை நேரில் கண்டு பேசவேண்டும் என்று விரும்பினாள். தன் கெஞ்சினால், அழுது வேண்டினால், அத்தானின் மனம் மாறினாலும் மாறிவிடும் என்று ஒரு அசட்டு ஆசையை வளர்த்தாள் அந்தப் பேதை.

## 10. பணத்தின் சக்தி

முதலாளி பிறவிப் பெருமாள் அவர்களின் செல்வ மகன் திருமலை, கட்சியில் சேர்ந்தது பெரிய திருவிழா படும்பாடு பட்டது.

அதே சந்தர்ப்பத்தில் மேடை முதலாளி தமது சுதேசி பந்தாரையும் தடபுடலான ஆரம்ப விழாவுடன் திறந்து வைத்தார்.

இரு நிகழ்ச்சிகளும் திருநகரில் அவர் பெயர் விளம்பர மாவதற்கு நன்கு உதவின.

பெரிய பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்த பெரும் தலைவர் பிறவிப் பெருமாளின் வசதிகள் மிகுந்த பங்களா வில்தான் தங்கினார். அவர் அங்கு மிங்கும் போய் வருவதற்கு முதலாளியின் கார்தான் பயன்பட்டது

தலைவருக்கும் பிரசங்கிகளுக்கும் பிரமுகர்களுக்கும் சிறப்பாக விருந்தளித்த முதலாளி ஏழை எளியவர் களுக்கும் அன்ன தானம் செய்தார். அவருக்கு எதையுமே சாதாரணமாகச் செய்து பழக்கம் கிடையாது. பெரிய அளவில் செய்து பழகிய கை அவருடையது!

கலெக்டர் துரைக்கும், சூப்ரண்டு துரைக்கும் சில சமயங்களில் அவர் அன்பளிப்பாகக் காணிக்கைகள் அனுப்புவது உண்டு—கிறிஸ்துமஸ், புது வருஷப் பண்டிகை சமயத்தில்தான். அவர் அனுப்புகிற சாமான் களை பார்த்தால், கல்யாண விருந்துக்குப் போதும் போல் தோன்றும். கூடை கூடையாய் முட்டைகள், வாத்துக் கள். ஆரஞ்சு ஆப்பிள் பழ தினுசுகள் என்று சப்ளை பண்ணுவார்.

இந்தச் சந்தர்ப்பத்திலும் அவருடைய தாராளம் புதிய நபர்களுக்கு பிரமிப்பைத் தந்தது. பெரிய வாழை இலை பரப்பி, பழவகைகளும் பாயசமும் நெய்யுமாக அளித்து, விழுந்து உபசரித்து எல்லோரையும் மகிழ் வித்தார்.

இவ்வாறெல்லாம் அவர் செய்யும்போது ஏதோ பயனை எதிர்நோக்கி அவர் செய்கிறார் என்று சொல்லி விட முடியாது. கொடுப்பதில் இன்பம் காண்கிறவர் அவர். ஈகைக் குணம் அவருடைய சுபாவங்களில் ஒன்றாக அமைந்திருந்தது.

முதலாளி இப்படிப் பலருக்கும் அள்ளி வழங்கு கிறாரே! நமக்கும் ஆபத்துச் செலவுக்கு உதவட்டுமே; கேட்டால் கொடுக்காமலா இருப்பார் என்று சாதாரண நபர்கள், ஏழை எளியவர்கள் அவரிடம் உதவி கோரினால்,

கடன் உதவி வேண்டினுல்கூட அவருக்குக் கொடுத்து உதவ மனம் வராது. அவராக மனமுவந்து, அவர் இஷ்டப்படுகிறவர்களுக்கு, கொடுத்தால்தான் உண்டு. இந்தவிதமான முரண்பாடு ஒன்றும் அவரிடம் குடி கொண்டிருந்தது.

இதைச் சொக்குக் கவிராயர் உணரத் தவறிவிட்டார்!

கவி சொக்கையா சுதேசி ஜவுளிக் கடைத் திறப்பு விழாவின் போதும், திருமலையப்பன் ஊர்வலம் வந்த சமயத்திலும் அருமையான பாட்டுகளைப் பொழிந்து தள்ளினுர். பொதுக் கூட்டத்திலும் அவருடைய பாடல்கள் முழங்கின. பக்திப் பாடல்களை அடியொற்றி எதிர்க் கட்சிக்காரர்களை நையாண்டி செய்யும் பாடல்கள் பல அவர் இயற்றியிருந்தார். அவை எல்லோராலும் பாராட்டப்பட்டன.

இவ் விழா வைபவங்கள் முடிந்து இரண்டு தினங்கள் சென்ற பிறகு, கவிராயருக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது. பணத் தட்டுப்பாடுதான் அப்படி அவரை எண்ணத் தூண்டியது. மேடை முதலாளியிடம் 'ஸம்திங்' கேட்டுப் பார்த்தால் என்ன? ஆசை எழுந்த உடனேயே அவர் செயல்புரிய விரைந்தார்.

பிறவிப் பெருமாள் அலட்சியமாக அவரை நோக்கினுர். "என்னடே சொக்கு, என்ன சமாச்சாரம்?" என்று முதலாளி தோரணையிலேயே விசாரித்தார்.

கவிராயர் மென்று விழுங்கினுர். "அன்றைக்கு ஊர்வலம்" கூட்டம் எல்லாம் பிரமாதம்" என்று ஆரம்பித்தார். அப்பொழுதாவது அவருடைய பாட்டுக்களைப் பாராட்டி முதலாளி சில வார்த்தைகள் பேசமாட்டாரா என்ற அல்ப ஆசைதான் இதற்கு அடிப்படை.

முதலாளி அப்படி எதுவும் செய்துவிடவில்லை. 'உம்உம்' என்று அலட்சியமாகக் குரல் கொடுத்தார்.

அவர் போக்கு கவிராயருக்கு ஏமாற்றமே தந்தது. எனினும் சொக்கையா மனச் சோர்வு கொள்ளவில்லை.

அதையும் இதையும் பேசிய பிறகு, பேச்சோடு பேச்சாக ரூபாய் விஷயத்தையும் வெளியிட்டார். "ரொம்பவும் கஷ்டமாக இருக்குது. ஒரு ஐம்பது ரூபாய் கொடுத்தால் உதவியாக இருக்கும்" என்றார்.

மேடை முதலாளி கவிராயரை ஒரு தினுசாகப் பார்த்தார்.

எதுவும் சொல்லவில்லை.

சொக்கையா தயக்கத்தோடு பேசினார். "நான் இனமாகக் கேட்கவில்லை. இப்போ நீங்கள் கொடுத்து உதவினால், பணம் வந்ததும் நான் திருப்பித் தந்து விடுவேன்."

"உமக்குப் பணம் எப்போது வரும்? எங்கிருந்து வரும்?" என்று கேட்ட முதலாளியின் குரலில் கேலி தொனிப்பது போல் இருந்தது.

சிறிது மௌனம் நிலவியது அந்த இடத்தில். பிறகு முதலாளிதான் சொன்னார் "இப்போது பணம் இல்லை. ஏகப்பட்ட செலவு ஆகிவிட்டது. அதுதான் உனக்கே தெரியுமே! வீணாக நிற்பதில் பிரயோசனமில்லை" என்று.

கவிராயர் இத்தகைய பேச்சை எதிர்பார்க்கவில்லை. ஐம்பது ரூபாய் கிடைக்காமல் போனாலும், இருபத்தைந்து அல்லது இருபதாவது கிடைக்கும் என்று நிச்சயமாக நம்பியிருந்தார். எனவே, ஏமாற்றம் சுமையாக அழுத்த அவர் திரும்பினார்.

"பணம் இல்லையாம்! பெருமைக்காக அள்ளி இறைப்பதற்கு இருக்கும். கஷ்டம் என்று சொல்லி, கேட்கிறவனுக்கு உதவப் பணம் இல்லையாம். மனம் இல்லை என்று சொல்லுவதுதானே?" என்று நெஞ்சோடு புலம்பியவாறு நடந்தார் கவி.

"இவனுக்கு நினைத்த போதெல்லாம் கொடுப்பதற்கு இங்கே பணம் என்ன கொட்டியா வைத்திருக்கு?" என்று முணு முணுத்தார் முதலாளி. "இனி நம்மைப்பற்றி

இவன் கேவலமாகப் பேசித் திரிவான். போறான் வெறும் பயல்!'' என்று அவர் மனம் பேசியது.

இரண்டு தினங்களுக்குப் பிறகு ஒரு நிகழ்ச்சி நடந்தது. மேடை முதலாளிக்கு நஷ்டம் ஏற்படுத்தும் சம்பவம்.

அவரது பழைய ஜவுளிக் கடையின் பட்டு தினுசுகள் விதேசித் துணி ரகங்கள் எல்லாம் தனியாக ஒரு இடத்தில் பத்திரப்படுத்தப் பெற்றிருந்தன. அந்த இடம் தீப்பற்றி எரிந்து, சரக்குகள் முழுமையும் சாம்பலாகி விட்டன. தீ எப்படிப் பிடித்திருக்கும் என்று தெரியவில்லை.

''முதலாளி தானாக அவற்றை எல்லாம் தீயில் போடவில்லை அல்லவா? அதனால் தீயே வந்து அவற்றை விழுங்கி விட்டது'' என்று கவிராயர் தொண்டர் நாதனிடம் வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

அவரும் தொண்டர் நாதனும் வேறு சிலரும் முதலாளியின் விதேசித் துணிகளுக்குத் தீ வைத்திருக்கலாம் என்று மேடை முதலாளி சந்தேகப்பட்டு ரிப்போர்ட் கொடுத்திருப்பதாக, போலீசார் அவர்களைக் கைது செய்து சென்றனர்.

இச் செய்தி திருநகர் எங்கும் பரபரப்பு உண்டாக்கி விட்டது.

## 11. அன்பின் அழைப்பு

காந்திமதி நாதனின் மாமா மகள் அன்னம், சராசரிப் பெண். அவளுடைய கனவுகள், ஆசைகள், வாழ்வின் குறிக்கோள் எல்லாம் கல்யாணமாகிக் குடும்பம் நடத்த வேண்டும், குழந்தைகளுக்குத் தாயாக வேண்டும், சீரும் சிறப்புமாக — பணத்தோடும் பவிஷோடும் — காலம் கழிக்க வேண்டும் என்ற வளையத்திற்குள்ளேயே அடங்கிக் கிடந்தது.

பெற்றோரும் பெரியவர்களும் பார்த்து நிச்சயிக்கிற மணமகனை மௌனமாக ஏற்றுக்கொண்டு, பிறகு எதிர்ப் படுவனவற்றை எல்லாம் விதியே என்று சகித்துக்கொள் ளக்கூடிய சாதாரணப் பெண்தான் அவளும். ஆனாலும் பெரியவர்கள் சிலரும் அக்கம் பக்கத்தினரும் அவளு டைய அத்தானே அவளது எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கக் கூடிய கணவனாக வந்து விடலாம் என்று பேசி, அவள் உள்ளத்தில் பசிய நினைவுக் கொடிகள் படர வசதி செய்து வந்ததனால், அப்படி ஒரு வாய்ப்பை எதிர்பார்த்திருந்தாள் அவள்.

காந்தி தனக்கெனத் தனி வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளத் துணிந்து விட்டதால் ஏமாற்றம் அடைந்த கன்னி, தன்னுடைய அத்தான் தன்னை வஞ்சித்து விட்டான் என்றே கருதினாள். அவளாக எண்ணிக்கொண்ட ஆசையை காலம் கருக்கி விட்டது. அதற்கு அவன் பொறுப்பு ஆக மாட்டான் என்பதை அவள் ஏற்றுக்கொள்ள மாட்டாள்.

மாமா மகள் என்கிற உறவுமுறை அளித்துள்ள உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு, காந்திமதிநாதன் அவளைக் கேலி செய்து வந்திருக்கிறான். சிறு வயசு முதலே நிகழ்ந்து வந்த விஷயம் அது. அதற்கெல்லாம் அவள் விசேஷமான உணர்வுச் சாயம் பூசிக் கொண்டு உளம் மகிழ்ந்து போயிருந்தால், அது அவனுடைய பிசகு ஆகிவிடுமா?

ஆனால் அன்னம் தன் அத்தானுக்குத் தன்மீது அதிக ஆசை இருப்பதாக நம்பினாள். அவன் தன்னை மணம் புரிந்து கொள்வான் என்று ஆசைப்பட்டாள். காலச் சுழிப்பில் இழுபட்டு, லட்சிய வேகத்துக்கு ஆளா காது இருந்திருப்பின், பெரியோர்கள் முடிவு செய்து வழி காட்டினால், அவனும் அவளைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கக்கூடும். கால ஓட்டமும் லட்சிய வெறி யும் எண்ணற்றவர்களின் வாழ்க்கையைத் திசை திருப்பி விட்டதுபோல், காந்தியின் வாழ்வையும் மாற்றி விட் டதே!

ஆயினும் அன்னம் ஏமாற்றத்தை நிச்சயமான முடிவாக அங்கீகரிக்கத் தயாராக இல்லை; தன் அத்தானைக் கண்டு பேச வேண்டும் என்று துடித்தாள்.

அவனைச் சந்திப்பது என்பதே அவளைப் பொறுத்த மட்டில் மிகவும் சிரம சாத்தியமான செயலாகத் தோன்றியது. அவன் அவனுடைய வீட்டில் தங்கியிருந்தால், அல்லது வீடு இருந்த தெருவோடு போய் வந்து கொண்டிருந்தால், அவள் அவனைக் கண்டு பேசுவதற்கு வாய்ப்புகள் கிட்டும். அவனோ அந்தப் பக்கமே தலை காட்டுவதில்லை. அவள் என்ன செய்ய முடியும்? அவன் தனியாக தென்படுவதுமில்லை; தொண்டர்களோடு சுற்றித் திரிகிறான்; பொதுக்கூட்டம் ஊர்வலம் இவைகளில்தான் அவனைப் பார்க்க முடியும் என்பதை அவள் அறிந்து கொண்டாள். அங்கெல்லாம் அவள் போக முடியாதே? ஆகவே அன்னம் சோகத்தின் சித்திரமாகக் காலங் கழித்தாள்.

ஒரு நாள் அவளுக்கு உற்சாகம் தரக்கூடிய செய்தி ஒன்று கிடைத்தது. அவர்கள் வட்டாரத்தில் இருந்த ஒரு கோவில் ஹரிஜனங்களுக்காகத் திறந்து விடப்படும் என்றும்,அது சம்பந்தமான முன்னேற்பாடுகளை கவனிக்கக் காந்திமதிநாதன் அங்கே வருவான் என்றும் அவள் அறிய நேர்ந்தது.

அன்று அவனை எப்படியும் சந்தித்து விடுவது என்று உறுதி பூண்டாள் அன்னம். தன் எண்ணத்தை (அவள் தன் எண்ணத்தை) அவள் தன் அத்தை பார்வதத்தம்மாளிடம் தெரிவித்தாள். பார்வதம் நெடுமூச்சுயிர்த்தாள். "உன் மனசைப் புரிந்து கொள்ளும் சக்தியைக்கூட இழந்து விட்டானோ என்னமோ! அந்த ஈஸ்வரிதான் அவன் மனசில் வெளிச்சம் புகுத்தணும்" என்று சொன்னாள். "நீ அவனைப் பார்த்துப் பேச முடிந்தால் எனக்காக இதையும் சொல்லு. அவன் நினைப்பே என் நெஞ்சை அரிச்சுத் தின்னுது. அதே கவலைதான் எனக்கு. அவன் கதி என்ன ஆகுமோன்னு எண்ணி, ஏங்கி, நானே படுக்கையில் விழுந்து விட்டேன். இதே

ஏக்கத்தில் நான் சீக்கிரமே செத்துப் போவேன்னு எனக்குப் படுது. நான் சாகிறதுக்குள்ளே அவனை இங்கே வந்து போகும்படி சொல்லு!'' என்றும் அந்தத் தாய் புலம்பினாள்.

அவள் பேச்சைக் கேட்க அன்னத்துக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ''அப்படி எல்லாம் சொல்லாதே அத்தை!'' என்று ஆறுதல் கூறினாள் அவள்.

அன்னம் கோயிலில் காந்திமதிநாதனை சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் துணை புரிந்தது. ''அத்தான்!'' என்றாள் அன்னம். வெட்கமும், மகிழ்ச்சியும் உணர்வுக் குழப்பமும் அவளை மேற்கொண்டு பேசவிடாமல் தடுத்தன.

''என்ன அன்னம், எப்படி இருக்கிறே? எல்லோரும் சௌக்கியமா?'' என்று அவன் விசாரித்தான்.

அவள் தலை குனிந்தபடி நின்றாள்.

''எனக்கு வேலை நிறையக் கிடக்குது. நான் வாரேன்'' என்று அவன் விடைபெறத் தயாரானான்.

இச்சமயம் நழுவி விட்டால் இனிமேல் சந்தர்ப்பம் கிட்டாது, என்று உணர்ந்த அன்னம் ''அத்தான்'' என்று உருக்கமாக அழைத்தாள்.

அவள் குரல் அவன் உள்ளத்தைத் தொட்டது. நீர் மல்கிய அவள் கண்கள் அவன் இதயத்தைத் துளையிடுவன போல் தைத்தன. ''என்ன அன்னம், என்ன விஷயம்?'' என்று பரிவுடன் கேட்டான் அவன்.

''எங்களை எல்லாம் நீங்கள் மறந்து விட்டீர்களே, அத்தான்'' என்று குறை கூறினாள் அன்னம்.

''மறக்கலியே, அன்னம், எப்படி மறக்க முடியும்?''

''உங்களுக்கு உண்மையிலேயே அன்பும் பிரியமும் இருந்தால் என்னையும் அத்தையையும் இப்படித் தவிக்கும்படி விடுவதற்கு உங்கள் மனம் இடம் தருமா, அத்தான்?'' என்று கேட்டாள் அவள்.

"நம் எல்லோருக்கும் அன்னையான பாரதமாதாவுக்கு நான் செய்தாக வேண்டிய கடமை என்னை அழைக்கிறது. பிறந்த பொன்னாட்டின் விடுதலைக்காகப் பாடுபட வேண்டியதுதான் மிக முக்கியமான கடமை என்று என் மனம் எனக்கு வழி காட்டுகிறது..." என்று அவன் உணர்ச்சி வேகத்தோடு பேச ஆரம்பித்தான்.

அன்னம் குறுக்கிட்டு, அவனுடைய தாயின் வார்த்தைகளை அறிவித்தாள்.

"இந்த வீட்டில் இனிமேல் அடி எடுத்து வைக்காதே என்று என் அப்பா கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார். அம்மாவோ அங்கு வரும்படி சொல்கிறாள். தர்மசங்கடமான நிலைமைதான்" என்றான் காந்தி. சிறிது நேரம் தயங்கினான். பிறகு "சரி, நாளை கோயிலில் பூஜை முடிந்தபின் நான் அம்மாவைப் பார்க்க வாறேன். இதை அம்மாவிடம் சொல்லு!" என்றான்.

"வருவீர்களா அத்தான்? கட்டாயம் வரணும். வராமல் இருந்துவிடக்கூடாது!" என்று அழுத்திக் கூறினாள் அன்னம்.

"ஊம் ஊம்" எனத் தலை அசைத்துச் சென்றான் காந்தி.

அவன் திரும்பி மறுபடியும் தன்னை ஒரு முறையாவது நோக்க மாட்டானா என்ற ஆசையோடு, தவிப்போடு அவனையே பார்த்தபடி நின்றாள் அன்னம். ஏமாற்றம்தான் அவளுக்குக் கிட்டியது.

## 12. பலவிதப் பண்புகள்

மேடை முதலாளி பிறவிப் பெருமாள் அவர்களின் ஜவுளி தினுசுகளுக்குத் தீயிட்டுப் பொசுக்கியதாக கவிராயர் சொக்கையாவும், தொண்டர் நாதனும், மற்றும் சிலரும் கைது செய்யப்பட்டிருந்த போதிலும், அவர்கள் தான் குற்றவாளிகள் என்று நிரூபிப்பதற்கு எவ்வித

மான சாட்சியமும் இல்லை. அதனால் கோர்ட்டார் வழக்கைத் தள்ளி விட்டார். சம்பந்தப்பட்டவர்களை எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தார்.

ஆனால் சொக்குக் கவிராயர் மட்டும் தண்டனை பெற நேர்ந்தது. அது வேறு குற்றத்துக்காக.

கோர்ட்டார் பொதுவாக எச்சரிக்கும்போது, கவிராயரிடம் "நீ இனிமேல் தேசத் துரோகமான பாட்டுக்களைப் பாடக்கூடாது!" என்று அறிவித்தார்.

கவிராயர் அதை ஏற்றுக் கொள்வாரா? அந்த இடத்திலேயே அவர் தன் தலைமீதிருந்த குல்லாயை நீக்கினார். அங்கு வழக்கம் போல் பத்திரப்படுத்தப் பெற்றிருந்த ஜாலரா (சிங்கி) ஜம்மென வீற்றிருந்தது. அதை எடுத்து இரண்டு தட்டுதட்டி, கணீரென ஓசை எழுப்பினார். கம்பீரமான குரலில், தலை நிமிர்ந்துப் பாடினார்—

**"ஆங்கிலப் பேய்கள் எல்லாம் இந்தியாவில்**
**ஆட்டம் போடுது பார்!"**

அதற்குமேல் அவரைப் பாடவிடவில்லை போலீஸார்.

"ஆறு மாதம் கடுங் காவல்" என்று தண்டனை அளித்தது கோர்ட்.

கவிராயர் பெருமையோடு போலீசார் துணையோடு போனார்.

தொண்டர் நாதனும் மற்றவர்களும் அவரை வியப்போடும் மரியாதையோடும் நோக்கினார்கள். "நம்ம சொக்கையா சரியான சிங்கம்தான்!" என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது.

நாதன் வழக்கம்போல் தனது தொண்டுகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். மேடை முதலாளியைப் போன்றவர்கள் பணபலம்பெற்றிருப்பதால் எந்தக் காலத்திலும், எச்சூழ்நிலையிலும் ஏற்றம் பெற்றுவிட முடிகிறது. அவர்களுக்கு எல்லாமே வியாபாரம் போலவும் சூதாட்டமாகவும் அமைந்து விடுகிறது. பண காந்தியினால் அவர்கள் பதவியிலிருப்பவர்களைக் கவர முடிவது போலவே,

தேசபக்தி கொண்ட பெரியவர்களையும் வசீகரிக்க முடி கிறது. அதனால் சாதாரணத் தொண்டர்களை தங்களுக்கு வேலை செய்து பணிந்து நடக்க வேண்டியவர்களாக அவர்கள் கருதுகிறார்கள். பிறகு அலட்சியப்படுத்து கிறார்கள். இந்தவிதமான ஒரு எண்ணம் தொண்டர் நாதனின் உள்ளத்தில் தலையெடுத்தது.

அதே சமயத்தில் அவர் மனசின் ஒரு பகுதி அவரைக் கண்டிக்கவும் செய்தது. காந்தி வழியை தனது வாழ்க்கைத்தர்மமாகவிரித்துக்கொண்டுள்ள ஒரு தொண் டன் இப்படிப் பழி சுமத்துவதுகூடத் தவறேயாகும் என்று அவர் உள்ளம் அறிவுறுத்தியது. மகாத்மாகாந்தி, பிறர் செய்த தவறுகளுக்குக்கூடத் தாமே பொறுப்பு ஏற் றும், பிறரது செயல்களால் ஏற்படும் பழியைத் தம் மீது போட்டுக் கொண்டும், பிராயச்சித்தமாகத் தமது ஆத்ம சக்தியைத் தூய்மைப்படுத்துவதாக அறிவித்து கடுமை யான உண்ணாவிரதத்தை மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரைப் பின்பற்றுகின்ற தொண் டன் அவ்வளவு தூரத்துக்குத் தீவிரம் காட்ட இயலாது போனாலும் சமூக உயர் அந்தஸ்தில் இருக்கிறவர்களின் போக்குகளைச் சகித்துக் கொள்ளக் கற்க வேண்டும் என்று நாதன் நினைத்தார்.

தீர்மானம் செய்வது எளிதாக இருந்தது. அதை நடைமுறையில் கையாள முயலுகிறபோது சிரமமாகத் தான் தோன்றியது. அதிலும், மேடை முதலாளியின் உண்மைத் தன்மையை அறிய நாதனுக்கும் அவரைப் போன்ற தொண்டர்களுக்கும் அவர்மீது வெறுப்பும் கசப்புமே வளர இடமேற்பட்டது.

பிறவிப் பெருமாளின் அந்நிய நாட்டு ஜவுளிகள், பட்டுத் துணிகள் முதலியவற்றுக்கு அயலார் யாரும் தீயிடவில்லை; அவரேதான் கொளுத்தி விட்டார் என்று சிலர் பேச்சு பரவ விட்டார்கள். அதற்குக் காரணம் அவருக்குப் பைத்தியம் எதுவும் பிடித்து விடவில்லை; சுலபமாகப் பணம் பெற வழியிருந்தது என்பதுதான் என்றும் அவர்கள் சொன்னார்கள். முதலாளி அவற்றை எல்லாம் பெரிய கம்பெனி ஒன்றில் இன்ஷ்யூர் செய்திருந்

தார்; தீ விபத்தினால் சரக்குகள் சேதமாகி நஷ்டம் ஏற்பட்டதனால் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி அவருக்குப் பெரும் தொகை அளிக்கும் என்று அவர்கள் விளக்கினார்கள். சுய நலத்தோடுதான் முதலாளி காரியம் செய்திருக்கிறார்; விபத்து எனக் காட்டுவதற்காகவே அவர் கவிராயரையும் நாதனையும் குற்றவாளிகள் என்று குறிப்பிட்டார் என்ற ஊகம் பிறக்கவும் தொண்டருக்கு அவர்மீது ஆத்திரமே உண்டாயிற்று.

எனினும் அவருடைய கோபமும் கொதிப்பும் மேடை முதலாளியை என்ன செய்திட முடியும்? 'உம், இப்படிப்பட்டவங்க ஒரு இயக்கத்தில் வலிய வந்து சேருவதை யாரும் தடுத்துவிட முடியாதுதான். இவர்களால் இயக்கத்துக்கு பலமும் பலனும் உண்டு என்று தோன்றினாலும், நாளடைவில் இயக்கத்தின் பலமே கெட்டுப் போகும். இவர்கள் புல்லுருவிகள் போல்தான்' என்று தொண்டர் எண்ணினார்.

மேடை முதலாளியின் மகன் திருமலையும், 'அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் இருக்கிறான்' என்ற கணக்கில்தான் விளங்கினான். அவனுக்கு நாட்டுப்பற்றோ, விடுதலை வேகமோ, காந்தீய லட்சியமோ பிரமாதமாக ஏற்பட்டு விடவில்லை. கட்சியில் சேருவதும் ஊர்வலங்களில் கலந்து கொள்வதும், பெரிய தலைவர்கள் மாதிரி ஆடைகள் அணிந்து திரிவதும் நல்ல பொழுதுபோக்காகவும் ஆனந்தம் தரும் 'பாஷன்' ஆகவும் அமைந்து விட்டன அவனுக்கு. பெரிய வீட்டுப் பிள்ளைகள் சிலர் அவனைப் போலவே நடந்து கொண்டார்கள். அதெல்லாம் 'காலம் செய்த கோலம்' என்றே தொண்டர் நாதன் கருதினார்.

திருநகரில் இவ்வாறு போலி தேசபக்தர்கள் இருந்து, வெளிச்சமிட்டு வருவதை நாதனும், காந்தியும், அவர்களைப் போன்றோரும் வெறுத்தார்கள். என்றாலும் நாட்டின் விடுதலை என்பது மாபெரும் விஷயமாகும் என அவர்கள் உணரத் தவறவில்லை. தங்களைப் பொறுத்த வரையில், தாங்கள் உண்மையாய், ஆத்ம பூர்வமாய் விடுதலை இயக்கத்துக்குப் பாடுபட வேண்டியதே தங்கள்

கடமை என்று அவர்கள் நம்பினார்கள். அந்த லட்சியத்துக்காகவே உழைத்தார்கள்.

தொண்டர் நாதன் மற்றவர்களைப் பார்க்கிலும் தீவிர வேகமும், செயல் துடிப்பும் பெற்றிருந்தார். ''மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்'' என்ற தன்மையில் அவர் 'கருமமே கண்ணாக' உழைத்தார்.

சில சந்தர்ப்பங்களில், அவருடைய ''வெறி வேகம்'' மற்றவர்களால் அங்கீகரிக்க முடியாத அளவு தீவிரம் பெற்றிருந்தது.

ஒரு நாள் நாதன் இயக்கப் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தபோது, அவருடைய அம்மாவுக்கு ''வாயுக் குத்து'' என்றும் மிகுந்த வேதனை அனுபவிக்கிறாள் என்றும் ஒரு ஆள் வந்து அறிவித்தான். உடனே போய் அவளைப் பார்க்க வேண்டும் என்று அவருக்கு எண்ணம் எழவில்லை. ''சோடா வாங்கிக் குடிக்கச் சொல்லு'' என்று, வந்த ஆளை அனுப்பி விட்டார் தொண்டர்.

''போய், என்ன செய்கிறது என்றுதான் பார்த்து விட்டு வாருமேன்!'' என்று ஒருவர் சொன்னார்.

''வயசாயிட்டுது. அடிக்கடி ஒண்ணு இல்லாவிட்டால் ஒண்ணு வந்துகொண்டே இருக்கும். நம்ம வேலையைப் போட்டுவிட்டு ஓட முடியுமா!'' என்று நாதன் சொல்லியதைக் கேட்டதும், அவர் அருகே நின்றவர்கள் ''என்ன, இவர் இப்படி இருக்கிறாரே!'' என்று எண்ணினார்கள்.

அவர்கள் அதைவிட அதிசயமும் வருத்தமும் கொள்ள வேண்டிய நிலை மறுநாளே ஏற்பட்டது.

நாதன் இயக்க சம்பந்தமான முக்கிய அலுவல்மீது எங்கோ அவசரமாய்ப் போய்க்கொண்டிருந்தார். அவருடைய தாயார் மாரடைப்பினால் மாண்டு விட்டாள் என்ற செய்தி அவருக்குக் கிடைத்தது. அவர் ஒருகணம் பிரமை கொண்டவர்போல் காணப்பட்டார். கண்களை மூடிக்கொண்டு, தலையைக் கையினால் பற்றியவாறு

செயல் திறம் இழந்தவர்போல் நின்றார். உடனேயே, "சரி நீ போயி ஆகவேண்டிய காரியங்களை எல்லாம் கவனிக்கச் சொல்லு. நான் வந்து விடுகிறேன் ரொம்ப முக்கியமான அலுவலை கவனிப்பதற்காகப் போகிறேன். அதை முடித்துவிட்டு வந்து சேருகிறேன்" என்று ஆளை அனுப்பினார்.

அவன் அவரை அதிசயமாக நோக்கினான். பிறகு அவர் வீட்டுக்கு ஓடினான்.

தொண்டர் நாதன் நடந்து கொண்ட வித்த்தை அறிந்தவர்கள் எல்லோரும் அவரைக் குறை கூறினார்கள். "மனிதத்தன்மை உள்ளவன் இப்படி நடந்துகொள்ள மாட்டான்" என்றார்கள்.

"லட்சியப் பணியில் ஈடுபட்டிருக்கிறபோது, சொந்த உணர்ச்சிகளையும் லாப நஷ்டங்களையும் பெரிது படுத்தக்கூடாது என்பது என் கருத்து" என்று அவர் கூறினார்.

"நீர் ஒரு அதிசயம். எல்லோரும் உம்மைப்போல் நடக்கமாட்டார்கள்; நடந்துகொள்ள முடியாது" என்றுதான் மற்றவர்கள் தெரிவித்தார்கள்.

## 13 காலத்தின் விளையாட்டு

திருநகரின் பெரிய கோயில் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டது. அத்தினம் ஒரு திருநாள் போல் போல் திகழ்ந்தது.

அதிகாலையிலேயே எழுந்து நீராடி, விபூதி அணிந்து, எல்லோரும் தூயவர்களாய், கோயிலுக்குச் சென்றார்கள். வரலாற்றிலேயே புதுமையான நிகழ்ச்சி அது. சமூக வாழ்க்கையில் புரட்சிகரமான திருப்பம்.

"நம்ம கண்ணுலே இதை எல்லாம் பார்க்க வேண்டியிருக்குது. நாம சாகிறதுக்குள்ளே இன்னும் என்னென்ன வெல்லாம் நடக்க இருக்குதோ!" என்று

சில கிழடு கட்டைகள் முணமுணத்தாலும் பொதுவாக உற்சாகமான ஆதரவும் வரவேற்பும் காட்டப்படுவதை காந்திமதிநாதன் உணர்ந்திருந்தான்.

மனிதர்கள் தங்களோடு சேர்ந்தவர்களையே தாழ்த்தி வைப்பதும், ஒதுக்கி விலக்குவதும் நியாயமல்ல; மனிதத் தன்மையும் அல்ல என்று அவன் வெகு காலமாகவே கருதி வந்தான். பிறப்பின் காரணமாகச் சிலர் உயர்வு கொண்டாடிப் பெருமை பேசுவதும், தொழில் காரணமாய் சிலரை இழிவாக மதிப்பதும் அவனுக்கு உகந்ததாய் பட்டதில்லை. எத்தொழிலும் கௌரவமானதே என்று அவன் எண்ணினான். 'லேண்ட் லார்டு' எனச் சொல்லிக் கொண்டும், 'சுக ஜீவனம்' என்று திருப்தியோடு குறிப்பிட்டும், எவ்விதமான வேலையும் செய்யாமலே, சோம்பேறி வாழ்க்கை வாழ்கிற அவனுடைய சொந்தக்காரர்களை எண்ணும்போதே அவனுக்கு ஆத்திரம் எழுவது வழக்கம். அவர்களைவிட, உழைத்துப் பாடுபடுகிறவர்கள் உயர்ந்தவர்கள் என்று அவன் நம்பினான்.

ஆலயம் எல்லோருக்கும் பொது என்று ஏற்பட்டிருப்பினும், அநேகர் இறைவனை வழிபட உள்ளே செல்ல முடியாமல் தடுக்கப்பட்டிருந்தது, மதத்திலுள்ள பெரிய குறைபாடாகவே தோன்றியது அவனுக்கு. உள்ளே வரக்கூடாது என ஒதுக்கிவைக்கப் பெற்றவர்கள், வெளியே கொடிமரத்துக்கு அப்பால் நின்று தேங்காய் உடைத்து வணங்கலாம் என அனுமதித்து அதற்காக அவர்களிடமிருந்து காசு வாங்கிவந்த முறை கோயில்களைக் கூடப் 'பிசினஸ் நிலையங்களாக' மாற்றியுள்ளதையே குறிக்கும் என்று காந்தி சொல்வது உண்டு.

ஆகவே, தீண்டத்தகாதவர்கள் என்று எவருமே கிடையாது: எல்லோருக்கும் இறைவன் திருக்கோயில்கள் திறந்து விடப்பட வேண்டும் என்று மகாத்மா காந்திஜீ அறிவித்து, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டதும், காந்திமதி நாதனும் உற்சாகம் அடைந்தான். ஊக்கத்தோடு பாடுபட்டான். திருநகரின் பெரிய கோயில்

திறந்து விடப்பட்டதை அவன் ஒரு வெற்றித் திரு விழாவாகவே மதித்தான்.

அன்று பூஜைகள் முடிந்து, பக்தர்கள் அவரவர் அலுவல்களைக் கவனிக்கத் திரும்பியதும், காந்தி சிறிது தயங்கினான். அன்னத்திடம் முன் தினம் அறிவித்தது போல் அவன் அம்மாவைக் காண வீட்டுக்குப் போயாக வேண்டும். இந்நினைப்பு அவன் உள்ளத்தில் பலவித உணர்ச்சிச் சலனங்களை ஏற்படுத்தியது போகாமல் இருப்பதும் நல்லதல்ல என்று அவன் அறிவு கூறியது. பிறகு துணிந்து, அப்பா கோபித்துக் கார்வார் பண்ணினால் பிறகு பொறுமையோடு ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் என்று தீர்மானித்து அவன் தன் வீடு நோக்கி நடந்தான்.

தனது வீட்டுக்குப் போவதற்கு அவன் இவ்வாறு தயக்கமும் குழப்பமும் அனுபவிக்க நேரிட்டுள்ளதே என்ற விசித்திர நிலை காந்திக்கு வேடிக்கையாகப் பட வில்லை. வேதனைதான் தந்தது. வீடு என்பது நினைத் தாலே இனிய உணர்வுகளுக்கு வகை செய்யும் சிறந்த இடம்; ஒருவனுக்கு எல்லாச் சமயங்களிலும் நல்ல பாதுகாப்பாகவும் பலமாகவும் விளங்கக்கூடிய—விளங்க வேண்டிய—உறைவிடம். அது அவனுக்கு 'வேண்டாத' ஒரு இடமாக மாறிவிட்டதே! காலத்தின் சதியைஎண்ணி அவன் பெருமூச்செறிந்தான்.

அவன் அம்மா அவனைப் பெருமகிழ்ச்சியோடு வர வேற்பாள் என்பதில் ஐயமில்லை. கண்ணீர் சிந்தி, உருக்கத்தோடு புலம்புவாள். அதை எல்லாம் கண்டால் அவன் தந்தை கோரதாண்டவம் ஆடித் தீர்த்து விடுவாரே அதுதான் அவனுக்குத் தயக்கமும் கலவரமும் அளித்தது.

"அநேகமாக அவர் வீட்டில் இருக்கமாட்டார். அவர் சாப்பாட்டுக்கு வருவதற்குள் நான் வீட்டை விட்டுக் கிளம்பி விடலாம்" என்று முடிவு செய்து அவன் வீட்டை அடைந்தான்.

அவன் வருவானோ மாட்டானோ என்ற கவலை அவனுடைய அம்மாவைவிட அன்னத்துக்கு அதிகமிருந்தது. அவள் ஏக்கத்துடன் ஒரே இடத்தில் அமர்ந்திருக்கவோ நிற்கவோ நிலை கொள்ளாமல், அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தாள். ஜன்னலின் பின்னே, தெருவை நோக்கியவாறு காத்து நின்றாள். அவன் வருவது கண்ணில் பட்ட உடனேயே, "அத்தான் வந்தாச்சு! அத்தான் வந்தாச்சு!" என்று சிறுபிள்ளை மாதிரி உற்சாகத்தோடு கூவிக் கொண்டு உள்ளே ஓடினாள்.

ஒரு அறையில் படுத்துக் கிடந்த பர்வதம் வேகமாக எழுந்தாள். "வந்து விட்டானா" என்று கேட்டபடி பரபரப்பாக முன் பக்கம் செல்ல ஆர்வம் காட்டினாள். "அத்தை, மெதுவா! மெதுவா!" என்று அன்னம் விரைந்து பெரியவளின் கையைப்பற்றிக் கொண்டாள். அத்தை கீழே விழுந்து விடுவாளோ என்ற பயம் அவளுக்கு.

இரண்டு பேரும் முன் அறைக்கு வருவதற்கும், காந்திமதிநாதன் உள்ளே அடி எடுத்து வைப்பதற்கும் சரியாக இருந்தது. "வாய்யா!" என்று அன்பாக அழைத்த தாயின் கண்கள் பனித்தன. உறுதியாக இருந்த அம்மா உடல் சில வாரங்களிலேயே உருக்குலைந்து, அவள் கிழவியாகி விட்டது போல் காட்சி தரும்படி மாறிப் போனதைக் கண்டதும் அவனுக்குத் துக்கம் மேலிட்டது. எதுவும் பேச இயலாதவாறு தொண்டை அடைத்துக் கொண்டது.

"என்ன காந்தி, பேசாமலே நிற்கிறே? ஊம். எப்படி இருந்த பிள்ளை கறுத்து மெலிந்து ஆளே அடையாளம் தெரியாதபடி மாறிப் போனியே! உம். விதிநாதன் படுத்துற பாட்டுக்கு உன்னைக் குத்தம் சொல்லி என்ன பிரயோசனம்?" என்று துயரம் நெஞ்சை அழுத்த, தீனமாகப் பேசினாள் தாய்.

அத்தானை நேராகவும், ஓரக் கண்ணாலும் பார்த்து மகிழ்ந்த அன்னம் உள்ளே சென்று ஒரு தட்டில் உப்புமாவும், ஒரு தம்ளரில் காப்பியும் எடுத்து வந்து அவன்

முன் வைத்தாள். ''உட்கார்ந்து சாப்பிடுங்க'' என்று உபசரித்தாள்.

''நிற்கிறியே காந்தி. உட்காரு சாப்பிடு'' என்று கூறி அம்மா ஒரு சுவர் அருகில் அமர்ந்து சாய்ந்து கொண்டாள். அன்னம் உள் வாசல் படி அருகில் நின்று கவனிப்பதில் ஈடுபட்டாள்.

''காந்தி. நீ உன் மனம் போல நடந்து கொள்வது சரிதான். நாட்டுக்கு பாடுபடப் போறேன்னு கிளம்பி விட்டே. நான் தடுத்தால் கண்டா நீ நின்றுவிடப் போறியா? அது இல்லே ஆனுல், உனக்கு வீட்டு ஞாபகம் அடியோடு இல்லாமலா போயிடணும்?'' என்று தாய் மெதுவாகப் பேசினுள்.

''நான் என்னம்மா செய்றது? அப்பாவின் கண்டிப்புத் தான் உனக்குத் தெரியுமே. அப்பாதானே என்னை வீட்டை விட்டு வெளியே விரட்டினது?'' என்று அவன் சொன்னுன்.

''ஒரு தரம் விரட்டிய பிறகும், மானம் இல்லாமல், திறந்த வீட்டில் எதுவோ நுழைகிற மாதிரி, திரும்ப வந்துட்டியாக்கும்?''

எதிர்பாராத விதத்தில் வெடித்தது அப்பாவின் உறுமல். செந்தில்நாயகம் அப்போது வீடு திரும்பும் வேளை இல்லேதான். அன்று அவருக்கு மனசே சரியில்லே. உடம்புக்கும் குதுகுதுன்னு வர்ற மாதிரி இருந்தது. அதனுலே வீட்டுக்குப் போய், கொஞ்சம் சுக்கு வெந்நீர் தயாரிக்கச் செய்து குடித்துவிட்டு, சிறிது நேரம் படுக்கையில் கிடந்து புரண்டு எழவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது வந்தார் வருகிற வழியிலேயே அவருடைய புத்திர பாக்கியம் வீட்டுக்கு வந்துள்ள சேதி காதில் விழுந்தது. கோயில் நிகழ்ச்சி பற்றிய விவரங்களும் தெரிந்தன. அவர் உள்ளத்தில் எரிச்சல் ஏற்பட்டது.

''பெரிய சீர்திருத்தவாதி! கிளம்பியிருக்காரு! ஹூம்! பிழைக்கத் தெரியாத பயல்!'' என்று முதலாளி முணுமுணுத்தார். வீட்டு வாசலில் கால் வைத்த

பொழுது மகனின் பேச்சு அவர் செவிகளைத் தாக்கியது. உடம்பெரிச்சலிலும் உள்ளக் கொதிப்பிலும் சூடுற்றிருந்த முதலாளி ஆத்திரத்தோடு வார்த்தைகளை வீசினார்.

அப்பொழுதுதான் கீழே உட்கார்ந்த காந்திமதிநாதன் விருட்டென்று எழுந்தது நின்றான். அன்னம் அறைக்குள் பதுங்கிக் கொண்டாள்.

பர்வதம் சிரமத்தோடு எழுந்து நின்றாள். அவள் கீழே விழுந்து விடுவாளோ என்று அவளையே பார்த்தான் காந்தி.

''ஏண்டா இங்கே வந்தே? கோயிலுக்கு வந்த கும்பலோடு நீயும் பஜனை பாடிகிட்டு நேரே போக வேண்டியதுதானே?'' என்று செந்தில்நாயகம் சீறினார்.

''வீட்டுக்கு வந்த பிள்ளையை நீங்க பேசுற அழகு நல்லாத்தானிருக்கு...'' என்று குறுக்கிட்டாள் தாய்.

''அன்னைக்கு போடா வெளியே என்றதும் ரோஷமாப் போனுரே! அந்த ரோஷம் என்றைக்கும் இருக்கணும் அல்லவா? வீட்டு ஆசை அதுக்குள்ளே வந்துவிட்டதே!'' என்று முதலாளி கேலியாகப் பேசினார்.

''ஆசை மீறிப்போய் நான் வீட்டைத் தேடி வரவில்லை'' என்று காந்தி சொன்னான்.

''பின்னே? பிழைப்பு வறுத்தெடுக்குதாக்கும்? அம்மாகிட்டே கெஞ்சி ஏதாவது ரூபாய் வாங்கிப் போகலாமின்னு வந்தியா?'' ஒவ்வொரு வார்த்தையும் குத்துகிற ஈட்டிபோல் பாய வேண்டும் என்று திட்டமிட்டுப் பேசுவது போலவே அவர் சொல்லெறிந்தார்.

''எனக்குப் பணம் காசு எதுவும் தேவையில்லை. அம்மா பார்க்கணும்என்று விரும்பினாள். அவள் விருப்பத்தைத் தட்டக்கூடாது என்று...''

''அடா அடா. எவ்வளவு அருமையான சத்புத்திரனடா அப்பா!'' என்று கெண்டை பண்ணினார் தந்தை.

பர்வதம் பேசாமல் நிற்க விரும்பவில்லை, "நான் தான் அவனை வரச்சொல்லி ஆள் அனுப்பினேன். ரொம்ப காலம் உசிரோடு இருக்கமாட்டேன்னு எனக்கே தோணுது. சாகிறதுக்கு முந்தி அவனைக் கண்டு பேசணு மின்னு மனசு துடிச்சுது..." என்று இழுத்து இழுத்துச் சொன்னாள் அவள்.

"சரிதான். இப்ப மனசு குளிர்ந்து விட்டதா? இனிமேல் நிம்மதியாச் சாகலாமாக்கும்!" என்றவர் உடனேயே தனது சுய உருவைக் காட்டலானார். "சீ போ, புத்தி கெட்டவளே! அந்த உருப்படாக் கழுதையைப் பார்க்கணும்கிற ஆசையை விட்டுவிடு என்று ஆயிரம் தடவை சொல்லியாச்சு. உனக்கும் என் பேச்சை மதிக்கணுமின்னு தோணலே. இல்லையா? ரொம்ப அதிசயமான மகனை பெத்து வச்சிருக்கே, அவனைப் பார்க்காவிட்டால் கண்ணு பூத்துவிடுமாக்கும்!" என்று எரிந்து விழுந்தார் அவர்.

பர்வதம் பெருமூச்செறிந்தாள். "அவன் என்ன சூதாடிச் சொத்தை எல்லாம் நாசமாக்கிப் போட்டானா? இல்லை, தேவிடியாக்குடி அங்கே இங்கே என்று பணத்தை வாரி இறைத்தானா?"- பொறுத்துப் பொறுத்து, உளம் குமைந்து குமுறிக் கொண்டிருந்த அன்னை இன்று உணர்ச்சி வெறியோடு தன் மகனுக்காகப் பேச முன் வந்தாள்.

ஆனால் முதலாளி அவள் உணர்ச்சிகளையோ, பாசத் துடிப்பையோ பெரிதுபடுத்தத் தயாராக இல்லை. "அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் பேச்சை மதிக்காமல், எனக்கு எதிராகவே காரியங்கள் செய்கிற மகன் எனக்கு வேண்டாம். என் வீட்டை மிதிப்பதற்கு வேண்டிய தகுதிகளை அவன் பெறவில்லை. மேலும் மேலும் அவன் தன் போக்கிலேயே செயல் புரிந்து கொண்டு போகுன். அவன் இனி இந்தப் பக்கமே எட்டிப்பார்க்கக் கூடாது. என்னிடமிருந்து அவன் எதையும் எதிர்பார்க்கவும் கூடாது" என்று அவர் காட்டுக் கூப்பாடு போட்டார்.

அதற்குப் பின்னரும் காந்திதான் அங்கே நிற்க விரும்புவானா என்ன? மௌனமாக வெளியே நடந்தான். அவன் பக்கமே ஏக்கப் பார்வை வீசி, மறைந்தும் மறையாமலும் நின்ற அன்னத்தையோ, "அம்மா அகிலாண்டேஸ்வரி, எனக்கு ஏன் இந்தச் சோதனையா?" என்று தலையில் கை வைத்துக்கொண்டு கீழே உட்கார்ந்து விட்ட தாயையோ அவன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

மக்களில் ஒரு பிரிவினருக்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த ஆண்டவனின் ஆலயம் அவர்களுக்காகத் திறந்து விடப்பட்ட புனித நாளிலே, தன் தந்தையின் வீடு தனக்கு நிரந்தரமாக அடைக்கப்பட்டு விட்டது காலத்தின் விசித்திரமான விளையாட்டுகளில் ஒன்றே ஆகும் என்று அவனுக்குத் தோன்றியது. கலாதேவனின் சித்து விளையாடல்களைச் சிந்தித்தவாறே அவன் தனது வழியே சென்றான்.

## 14. சொல்லும் செயலும்

நீண்ட பயணத்தை மேற்கொள்கிறவர்கள் ஒரே வேகத்தில் தங்கள் யாத்திரையைத் தொடர்வது சாத்தியமாக இருப்பதில்லை. வேகமாகவும், மெதுவாகவும், உற்சாகத்தோடும், சோர்ந்தும், மீண்டும் ஊக்கம் பெற்றும் தான் மேலே மேலே செல்ல முடிகிறது அவர்களால்.

லட்சிய உறுதி பூண்டு, முன்னேறுகிற படை ஒரே சீராகச் சென்று வெற்றியைத் தொடுவதும் இயல்பாக நடைபெறுவதில்லை. அதன் இயக்கத்திலும் வேகமும் தேக்கமும் மாறி மாறிக் காணப்படுகின்றன.

அதே நியதிதான் நாட்டின் விடுதலைக்காகப் போராடத் துணிந்த இயக்கத்தின் செயல் முறையிலும் தென்பட்டது.

நாடு முழுவதும் மக்கள் மத்தியில், குபீரென வெடித்தெழுந்த புத்துணர்ச்சியும், செயலூக்கமும், மறியல்

திட்டம் நின்ற பிறகு குறைந்து விட்டதாகவே தோன்றியது. "நாம் இன்னும் நமது லட்சியத்தை விடவில்லை. அதற்காக நாம் இன்னும் எவ்வளவோ பாடுபட்டாக வேண்டும். தியாகங்கள் செய்தாக வேண்டும்" என்று தலைவர்களும், கட்சிப் பிரசங்கிகளும் ஊர் ஊராக, வீதி வீதியாக முழக்கம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பட்டணங்களிலும் பட்டி தொட்டிகளிலும் அவர்களுக்கு வேலை நிறையவே இருந்தது.

அரசியல் கிளர்ச்சியாக மாத்திரமே விடுதலை இயக்கத்தை மகாத்மா காந்திஜி வகுத்து விடவில்லை. சமூக சீர்திருத்த இயக்கமாகவும், தனிமனித ஆன்ம உயர்வுக்கு வகை செய்யும் சாதனமாகவும் அவர் அதை உருவாக்குவதில் ஆர்வம் காட்டினார். உழைப்பின் உயர்வை போதிப்பதற்காக, நூல் நூற்றல் தனது இருப்பிடத்தையும் சூழ்நிலையையும் சுத்தம் செய்தல் போன்ற காரியங்களை அவரவரே செய்தாக வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்.

அவற்றிலே நம்பிக்கை கொண்டவர்கள் அவ்வாறே பின்பற்றினார்கள். தொண்டர் நாதனும் அவருடைய சகாக்களும் தீவிரமாக இச்செயல் திட்டங்களில் ஈடுபட்டார்கள்.

காந்திமதிநாதனும் இவற்றில் ஆர்வம் காட்டினான். அவனும் மற்றும் சிலரும் சேர்ந்து, கதர் துணிகளை மூட்டைக் கட்டிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்தார்கள். பொது இடங்களைச் சுத்தம் செய்வது, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலியன பற்றியும் பிரசாரம் பண்ணினார்கள்.

வெறும் பேச்சளவிலேயே தங்கள் உற்சாகத்தைக் காட்டிவிட்டுப் போவது தொண்டர் நாதனுக்கும் காந்திக்கும் அவர்களைப் போன்ற உண்மையான தேசபக்தர்களுக்கும் பிடிக்காத விஷயங்கள். எனவே, அவர்களே அநேக இடங்களில் தெருக்களைக் கூட்டி 'தோட்டி வேலை' செய்தார்கள். சில ஊர்களில், தெருக்களில் பந்தி பரப்பி தோட்டிகளைப் பரிமாற வைத்து 'சமபந்தி

போஜன'த்தைச் சிறப்பாக செய்தார்கள். அலுவலகத்தில் கீதை, ராமபக்திப் பாடல்கள் முதலியவைகளை வாசிக்க ஆரம்பித்தார்கள்.

பெரும் பேச்சு வீரர்களாக விளங்க ஆசைப்பட்ட அநேகருக்கு இவர்களுடைய செயல் வேகம் எரிச்சலூட்டியது. "இதென்ன, ஆபீசை பஜனை மடமாக மாற்றுகிறீர்களே?" என்று சிலர் எதிர்ப்புகள் காட்டினார்கள்.

ஒழுக்கமும் கட்டுப்பாடும் கண்டிப்பாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று காந்தி போன்ற தொண்டர்கள் வற்புறுத்தினார்கள். உற்சாகிகள் சிலர் எல்லைமீறிப் போகிறபோது அவர்கள் அறிவுரை புகட்ட முன் வந்தார்கள்.

ஒரு இடத்தில் தொண்டர்கள் சிலரும் ஊர்க்காரர்கள் பலரும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்திவிட்டுத் திரும்புகையில், ஒரு ஓட்டலில் புகுந்து விருப்பம்போல் உணவு உண்டு முடித்தனர். பிறகு மேஜை முன் அமர்ந்திருந்த ஓட்டல் முதலாளியிடம் வந்து "நாங்கள் எல்லோரும் காந்தி பக்தர்கள். நாங்கள் சாப்பிட்டதை காந்தி கணக்கில் எழுதிவிடும்" என்று கூறிவிட்டு காசு கொடுக்காமலே வெளியேறினார்கள். காசு கொடுக்க வேண்டுமே என்று அவர்கள் கவலைப்படவில்லை. தாங்கள் சாப்பிட்டதற்கு காசு கொடுக்காமல் போவது தர்மம் அல்ல, நியாயமும் ஆகாது என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படவே இல்லை. இந்த விவகாரத்துக்கு காநதிஜீ பெயரை இழுப்பது, மகாத்மாவின் உயர்வுக்கு இழுக்குத் தேடுவதாகும்; விடுதலை இயக்கத்துக்கு மாசு ஏற்படுத்துவதாகும் என்று அவர்கள் கருதவில்லை.

அதற்கு மாருக, தங்கள் "வீரப்பிரதாபம்" பற்றிப் பெருமையாகப் பேசலானார்கள். இவ்விஷயம் காந்திமதிநாதனுக்கும் மிகுந்த வருத்தம் தந்தது. அவனும் தொண்டர் நாதனும் சம்பந்தப்பட்டவர்களின் போக்கைக் கண்டித்துப் பேசினார்கள். இவ்விதம் நடந்து கொள்ளக்கூடாது என்று போதித்தார்கள்.

"ஹோ, இவர்கள் பெரிய ஞானிகள்! மகாத்மாவுக்கு வாரிசுகளே இவர்கள் மாதிரித்தான்!" என்று சிலர் கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களில் "மேடை முதலாளி"யின் மகன் திருமலையும் சேர்ந்திருந்தான்.

அவனை நேரடியாகவே கண்டிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பமும் வந்து சேர்ந்தது.

## 15. வேடிக்கை மனிதர்கள்

'வைரம் போன்ற நெஞ்சு வேண்டும்' என்று எண்ணினான் காந்திமதிநாதன். 'மலை குலைந்தாலும் மனம் குலையாத உறுதி'யைப் பெற்றாக வேண்டும் என்று அவன் தனக்குத்தானே அடிக்கடி கூறிக்கொண்டான். இல்லையெனில், வாழ்க்கையில் எதிர்ப்படுகிற கடுமையான சோதனைகள் மனிதனை நிலைகுலைய வைத்துவிடும்; செயல் திறம் இழந்தவனாக ஆக்கிவிடும் என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் தன் தந்தை செந்தில்நாயகத்துக்கு நேர் மாறான குணங்களையும் கொள்கைகளையும் பெற்றிருந்தான். அவர் சொத்து, பணம், சொந்த வீடு சுக வாழ்வு முதலியவைகளையே பெரிதாக மதித்தார். ஒவ்வொருவருடைய வாழ்க்கை லட்சியமும் அவற்றை அடைவதாகவே இருக்க வேண்டும் என்று கருதினார். நன்கு சம்பாதித்து வீடும் சொத்தும் சேர்த்து, பெண்டாட்டி பிள்ளைகளோடு, நாலுபேர் மதிக்கும் படியாக, பொறாமைப்படும்படியாக வாழ முடிகிறவனே வாழ்க்கையில் வெற்றி பெற்றவன்—நன்றாக வாழத் தெரிந்தவன்—என்று அவர் சொல்வது வழக்கம். பெரு வாரியான மனிதர்களின் பொதுவான அபிப்பிராயமும் அதுவாகத்தானே இருக்கிறது.

இதுவே நல்வாழ்வு. வாழ்வின் உயர்ந்த நிலை என்றிருந்தால் புத்தனும், ஏசுவும், விவேகானந்தரும், காந்தியும் மேற்கொண்ட வாழ்க்கை முறைகள்

பைத்தியக்காரத்தனம் நிறைந்தவையா என்று கேட்டது. காந்திமதிநாதனின் சிந்தனை. ஆன்ம உயர்வுக்காகவும், மனித குல சேவைக்காகவும் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் எத்தனை எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்களே? இன்றும் அவ்வித அறநெறிகளில் ஈடுபட்டு, தங்கள் காலத்தையும் உழைப்பையும் பூரணமாக அவற்றிலேயே செலுத்துகிற வர்கள் எண்ணிக்கை அதிகமாகத்தானே இருக்கிறது? அவர்கள் எல்லோரும் வாழத் தெரியாதவர்களா? —இப்படிக் கேட்டது அவன் அறிவு.

வாழ—அதாவது, பெரும்பாலான மக்களின் எண்ணங்கள், ஆசைகள் காட்டுகிற வழியிலே வாழ்க்கை நடத்துவதற்கு விரும்பாதவர்கள் அவர்கள். அந்த வித மான சராசரி வாழ்க்கையிலே சாரமில்லை. தேடிச்சோறு நிதம் தின்று, சின்னஞ்சிறு கதைகள் பலபேசிப் பின் மாயும் வேடிக்கை மனிதர்களைப்போல நானும் வாழ வேண்டுமா என்ற மன உளைச்சலும், உணர்வுத் துடிப் பும், சிந்தனை ஓட்டமும் இவர்களை எப்படி எப்படியோ செயல் புரியத் தூண்டுகிறது.

பெரும்பாலான மனிதரின் சகஜமான வாழ்க்கையை 'அர்த்தமற்றது' என்று இவர்கள் கருதுகிறார்கள். இவர் களுடைய போக்கு விபரீதமானது. வேதனை தருவது. அனுவசியமானது என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள். இதற்கு என்ன செய்வது? காந்தியின் மனம் சில சமயம் குழம்பத்தான் செய்கிறது.

தனது எண்ணக் குழப்பங்களையும், உணர்ச்சி அலை களையும், மனவேதனைகளையும் ஒருவாறு அடக்கி அமைதி பெறுவது சாத்தியம் என்று அவனுக்குப் படவில்லை. ஆனால் அவற்றை மறப்பதற்கு, நல்ல புத்தகங்களைப் படிப்பதும் சோம்பலுக்கு இடம் கொடுக்காது, உழைத் துக் கொண்டே இருப்பதும் அருமையான வழியாகும் என்று அவன் சதா எதையாவது செய்து வந்தான். அல்லது எப்போதும் ஏதாவது ஒரு புத்தகத்தைப் படிப் பதில் மூழ்கிவிடுவான்.

விடுதலை இயக்கம் மந்தகதியில் செயல் பட்டுக் கொண்டிருந்தது. மறியலைப் போல், பரபரப்பும் சாதாரண மக்களுக்குக்கூட உற்சாகமும் ஊக்கமும் உணர்வின் எழுச்சியும் தரக்கூடிய செயல் திட்டங்கள் எவையும் தலைகாட்டவில்லை. ஆயினும், மக்களிடையே தேசபக்தியும் சுதந்திர உணர்ச்சியும் உண்டாவதற்காக, நகரங்களிலும் கிராமங்களிலும் பிரசார வேலைகள் தீவிரமாக நடைபெற்று வந்தன.

வெவ்வேறு இடங்களிலிருந்து தலைவர்கள் வந்தார்கள்; பேசினார்கள். உபசாரங்களை ஏற்றுக் கொண்டு போனார்கள். அதனால், "மேடை முதலாளி" பிறவிப் பெருமாளுக்கும் இன்னும் ஒன்றிரண்டு பெரிய தலைகளுக்கும் வேலை இருந்துகொண்டே வந்தது. தொண்டர்களுக்கும் வேலை மிகுதியாக இருந்தது.

திருநகரிலும் சில நல்ல பேச்சாளர்கள் தோன்றினார்கள். பொதுஜனத்தை வசீகரிக்கும் விதத்தில் பேசும் திறமையை வளர்த்துக் கொண்டவர்கள். அவர்களுக்கும் கவனிப்பு கிட்டத் தொடங்கியது. வெளி ஊர்களிலிருந்தும் அழைப்பு வந்தது.

காந்திமதிநாதனும் பேச்சாளனாவதற்கு முயற்சிகள் செய்து வந்தான். நாவன்மை படைத்த சில சொற்செல்வர்கள் போல, தான் சிறந்த பேச்சாளன் ஆகி விட இயலாது என்று அவனுக்கே பட்டது. இருந்தாலும் ஓரளவுக்கு, மக்களுக்குப் பிடித்தமான முறையில் பேசும் ஆற்றலைப் பெற்றுவிட வேண்டும் என்று அவன் ஆசைப் பட்டான்.

அவனும் சில தொண்டர்களும் சேர்ந்து ஊர் ஊராகச் சென்று இயக்கப் பணி புரிவதில் அயராது உற்சாகம் காட்டி வந்தார்கள். விடுதலை இயக்கத்துக்காக நிதி வசூல் செய்ய வேண்டிய கடமையும் அவர்களுக்கு வந்து சேர்ந்தது.

நாட்டினர் மனமுவந்து பொருளுதவி செய்தார்கள். திருநகரிலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் மிகுதியாகவே பணம் வசூலாயிற்று.

இந்தவிதமாகப் பணம் திரட்டிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேதான் "மேடை முதலாளி"யும் காந்திமதிநாதனும் மோதிக்கொள்ள வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டது.

மேடை முதலாளி மகன் திருமலையும் அவனைப் போன்ற இரண்டு மூன்று பேரும் பணம் வசூலித்தார்கள். அவர்கள் உல்லாசப் பேர்வழிகள். பணத்தைச் செலவு செய்வதற்குத் தயக்கமோ கூச்சமோ கொள்ள மாட்டார்கள்,

"பணம் என்பதே செலவு செய்வதற்காக ஏற்பட்டது தானே! இதில் உன் பணம், என் பணம் என்று பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? நம் கையில் பணம் இருக்கிறது. செலவுகள் முகமலர்ச்சியோடு எதிர்ப்படுகின்றன. அள்ளி விடு! ஜாலி பண்ணு!"—இதுதான் திருமலையின் தத்துவம்.

அதை அவன் கையாளத் தவறுவதும் கிடையாது. அவன் தந்தை அவனுக்கு மாதம் தோறும் இவ்வளவு பணம் என்று ஒரு தொகை தந்து கொண்டுதான் இருந்தார். ஆனால் மனம்போல் செலவு செய்வதற்கு வாய்ப்புகள் மலிந்த நாகரிக நகரத்திலே, தாராளமாகச் செலவு பண்ணி இன்பம் காணும் மனம் படைத்தவனுக்கு அச்சிறு தொகை எந்த மூலைக்கு! ஆகவே அவன் அங்குமிங்கும் கடன்வாங்கத் தயங்குவதில்லை.

இப்போது "நிதிவசூல்" என்ற பெயரில் அவன் கையில் பணப் புழக்கம் ஏற்பட்டதும், மனசின் செல்லரிப்பும் அதிகரித்தது.

திருமலையும், அவன் நண்பர்களும் காசு வைத்துச் சீட்டாடுவதில் ருசி கண்டவர்கள். இப்பொழுதும் அவ்விளையாட்டு அவர்களை வசீகரிக்கத்தான் செய்தது. யார் காசோ, எவர் பணமோ, எதற்காகச் சேகரிக்கப்பட்டதோ? அதைப்பற்றி அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? கவலைப்பட்டால் காரியம் நடக்குமா? உல்லாசமாக நாளோட்டத்தான் இயலுமா? விளையாட்டில் பணம் புரண்டது. 'நிதி' கரைந்தது.

திருநகரில் 'பாம்பே ஷோ' என்ற பெயரில் ஒரு வெளிச்ச விளம்பர, தடபுடல் கேளிக்கை காட்சி முகாமிட்டிருந்தது. இரவு நேரம் அந்த இடமே கோலாகல பூமியாக மாறிவிடும். என்ன கும்பல்! எவ்வளவு மினுமினுப்பு! ராட்டினங்களும், சர்க்கஸ் வித்தைகளும் அதில் காணப்பட்டன. முக்கியமாக, பணம் பறிக்கும் விளையாட்டுக்கள் நிறையவே இருந்தன.

"லக்கி பிரைஸ்! வை ராஜா வை!" என்று ஓயாது எழும் கூச்சல் மன அரிப்புக்கொண்டவர்களை, சுலபமாகப் பணம் பண்ணிவிடலாம் என்ற நப்பாசை உடைவர்களை, அப்பாவிகளை எல்லாம் சுண்டிச் சுண்டி இழுத்துக் கொண்டிருந்தது. "லக்கி புளு! சிங்கில் எல்லோ! டபுள் கிரீன்!" என்று ஒரு ஆள் மந்திரம்போல் கவர்ச்சிக் குரலில், ஏதேதோ கத்திக் கொண்டிருந்தான். பணம் கட்டுகிறவர்கள், கட்டுகிற பணம் குட்டிகளைப்போட்டு பெரிசாக வந்து சேரும் என்ற ஆசையோடு, சில்லறைகளையும் நோட்டுகளையும் கொட்டிக் கொண்டிருந்தார்கள்; பணம் பறந்து போனது.

"வை ராஜா வை! அதிர்ஷ்டம் இருந்தால், தரித்திரம் ஒரு மண்ணையும் பண்ணி விடாது. யோக்வான் கல்யாணத்தில் பல்லக்கேறுவான்; செத்தால் பாடை ஏறுவான்! வை ராஜா வை!" என்ற 'மந்திரக் குரல்' திருமலையையும், அவனுடைய சகாக்களையும் சுண்டி இழுத்தது.

போனார்கள், விளையாடினார்கள், பணத்தைப் பறி கொடுத்தார்கள். மேலும் ஆடினார்கள். பணம்தான் குறைந்தது.

"இது வெறும் சூதாட்டம். நமக்குச் சரிப்படாது!" என்று நண்பர்கள் நழுவி விட்டார்கள்.

திருமலை சூதாடுவோனுக்கே உரிய வெறியுடன், மயக்கத்துடன், ஆடினான். விளையாடிக் கொண்டேயிருந்தான்.

கைப் பணம், சேர்ந்த பணம், எல்லாப் பணமும் போய் விட்டது.

அதன் பிறகுதான் அவனுக்கு விழிப்பு உண்டா யிற்று. அப்பாவுக்கு விஷயம் தெரிந்தால், அவர் எரிந்து விழுவதோடு, உதை கொடுக்கவும் தயங்க மாட்டார் என்று அவன் நினைத்தான். இது பொதுப் பணம்; விடுதலை இயக்க வேலைகளுக்காக, கட்சியின் பெயரால் வசூலிக்கப்பட்ட 'நிதி' ஆயிற்றே! இதை சூதாடிக் காலி பண்ணிய விஷயம் தெரிந்தால் அவர்தான் சும்மா இருப்பாரா? கட்சியினர்தான் விட்டு விடுவார்களா?

திருமலையின் உள்ளம் பதை பதைத்தது.

அவன் நீண்ட சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தான். அதைத்தான் செய்ய முடியும். வேறு வழி யில்லை!

கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியை விற்று, "வடக்கே போகும் ரயிலில்", மிகத் தொலைவில் உள்ள ஒரு ஊருக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு, இரவோடு இர வாகப் போய்விட்டான்.

அவன் போன விஷயம் எல்லோருக்கும் தெரிய வந்தது. எங்கே போனான், ஏன் போனான் என்பது எவருக்கும் தெரியாது. "திருமலை நிதிப் பணத்தை அமுக்கிக் கொண்டு கம்பி நீட்டி விட்டான்!" என்று ஒருவர் திரியைப் பற்ற வைத்தார். 'சுர் சுர்' என்று வத்தி எரிந்தது.

"அவன் சும்மா போகவில்லை. குட்டி ஒருத்தியையும் கூட்டிக் கொண்டு போய் விட்டான்!" என்று தன் கைச் சரக்கையும் கலந்து, வதந்திக்கு வர்ணப் பள பளப்புச் சேர்த்தார் ஒருவர். வெறும் செய்தியில் உயிர் எங்கே இருக்கிறது? இப்படிப் பசை பூசி, நகாஸ் வேலை செய்து உலாவ விட்டால்தானே ஜோராக இருக்கும்? சுவை பெற்ற செய்தியை எல்லோரும் ரசித்தார்கள். 'மேடை முதலாளி'க்கு நல்ல விளம்பரம். 'மகன் தந்தைக்கு ஆற்றிய உதவி' அது!

இச் செய்தி 'மேடை முதலாளி'யை ஒருவிதமாக அதிர வைத்தது. காந்திமதிநாதனுக்கு வேறு ரகமான அதிர்ச்சி தந்தது.

பணம் போனது பற்றிக்கூட அவன் பெரியதாக வருத்தப்படவில்லை. உயர்ந்த நோக்கங்களோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள மாபெரும் இயக்கத்துக்கே தனி ஒருவனின் சிறுமைச் செயல் மூலம் களங்கம் ஏற்பட்டு விடுகிறதே என்று அவன் வேதனைப்பட்டான். திருமலையைப் போன்று மனச்சாட்சி இல்லாதவர்கள், நியாயம், நேர்மை, உண்மை, உணர்வு எதுவும் இல்லாதவர்கள், மகாத்மாவின் மாண்புக்கு இழுக்குத் தேடி வைக்கத்தான் உதவுவார்கள் என்று அவன் துயருற்றான்.

தொண்டர் நாதன் இது குறித்துக் கண்டிப்புக் கூட்டம் நடத்த வேண்டும் ஏதாவது செய்து திருநகர் குழுவின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று துடி துடித்தார்.

"அதெல்லாம் வீண் ஆர்ப்பாட்டமாகும். நம்ம ஊரின் பெயர் மேலும் அடிபடுவதற்கு நாமே வழி அமைப்பது போலாகும். என்னவோ, நடந்தது நடந்து போச்சு. நாம் ஏன் தமுக்கு அடிச்சுக்கிட்டு இருக்கணும்? திருமலை மூலம் நிதிக்கு நஷ்டம் எவ்வளவு ஏற்பட்டிருக்கும்? மூந்நூறு ரூபாய் இருக்குமா? அதை நான் தீந்து விடுகிறேன். இதை இப்படியே விட்டு விடுவோம்" என்றார் பிறவிப் பெருமாள்.

"அவர் சொல்வது சரிதான். வீணாக நாம் ஏன் முதலாளி பெயரையும் நம் ஊர் பெயரையும் களங்கப் படுத்த வேணும்?" என்று பலரும் அபிப்பிராயப் பட்டார்கள்.

"பணமா முக்கியம்? பொதுப் பணத்தை யாரும் இஷ்டம் போல் கையாடுவது என்றாகி விட்டால் நம் இயக்கத்தின் மதிப்பு என்ன ஆவது? முதலில் தாறுமாறாகச் செலவு செய்து போடுவோம்; அப்புறம் ஈடு பண்ணி விடலாம் என்று வழி ஏற்பட்டுவிட்டால், ஒழுக்கம், கட்டுப்பாடு, தர்ம நியாயம் எல்லாம் என்னத்துக்கு?" என்று காந்திமதிநாதன் ஆவேசமாகப் பேசினான்.

அவர்களுடைய குரல் எடுபடவில்லை.

'மேடை முதலாளி' தாராளமாக ஐந்நூறு ரூபாய் கொடுத்து விஷயத்தை சுமுகமாக முடித்து விட்டார். அவருக்குத் திருப்திதான்.

காந்திக்கு மனசே நன்றாக இல்லாமல் போய் விட்டது.

இது அபூர்வமாக நிகழக்கூடிய ஒரு விஷயம்தான். ஆனால், நல்ல பசுமையான மரத்தில் புல்லுருவி பாய்வது போல், உன்னதமான லட்சியங்களைக் கொண்ட மாபெரும் இயக்கத்தில் இவ்விதமான சிறு விஷச் சக்திகள் படிவது காலப் போக்கில் விபரீதமான விளைவுகளுக்கு வழிகோலும் என்று அவன் எண்ணினான்.

"தன் லட்சியத்தை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிற பெரு நதியில் சாக்கடைகளும், இதர விதக் கழிவு நீரோட்டங்களும் வந்து கலப்பது இயல்பு; அதனால் நதியின் பெயரோ புனிதமோ கெட்டு விடுவதில்லை; மாபெரும் இயக்கங்களின் நிலைமையும் அதைப் போன்றதுதான். இவ்வாறே நாம் ஆறுதல் கொள்ள வேண்டியிருக்கிறது. நம்மைப் பொறுத்த வரையில் நாம் நேர்மையாளர்களாக வாழ முயற்சிப்போம். நம் போன்றவர்கள் வேறு என்ன செய்ய முடியும்?" என்று கூறினார் தொண்டர் நாதன்.

அவர் பேச்சிலும் உண்மை இருப்பதாகவே தோன்றியது அவனுக்கு. இருப்பினும் அதை ஏற்றுக் கொண்டு படிந்து போக மனம் இடம் கொடுக்கவில்லை.

"சே! பணம் இருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று ஏற்பட்டு விடுகிறது. பணத்துக்கு எல்லோரும் மயங்குகிறார்களே!" என்று அவன் வருத்தப் பட்டான்.

"உலகம் அறியாத பிள்ளை அப்பா நீ! வாழ்க்கையில் அடிபட்டுத் தேறவேண்டும். போகப் போக உன் மனசும் பக்குவத்துக்கு வந்து விடும்" என்று ஒருவர் சொன்னார்.

அவன், அவரிடம் எதிர் உரை கூறவில்லை. அவரிடம் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது? என்று ஒதுங்கி விட்டான்.

'பணம் இருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; செய்வதற்கு எண்ணமும் துணிச்சலும் தாமாகவே வந்து சேரும்' என்று காந்தி எண்ணியது மிகவும் சரியே என்று நினைக்கும்படி மற்றொரு காரியமும் நிகழ்ந்தது.

மகனைப் பிரிந்த ஏக்கத்தில் வாடி உருக்குலைந்து கொண்டிருந்த காந்தியின் தாய் ஒருநாள் அதே வியாதியால் செத்துப் போனாள். தந்தை மகனுக்குச் சொல்லி அனுப்பவுமில்லை; அவன் வந்துதான் பர்வதத்தின் உடல் சுடுகாட்டுக்குப் போய்ச் சாம்பலாக வேண்டும் என்று காத்திருக்கவும் இல்லை. அவர் வைராக்கியம் அவருக்கு.

தாய் இறந்த துக்கம் காந்தியை வருத்தியது. தந்தையின் புறக்கணிப்பு அவன் உள்ளத்தில் உணர்வுச் சலனம் ஏற்படுத்தினாலும், அதற்காக அவன் கலக்கம் கொள்ளவில்லை.

ஆனால், பின்னர் துக்கத்தின் தொடர் அலைகள் போல் வந்து கொண்டிருந்த செய்திகள் அவனுக்கு மிகுந்த மனத்துயர் அளித்தன.

"செந்தில்நாயகம் மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார். பெண் தேடி ஆகிறது" என்று கேள்விப்பட்டான் அவன். "பர்வதம் போய் விட்டாள். அவள் பெற்ற பையன் அவளுக்கு முன்னதாகவே போய் விட்டான். ஆமாம், என்னைப் பொறுத்தவரை, அவன் செத்துத்தான் போனான்" என்று அவர் சொன்னதாகவும் காந்தியின் காதில் செய்தி விழுந்தது.

"சொத்து, பணத்தை எல்லாம் அனுபவிக்க வாரிசு வேண்டாமா? வாரிசு உண்டாக்குவதற்காகத்தான் நான் திரும்பக் கல்யாணம் செய்து கொள்கிறேன்" என்று முதலாளி செந்தில்நாயகம் அறிவித்தார். அவருக்கு வயது என்ன—ஐம்பதோ ஐம்பத்து இரண்டோதான்—அவர் ஏன் திருமணம் புரிந்து கொள்ளக்கூடாது?

அதனால் அவர் சமூகத்தில் அவருக்கு எளிதில் பெண்ணும் கிடைத்தது.

'பணத்தைக் காட்டி மயக்குகிறவர்களும், அதில் மயங்குகிறவர்களும் எங்கும் என்றும் இருப்பார்கள் போலும்!' என்று எண்ணிப் பெருமூச்செறிந்தான் காந்திமதிநாதன். வேதனை நடுவிலும் எல்லாம் வேடிக்கையாகவும் தோன்றின அவனுக்கு.

## 16. அனுபவ அதிர்ச்சி

வாழ்க்கையில் சோதனைகள் எதிர்பட்டுக்கொண்டே தானிருக்கும். அவற்றை ஏற்று, தாக்குப் பிடித்து வெற்றி பெறுவதோ, அல்லது அவற்றின் முன்னே மனம் குலைந்து சோர்வுற்று விடுவதோ அவரவர் இயல்பையும் நெஞ்சுறுதியையும் பொறுத்ததாகும்.

சுகமாக வாழ்ந்து, கவலையில்லாமல் பொழுது போக்கிக் காலம் கழித்து வந்த காந்திமதிநாதன் சூழ்நிலை காரணமாக, சந்தர்ப்பவசத்தால், உணர்ச்சித் தூண்டுதலால் சிக்கல்களிலும் குழப்பங்களிலும் ஈடுபட நேரிட்டது. அதனால் வீட்டை துறக்கவும் தந்தையின் வெறுப்பையும் விரோதத்தையும் ஏற்றுக்கொள்ளவும் வேண்டியதாயிற்று.

இவற்றுக்காக அவன் மனத்துயரம் அடையவில்லை. அவன் தவறு எதுவும் செய்யவில்லையே? நாட்டின் விடுதலைக்காகவும் நாட்டு மக்களின் நன்மைக்காகவும் பாடுபடுவதை லட்சியமாகக் கொண்டது, சுய நலக்காரர்களால் தவறான போக்கு என்று கருதப்படுமானால், அவர்களின் விருப்பு வெறுப்புகளை அவன் ஏன் பெரிது படுத்த வேண்டும்? இதன் பயனாக அவன் சொத்துரிமை இழக்க நேர்ந்தது என்றால் அது அவனுடைய தந்தையின் சிறுமையைத்தான் காட்டுகிறதே தவிர, அவனுக்கு பெரிய நஷ்டம் இல்லை. ஏழைகள் மிகுந்த தரித்திர நாட்டிலே ஏழமை வாழ்வுதான் சகஜமானது. இவ்வாறு காந்திமதியின் உள்ளம் பேசியது.

அவன் தாய் உளம் நொந்து வேதனைத் தீயில் கருகி மெலிந்து செத்துப் போனதற்கு அவனே காரணம் என்று அவன் நினைக்காமல் இல்லை. அவன் வீட்டோடு இருந்து, சாதாரண வாழ்வு முறைகளை அனுஷ்டித்து வந்தால், அவளுக்கு மன நோயும் உடல் நோயும் ஏற்பட்டிருக்காது; சாவும் இவ்வளவு சீக்கிரம் வந்திருக்காது என்றே அவனுக்குப் பட்டது. ஆனால், இவை எல்லாம் தவிர்க்க இயலாதவை; எது எந்தக் காலத்தில் எப்படி நடக்க வேண்டுமோ, அது அவ்விதமே நடந்து முடியும் என்றும் அவன் எண்ணினான்.

லட்சியப் பாதை புல்லும் மலர்களும் படிந்த மெது வழி அல்ல; கரடு முரடானது. மேடு பள்ளங்கள் கொண்டது. கஷ்டப்படுத்தக் கூடியதுதான். அதில் நடந்து முன்னேறுவது என்று தீர்மானித்து விட்டால், எதையும் பொருட்படுத்தாமல் மேலே மேலே போக வேண்டியதுதான் என்று அவன் தனக்குத்தானே தைரியம் கூறிக்கொண்டான்.

தொண்டர் நாதன் போன்றவர்களுடன் பேசுகிற போது, அவர்கள் அருகில் அவன் எவ்வளவோ சாதாரணமானவன் என்ற நினைப்பே காந்திமதிக்கு எழும்.

தொண்டர் நாதனுக்குக் குடும்பச் சுமை இருந்தது. மனைவியும் மக்களும் அவரை நம்பி அவர் உழைப்பால் வருவதை எதிர்பார்த்து அன்றாட வாழ்க்கையை கழிக்க வேண்டியிருந்தது. ஆகவே, அவருக்குப் பொறுப்பு அதிகம் உண்டு. ஆனால், அவர் அவற்றை எல்லாம் பெரிது படுத்தவில்லையே. மன உளைச்சல் வளர்த்து, செயல்திறம் இழந்து விடவில்லையே! காந்திமதிநாதனுக்குக் குடும்பமும் இல்லை. அவனை நம்பி, அவன் பாடுபட்டுச் சம்பாதித்துப் பணம் கொண்டு தர வேண்டும் என்று எதிர்நோக்கி, ஒரு நபர்கூட காத்திருக்கவில்லை. அவனுக்கு அவனே ராஜா. அவனே அவனுக்குத் துணை. அப்படியிருக்கையில் வீணாகக் கவலைகள் வளர்ப்பதற்கு அவசியம் என்ன இருக்கிறது?

காந்திமதிநாதன் லட்சியப் பணியில் மேலும் தீவிர ஆர்வம் காட்டலானான். அவன் உழைப்பும், அது

சம்பந்தமான அலைச்சலும் அவனுக்கு அமைதி தருவது போல் அமைந்தன. சாதாரண வாழ்க்கையின் வெறுமையை, அர்த்தமிலாத் தன்மையை நீக்கி, பெருமையும் பயனும் தருவதாகவும் அவை விளங்கின.

அதிகமாக அலைந்து திரிந்து உழைப்பதற்கும், ஊக்கத்தோடு பிரசாரம் செய்வதற்கும் வகை செய்வதாய் தேர்தல் வந்தது. விடுதலைக்காகப் போராடுகிறவர்கள் ஆட்சி முறையில் பங்கு பெறுவதற்குக் கிட்டும் முதல் வாய்ப்பு அது. அதனால் தேசீய இயக்கத்தினரிடமும் மக்கள் மத்தியிலும் உற்சாகமும் உவகைப் பெருக்கும், உணர்ச்சித் துள்ளலும் அதிகமாகத் தலை தூக்கியிருந்தன.

அவ்விதத் துடிப்போடும் துள்ளலோடும் ஓடி ஆடித் திரிந்து கொண்டிருந்த காந்திமதிநாதனுக்கு திகைப்பும் அதிர்ச்சியும் தந்த ஒரு சம்பவம் தற்செயலாக நிகழ்ந்தது. அது அவனுக்கு ஒரு பெரிய சோதனையாக இருந்தது. அது மட்டுமின்றி, அவன் எண்ண வேகத்துக்குச் சூடேற்றுவதாகவும் அமைந்தது அந்நிகழ்ச்சி.

காந்திமதிநாதன் ஒரு கிராமத்தில் நடைபெற்ற மது விலக்குப் பிரசாரக் கூட்டத்தில் கலந்து விட்டு, திருநகருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அவனுடன் சென்ற அன்பர்கள் வெவ்வேறு பக்கம் போய் விட்டார்கள். ஒவ்வொருவருக்கும் எத்தனையோ அலுவல்கள். காந்திக்கு அவசர அவசியமான காரியம் எதுவும் இல்லை. இயற்கை வனப்பும் இரவின் எழிலும் அவன் உள்ளத்துக்கு இதமாக இருந்தன. அவன் மெதுவாக நடந்து நகரை அடைய எண்ணினான்.

குறுக்கே ஆறு வந்தது. ஆற்றங்கரை மணல் அவனுக்கு மௌன வரவேற்பு அளித்தது. அவன் மணலில் சுகமாகப் படுத்து விட்டான். நேரம் போனதே தெரியாமல் ஏதேதோ எண்ணிக் கொண்டிருந்தான். இரவு வானமும், அங்கே அளவில்லாமல் வாரி இறைக்கப் பட்டிருந்த ஒளி மணிகளும் அவன் கண்களுக்கு இனிய விருந்தளித்தன. மென்காற்று தாயின் கருணையைப்

போல் குளு குளு வென்றிருந்தது. அவன் தன்னை அறியாமலே கண் அயர்ந்து விட்டான்.

திடீர் உணர்வினால் உந்தப் பெற்று காந்திமதி கண் விழித்தபோது, மணி என்ன இருக்கும் என்றே புலப்படவில்லை. இரவில் ரொம்ப நேரம் ஆகி இருக்க வேண்டும் என்று மட்டும் தோன்றியது. "சே, இங்கேயே படுத்து செத்த சவம் மாதிரி உணர்வில்லாமல் கிடந்திருக்கிறேனே" என்று அலுத்துக் கொண்டான் அவன். வீட்டுக்குப் போக வேண்டும் என்று குறுகுறுத்தது மனம். 'வீடு என்று எனக்கு எங்கே இருக்கிறது? என்னை எதிர்பார்த்துக் கொண்டு ஏன் இவ்வளவு நேரம் என்ற பதைப்போடு, எனக்காக யார் காத்திருக்கப் போகிறார்கள்? கழுதை கெட்டால் குட்டிச் சுவர் என்பது போல, வெளி உலக விவகாரங்கள் அலுத்துப் போனால், களைப்பு ஏற்பட்டால், நானாகப் போய் முடங்கிக் கொள்ள ஒரு அறை இருக்கிறது. அது வீடு ஆகிவிடுமா?' என்ற கசப்புணர்வு, என்றைக்கும் இல்லாத புதுமையாக இன்று அவன் மனக் குகையில் நெளிந்து புரண்டது.

ஆற்று மணலிலேயே இரவு பூராவும் படுத்துத் தூங்கி, அதிகாலையில் குளிர்ந்த நீரில் குளித்து விட்டு அறைக்குப் போகலாமே என்றொரு ஆசைச் சுழிப்பும் அங்கு எழுந்தது. பிறகு அவனாகவே சோம்பலையும் விரக்தியையும் துரத்தி விட்டு, "துள்ளி வருகுது வேல்! பகையே, கிட்டே நில்லாதே போ" என்று பாட்டுப் பாடினான்.

"அண்ணாச்சி, கவிராயர் அண்ணாச்சியோ!" என்று யாரோ இருட்டிலிருந்து குரல் கொடுத்தது செவிட்டில் அறைவது போல் தாக்கியது.

அந்த நேரத்தில் அவ்விடத்தில் ஒருவரும் இரார் என்றுதான் காந்தி எண்ணியிருந்தான். அது தவறு என்பது புரிந்துவிட்டது. கூப்பிட்ட ஆளும் தவறே செய்திருக்கிறது; தன்னைச் சொக்குக் கவிராயர் என்று எண்ணி விட்டது என்பதும் அவனுக்குத் தெளிவாயிற்று. பதில் குரல் தராமலே நடக்கலாமா என்று ஒருகணம் நினைத்தான். பிறகு இவ்வேளையில் ஆற்றுக்கு வந்திருப்பது

யார் என்றுதான் பார்க்கலாமே என்ற எண்ணம் தூண்டவே, ''யாரது?'' எனக் கூவினான்.

''கவிராயர் இல்லையா அது?'' என்ற எதிர்க் கேள்வி அவனை நோக்கி நகர்ந்து வந்தது. ஆடி அசைந்து சிவப்புப் பொறி, கொள்ளிவாய் பிசாசின் சின்னம் அல்ல; தன்னைத் தேடி வருகிற ஆசாமியின் சிகரெட் நெருப்புதான் என்று அவன் வேடிக்கையாக நினைத்தான்.

''நான் கவிராயர் இல்லையே!'' என்று காந்திமதி அறிவித்த போது, அவனை இனம் புரிந்து கொள்ளும் அளவுக்கு மற்றவன் நெருங்கி வந்துவிட்டான். ''ஓ காந்திமதியா! உற்சாகமான பாட்டு கிளம்பவே கவி ராயராக்கும் என்று நினைத்தேன். குரலும் கேட்ட குரலாகத்தான் ஒலித்தது. இந்த நேரத்துக்கு ஆற்றங் கரைக்கு வந்து வேறெயாரு இப்படி ஜாலியாகப் பாடப் போறாங்கன்னு தோணுச்சு'' என்றான்.

காந்திமதியும் அவனைக் கண்டு கொண்டான். ''சோமுவா? ஏது இவ்வளவு தூரம்?'' என்றான்.

''உன் கிட்டே நான் கேட்க வேண்டிய கேள்வி அல்லவா அது! நில்லு, கால் அலம்பி விட்டு வருகிறேன்'' என்று கூறி சோமு தண்ணீரை நோக்கி நடத்தான்.

திரும்பி வந்ததும் ''உம் போவோம்'' என்று காந்தி யோடு நடக்கலானான். ''சௌக்கியமெல்லாம் எப்படி? உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. நீ காலேஜிலே சேர்ந்துவிட்டே. அப்புறம் நாம் எங்கே சந்திக்கிறது? நீ தேசபக்தனாக உழைக்கிறதா ரெண்டொரு சமயம் கேள்விப் பட்டேன். உம், நிலைமை எல்லாம் எப்படி இருக்குது?'' என்று சளசளக்கத் தொடங்கிவிட்டான்.

சோமு காந்திமதிநாதனுடன் சில வருஷங்கள் படித்தது உண்டு. காந்தி 'பெரிய வீட்டுப் பையன்' என்று தெரிந்து, அவன் தயவை நாடி அவ்வப்போது அவனைச் சுற்றி வட்டமிட்டது தவிர, இரண்டு பேருக்கும் பிரமாத நட்பு இருந்தது என்று கூறுவதற்கில்லை.

"இல்லை யில்லை. நான் போய் விடுகிறேன்" என்று காந்தி மறுத்துரைத்தான். "அப்பா அம்மா . சண்டை பிடிப்பாங்களா? அவங்க கோபத்துக்கு பயப்படுகிற பிள்ளையாகத் தெரியலியே உன்னைப் பார்த்தால்! அப்படி யாப்பட்ட பிள்ளையாக இருந்தால் இந்த நேரத்துக்கு ஆற்றங்கரையிலே நின்றுகொண்டு துள்ளி வருகுது வேல்னு கூப்பாடு போடுவியா" என்று சொல்லி, அற்புத மான ஹாஸ்ய விருந்து படைத்து விட்டவன் போல் அவனுகவே சிரித்துக் கொண்டான்.

சோமு தன்னைப்பற்றி எதுவுமே அறிந்து கொண்டிருக்கவில்லை என்பதை அவன் பேச்சு மூலம் உணர்ந்த காந்தி, அவன் அறியாமையைப் போக்கிவிட ஆர்வம் காட்டவில்லை. "என்னைப் பற்றி இவன் தெரிந்து கொள்வதும் ஒன்றுதான். தெரியாமல் இருப்பதும் ஒன்றேதான்!" என அவன் தீர்மானித்தான்.

எண்ணத்தால் சோமுவை ஒதுக்கிவிட முடிந்தது போல், செயலினுல் அவனை விலக்கிவிட இயலாத காந்தி அவனோடு அவன் வீட்டிற்கு போக வேண்டியதாயிற்று.

அது சிறு வீடுதான். ஆனுல் வசதிகள் நிறைந்து காணப்பட்டது. சோமு சௌகர்யமாக வாழ்க்கை நடத்துகிறுன் என்பதை அச் சூழ்நிலை நன்கு விளம்பரப் படுத்தியது. உட்காருவதற்கு நாற்காலிகள், படுத் துறங்கக் கட்டில் மெத்தை அருமையான கடிகாரம், சுகமான காற்றுக்கு வசதி செய்யும் மின்சார விசிறி; "பரவாயில்லையே, சோமு வாழ்க்கையை அனுபவிக்கக் கற்றிருக்கிறுன். அதற்கு ஏற்ற வரும்படி இருக்குது போல்தான் தெரியுது. மோட்டார் முதலாளியை சரியானபடி குழையடித்து, கைக்குள் வச்சிருப்பான் போலிருக்கு!' என்ற எண்ணம் காந்திக்கு இயல்பாக உண்டாயிற்று.

அங்கே உள்வாசல் படி அருகே, விளக்கு வெளிச் சத்தில் நின்ற ஒரு பெண் காந்தியின் கவனத்தைக் கவர்ந்தாள். குறுகுறுக்கும் விழிகளைக் கொண்ட யுவதி. அவளை முதல் முறை சாதாரணமாகப் பார்த்தான்

அவன். அதன் பிறகு அவன் பார்வை சுவர்களில் தொங்கிய படங்களை ஆராய்வதில் ஈடுபட்டது. அவளோ அவனை நோக்கி நின்றாள்.

சோமு சட்டையைக் கழற்றிவிட்டு, வெறும் பனியன் அணிந்தவனாய் வந்தான். விபூதியை அள்ளிப் பூசிக்கொண்டு "ஐயனே அப்பா!" என்று முணுமுணுத்தான். 'சந்திரா, இவர்தான் காந்திமதிநாதன். ரொம்ப பேமஸ் ஆகி வருகிறார். பெரிய இடத்துப் பிள்ளை. இவர் அப்பா பெரிய பிசினஸ்மேன். வருங்காலத்திலே இவர் பெரிய தலைவர் ஆனாலும் ஆகிவிடுவாரு. ஏன் ஆகக் கூடாது? இப்போ இவரும் நம்ம பிரண்டு. ஐயாம் பிள்ளையும் இவரும் பல வருசங்கள் சேர்ந்து படிச்சிருக்கிறோம். தெரிஞ்சுக்க!" என்று அளந்து தள்ளினான்.

சந்திரா இளம்முறுவல் பூத்து ஒயிலாக அசைந்து கொடுத்தாள். "இன்று உப்புமாதான். அவுங்களும் சாப்பிடலாமே" என்று குரலில் குழைவு காட்டினாள். உள்ளே போனாள்.

"என் சிஸ்டர். சந்திரான்னு பேரு" என்று அநாவசியமாக அறிமுகம் பேசினான் சோமு.

காந்தியின் மறுப்புரை எதுவுமே அவனிடம் எடுபடவில்லை. அங்கேயே உண்டுவிட்டு அவ்வீட்டிலேயே உறங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

காந்திமதிநாதன் கட்டில் தேவையில்லை, கீழே படுக்க ஒரு பாய் இருந்தாலே போதும் என்று உறுதியாகக் கூறிவிட்டான். நல்ல சமுக்காளமும் அருமையான தலையணையும் கிடைத்துவிட்டன. அவனுக்கு அருகிலேயே இன்னுமொரு படுக்கை பரப்பப் பெற்றது. அதில் சோமு படுப்பான் என்றுதான் அவன் நினைத்தான். தூக்கம் அவனை விரைவிலேயே கிறக்கி விட்டது.

சிறிது நேரம் சென்றிருக்கும். அவன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். அந்த அறையில் சிற்றொளி சிந்தி மினுக்க முயன்று கொண்டிருந்தது ஒரு விளக்கு. அறை

முழுவதும் 'நெஞ்சில் கனல் எழுப்பும்' மல்லிகை மணமும், வாசனைத் தைலத்தின் சுகந்தமும் கவிழ்ந்து கிடந்தன. அவன் விழிகள் பக்கத்துப் படுக்கையில் சந்திரா வசீகர நிலையில் படுத்துக் கிடப்பதைக் கண்டன. அந்தப் படுக்கை ஆரம்பத்தில் இருந்த இடத்தில் அல்லாது அவன் விரிப்போடு ஒட்டிக் கிடக்கும்படி பின்னர் இழுத்துப் போடப் பட்டிருந்ததும் அவனுக்கு விளங்கியது. அந்தப் பெண்ணின் வளைக்கரம்தான் அவன் உடல்மீது பட்டிருக்க வேண்டும்; அதனால்தான் திடுக்கிட்டு விழிக்க நேர்ந்தது என்றும் அவனுக்குப் புரிந்தது.

அவள் தூங்குவது போல கண்ணை மூடிக் கொண்டு தான் கிடந்தாள். எனினும், அவள் உறங்கவில்லை என்று அவன் உணர்வுக்குப் பட்டது. அவள் இதழ்கள் நெளிந்து பின் சிரிப்பைச் சித்தரித்திருந்தன.

காந்திக்கு இந்நிலை புதியது. திகைப்புத் தருவது மட்டுமல்ல. அதிர்ச்சியும் அளிக்கக் கூடிய அனுபவம். அவன் நெஞ்சு திக்திக்கென அடித்துக் கொண்டது. அவன் உடலில் பதற்றம் கண்டது. சோமு அந்த அறையில் தூங்குகிறானா என்று ஆராய்ந்தன கண்கள். கட்டில் மீதும் இல்லை. அவன் எங்கே படுத்துக் கிடப்பான்?

காந்தி எழுந்து உட்கார்ந்து, "சோமு" என்று கூப்பிட்டான்.

பதில் வரவில்லை. பக்கத்துப் படுக்கையில் கிளுக்கு சிரிப்பு வெடித்தது. மை பூசப் பெற்ற கரிய பெரிய கண்கள் அவனை மயக்க முயலும் விஷ வண்டுகள் போல் மொய்த்தன.

"சோமு" என்று மறுபடியும், உரக்கக் கூப்பிட்டான் அவன்.

"அவர் இல்லை. லாரியிலே போக வேண்டியிருக்கு என்று அப்பவே போயிட்டாரே!" என்று செல்லக் குரலில் அன்பொழுகப் பேசினாள் மங்கை.

''என்னிடம் சொல்லலியே! நானும் கூடவே போயிருப்பேனே!'' என்று முணுமுணுத்தான் அவன்.

''உங்களைக் கவனித்துக் கொள்ளும்படி சொல்லி விட்டுத்தான் போனார். நீங்க ஏன் பயப்படுறீங்க?'' என்று கூறித் தன் உடலை மோகனமாய் நீட்டி நெளித்தாள் அவள். அவளுடைய கைகள் அவனைப் பிடிக்க நீளுவது போல் நெருங்கின.

அவன் பதறி எழுந்து நின்றான், ''உனக்கு இது நன்றாக இருக்குதா? உன் அண்ணனுக்குத் தெரிந்தால்...?''

அவள் ரசித்துச் சிரித்தாள். ''அவர் என் அண்ணன் இல்லை. அவருக்குத் தெரியாமலா? அவருக்கு எல்லாம் தெரியும்!'' என்று சொன்னாள். எழுந்து உட்கார்ந்து, அவனையே பார்த்தாள்.

காந்திக்கு உண்மை பளிச்சிட்டது. சோமு பிசினஸில் புகுந்து விட்டதாகச் சொன்னானே. இப்படியும் ஒரு பிசினஸ் பண்ணுகிறான்! இதன் மூலம்தான் அவன் வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொள்கிறானா! சே, என்ன பிழைப்பு!

அவன் உள்ளம் நடுங்கியது. இனியும் அந்த இடத்தில் இருக்கக்கூடாது என்று அவசரம் அவசரமாக சட்டையை மாட்டிக் கொண்டு, விளக்கைத் தூண்டினான்.

அவள் வேகமாக எழுந்து அவன் அருகே வந்தாள். ''இந்த நடுராத்திரியில் எங்கே போகப் போறீங்க'' என்று கண்களைச் சுழற்றினாள்.

'இடர் செய்யும் கண்கள்' தன்னை இடறி விழும்படி செய்து விடும் என அஞ்சினான் அவன். ''இப்படி இருக்கும் என்று தெரிந்திருக்குமானால் நான் சோமுகூட வந்தே இருக்க மாட்டேன்'' என்று முனகிவிட்டு, தாழ்ப்பாளை வேகமாகத் திறந்து, தப்பி ஓடுகிறவன் போல் வெளியே பாய்ந்தான். அந்த அறையின் வசீகரத்தையும் வசதியையும் வெளிச்சத்தையும் விட வெளியே கனத்துக்

கிடந்த இருட்டும், இரவின் குளுமையும் இனியன, ஆபத்தற்றன என்று அவனுக்குப் பட்டது.

அவனைக் கேலி செய்வது போல் அந்தப் பெண் சிரித்ததையோ குத்தலாக ஏதேதோ சொன்னதையோ அவன் செவி மடுக்கவில்லை. அந்தப் பொல்லாத பயங்கரமான இடத்திலிருந்து சரியான சமயத்தில் தப்பிவிடத் தனக்குத் துணை புரிந்து துணிவு தந்த சக்திக்கு அவன் இதய பூர்வமாக நன்றி செலுத்தினன்.

அவன் மனம் இன்னும் அமைதியுறவில்லை. சே, எவ்வளவு மோசமான அனுபவம்! என்ன கேவலமான மனிதர்கள்! வசதியாக வாழ்க்கை நடத்தவேண்டும் என்றால் இப்படி எல்லாமா செயல் புரிய வேண்டும்?—அவன் மூளை சூடுற்று, ஆத்திரமான எண்ணங்களைக் கொட்டியது.

"எல்லாம் பணத் தேவையினால்தான், வறுமை தூண்டிவிடுகிற விவகாரம்தான்!" என்று அவன் சிந்தனை பேசியது.

காந்திமதிநாதன், இத்தகைய விவகாரங்கள் நடைபெறுவது குறித்துக் கேள்விப் படாமல் இல்லை. அவனோடு படித்தவர்களில் 'அளவுக்கு மீறிய முதிர்ச்சி' பெற்றிருந்த சிலரும், அவன் வீட்டருகில் வீதியில் உள்ள அநேகரும் இந்தவிதமான தொழில் பற்றி ரசித்துச் சுவைத்து அடிக்கடி பேசுவது வழக்கம்தான். இரவு உலக இன்பக்களியாட்டங்களை அனுபவிக்கத் தவித்தவர்களும் அனுபவித்தவர்களும் அவனுடைய அறிமுக வட்டாரத்திலே பலர் இருந்தார்கள். நாலு பேர் கூடினால் அவர்கள் சுவையாகப் பேசுகிற உரையாடலில் இவ்வித விஷயங்கள் தான் அதிகம் தலைகாட்டின. 'இப்படி இருக்கிறார்களே இவர்கள்!" என்று அவர்களைப்பற்றிக் காந்தி அனுதாபம் கொள்வது வழக்கம். இவர்களோ 'இப்படியும் இருக்கிறனே இவன்! இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பிரகிருதியா!' என்று இவன்மீது பரிதாபமும் பரிகாசமும் எறிவது வழக்கம்

இப்போது, இரவில் எதிர்பாராத விதத்தில் சமூக வாழ்வின் ஒரு பயங்கர அம்சம் கோரமாய் அவன் எதிரே

தலை தூக்கிச் சிரித்தபோது காந்திக்கு ஏற்பட்ட அதிர்ச்சி பெரியதாகத்தான் இருந்தது.

## 17. சிந்தனையும் செயலும்

இரவில் தனக்கு ஏற்பட்ட புதுமையான, அதிர்ச்சி நிறைந்த அனுபவத்தைக் குறித்து காந்திமதிநாதன் யாரிடமும் எதுவும் பேச விரும்பவில்லை. அதில் பெருமையாகப் பேசிக் கொள்ளவோ, அல்லது விவாதித்து விளக்கம் காணவோ என்ன இருக்கிறது? பணம் மனிதரை எப்படி எப்படி எல்லாமோ ஆட்டி வைக்கிறது என்று அவன் நினைத்தானே, அதற்கு மற்றுமொரு சான்றாக அமைந்திருந்தது, அந்த அனுபவம் என்றே அவன் கருதினான். அவன் உள்ளத்தில் படிந்து கிடந்த கசப்பு உணர்ச்சி மேலும் கனத்தது

இனி அதிகமான எச்சரிக்கையுடன் செயல் புரிய வேண்டும்; யார் எப்படிப் பட்டவர் என்பதை பார்த்த மாத்திரத்திலேயே எளிதில் புரிந்து கொள்ள இயலாது என்றே தோன்றுகிறது என்றும் அவன் எண்ணினான். சோமுவையும் அவன் வீட்டில் எதிர்ப்பட்ட நிகழ்ச்சியையும் தன் நினைவிலிருந்து அகற்றி விட வேண்டும் என்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று.

ஆனால், அவ்வளவு இலகுவில் மறந்துவிடக் கூடியதா அது? சமூக நிலைமை எவ்வளவு சீர் கெட்டுக் கிடக்கிறது என்ற எண்ணம் எழும் போதெல்லாம் இந்த விவகாரமும் தானாகவே தலை தூக்கும். சமூக அமைப்பு முறைகளும், வாழ்வின் போக்கும் மாறுதல் பெற்றாக வேண்டும். அதற்கு மனித மனோபாவத்தில் பெரியதொரு மாற்றம் ஏற்பட வேண்டும்; எல்லோரும் கல்வி அறிவு பெற்றால் இந்த மாறுதல் ஏற்படக்கூடும் என்று பலர் சொன்னார்கள். அடிப்படை அம்சங்கள் முற்றிலும் மாறுபடுவதற்கு பொருளாதார அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று சிலர் அறிவித்தார்கள். இவ் விதமான கருத்துக்களை எல்லாம் புத்தகங்கள் மூலமும் பிரசங்கங்

கள் மூலமும் காந்தியும் அவன் நண்பர்களும் அறிந்து கொண்டார்கள்.

மேலும் மேலும் அறிவு வளர்ச்சி பெறவும், பேச்சுப் பயிற்சி பெறவும் காந்தியும் மற்றச் சிலரும்கூடி 'திரு நகர் இளைஞர் மன்றம்' என்று ஒன்றை நிறுவினார்கள். வாரம் தோறும் ஏதேனும் ஒரு பிரச்னையை எடுத்துக் கொண்டு காரசாரமாக விவாதித்தார்கள். பத்திரிகை கள் பலவற்றையும் வாங்கிப் படித்தார்கள். கல்வி அறிவைப் பரப்புவதற்குத் தங்களால் இயன்ற தொண்டு புரிய வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

முதியோர் கல்விக்கு வசதியாக 'இரவு நேரப் பள்ளி' நடத்த முன் வந்தார்கள் அவர்கள். சிறு பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி கற்பிக்க வசதி செய்தார்கள். காந்தியும் இவற்றில் தீவிரமான பங்கு ஏற்றுச் செயல் புரியலானான்.

தொண்டர் நாதன் முதியோருக்குக் கல்வி பயிற்று வதில் ஆர்வம் காட்டினார். இந்தி மொழியைக் கற்றுக் கொண்டு, மற்றவர்களுக்கு அதைப் போதிப்பதில் அவர் அக்கறை கொண்டார்.

தேர்தல் வெற்றிகரமாக நிறைவேறி, தேசீய இயக் கத்தினர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து தங்களால் இயன்றவரைச் செய்து வந்தனர். அவர்களுடைய செயல்களுக்கு வரவேற்பு இருந்தது; எதிர்ப்பும் வளர்ந்து வந்தது. முக்கியமாக, இந்தி மொழித் திணிப்புக்கு பலத்த எதிர்ப்பு எழுந்தது. திருநகரிலும் அந்த எதிர்ப்பு வேகமாகப் பரவியது.

அந்த எதிர்ப்புக்கு மாற்றாக இந்தி மொழிப் பிரசாரம் செய்ய வேண்டியது தங்கள் கடமை என்று தொண்டர் நாதன் போன்றவர்கள் கருதினார்கள்.

எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டுவதனால் மட்டும் பய னில்லை; மக்களிடம் தாய் மொழிப் பற்றை வளர்க்க வேண்டியது அவசியம் என்று காந்தி எண்ணினான். தாய்மொழி உரிய முறையில் போற்றப்படவில்லை; பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் தமிழை அலட்சியம்

செய்வதோடு, தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் மரியாதை இல்லாமல் நடந்து வந்தார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆங்கிலத்துக்கே முதலிடம் இருந்தது. ஆங்கிலம் கற்பிக்கிறவர்களே அதிக மரியாதை பெற்றார்கள். ஆங்கிலம் படித்துப் பட்டம் பெற்றவர்களே சமூகத்திலும், நாட்டிலும் உயர்ந்தவர் களாக மதிக்கப்பட்டார்கள். இவை எல்லாம் அவனுக்கு உடன்பாடான விஷயங்கள் அல்ல.

ஆட்சி புரிகின்ற அந்நியரின் மொழி நாட்டிலே செல்வாக்குப் பெற்று விட்டது. நாட்டு மக்களை அடிமைப்படுத்தவும், அவர்களுடைய அறிவு வளர்ச்சிக் குத் துணை புரியும் சாக்கிலே அடிமைப் புத்தியை வளர்க் கவும் ஆங்கிலேயர் கல்வி முறையை அமைத்து விட்டார் கள் என்று அவனுக்குப் பட்டது. அரசாங்க இயந்திரம் சீராக இயங்குவதற்கு வகை செய்வதற்காக ஏகப்பட்ட குமாஸ்தாக்களையும், கீழ்தர உத்தியோகஸ்தர்களையும் தயாரித்து விடும் நோக்கத்துடன்தான் ஆங்கிலேயர் கல்வித் திட்டம் வகுத்திருக்கிறார்கள் என்ற கூற்றின் உண்மையை அவனும் உணர்ந்தான்.

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், சேர்ந்து படிக்கிறவர்களில் பெரும்பாலோர் அறிவு வளர்ச்சி பெற வேண்டும் என்றோ, ஆராய்ச்சித் துறைகளில் ஈடு படவேண்டும் என்றோ ஆசை கொண்டு, அல்லது லட்சிய வேகத்தோடு செல்லவில்லை. படித்துப் பட்டம் பெற்றால் நல்ல உத்தியோகம் கிடைக்கும் என்றும், பணம் நிறையச் சம்பாதிக்கலாம் என்றும் எண்ணியே அவர்கள் செயல் புரிகிறார்கள். அதனால் அவர்கள் ஆங்கிலத்தையே பெரிதாக மதிக்கிறார்கள். அந்நிய மொழியில் மோகம் கொண்டு, தாய் மொழியை அலட்சியப் படுத்துகிறார்கள். மாணவர்களின் இந்த மனோபாவத்தைக் காந்தி வெறுத் தான்.

ஆங்கிலம் சாதாரண மக்களாலும் உயர்வாக மதிக் கப்படுகிறது. புரிந்தும் புரியாமலும், அவசியத்தோடும் அவசியம் இல்லாமலும், பலரும் ஆங்கிலத்தை உபயோ கிக்கிறார்கள். அப்படிச் செய்வதைப் பெருமையாகவும்

கருதுகிறார்கள் தமிழைச் சரியாக எழுத வேண்டும், பேச வேண்டும் என்று சிரத்தை எடுப்பதுகூட இல்லை. இந் நிலைமையும் காந்திக்கு வேதனை தந்தது.

"திருநகர் இளைஞர் மன்றம்" ஏற்பாடு செய்திருந்த ஒரு சிறப்புக் கூட்டத்திற்கு வந்திருந்த தமிழ் பேராசிரியர் ஒருவர் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்.

"இளைஞர் மன்றம்" உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டிருந்தது. தமிழன் தமிழனோடு தமிழிலேயே பேச வேண்டும். பேசுகிறபோது தமிழ் மொழியோடு ஆங்கில வார்த்தைகளைக் கலந்து பேசுவது வீணத்தனம். 'பேச்செல்லாம் தமிழினிலே பேசுங்கள்! ஏச்செல்லாம் தமிழினிலே ஏசுங்கள்!' என்றெல்லாம் மன்றத்தின் அறிக்கை எடுத்துக் கூறியது.

இதைப் பேராசிரியர் பெரிதும் பாராட்டினார். 'வைதாலும் தமிழினிலே வையுங்கள்; அதை வாழ்த்தெனக் கொள்வேன்' என்று முன்பு அறிவித்த பக்தர் ஒருவரின் மனப் பண்பும் தமிழ்ப்பற்றும் இவ் வரிகளிலே ஒலிக்கின்றன என்று வியந்தார்.

"எங்கு பார்த்தாலும் ஆங்கிலமே முதலிடம் பெற்றுள்ளது. தமிழ் நாட்டில் தமிழருக்காக நடத்தப்படும் கடைகளில்கூடப் பெயர்ப்பலகைகள் ஆங்கிலத்தில்! சுவரொட்டிகள் ஆங்கிலத்தில்! இது பெருமை என்று மக்களால் மதிக்கப்படுகிறது. இது பெருமைக்குரிய விஷயமல்ல. அறியாமைதான். அடிமைப் புத்திதான். தமிழ் பெயர்கள் தப்பும் தவறுமாக எழுதப்படுகின்றன. கடை வீதிகளில் காணப்படுகின்ற பெயர்ப் பலகைகளில் உள்ள தமிழ்ப் பிழை—இல்லை. தமிழ்க் கொலை—தமிழ் நெஞ்சை வதைக்கிறது. கண்ணை அறுக்கும் கோரங்கள் அவை. தமிழ் வளர்க்கவிரும்புகின்ற மன்றத்தினர் ஒன்று செய்யலாம். வர்ணங்களையும் புருசையும் எடுத்துக் கொண்டு போங்கள். பிழைகள் காணப்படுகிற பலகைகளுக்கு உரியவர்களிடம் தவறுகளை சுட்டிக்காட்டி, திருத்தச் சொல்லுங்கள். அவர்கள் திருத்துவதில் ஆர்வம்

காட்டவில்லை என்றால், நீங்களே திருத்த முற்படுங்கள். காந்தி வழியிலேயே—அறவழியிலேயே இதையும் செய்யலாமே" என்று அந்த அறிஞர் கூறினார்.

காந்திமதிநாதனுக்கும், அவனைப் போன்ற உற்சாகமும் செயலூக்கமும் பெற்றிருந்த இளைஞர்கள் பலருக்கும் அறிஞரின் யோசனை அருமையான செயல் திட்டமாகத் தோன்றியது. அவர்கள் மறுநாளே செயலாற்றத் துணிந்து கிளம்பினார்கள்.

சில கடைக்காரர்கள் "நாங்கள் பலகை மாற்றுகிற போது திருத்தி, எழுதிக் கொள்கிறோம்" என்று சொன்னார்கள். சிலர் "அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். அதை ஏன் திருத்த வேண்டும்?" என்று எரிந்து விழுந்தார்கள். சிலர் ஏசினார்கள்.

இளைஞர் மன்றத்தினர் உற்சாகத்தை விட்டுவிடவில்லை. இரவோடு இரவாக, அநேகப் பலகைளில் திருத்தம் செய்து வைத்தார்கள். மறுநாள், தங்கள் பலகைகளை "வால் பயல்கள்" அசிங்கப்படுத்தி விட்டார்கள் என்று சொந்தக்காரர்கள் ஏசினார்கள். அதற்காக இளைஞர்கள் வருத்தப்படவில்லை.

நிதானமாகச் சிந்திக்கிறபோது, ஒவ்வொருவரும் நற்பணி புரிவதற்கு எத்தனை எத்தனையோ வழிகள் இருக்கின்றன; செயல் புரிவதற்கு மனமும் துணிச்சலும் வேண்டும்; இவைதான் முக்கியம் என்று காந்திக்குத் தோன்றியது. தன்னால் இயன்ற பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டியது அவசியம் என்று அவன் உறுதி பூண்டான்.

அவன் சிந்தனையில் சலனம் ஏற்படுத்துவதற்கு மற்றுமொரு சந்தர்ப்பமும் வந்து சேர்ந்தது. அவனுடைய நண்பன் நடராஜன் திடீரென ஒருநாள் வந்து நின்றான் அவன் முன்னே. சில வருஷங்களுக்கு முன்பு, சத்தியாக்கிரக சமயத்தில், அவனைப் பிரிந்து வீட்டை விட்டு வெளியேறிய நண்பன்தான். ஆனால் அவனுடன் பேசப்

சென்று விட்டான் என்ற உணர்ச்சியே காந்திக்கு ஏற்பட்டது.

## 18. தீவிரவாதி

திருநகரை விட்டு வெளியேறிய நடராஜனுக்கு இடைக்காலத்தில் எவ்வளவோ அனுபவங்கள் கிட்டியிருந்தன. வெளியூர்களிலும் அவன் ஜவுளிக்கடை மறியலில் கலந்து கொண்டான். தடிஅடி பட்டான். கள்ளுக்கடை மறியலின்போது, குடிகாரன் ஒருவனால் பலமாகத் தாக்குண்டு அவன் ஆஸ்பத்திரியில் கிடக்க நேரிட்டது. குணமடைந்து அவன் வெளியே வந்த சமயத்தில், மறியல் போராட்டம் முடிவடைந்து விட்டது. அவன் பிறகு கட்சிப் பிரசாரனாகி, ஊர் ஊராக அலைந்து திரிந்தான். சிறிது கால சிறைவாச அனுபவமும் ஏற்பட்டது.

சிறைக்குள் ஒடுங்கிக் கிடந்தபோது அவன் மிகுந்த ஞானம் பெற்று விட்டதாக நடராஜன் நண்பனிடம் சொன்னான். இயல்பான வாழ்க்கை முறைகளுக்கு முரண்பட்ட ஒரு சூழ்நிலையில் அடைபட்டுக் கிடக்க நேரிடுகையில் மனிதரின் சிறுமைக் குணங்களும் சுயநலமும் மேலோங்கிச் செயல் புரிவதை அவன் உணர முடிந்ததாக அறிவித்தான்.

சிறைவாசம் ஒரு சிலரை ஞானிகளாகவும், தத்துவ தரிசிகளாகவும், தேர்ந்த சிந்தனையாளர்களாகவும் மாற்றியிருக்கலாம்; இனியும் மாற்றலாம். ஆனால் மொத்தத்தில், பெரும்பாலானவர்களின் மனிதத்தன்மையை வற்றடிக்கும் அரங்கமாகவும், கடுமையான நோய்களைத் தரும் இடமாகவுமே சிறை விளங்குகிறது என்று நடராஜன் அபிப்பிராயப்பட்டான்.

"வெளியேயிருந்து உழைப்பில் ஈடுபடுத்த வேண்டிய அருமையான காலத்தை சிறைக்குள் கிடந்து வீணடிப்பதில் அர்த்தமே இல்லை. நாட்டு விடுதலைக்காகவும், மக்களின் உயர்வுக்காகவும் நாம் வெளியேயிருந்துதான் பாடுபட வேண்டும். சிறை வாழ்வை நாமாகவே

விரும்பி ஏற்றுக்கொள்வது ஒரு வகை வீரமாகவும், தியாகமாகவும் போற்றப்பட வேண்டியதுதான். ஆனால் இந்தத் திட்டம் எனக்குப் பிடிக்கவில்லை'' என்று அவன் திடமாக அறிவித்தான்.

நடராஜன் தீவிரமான செயல் முறைகளை ஆதரிப்பவனாக மாறியிருந்தான். மகாத்மா காந்திஜீயின் சாத்வீகப் போராட்டங்களின் மூலம் நாட்டுக்கு விடுதலை விரைவில் வந்து சேராது; பலாத்காரத் தாக்குதல்களும் சதித் திட்டங்களும் அனுஷ்டிக்கப் படவேண்டும் என்று வற்புறுத்தி வந்தவர்களின் கருத்துக்கள் அவனை வெகுவாகப் பாதித்திருந்தன.

"சட்டசபையில் வெடிகுண்டு வீசிய பகவத்சிங் போல் இன்னும் பல வீரர்கள் தோன்ற வேண்டும். தமிழ் நாட்டிலும் வீரர்களுக்குக் குறைவு கிடையாது. முன்பு ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றவர் அஞ்சா நெஞ்சு படைத்த தமிழர்தானே? அழிவு முறையில் இல்லாது ஆக்க வழியிலும் எதிர்ப்பை வளர்த்து அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யமுடியும். வெள்ளையருக்கு எதிராக, முதன் முதலாகக் கப்பல் ஓட்டி சுதந்திர உணர்வை மேலோங்கச் செய்த வ. உ. சி. யின் சேவை குறைவானதா?'' என்று அவன் உணர்ச்சிகரமாகப் பேசினான்.

"அயர்லாந்து சுதந்திரப் போராட்ட வரலாறு நமக்கு ஏன் வழிகாட்டக்கூடாது? இங்கும், சுதந்திர உணர்ச்சி உள்ளவர்கள் திடீரென ஒருநாள் போட்டி அரசாங்கம் அமைக்க வேண்டும்; தபால் நிலையங்களையும், ரயில்வேயையும் கைப்பற்றிக்கொண்டு, சர்க்காரைத் திணறடிக்க வேண்டும் ஆனால் காந்திஜீ தலைமையில் இவை எல்லாம் நடக்காது. அவர்தான் வீரத்துடிப்பு மிகுந்த சுபாஷ்சந்திரபோஸைக்கூட ஆதரிக்கவில்லையே!'' என்றான்.

காந்திமதிநாதன் நண்பன் கருத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளவுமில்லை, அடியோடு மறுக்கவுமில்லை. "நாட்டின் நிலைமைக்கும், நமது கலாசாரத்துக்கும், மக்களின் சுபாவத்துக்கும், காலத்துக்கும்

தகுந்த போராட்ட முறைகள் எவை என்பதை மகாத்மா காந்தி அறிந்துதான் தமது செயல் திட்டங்களை வகுக்கிறார்; வழி காட்டுகிறார். அவருடைய போக்கு, புரியாமல் இருக்கலாம்; பிடிக்காமலும் இருக்கலாம். ஆனால் அவர் நாட்டுக்கு நிச்சயம் சுதந்திரம் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும், மக்களுக்கும் இருக்கிறது'' என்று அவன் சொன்னான்.

''இருக்கலாம். ஆனால் அவர் வழியில் வேகமும் விறுவிறுப்பும் இல்லை; அரசியலில் அளவுக்கு அதிகமாக மதத்தைப் புகுத்தி விட்டார் என்பதுதான் என் குறைபாடு'' என்று நடராஜன் கூறினான்.

பாரதம் முழுவதும் அரசியல் விழிப்பு ஏற்பட்டு, விடுதலை இயக்கம் விறு விறுப்பாகச் செயலாற்றி, கால ஓட்டத்தில் மந்த கதி பெற்று மெதுநடை போட்டதாவே தோன்றியது. கவர்ச்சிகரமான அரசியல் தத்துவங்களும். கோஷங்களும் வாலிப சமுதாயத்தை வசீகரிக்கத் தொடங்கின. தேசீய இயக்கத்தில் கலந்துகொண்டு தீவிரமாகச் செயலாற்றிய சிலர்கூட சிந்தனை விழிப்பு பெற்று, மனம் மாறி வேறு முகாம்களை நாடினர்.

நண்பன் நடராஜனும் அவ்விதம் பாதை மாறிப் பயணம் செய்ய ஆரம்பித்து விட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை என்று காந்தி நினைத்தான். ''திருநகர் இளைஞர் மன்றம்'' தீவிர லட்சியங்களை ஏற்றுக்கொண்டு பணியாற்ற வேண்டும்; வாலிபர்கள் உடல் பயிற்சி மூலம் வலிமை பெற்றாக வேண்டும்! அதற்காக தேகப்பயிற்சிக் கூடங்கள் அமைக்க வேண்டும் என்று நடராஜன் கூறி, தன் திட்டங்களை விவரிக்க ஆரம்பிக்கவும் காந்தியின் சந்தேகங்கள் வலுப்பெற்றன.

''எங்களுக்கு இந்த முறை போதுமாப்பா!'' என்று சிரித்தபடி சொன்னார் காந்தி.

''சுத்த விளக்கெண்ணெய் வழிதான்! கூடிய சீக்கிரம் பார். பெரிய மாறுதல்கள் ஏற்படப் போகின்றன. நான் ஒரு பத்திரிகை நடத்தப் போகிறேன். பக்கத்துக்குப்

பக்கம் தீப்பொறி பறக்கும். அப்படி வேகமான எண்ணங்களை என் எழுத்து தாங்கி.வரும். நீ வேண்டுமானுலும் அந்தப் பத்திரிகையில் சேர்ந்து பணியாற்றலாம்'' என்று நடராஜன் அறிவித்தான்.

வந்ததுபோலவே திடீரென்று போய்விட்டான் அவன். எங்கே போனுன், அவன் எங்கிருந்து பத்திரிகை நடத்தத் திட்டமிட்டிருக்கிருன் என்பது எதுவும் காந்திக்குத் தெரிய வழி இல்லாமல் போய்விட்டது!

## 19. மாறும் மனிதர்கள்

**வா**ழ்க்கை எப்போதும் ஒரே சீராக அமைவதில்லை. தனி மனிதர்களின் வாழ்வைக் கவனித்தால், இன்பங்களை விடத் துன்பமே மிகுந்திருப்பது தெரியும். சுக சௌகரியங்களைவிட சிரமங்களும் நெருக்கடிகளுமே அதிகம் உறவாடுகின்றன என்பதும் விளங்கும்.

சாதாரண மனித வாழ்வு முறையிலேயே இந்த நிலைமை என்ருல், பொதுவான—கால ஓட்டத்தில் ஒழுங்கானது, சமூக நியதி எனப் படிந்துவிட்ட—ஒரு போக்கிலிருந்து மாறுபட்டு, வழி விலகி அல்லது எதிர்த்துக் கொண்டு, செயல் புரியத் தொடங்குகிறவர்களின் வாழ்க்கைநிலை பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

நாட்டின் விடுதலைக்காகப் பணிபுரிவது என்ற உணர்ச்சி வேகத்தோடும், லட்சிய வெறியுடனும் கிளம்பியவர்கள் எண்ணற்றோர். அவர்கள் எல்லோருக்குமா வாழ்க்கை வசதிகள் நன்கு அமைந்திருந்தன? வீடு, சொத்து, சுகம் என்ற சகல சௌகர்யங்களையும் பெற்றிருந்த பலர் தேச பக்தர்களாகி, தீவிரமாகச் செயல் புரிந்து, கஷ்டநஷ்டங்களை மகிழ்ச்சியுடன் ஏற்று, போராட்டத்தில் மேலும் மேலும் ஈடுபட்டு வந்தார்கள். குடும்பக் கவலைகளும் வீட்டுத் தொல்லைகளும் மிகுதியாக உடையவர்கள் பலரும் இவ்வேள்வியில் குதித்திருந்தார்கள். ''இழப்பதற்கு எதுவும் இல்லை நம்மிடம். நம்

உழைப்பும்,காலமும் விடுதலை இயக்கத்துக்கே உரியவை'' என்று துணிந்து ஈடுபட்டிருந்த தனி நபர்களும் உண்டு.

பண வசதியும் சொத்து சுகங்களும் பெற்றிருந்தவர்களுக்கு சாதாரண வாழ்க்கைப் பிரச்சனைகள் பெரும் நெருப்பாகச் சுட்டெரிக்கவில்லை. பாடுபட்டு, பணம் தேடி, தன்னைப் பாதுகாத்துக் கொண்டு தன்னை நம்பியிருக்கும் குடும்பத்தினரையும் காப்பாற்றி வளர்க்க வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு, தேசப் பணி என்பது மிகவும் கனமான சிலுவையாகத்தான் வாய்த்தது. இருப்பினும், தாங்களாகவே தேர்ந்து எடுத்துக் கொண்ட சிலுவை தங்களை எவ்வளவுதான் அழுத்தினாலும், மனம் தளராது, சோர்வுறாது, ஊக்கம் குன்றாது தங்கள் கடமைகளைச் செய்து வந்தார்கள்.

இந்த ரகமான தேசபக்தர்களின் சரியான பிரதிநிதியாகத் திகழ்ந்தார் தொண்டர் நாதன். அவர் வீட்டில் வறுமை பயங்கர ஆட்சி புரிந்தது. அவர் குழந்தைகள் பட்டினியால் கஷ்டப்படக்கூடாது என்று கவலைப் பட்டார். அவர் மனைவி மிகுந்த சகிப்புத்தன்மை கொண்டவள்தான். எனினும், எப்பொழுதாவது மனம் குழைந்து அவள் முணு முணுப்பது வழக்கம்தான்.

அது போன்ற சமயங்களில் நாதன் மிகவும் பொறுமையோடு தக்ளியில் நூல்நூற்பதிலோ, ராட்டை சுற்றுவதிலோ தமது கவனத்தைச் செலுத்துவார். ''குடிசைத் தொழில்'' பயிற்சியிலும் தான் புதிது புதிதாகக் கற்றவைகளை சோதனை பார்ப்பதிலும் அவருக்கு எப்போதும் ஆர்வம் அதிகம். ஒவ்வொரு சீசனுக்கு ஒவ்வொரு வித்தையைத் தேர்ந்து, அதை அனுபவ சாத்தியமாக்குவதில் அவர் காலத்தையும் காசுகளையும் ஈடுபடுத்தத் தயங்க மாட்டார். சோப்புச் செய்வதில் நாட்டம் கொண்டார் ஒரு சமயம். ''கையால் செய்யும் காகித'' உற்பத்தியில் அளவுக்கு அதிகமான உற்சாகம் காட்டி வந்தார் சமீப காலத்தில்.

அவருடைய பொறுமையும், விடாமுயற்சியும், செயலூக்கமும் காந்திமதி நாதனுக்கு வியப்பூட்டும் விஷயங்

களாக விளங்கின. அவரே தனக்கு அருமையான "முன் மாதிரி" என்று அவன் அடிக்கடி கருதுவான்.

காந்தி, கவலையில்லாமல் வளர்ந்தவன். கடுமையான வேலைகள் செய்து பழக்கப்படாதவன். மாணவப் பருவத்திலேதான், அவன் அப்பாவுக்கு நல்லபிள்ளையாக நடந்து கொண்டிருந்தான் என்ருல், இப்போதுகூட அவனுடைய வாழ்க்கை சிக்கல் சிரமம் எதுவுமற்று, மேடு பள்ளங்கள் இல்லாது, அருமையாகவும் இனிமையாகவும் இயங்கிக்கொண்டுதான் இருக்கும் முந்தைய மனே நிலையில் அவன் வாழ்ந்து வந்திருந்தால் அந்தவித வாழ்க்கை அவனுக்குப் பிடித்தும் இருக்கும்.

ஆனுல், திடீரென்று விடுதலைப் போராட்டத்தில், குதித்து, தனது வாழ்வில் தானுகவே ஒரு திருப்பத்தை ஏற்படுத்திக்கொண்ட பிறகு—அதன் விளைவுகள் அவனுடைய உள்ளத்தையும் உணர்ச்சிகளையும் வெகுவாகப் பாதித்த பின்னர்—அவனுக்குச் சிந்தனை விழிப்பும் அறிவுத் தெளிவும் ஏற்பட்டன. அவன் தன்னைச் சுற்றி உள்ளவர்களையும், ஊர் மக்களையும் கவனித்தான். சமூகம், நாடு முதலிய பெரிய விஷயங்களைப்பற்றிச் சிந்தித்து, எவ்வளவோ உண்மைகளைப் புரிந்து கொண்டான்.

எண்ணங்களில் வாழ்வதும், சிந்தனையில் மூழ்கிக் கிடப்பதும் அறிவுக்கு லாபம் பெற்றுத் தரக்கூடும். ஆனுல் அன்ருடத் தேவைகளுக்கு அவற்றினுல் எவ்வித மான பயனும் கிட்டாது. காந்திக்கும் இவ் வுண்மை உறைத்தது. அவன் தன் தேவைகளைச் சுருக்கிக் கொண்டான். உல்லாசப் பொழுது போக்குகள், கேளிக்கைகளை அவன் மனம் நாடவில்லை, தோற்றத்திலும் உடைகளிலும் அவன் எளிமையைத்தான் மேற்கொண்டிருந்தான். எனினும், உணவுக்கும் அத்தியாவசியத் தேவைகளுக்கும் ஈடுகட்ட குறைந்தபட்ச வருமானமாவது வந்து கொண்டிருக்க வேண்டும் அல்லவா?

கதர்த் துணி விற்பது, பத்திரிகைகளுக்கு ஏஜன்சி எடுத்து விற்பனை செய்வது, சுதேசிச் சாமான்களை வரவழைத்து சிறு வியாபாரம் செய்வது போன்ற சிறு அலு

வல்கள் மூலம் அவனுக்கு ஏதோ கொஞ்சம் கிடைத்து வந்தது. சில பையன்களுக்கு, ''ட்யூஷன்'' கற்றுக்கொடுப்பதன் மூலமும் அவன் சிறு வருவாய்க்கு ஏற்பாடு செய்து கொண்டான். டைப் அடிக்கும் இயந்திரம் ஒன்று வாங்க வேண்டும். அதன் மூலம் பிழைப்புக்கு வழி ஏற்படும்'' என்று அவன் ஆசை வளர்த்து வந்தான். ஆனால் அதை வாங்குவதற்குத் தேவையான பணத்துக்கு எங்கே போவது? அது பெரும் பிரச்னை, அவனைப் பொறுத்த மட்டில்.

இப்படி, தனி மனிதர் ஒவ்வொருவருக்கும் சுமையான பிரச்னைகள் இருந்து வந்தன. வாழ்க்கை வெயிலினால் அவர்கள் கருக்கப்பட்ட போதிலும், அவர்கள் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த தேச பக்தக் கனலையும் அதனால் மூட்டப்பெற்ற விடுதலை ஆர்வத் தீயையும், தங்களையே தகிக்கும் பெரு நெருப்பாக அவர்கள் ஒருபோது கூட எண்ணவில்லை.

''இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறை பட்டாலும், பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுந் திழிவுற்றாலும், விதந்தரு கோடி இன்னல் விளைந்தென்னை அழித்திட்டாலும், சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறந்திலேனே!'' என்ற கவிக்குரல் உண்மை தேசபக்தன் ஒவ்வொருவனின் இதய ஒலியே ஆகும்.

தேச பக்தியையும் சுதந்திர ஆர்வத்தையும் வெறும் பாஷன் பண்புகளாகவும், புகழுக்கு வழி செய்து தரும் மந்திரங்களாகவும் மதித்தவர்கள் மெதுவாகத் தலை தூக்கலானார்கள். பிழைப்புக்கு வழி செய்யும் தந்திர உபாயமாகவும் இவற்றை வரித்துக் கொண்டவர்களும் சிறிது சிறிதாகத் தங்கள் சுய உருவைக் காட்டத் தொடங்கினார்கள். ஆரம்ப காலத்தில் ஒரு வேகத்தோடும் உற்சாகத்தோடும் தேசியப் பணியில் மும்முரமாக முனைந்தவர்கள், சொந்தப் பிரச்னைகளினாலும் தேவைகளாலும் அலைக்கழிக்கப் பெற்று, சந்தர்ப்பவாதிகளாக மாறி நின்றார்கள்.

காலம் மனிதர்களின் போக்கிலே நிகழ்த்தி வந்த சித்து விளையாட்டுக்களை காந்திமதிநாதன் கவனிக்கத்

தவறவில்லை. சில சமயம் சிலருடைய போக்கு ஆச்சரியம் அளித்தது அவனுக்கு. சிலரது மாறுதல் அதிர்ச்சி தந்தது. சிலருடைய சொல்லும் செயலும் நல்ல வேடிக்கைகளாகப் படுவதும் உண்டு.

'மேடை முதலாளி' பிறவிப் பெருமாள் தேச பக்தியைத் தனது வியாபார வளர்ச்சிக்குத் துணைபுரியக் கூடிய விளம்பரச் சாதனமாக மாற்றிக்கொண்டார். அதை உணர்ந்த காந்தி, 'அவர் ஆற்றலுக்கு அது ஏற்றதே!' என்றுதான் எண்ணினான். அதை அதிசய மாகக் கருதவில்லை.

ஆனால் சொக்குக் கவிராயரின் போக்கு அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. மறியல் நடைபெற்ற காலத் திலும் அதன் பின்னரும் உணர்ச்சிகரமான தேச பக்திப் பாடல்கள் பாடி தொண்டர்களுக்கும் பிறருக்கும் உற் சாகம் ஊட்டி வந்த கவிராயரின் சேவையை காந்தி பெரி தும் மதித்துப் பாராட்டினான். கோர்ட்டிலேகூட தேச பக்திப் பாட்டை முழக்கிய அவருடைய தீரத்தை வியந்து போற்றாதவர்தான் யார்? அதற்காக சிறைத் தண்டனை ஏற்று நெஞ்சு நிமிர்ந்து நடந்த அவருடைய வீரமும் பெருமையும் திருநகர் வட்டாரத்தினர் மனசில் கவிராயரை ஒரு ''ஹீரோ'' ஆக்கியிருந்தது.

ஆயினும், சிறைவாசம் முடிந்து வெளியே வந்த சொக்கையா தன் ஊர்வாசிகளை வெறுக்கத்தான் வேண் டும் என்று எண்ணினார். அவருடைய அந்த மனோ பாவத்துக்கு முக்கியமான காரணங்களும் இருந்தன.

சிறைத் தண்டனை முடிந்து ஊர் திரும்பிய கவிராயர் என்னென்னவோ எதிர்பார்த்தார். ரயிலடியில் அவரை வரவேற்க மாலையுடன் பலர் காத்து நிற்பார்கள், ஆர வாரத்தோடு ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள் என்று நினைத்திருந்தார். ஆனால் அப்படி எதுவும் நிகழ வில்லை. அவரைப் பெரிய வீரராகப் போற்றி, காணிக்கை கள் செலுத்துவோரும் அதிகம் பேர் இல்லை. சில தொண்டர்கள் அவருடைய அனுபவங்களை விசாரித்தார் கள். ''உட்கார்ந்து குடியுமேன்!'' என்று ஒன்றிரு தடவைகள் உப

சரித்தார்கள். அவர்களால் அவ்வளவுதான் செய்ய முடியும்.

கவிராயர் கடைவீதி வழியாக நடந்து போனால், கடைக்காரர்கள் அவர் பெருமையை உணர்ந்து, அன்போடு அழைத்து, காப்பி சப்ளை செய்து வெற்றிலை பாக்குத் தந்து கௌரவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஒன்றிரண்டு தினங்கள் சிலர் "என்ன கவிராயரே, சௌக்கியமா?" என்று கேட்டார்கள். பிறகு வாய் உபசாரத்தையும் நிறுத்தி விட்டார்கள்.

அவர் திருநகரின் பெரிய மனிதர்களையும் பிரசங்கிகளையும் இயக்க வீரர்களையும் சந்தித்தார். 'மேடை முதலாளி' போன்றவர்கள் "ஊம். வந்திட்டியா? பேஷ்!' என்று உற்சாகம் இல்லாமல் சொன்னார்களே தவிர, கவிராயரின் தனித்துவம் எதையும் அங்கீகரித்து வியந்து போற்றவில்லை. "இனி கவிராயர் காளமேகமாய் பொழிந்து தள்ளுவார். பொதுக்கூட்டங்களில் பாட்டுகளுக்குக் குறைவு இருக்காது" என்று பலரும் குறிப்பிட்டார்கள்.

இந்த விதமான வாய் வார்த்தைகள் சொக்கையாவின் மனக் குறையைத் தணிக்கவில்லை. அவ்வப்போது அவர்கள் ஐந்தோ பத்தோ பணமாகக் கொடுத்தால், நூறு இருநூறு என்று வசூல் செய்து அவருக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தால் அவருடைய வாழ்க்கைப் பிரச்னையின் கடுமை குறைந்திருக்கும். அவ்வித உதவி எதுவும் அவருக்குக் கிட்டவில்லை. அவருடைய சொந்தச் செலவுகளுக்கும் காசு கிடைக்கவில்லை. வீட்டில் அம்மாவின் தொணதொணப்பை ஓரளவுக்காவது குறைப்பதற்கு எப்பொழுதாவது சில்லறைகள் கொடுத்து உதவுவதற்கும் வசதி ஏற்படவில்லை.

இதனால் எல்லாம் கவிராயருக்கு திருநகர் மக்கள் மீதும், மனித சமூகத்தின்மீதும், 'தரித்திரம் பிடித்த' இந்த நாட்டின் மேலும் வெறுப்பும் கசப்பும் ஏற்பட்டு வளர்ந்தன. அவற்றை வெளியிடவும் அவர் தயங்கவில்லை. பழையபடி பால்குடம், பீடி விளம்பரம், அமெச்சூர் நாடகங்கள் முதலியவற்றுக்குப் பாட்டுகள்

எழுதிக் கொடுத்துப் பணம் பெறுவதில் அவர் சிரத்தை காட்டினார். நாட்கள் 'ஒரு தினுசாகக்' கழிந்தன.

நெருக்கடி தீராத நிலையிலே, அவருக்குத் திடீரென்று ஒரு வழி தோன்றியது. வாழ்க்கையின் நெருக்கடிகளிலும், வறுமைப் பிடியிலும்,வேலையில்லாத் திண்டாட்டத்திலும் சிக்கித் திணறிய மிகப் பலருக்கும் அந்த வழி, நல்ல தருணத்தில் கை கொடுக்கும் உபாயமாக உதவியது. 'பட்டாளத்தில் சேர்ந்துவிடும்' செயல்தான் அது.

மகாயுத்தம் பிறந்து, வளர்ந்து கொண்டிருந்தது. அதனால் இராணுவத்துக்கு அதிகம் அதிகமாக ஆட்கள் தேவைப்பட்டனர். 'நான் தயார்' 'நான் வாறேன்' என்று வந்தவர்களுக்கெல்லாம் வேலை கிடைத்தது. கவிராயரும் அவர்களில் ஒருவராய்க் கலந்து, திருநகரை விட்டு மறைந்து போனார்.

காலத்தின் திருவிளையாடலையும் அது மனிதர்களிடம் நிகழ்த்துகிற சித்துக்களையும் பார்த்து காந்திமதிநாதன் வியப்படைந்தான். 'வேடிக்கை மனிதர்கள் என்பது சரிதான்!' என்றே அவன் மனம் கூறிக் கொண்டிருந்தது.

## 20. கால வேகம்

காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது, மனிதர்கள் வாழ்க்கையிலும், நாடுகளின் வரலாற்றிலும் எத்தனை எத்தனையோ மாறுதல்களைப் புகுத்தியவாறு முன்னேறிச் செல்கிறது அது.

காலத்தைக் கிழவன் என்றும், தேர் என்றும், சக்கரம் என்றும், இயந்திரம் என்றும் கற்பித்துப் பேசப்படுகிறது. காலக் கிழவன் வீச்சரிவாள் கொண்டு கண் மூடித்தனமாக அறுவடை செய்து, அழிப்பிலே ஆனந்தம் கண்டு முடிவிலா யாத்திரை செய்கிறான் என்பார்கள். காலத்தேர் தன் வழியில் எதிர்ப்பட்டு, சின்னாபின்னப் படுகிறவற்றை சட்டை செய்யாமல் தனக்குரிய கதியில் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது என்று சொல்வார்கள். கண்ணற்ற,கருத்து எதுவும் அற்ற, உணர்வற்ற

உயிருமற்ற பயங்கரமான இயந்திரம் அசுர வேகத்திலே ஆக்கியும் அழித்தும், சிதைத்தும், உருக்குலைத்தும், புதியன பிறப்பித்தும்,ஏதோ ஒரு நியதியின்படி இயங்கிக் கொண்டிருக்கிறது என்றும் கூறுவர்.

காலத்தை, கன்னி என்றும் தேவன் எனவும் உருவகப் படுத்தி மகிழ்ந்து போவோரும் உண்டு.

உருவகங்களின் பொருத்தம் எப்படியும் போகட்டும். நாம் புரிந்து கொள்ளக் கூடிய உண்மை, காலம் மகத்தான வலிமை உடைய மாபெரும் சக்தி; அது ஆதி அந்தம் அற்றது; அது எல்லோருடைய வாழ்விலும் கண் மூடித்தனமாகத் தன் சக்தியை நிலைநாட்டி வருகிறது. அது மட்டுமன்று. சிறிய காரியம் ஆயினும், பென்னம் பெரிய சோதனைகள் ஆயினும் சரியே. மனித முயற்சிகளும், ஆற்றலும், உழைப்பும், திட்டங்களும் வெற்றி பெறுவதும், பெருமை சீர்கெட்டுப் போவதும் காலத்தின் சக்தியைப் பொறுத்தே அமைகின்றன.

காலத்தின் சக்தி தனிமனித வாழ்விலும், சமூகத்தின் நலத்திலும், நாடுகளின் வளர்ச்சி தேய்வுகளிலும், உலகத்தின் வரலாற்றிலும், உயிர்க் குலத்தின் இயக்கங்களிலும் சதா தனது பாதிப்புகளைப் பதித்தவாறே ஓடுகிறது. இந்தச் சக்தியின் இயக்கத்தினால் சாம்ராஜ்யங்கள் சரிகின்றன; புதிய அரசுகள் மலர்கின்றன. செல்வர்கள் தரித்திரர்கள் ஆகிறார்கள்; பொறுக்கிகளாய்த் திரிந்தவர்கள் பெரும் புகழுக்கும் பெருநிதிக்கும் அதிபர்கள் ஆகிவிடுகிறார்கள். மாண்புக்கும் மதிப்புக்கும் உரியதாகித் திகழ்ந்த சமூகங்கள் பழிப்புக்கும் பரிகாசத்துக்கும் இலக்காகின்றன. தாழ்வுற்றுச் சீரழிந்து கிடந்த சமூகங்கள் செல்வச் சிறப்பும் அந்தஸ்து உயர்வும் பெறுவதும் சாத்தியமாகிறது.

கால சக்தியின் தூண்டுதல் காரணமாக, நடக்க முடியாது என எண்ணப்படுகிற செயல்கள் பல வெகு சுலபமாக நிகழ்ந்து விடுகின்றன. நடவாது, நடக்கக்கூடாது என்று கருதப்படுகிற நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவாறு வேகம் வேகமாக நடைபெற்று முடிகின்றன.

விரும்பக் கூடிய விளைவுகளும், வரவேற்கத்தகாத நிகழ்ச்சிகளும் தாமாகவே தோன்றுகின்றன.

பெரிய இயந்திரத்தின் சிறு சிறு சகடைகள், ஒவ்வொன்ருய் சுழலத் தொடங்கி, பெரிய சக்கரங்களைச் சுற்றச் செய்து, எல்லாம் சேர்ந்து சுழன்று திட்டமிடப் பெறும் உற்பத்தி விளைவுகளுக்கு வழி செய்வது போலவே ஒவ்வொரு பகுதியில் நிகழ்ச்சிகள் வெடித்து, எங்கும் சம்பவக் கோவைகள் தொடர்ந்து உலகின் முக்கிய மாற்றங்கள் பிறந்து விடுகின்றன. இவற்றுக் கெல்லாம் 'வேளையும் பொழுதும்' முக்கியமான ஒரு காரணமாக அமையும்.

வெறி பிடித்த ஹிட்லரின் ஆசையும் கனவும் யுத்தத்தை விதைத்து வளர்த்தது. வல்லரசுகள் பலப் பரிசோதனையில் ஈடுபட்டன. உலக நாடுகளின் வரலாறுகள் காலக் கரத்திஞல் மாற்றி எழுதப்பட்டுக் கொண்டிருந்தன. பாரதமும் கால சக்தியின் கவனிப்புக்கு இலக்காயிற்று.

விடுதலைக்காகப் போராடி வந்த தேசிய இயக்கத்தினர் ஆட்சிப் பொறுப்பில் அங்கம் வகித்தார்கள். பிறகு அதை உதறி எறிந்தார்கள். சிறை வாசம் பலருக்குக் கிட்டியது. அந்நியரின் ஆட்சியில் அடிமைப் பட்டுக் கிடக்கும் நாடு முழுவதுமே ஒரு சிறைக்கூடம் தான் என்று கருதிய காந்திஜீ அந்நியர் ஆட்சிப் பொறுப்பை விட்டுவிட்டு, இந்திய நாட்டை விட்டே வெளியேற வேண்டியது அவசியம் என்று அறிவித்தார். 'வெள்ளையனே வெளியேறு!' என்ற மகாத்மாவின் கட்டளை நாட்டிலே புதிய வேகமும் விழிப்பும் ஏற்படுத்தி பலத்த கிளர்ச்சிகளுக்கு வகை செய்தது.

எதிர்ப்பைக் காட்டியவர்களில் பலவிதமான மனப் பண்பு கொண்டவர்களும் இருந்தார்கள் என்பதை ரயில்வே நிலையங்கள், போலீஸ் நிலையங்கள், தபால் பெட்டிகள் முதலியவைகளைத் தீயிட்டுப் பொசுக்குதல் நாசப்படுத்துதல் போன்ற செயல்கள் எடுத்துக்காட்டின.

வேருெரு புறமிருந்து, 'ஜெய் ஹிந்த்' என்ற புதிய கோஷம் எழுந்தது. சுபாஷ் சந்திரபோஸ் 'நேதாஜி' என்ற புதிய கௌரவமும் கவனிப்பும் பெற்றுக் கொண்டிருந்தார். அவருடைய இ. தே. ரா. (இந்திய தேசிய ராணுவம்) செயல் புரிய ஆரம்பித்திருந்தது.

யுத்தம் பயங்கரங்களை விதைத்தது. மக்களிடையே, நாடுகள் மத்தியில் பயத்தையும் மாறுதல்களையும் ஏற்படுத்தியது.

இந்தியாவைக் கட்டிக் காப்பாற்றுவதைத் தங்கள் கடமையாக ஏற்றுக் கொண்டு நற்பணி புரிவதாகப் பெயர் பண்ணி லாபம் பெற்று வந்த பிரிட்டிஷாரின் மனசிலும் மாற்றம் காணப்பட்டது. அரசியல் சலுகைகள் வழங்கினுர்கள்.

காலம் மேலும் மேலும் தன் சக்தியைப் பலவழிகளிலும் நிரூபித்தவாறு முன்னேறியது. எங்கும் எவ்வளவோ நிகழ்ச்சிகள், எத்தனை எத்தனையோ மாறுதல்கள்!

இந்தியா சுதந்தரம் பெறுவதற்கும் காலம் துணை புரிந்தது.

## 21. பெரும் இழப்பு

"எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு; எல்லோருக்கும் சமம் என்பது உறுதியாச்சு!" என்று கவி பலப்பல வருடங்களுக்கு முன்னரே கூறிய நிலைமை நம் காலத்தில் ஏற்பட்டு விட்டது என்று நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். 'விடுதலை விடுதலை, விடுதலை!' என்று ஆனந்தக் களிப்போடு கொண்டாடினுர்கள். கண்ணீரும் செந்நீரும் சிந்தி, தடியடியும் சிறைவாசமும் கொடிய பல இன்னல்களும் அனுபவித்து சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர்கள் என்ற முறையில் தேசிய இயக்கத்தினரின் உற்சாகமும் உவகையும் அளவுக்கு அதிகமாகவே பொங்கிப் பெருகின.

ஆயினும், ஆனந்தம் பூரண நிலை எய்தவிடாமல் தடுக்கும் விதத்திலே நாட்டின் சில பகுதிகளில் வேண்டத்தகாத விளைவுகள் தலையெடுத்திருந்தன. மதவெறியும் இனவெறியும் கோரக் கூத்துப் பயின்றன. வெறியர்கள்—குண்டர்களின் மிருகத்தனத்துக்கும் கயமைக் குணங்களுக்கும் அப்பாவி மக்கள் பலியாயினர். ரத்த வெள்ளம பாரதப் புனித நாட்டைக் களங்கப்படுத்திக் கொண்டிருந்தது.

மகாத்மா காந்தி ஆத்ம வேதனை அனுபவித்தார். கொலை வெறி தாண்டவமாடிய இடங்களுக்கு நேரில் சென்று கருணை காட்டுவதில் ஈடுபட்டார்.

ஆட்சி உரிமையை மக்களிடம் தர முன் வந்த அந்நியர்கள் விதைத்துவிட்டுச் சென்ற அரசியல் அக்கிரமம் இது என்று பலரும் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அரசியலில் மதத்தைப் புகுத்தி, மக்களின் உணர்ச்சியைத் தூண்டி விட்டு, லாபம் பெற முயன்றதன் விளைவு என்றார்கள் அநேகர்.

அரசியலில் மகாத்மா காந்தி மதத்தைக் கலந்தபோதிலும், மக்களின் உள்ளத்தைப் பண்படுத்துவதற்காக, அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக, நாட்டின் பெருமையை ஒளியுறுத்துவதற்காக, லட்சிய தாகத்தோடு வழி வகுத்து வந்தார். அறநெறிகளிலும் ஆன்மீக வழிகளிலும் பற்றுதலும் நம்பிக்கையும் கொண்ட உத்தமர் அவர்.

ஆனால், தேசிய இயக்கத்தோடு போட்டியிடக் கிளம்பி, நாட்டில் பங்கு கோருவதற்காக, மதத்தைப் பலம் பொருந்திய துருப்பாக உபயோகிக்கத் துணிந்த காயிதே ஆலம் ஜின்னா ஆன்மீக உயர்வையோ, அறநெறிகளையோ லட்சியமாகக் கொள்ளவில்லை. மக்களின் மதப் பற்றையும், ஜாதி வெறியையும் போற்றி வளர்ப்பதற்கே வழிகள் செய்தார் அவர். அதன் அறுவடை பயங்கரமாய், கோரமாய், இந்தியாவின் பல பகுதிகளிலும் நிகழ்ந்து கொண்டிருந்தது.

திருநகர்வாசிகள் இந்த விதமான குறைகளாலும் கொந்தளிப்புகளினாலும் அலைகழிக்கப் படவில்லை. அவற்றின் பாதிக்கப்பட முடியாத தொலைதூரத்தில் இருந்தார்கள். அவர்கள், என்றாலும், அலை அலையாய் வந்து கொண்டிருந்த துயரச் சேதிகளையும் அபிப்பிராயங்களையும் வளர்க்காமல் இல்லை.

காந்திமதிநாதன் அறிவுத் தெளிவு பெறமுடியாமல் உணர்ச்சிக் குழப்பத்திலும் சிந்தனைக் கலக்கத்திலும் சிக்கித் திண்டாடினான். நாடு சுதந்தரம் பெறுவதற்கு மாபெரும் விலை கொடுக்க நேரிடலாம்;சரித்திரம் சான்று காட்டும் சுவடுகள் எல்லாம் ரத்தக் கறை படிந்தனவாகவே மிளிர்கின்றன. இந்தியாவைப் பொறுத்த மட்டில், அறப்போர் வழியிலேயே சுதந்திரம் கிடைத்து விட்டது. அதற்குப் பிறகு ஏன் ரத்தக் களறியும் உயிர்ப் பலியும்? அவன் உள்ளம் இந்த ரீதியில் எண்ண அலைகளை எழுப்பிக் கொண்டிருந்தது.

எதற்கும் ஒரு பக்குவ நிலை வேண்டும் என்று சொல்லப் படுவது உண்டு. அதன்படி பார்த்தால், இந்நாட்டின் மக்கள்சுதந்தரத்தை ஜனநாயக உரிமையைப் பெற்று அனுபவித்து சுகம் பெறுவதற்குத் தேவையான பக்குவத்தை இன்னும் அடையவில்லை என்றுதான் கொள்ள வேண்டுமோ? அவன் அறிவில் இப்படி ஒரு பொறி மின்னிக் கொண்டே இருந்தது.

நாட்டில், கால ஓட்டம் கொண்டு, சேர்த்திருந்த பலவிதமான அரசியல் தத்துவப் பிரசாரங்களும், கட்சிக் கொள்கைகளும் அவன் உள்ளத்திலும் சலனம் ஏற்படுத்தி வந்தன இளம் உள்ளங்களைக் கவர்ச்சிக்கும் மோகன சுலோகங்களை ஒலி பரப்பி மக்களிடையே செல்வாக்குப் பெற முயன்ற கட்சிகள் கவனிப்பும் ஆதரவும் பெற்று வளர முடிவதையும் காந்திமதிநாதன் சிந்திக்காமல் இல்லை.

"மதம் மக்களுக்கு அபின்' என்று அறிவுப் பொறி சிதறிய அரசியல் மேதையின் எண்ணங்களும் தத்துவமும் இந் நாட்டினரிடையிலும் வேகமான ஆதரவைப் பெற்று வந்ததாகவே தோன்றியது. நாத்திகக் கருத்துக்

களும் பலரால் பரப்பப்பெற்றன. பக்தியையும் மத நம்பிக்கைகளையும் போற்றி வளர்க்கும் தமிழகம் இந்த ரகமான எண்ணங்களுக்கும் வரவேற்பு அளித்தது; அவற்றினுல் வசீகரிக்கப்பட்டது. நாட்டு மக்களின் போக்கை திட்டவட்டமாகப் புரிந்து கொள்ள இயலவில்லையே என்ற குழப்பம் காந்திமதியை அமைதியற்றவனுகத் திரியச் செய்தது.

மதம் உள்ளத்தைப் பண்படுத்தி, மனிதர்களை நல்லவர்களாக வாழ வழிகாட்டி, அவர்களது ஆத்ம நலனுக்கு வகை செய்யும் என்று பொதுவாக நம்பப்பட்டாலும், கால வேகத்தில் அது அவ்வாறு செயல்படும் திறனை இழந்து விட்டதோ என்று சாந்தி எண்ணினுன். அறியாமையையும், குருட்டுப் பக்தியையும், வெறியையும் வளர்க்கும் சாதனமாக அது மாறிவிட்டதோடு, அரசியல் லாப நோக்குடன் சுய நலமிகளாலும் திறமை மிகுந்த தந்திரிகளாலும் வலுவான கருவியாகப் பயன்படுத்தக் கூடிய ஒரு நிலைமையையும் மதம் அடைந்துள்ளது. இந்த உண்மையும் அவனுக்கு வேதனை தந்தது.

வேதனைகளின் மேல் வேதனை சுமத்துவதாய், துயரங்களின் சுமையை மேலும் அதிகரிப்பதாய், ஆருத்துயர்களோடு ஆற்றமுடியாப் பெருந்துயராய் எதிர்பாரத விதத்தில் ஒரு நாள் நிகழ்ந்தது யாருமே எதிர்பார்க்க முடியாத அந்த நிகழ்ச்சி.

மாலை மயங்கிவரும் நேரம். காந்திமதிநாதன் சில நண்பர்களோடு எங்கோ போய்விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தான். அதனுல் அவன் ரேடியோ ஒலி பரப்பிய துக்கச் செய்தியைக் கேட்கவில்லை. திருநகரின் கடை வீதிகள் வழியே நடந்த அவனை அங்கு நிலவிய பரபரப்பும், சோகச் சூழ்நிலையும், அச்சம் கலந்த தன்மையும் திகைக்க வைத்தன. செய்தியைக் கேட்டவர்கள் முகம் களையிழந்து காணப்பட்டது. எல்லோரும் மாபெரும் இழப்புக்கு ஆளாகி விட்டவர்களாகவே தோன்றினுர்கள்.

ஆமாம், மாபெரும் இழப்புதான்; மகாத்மா காந்திஜீ சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச் செய்தியைக் காந்திமதிநாதனால் நம்ப முடிய வில்லை, முதலில். ஆனால் நம்பாமலே இருக்க விடவில்லை சூழ்நிலைச் சோகமும் பரபரப்பும்.

மகாத்மா மதவெறியன் ஒருவனால் சுட்டுக்கொல்லப் பட்டார் என்ற சேதி வந்தவுடன் அதன் எதிரொலியாக நெடுகிலும் கலவரம் பரவி விடுமோ என்று அஞ்சியவர் கள், அவசரம் அவசரமாகக் கறுப்புக் கொடிகளை உயர்த் திக் கொண்டிருந்தார்கள். "இப்படி நேர்ந்து விட்டதே? என்ன நடக்குமோ என்று" பீதியுடன் பேச்சுப் பரப்பி னார்கள் பலர். சுதந்திரம் பெறுவதற்கு வழி நடத்திச் சென்ற "தேசப் பிதா", நாடு விடுதலை பெற்று ஓராண்டு நிறையும் முன்னரே மறைந்து விட்டார் - அகற்றப்பட்டு விட்டார்! இனி நாட்டின் நிலை என்ன ஆகும்? இவ் வகைக் குழப்பம் எங்கும் நிலவியது.

இந்து மதத்தினன்தான் மகாத்மாவின் மரணத்துக் குக் காரணமாக இருந்தான் என்ற உண்மை காந்திமதி நாதனுக்கு மதத்தின்மீது ஏற்பட்டு வந்த வெறுப்பை அதிகமாக்கியது.

காந்திஜீயின் மரணச் செய்தியைக் கேள்விப்பட்டதும் பேரறிஞர் பெர்னாட்ஷா, "நல்லவனாக வாழ்வது எவ் வளவு ஆபத்தான விஷயம் என்று புரிகிறது" என அபிப் பிராயம் அறிவித்ததாகப் பத்திரிகைகளில் பிரசுரமா யிருந்தது. "நல்லவர்களுக்குக் காலம் இல்லை!" என்று பொதுவாக ஜனங்கள் குறிப்பிடுவதையும் காந்திமதி நாதன் அடிக்கடி கேள்விப்பட்டிருந்தான். "நல்லது நல்லவனுக்கு நன்மை பயக்காது போலும்! யுகதர்மம் மாறி வருவதாகத்தான் எண்ண வேண்டியிருக்கிறது" என்று அவன் வேதனையோடு நினைத்துக் கொண்டான்.

பின்னர் அடிக்கடி இந்த எண்ணத்தை நினைவில் நிறுத்தும்படி அனுபவங்கள் எதிர்பட்டன அவனுக்கு.

# 22. வாழ்வுப் பாதை

காந்திமதிநாதன் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 'வருங்காலம் நம்முடையது. நாம் வாழவே பிறந்தோம்' என்று அவன் உற்சாகத்துடனும், உறுதியோடும் அடிக்கடி பேசியவன் தான். என்றாலும், அவனுடைய 'வருங்காலம்' தெளிவற்றதாய், குழப்பம் படிந்ததாய், அச்சம் தரக் கூடியதாய், இருண்டே காணப்பட்டது.

நாடு சுதந்திரம் பெற்று விட்டது; 'மக்களின் அரசாங்கம்' ஆட்சிப் பொறுப்பை ஏற்றுயிற்று. வளமும் நலமும் காண்பதற்கான திட்டங்கள் பற்றிப் பிரசாரங்களும் நடைபெறலாயின. இனி அவரவர் சொந்தப் பிரச்னைகள் குறித்துச் சிந்தனை செய்ய வேண்டியதுதான் என்று காந்தி கருதினான்.

தொண்டர் நாதனும் அவனிடம் அந்த ரீதியில் ஒரு நாள் பேச்சு வளர்த்தார். "என்ன காந்தி, ஒருவாறு லட்சிய சித்தி பெற்றுயிற்று. இனியும் நீ இப்படி இருந்து விட முடியுமா என்ன? கல்யாணம், குடும்பம் என்று ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டாமா?" என்று அவர் விசாரித்தார்.

அவன் சிரித்தான். "பொருளாதார சுதந்தரம் வேண்டாமா?" என்றான்.

காந்தி நாட்டின் பொருளாதாரத்தையும், பொதுவுடைமையையும் கருத்தில் கொண்டே பேசுவதாக நாதன் எண்ணிவிட்டார். "அது இப்போது எங்கே ஏற்படப் போகிறது? நாட்டுக்கு தற்சமயம் கிடைத்துள்ள சுதந்தரத்தை ஆதாரமாகக் கொண்டு, சுபிட்சத்திற்கான வழி வகைகள் காண்பதில் தான் தலைவர்கள் அக்கறை காட்டி வருகிறார்களே" என்று சொன்னார்.

"நான் பெரிய பிரச்னைகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை. எனது சொந்தப் பொருளாதார நிலையையே சொன்னேன். எனக்குப் பொளாதாரப் பலம் இல்லை.. என்னுடைய சொந்தத் தேவைகளுக்குப் போதுமான

அளவு பணம் கிடைக்க நான் வழி செய்து கொள்ள வில்லை. செய்ய முடியும் என்றும் தோன்றவில்லை. ஏன்பாடே ததிங்கிண தோம் போடுகையில், கூட ஒரு நபரையும் சேர்த்துக் கொண்டு, குடும்பம் என்று பொறுப்புகளையும் தொல்லைகளையும் அதிகப் படுத்திக் கொள்வானேன்? அதில் என்ன சுகம் கிடைத்து விடும்?'' என்று காந்தி சொன்னான்.

''அதில் என்ன சுகமும் சிறப்பும் உண்டு என்பது அனுபவித்துப் பார்த்தால்தான் புரியும். வாழ்க்கைச் சுமையைத் தனியாகத் தாங்கிக் கொண்டு, வறண்ட தன்மையில் காலம் கழிப்பதைவிட, ஒரு பெண்ணைத் துணை சேர்த்துக் கொண்டு நெருக்கடிகளைச் சமாளிப்பதில் சுவாரஸ்யமும் உற்சாகமும் ஏற்படும். அப்போது கஷ்டங்களும் சிரமங்களும் பெரிய தொல்லைகளாகத் தோன்றாது'' என்று தொண்டர் தெரிவித்தார்.

இந்த விஷயமாக மேலும் பேசவோ, விவாதத்தில் ஈடுபடவோ காந்தி விரும்பவில்லை. அதனால் 'என் மன நிலைக்கு அதெல்லாம் ஒத்து வராது. இப்படி வாழ்க்கை நடத்துவதே எனக்குப் பிடித்திருக்கிறது' என்று பேச்சை முடிக்க முயன்றான்.

ஆனால் நாதன் விடவில்லை. ''இதை வாழ்க்கை என்று சொல்கிறாய்'' நீ நாளோட்டி வருகிற போக்கு ஒரு வாழ்க்கை ஆகி விடாது. நீ இப்படியே இருந்து விடுவது உனக்கு சௌகரியமாகவும் நல்லதாகவும் படலாம். ஆனால் உனக்கே போகப் போக வாழ்வில் பற்றுதல் குறைந்து விடும். விரக்தி ஏற்படும். எல்லாமே சாரமற்றதாகத் தோன்றும். மேலும், கல்யாணம் செய்து கொள்ளாமல், குடும்பம் குழந்தை குட்டிகள் என்று எதுவுமில்லாமல் காலம் கழிக்கிறவனுக்கு சமூகத்தில் கௌரவமும் கவனிப்பும் கிட்டாது. அவனைப் பற்றி மற்றவர்கள் குறைவாகவும் மோசமாகவும்தான் மதிப்பிடுவார்கள்'' என்று அவர் பேசினார்.

''மற்றவர்கள் அபிப்ராயத்தைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? எனக்கு நல்லதாகப் படுவதை

நான் செய்வதில்தான் எனக்கு மகிழ்ச்சியும் மன அமைதியும் கிடைக்கும்'' என்று திடமாகத் தெரிவித்தான் காந்தி.

''உன்னுடைய இந்த மனோபாவம் உனக்கே நன்மை செய்யாது. போகப் போக நீயே இதை உணருவாய்'' என்று தொண்டர் எச்சரிக்கும் தொனியில் குறிப்பிட்டார்.

''சரி, அப்படி நெருக்கடி ஏற்படுகிற போது பார்த்துக் கொள்ளலாம். அதற்காக இப்பொழுதே கவலைப்படுவானேன்?'' என்று தட்டிக் கழித்தான் காந்தி.

தொண்டர்நாதன் மட்டுமல்ல; அவனை அறிந்தவர்கள் பலரும் அவனுக்கு இந்த விதத்திலேதான் நல்லுரை புகன்றார்கள். ''புதுமை, புரட்சி ஏதாவது செய்ய வேண்டும். திருமணம் மூலம் சமூக சேவை புரியலாமே என்று உனக்கு எண்ணம் இருந்தாலும் சொல்லு. சீர்திருத்தத் திருமணம், கலப்பு மணம் என்கிற வகைகளில் ஏதேனும் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யலாம். நல்ல பெண்ணைகப் பார்த்து, நாங்களே முன்னின்று நடத்துகிறோம்'' என்று கூட ஒரு சிலர் சிரத்தை காட்டினார்கள்.

''காதல் கீதல் என்று எவளையாவது பார்த்து ஏக்கம் வளர்த்து, அவள் கிடைக்காமல் போனதால் ஒரே அடியாக மனம் கசந்து போனீரா?'' என்று கூட ஒருவர் கேட்டார்.

''நீங்கள் நினைக்கிறபடி எதுவுமே யில்லை. நான் எவளையும் காதலிக்க வில்லை. எந்த பெண்ணும் என் மீது காதல் கொண்டு விடவும் இல்லை. கல்யாணத்தில் புரட்சியோ, சீர்திருத்தமோ செய்ய வேண்டும் என்று நான் ஆசைப் படவுமில்லை. உண்மையைச் சொன்னால், எனது கல்யாணத்தைப் பற்றி நான் சிந்திக்கவே யில்லை. அது பற்றி சிந்தித்து முடிவு கட்டுவதற்கு அவசர அவசியம் எதுவும் இப்போது முளைத்து விடவுமில்லை'' என்று திரும்பத் திரும்பச் சொல்லி வந்தான் அவன்.

பலவிதமான புத்தகங்களைப் படிப்பதிலும், தனது எண்ணங்களுக்கு எழுத்து வடிவம் கொடுக்க முயற்சிப்

பதிலும் காந்திமதிநாதன் தீவிர ஆர்வம் காட்டி வந்தான். வேறு வேலை எதுவும் இல்லாது, இப்படிப் பொழுது போக்குவதில் உற்சாகம் காட்டும் மன நிலை வளர வளர, 'நாம் ஒரு சோம்பேறியாக மாறி விட்டோமோ?' என்ற உணர்வும் அவனுள் தலையெடுக்கலாயிற்று. என்ன செய்வது? ஒன்றும் புரியவில்லை அவனுக்கு.

அவனோடு படித்தவர்களில் ஒரு சிலரை அவன் அபூர்வமாக எப்பொழுதாவது சந்திக்க நேரிடும். அவர்கள் வாழ்க்கை பற்றியும், மற்றும் பலருடைய நிலை குறித்தும் அவன் அக்கறையோடு கேட்டறிய முயலுவான். சிலர் சர்க்கார் அலுவலகங்களில் குமாஸ்தாக்கள் ஆகியிருந்தார்கள். சிலர் டாக்டர் அல்லது என்ஜினியர்களுக்கும் தேவை அதிகம் ஏற்படும்; அதனால் தங்களுக்குப் பணம் நிறையக் கிடைக்கும் என்று கருதி,'மேல் படிப்பு' படிக்கப் போயிருந்தார்கள். சிலர், 'பிசினஸ்' செய்து கொண்டிருந்தார்கள். சொந்த வியாபாரம் என்றோ, தொழில் பிரதிநிதி என ஊர் ஊராகத் திரிந்தோ காலம் கழிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். அநேகமாக, அவனுக்குத் தெரிந்த பலருக்கும் கல்யாணமாகி விட்டது. சிலருக்கு இரண்டு மூன்று குழந்தைகள் கூட இருந்தன.

இவ் விவரங்களை எல்லாம் கேள்வியுறும்போது, அவன் தன்னை அவர்களோடு ஒப்பிட்டுச் சிந்தியாதிருக்க இயலவில்லை. அவர்கள் எல்லோரும் சமூக வாழ்க்கை சீராக இயங்குவதற்குத் துணை புரிகின்ற சராசரி மனிதர்கள்; அவர்கள் வாழுகிற முறைதான் ஒழுங்கானது என்றே அனைவரும் கருதினர். காந்திமதிநாதனும் எங்காவது குமாஸ்தாவாகவோ தொழில் துறைப் பணியாளராகவோ மாறியிருந்தால்—அல்லது 'மேல் படிப்புப் படிக்கிறேன்' என்று கவலையில்லாமல் காலத்தை ஓட்டும் நிலையிலிருந்தால்—அவன் ஒரு 'விசித்திரப் பிரகிருதி' என்று எண்ணவே இடமேற்பட்டிருக்காது மற்றவர்களுக்கு.

அவனைப் போல் அரசியல் தொண்டனாகவே பல வருஷங்களைக் கழித்துள்ளவர்கள், அவனோடு படித்தவர்களில் எவருமே இல்லை என்பது அவனுக்கு வியப்பாக

இருந்தது. 'மறியல்' நடந்த காலத்திலோ, அதற்குச் சில வருஷங்களுக்குப் பிறகோ, இளமைத் துடிப்புடனும் சந்தர்ப்ப வேகத்தினாலும் உந்தப்பட்டு அரசியலில் குதித்தவர்களில் சிலர் பிறகு சீக்கிரமே 'அறிவுத் தெளிவு, பெற்று விட்டதாகச் சொன்னார்கள்.'பணம் பண்ணுகிற' முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள் அவர்கள். உத்தியோகம், நிரந்தரமான மாத வருவாய், பெண்டாட்டி, பிள்ளைகள், உறவினர் ஊரார் வீட்டு விசேஷங்கள் என்ற வட்டத்திற்குள் அவர்களும் வளைய வளைய நீச்சலடித்து வந்தார்களே தவிர, நாடு, மனித குலம் என்ற விசால நோக்கு அவர்களில் ஒருவருக்குக்கூட இல்லாமல் போய் விட்டது. இதை உணர உணர காந்திக்கு இதய வேதனை அதிகரித்ததே தவிரக் குறையவில்லை.

அதுபோன்ற சமயங்களில் இவன் நண்பர் நடராசனைப்பற்றி எண்ணுவான். நடராஜன் தீவிரவாதியாக மாறித் திடீர் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதில் ஆர்வம் காட்டி வந்தவன் இப்போது எங்கே இருக்கிறானோ, என்ன செய்கிறானோ, என்று நினைத்தான் காந்தி. இடியும், மின்னலும், கர்ஜனையும் கொட்டி முழக்கக்கூடிய பத்திரிகை ஒன்று நடத்தப் போவதாகச் சொல்லிப் போனானே நடராஜன் அப்படி ஒரு பத்திரிகையை அவன் வெளியிட்டதாகவே தெரியவில்லையே என்ற எண்ணம் தானாகவே எழும் காந்தியின் உள்ளத்திலே. 'நண்பன் என்பவது ஒரு நாள் எதிர்பாராத நேரத்தில் வந்து நிற்பான். வராமலா போவான்? அவனையும் என்னைப்போல் உருப்படாதவன்...உருப்படத் தெரியாதவன் என்றுதான் மற்றவர்கள் மதிப்பிடுவார்கள்!' என்றும் அவன் எண்ணுவது உண்டு.

இந்த ரகமான எண்ண அலைகளினால் எற்றுண்டு, அவன் எவ்விதமான முடிவுக்கும் வர இயலாதவனாகத் தவித்துக் கொண்டிருந்த காலத்தில், ஒரு நாள் சந்தர்ப்பமே அவனுக்கு வழி வகுத்துக் காட்ட முன் வந்தது.

காந்திமதிநாதன் தனியாக வீதி வழியே போய்க் கொண்டிருந்தான். நல்ல வெயில் வேளை. அச்சமயம்

அவன் அருகே ஒரு கார் வந்து நின்றது. அவன் திடுக்கிட்டு, ஒதுங்கி, காரினுள் கவனித்தபோது ஆச்சர்யமடைய நேர்ந்தது. உயர்நிலைப் பள்ளியில் அவனோடு படிப்பை முடிக்காமலே, கல்யாணம் செய்துகொண்டு 'பெரிய இடத்து மாப்பிள்ளை'யாகப் போய் விட்ட—சுந்தரம் ஜம்மென்று வீற்றிருந்தான். "என்ன ஸார், என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டுக் கும்பிடு போட்டான்.

"தெரியாமல் என்ன!" என்று புன்முறுவலோடு, வணக்கம் தெரிவித்தான் காந்தி.

"இந்த வெயிலில் இப்படி எங்கே கிளம்பினீங்க? அடடா, வெயிலில் நிற்கிறீர்களே? காரில் ஏறுங்கள்!" என்று வற்புறுத்தினான்.

காந்தி மறுத்தும் பிரயோசனம் இல்லாது போயிற்று.

## 23. புதிய திருப்பம்

சுந்தரத்தின் வளர்ச்சி காந்திமதிநாதனுக்கு வியப்புத் தந்தது. 'இவன் ரொம்பப் பெரியவன் ஆகிவிட்டான். திடீர் பெரிய மனிதன்!' என்று அவனுடைய மனம் பேசியது.

பள்ளிப் பருவத்தில் சுந்தரம் சர்வசாதாரண நபராகத்தான் இருந்தான். மக்குப் பையன் என்று மற்றவர்கள் குறிப்பிடுவார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு வருஷம், மூன்று வருஷம் என்று தங்கியிருந்து மேலேறிய பெருமை அவனுக்கு உண்டு. ஆனால், ஆள் கொஞ்சம் மிடுக்காக இருப்பான். ஜோராக டிரஸ் செய்துகொண்டு, 'மாப்பிள்ளை மாதிரி' காட்சி அளித்து வந்தான். "என்னய்யா மாப்பிள்ளை! இந்த முறுக்கைப் படிப்பிலும் கொஞ்சம் காட்டக் கூடாதா?" என்று ஒரு உபாத்தியாயர் கிண்டல் செய்வது வழக்கம்.

அந்தக் காலத்தில் அவன் ஒல்லியாக இருந்தான். நல்ல உயரம். அந்த உயரத்துக்குப் போதுமான சதைப் பிடிப்பு உடம்பிலே இல்லாததனால் அவன் 'நெட்டா நெட்டா' என்று அகத்திக்கம்பு மாதிரி தோற்றம் பெற்றிருந்தான். அதனால் 'நெட்டைக் கொக்கு' என்றும், நெட்டிலிங்க மரம் என்றும் பலரும் அவனைக் கேலி செய்து திரிந்தார்கள்.

இப்போது சுந்தரத்தை யாரும் அவ்விதம் கேலி செய்ய முடியாது. அவன் உருவம் மாறியிருந்தது. உயரத்துக்குத் தகுந்த பருமன். நல்ல சதை பிடிப்பு. செல்வமும் வசதியான வாழ்வும் ஏற்றியிருந்த மினுமினுப்பு, எல்லாம் சேர்ந்து, காலத்தின் கை வண்ணத்தை எண்ணி வியக்கச் செய்தன.

அவன் பெரிய இடத்து மாப்பிள்ளை ஆகிவிட்டான். 'மாப்பிள்ளைப் படிப்பு' என்று உபாத்தியாயர் குறிப்பிட்டது பொய்த்துப் போகவில்லைதான்! அவனுடைய மாமனார் அந்த வட்டாரத்தில் செல்வாக்கானவர். பெரிய புள்ளி. அவர் பெயரால் அநேக லாரிகள் ஓடிக்கொண்டிருந்தன. இரண்டு ஊர்களில் பெரிய சினிமாத் தியேட்டர்களும் இருந்தன. எல்லாம் மாப்பிள்ளைக்குத்தான் சொந்தம்.

முன்பு சுந்தரத்தை 'அவன் இவன்' என்று குறிப்பிட்டவன்தான் காந்திமதிநாதன். 'நீ' என்றுதான் அவனிடம் உரையாடி வந்தான். ஆனால், இப்போது மனசில்கூட அப்படி நினைக்க முடியவில்லை. 'இவர்' என்று பன்மை மதிப்புக் கொடுத்தது அவன் உள்ளம். 'நீங்கள்' என்று கௌரவித்தது அவன் வாய். சுந்தரத்தின் உடல் வளர்ச்சியும் உருவமும் மாத்திரம் இதற்குக் காரணம் அல்ல; பணப் பெருமையும் பெரிய இடத்து மாப்பிள்ளை அந்தஸ்தும் முக்கிய காரணம் இல்லை. சுந்தரம் தேசியக் கட்சியில் செல்வாக்குப் பெற்ற நபர்கூட. "அடுத்த தேர்தலில் எம். எல். ஏ. ஆகிவிடுவார். இந்த வட்டாரத்தின் கட்சித் தலைமை இவர் கைக்கு வரப் போகிறது" என்ற பேச்சு, திருநகரில் அடிபட்டது. அது காந்திக்கும் தெரியும்.

இப்படி நாலுவகைகளிலும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய பெரிய ஆளாக மாறியிருந்தார் திருவாளர் சுந்தரம். அவர் காந்தியை மதித்தார்; அவனிடம் தோரணை எதுவும் காட்டவில்லை; அவன் சம்பந்தப்பட்ட மட்டில் அவர் பழைய சுந்தரமாகவே பழக முன் வந்தார் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

“ஸார், உங்களைப்பற்றி நான் அடிக்கடி கேள்விப் படுகிறேன். பலரும் உங்கள் பணிகளைக் குறித்து பெருமையாகவே பேசுகிறார்கள்” என்று சுந்தரம் சொன்னார்.

அந்தப் புகழ்ச்சிக்கு அவன் பதில் எதுவும் கூற வில்லை. அவர் தொடர்ந்து பேசினார்.

“ரொம்ப நாளாகவே எனக்கு ஒரு எண்ணம். உங்கள் உதவி தேவை. இப்பதான் விசேஷமான தொண்டுகள், சேவைகள் என்று உங்கள் காலத்தையும் கவனத்தையும் எடுத்துக் கொள்வதற்கு எதுவும் இல்லையே? எனக்கு உங்களைப் போல் திறமைசாலியான ஒருவர் செக்ரடரி யாக வேண்டும். கடிதப் போக்குவரத்துகளைக் கவனிக்க, பிரமுகர்களைச் சந்தித்து ஆங்கிலத்தில் உரையாட-இப்படி எவ்வளவோ; இல்லை?, அவற்றை எல்லாம் பொறுப்பேற்று நடத்தணும். நீங்கள் இதை ஏற்றுக் கொண்டால் எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சியாக இருக்கும். ஆரம்பத்தில், மாதம் நூறு ரூபாய் தந்து விடுகிறேன். அலவன்சு மாதிரி ஐம்பது ரூபாய் தரலாம். பிறகு அதிகப் படுத்த முடியும்” என்று சுந்தரம் சொன்னார்.

கார் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. காந்தி மதிநாதனுக்கு இந்த ஏற்பாடு பிடித்துத் தானிருந்தது. இப்பொழுதே சரி என்று சொல்லி விடலாமா என்ற எண்ணம் தலைநீட்டித் துடித்தது.

“என்னடா இவனிடம் வேலைக்குப் போவதா என்று நீங்கள் எண்ணக்கூடாது. நாம் நண்பர்களாகவே பழகுவோம்...” என்று சுந்தரம் சொல்லத் தொடங்கவே, காந்தி அவசர அவசரமாகக் குறுக்கிட்டான்.

சேச்சே, நான் அப்படி எல்லாம் நினைக்கவில்லை ..” என்று இழுத்தான்.

"இரண்டு மூன்று நாள் யோசனை பண்ணுங்க. அப்புறமாகச் சொன்னாலும் சரிதான்" என்றார் சுந்தரம்.

"நீங்கள் சொல்லுவது நல்ல ஏற்பாடு என்றே எனக்கும் படுது. எனக்கு முக்கியமான அலுவல்கள் எதுவும் இல்லை. நீங்கள் எப்போது சேரவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அப்போது முதலே நான் பணி புரியத் தயாராக வந்து விடுகிறேன்" என்று காந்தி அறிவித்தான்.

அவன் பதில் சுந்தரத்துக்கு மிகுந்த மகிழ்வு தந்தது. அதை அவர் முகமலர்ச்சி காட்டியது.

அவர் நன்றி உணர்வுடன் அவன் கைகளைப் பற்றினார். "ரொம்ப சந்தோஷம்" என்று திரும்பத் திரும்பச் சொன்னார். காந்தி எங்கே தங்கியிருக்கிறான். எங்கே சாப்பிடுகிறான்" என்றெல்லாம் விசாரித்தார்.

"உங்களுக்கென்று நான் தனியாக ஒரு ரூம் தந்து விடுகிறேன். தனியாக சிறு வீடு மாதிரித்தான் இருக்கும். குளிக்கவைக்க எல்லாம் வசதிகள் உண்டு. யாராலும் உங்களுக்கு எவ்வித மான தொந்தரவும் ஏற்படாது" என்று சுந்தரம் கூறினார்.

"நல்ல காலம் தேடி வருகிறது. நான் என்ன செய்வது? யாரைப் பார்த்து உதவி கோருவது என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தேனே. உதவுகிறவர் அவ ராகவே வழியில் குறுக்கிட்டு விட்டார்" என்று காந்தி யின் மனம் மகிழ்வுற்றது. தனது நன்றிப் பெருக்கை உரிய சொற்களில் வெளியிட அவன் தயங்கவில்லை.

"இப்போது நீங்கள் எங்கே போகவேண்டும்? உங் களை அங்கே கொண்டுபோய் விடுகிறேன்" என்று சுந்தரம் சொன்னார்.

அவரிடம் பெரியதனமோ, பணமிடுக்கோ இல்லை என்று காந்தி கருதினான். 'எங்கும் முக்கியமாகப் போவ தற்கில்லை" என்று சொன்னான்.

"அப்படியானால் ஒன்று செய்யலாமே? என்னோடு வீட்டுக்கு வாருங்கள், வீட்டைப் பார்த்தது மாதிரியும் இருக்கும். உங்களுக்கு என்று ஏற்பாடு செய்யும் அறையையும் காட்டுகிறேன். அதற்கான சாவியை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். சாமான்களை எடுத்துவர நானே வண்டி அனுப்பி வைக்கிறேன்" என்று சுந்தரம் கூறவும், அவன் சிரித்தான்.

"வண்டி தேவைப்படுகிற அளவுக்கு நான் சாமான்கள் சேகரித்துக் கொள்ளவில்லை. ஒரு பெட்டி, படுக்கை, இரண்டு பை நிறையப் புத்தகங்கள். இவ்வளவுதான் இருக்கும்" என்றான் காந்தி.

"எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை என்பார்களே, அதை நடைமுறையில் அனுஷ்டிக்கிறீர்கள் போலிருக்கு" என்று சுந்தரம் இயல்பாகக் குறிப்பிட்டார். அதில் பரிகாசமோ, வெறும் சிரிப்போ தொக்கி நிற்கவில்லை."

"நான் தேவைகளை பெருக்கிக்கொள்ளவில்லை. அதனால் உடைமைகளும் சுமந்து விடவில்லை" என்றான் காந்தி.

சுந்தரத்தின் வீடு அரண்மனை மாதிரிதான் இருந்தது. புதிதாக, எடுப்பாகக் கட்டப்பட்ட பகுதிகளில், நாகரிக வசதிகள் பலவும் சேர்க்கப்பெற்றிருந்தன. பங்களா என்றொரு தனிப்பகுதியும் இருந்தது. அதில் ஒரு இணைப்பான சிறு வீட்டைத்தான் அவர் 'ரூம்' என்று குறிப்பிட்டார். அதில் இரண்டு மூன்று சிறு அறைகள், சுவர்களில் அலமாரிகள் ஆகியவை இருந்தன.

"இந்த இடம் உங்களுக்குப் பிடிக்கிறதா?" என்று சுந்தரம் கேட்டார்.

"ஆகா. இது பிடிக்காமல் இருக்குமா? இதில் ஜோராக ஒரு குடும்பமே வாழ முடியுமே!" என்றான் அவன்.

"ரைட்-இங்கே மேஜை, நாற்காலி ஈஸிச்சேர், மரக்கட்டில் எல்லாம் கொண்டு வந்து போடுவதற்கு

ஏற்பாடு செய்கிறேன்'' என்ற சுந்தரம், உடனடியாக ஒரு ஆளைக் கூப்பிட்டு உத்தரவிட்டார்.

''அதெல்லாம் எதுக்கு? நான் கீழேயே படுத்துப் பழகிவிட்டேன்...''

''இல்லை இல்லை. சில வசதிகள் மனிதனுக்கு அவசியம் தேவைதான். அவை இல்லாமல் கழித்துவிட முடியும் என்பது சரி. கிடைக்கிறபோது, கிடைக்க வகை ஏற்படுகிறபோது, அவற்றைப் பயன்படுத்த நாம் தயங்கக்கூடாது. நாம் எல்லா நகர வாழ்வை விரும்பி ஏற்றுக்கொள்கிறோம். அப்புறம் நாகரிக வசதிகளைப் புறக்கணிப்பானேன்?'' என்றார் சுந்தரம். அவன் தன்னைத் தவறாக எண்ணிவிடக் கூடாதே என்று உடனே குறிப்பிட்டார். ''நான் உபதேசம் எதுவும் பண்ணவில்லை ஸார். நட்பு முறையில் என் எண்ணத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்!''

சுந்தரம் நல்ல மனிதன் என்ற அபிப்பிராயம் காந்திமதிநாதனுக்கு ஏற்பட்டு விட்டது. அவர் அவனைக் காரில் அனுப்பினார். பெட்டி படுக்கைகளை அதே காரில் எடுத்து வந்துவிடலாம் என்றும் சொன்னார். அவனும் அவ்வாறே செய்து முடித்தான்.

தனது வாழ்க்கையில் புதிய திருப்பத்துக்கு அடிகோலியாயிற்று என்ற திருப்தி அவனுக்கு ஏற்பட்டது ''இன்று நாள் புதிது. நாம் புதியர். இனி, புதுவாழ்வு வந்தெய்தும்'' என்று அவன் உள்ளம் களிவெறிகொண்டு பாடியது.

## 24. புதுக் கவர்ச்சி

பொதுவாக வாழ்க்கை சாரமற்றதாகவே தோன்றுகிறது. ஒரு நாளைப்போல் மறுநாள், இன்றுபோல் நாளை என்று நகர்கிறது உற்சாகத்துக்கு இடம் தராத வறண்ட இயந்திரப்போக்குதான் சாதாரண வாழ்வின் பொதுத்தன்மை ஆகிவிடுகிறது.

இந்த நிலையில் ஊக்கமும் உற்சாகமும் பெறுவதற்குச் சாதாரண விஷயங்களைக்கூடப் பெரிதுபடுத்தி ஆரவாரமும் ஆனந்தக் களிப்பும் எழுப்புவது மக்களுக்குப் பிடித்தமான போக்கு ஆக அமைகிறது. இவை சுவாரஸ்யமாகப் பொழுது போவதற்குத் துணை புரிவதோடு, அன்றாட வாழ்வில் பற்றுதலும் பிடிப்பும் தருகின்றன. இந்த இயக்கத்தில் திடுமெனப் புதுமையோ, வியப்போ, விசித்திரமோ, அதிர்ச்சியோ, விபத்தோ புகுகிறபோது மக்களின் உற்சாகமும், கும்பலிட்டுக் கூச்சல் போடும் சுபாவமும் கனம் பெறுகின்றன.

திருநகரிலும் இவ்விதமான நிகழ்ச்சிகள் அவ்வப்போது வெடித்துக்கொண்டு தானிருந்தன. அவற்றில் ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது அவசியம்.

மிலிட்டரியில் சேர்ந்து திருநகரை விட்டுப் போயிருந்த கவிஞர் சொக்கய்யா, அநேக வருஷங்களுக்குப் பிறகு திடீரென்று ஒருநாள் வந்து சேர்ந்தார். சொக்குப் புலவர் எங்கே போய் எப்படிச் செத்தாரோ என்று எண்ணியிருந்த ஊர்வாசிகள் அவரைக் கண்டதும் ஆச்சர்யப்பட்டார்கள்.

எல்லோரையும் அதிசயப் படுத்தும் விதத்தில் கவிஞர் பல விஷயங்களைச் சொன்னார். சொக்குப் புலவர் இந்தியாவில் எங்கெங்கோ திரிய நேர்ந்தது. ராணுவத்தில் சேர்ந்த பிறகுதான், யுத்தம் முற்றிய சந்தர்ப்பத்தில், அவரும் மற்றும் பலரும் கப்பலில் ஏற்றிச் செல்லப் பட்டார்கள். நடுக்கடலில், அவர்கள் கப்பல் ஜெர்மன்காரனின் தாக்குதலுக்கு இலக்காயிற்று. கப்பலில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டு, ஜெர்மனிக்குக் கொண்டு போகப் பட்டனர். பிறகு, நேதாஜி சுபாஷ் சந்திர போசுக்கும் ஹிட்லருக்குமிடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின்படி, இந்திய வீரர்கள் போஸிடம் அனுப்பப் பட்டார்கள். அவர்கள் ஜப்பானுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். நேதாஜியின் "இந்திய தேசிய ராணுவ"த்தில் சேர்க்கப்பட்டார்கள், அவர்களில் சொக்குப் புலவரும் ஒருவர். இப்போது அவர் வெறும் புலவர் அல்ல. ராணுவத்தில் சேர்ந்து, யுத்தத்துக்குப் போய் விட்டு

வந்த சாதாரண மிலிட்டரி ஆசாமி மட்டுமல்ல. இ. தே. ரா. வீரரும் கூட!

"நேதாஜியை நீர் பார்த்தீரா? இ. தே. ரா. என்ன செய்தது? நேதாஜியின் திட்டம் என்ன?" என்றெல்லாம் பலரும் பலப்பல கேட்டார்கள் அவரிடம்.

சொக்குப் புலவரும் அனுபவங்களை அளந்து கொட்டினார். அவற்றில் எத்தனை சத விகிதம் உண்மை, எவ்வளவு அவர் கைச் சரக்கு என்பதை எவரும் கணித்து விட இயலாது. அவருக்கு அவர்தான் ஆதாரம், சாட்சி எல்லாம்.

அந்த வட்டாரத்தில் அவருக்கு விசேஷமான கவனிப்பும் மதிப்பும் கிடைத்தது அவர் எதிர்ப்படுகிறவர்களை முன்பு மாதிரி 'வணக்கம்' என்றோ, கைகுவித்தோ வரவேற்பதில்லை. விறைப்பாக நின்று, ராணுவ சல்யூட் அடித்து "ஜெய்ஹிந்த்!" என்று கூறி வணங்குவார். அவ்வூர் வாசிகள் அவரையே "நேதாஜி" என்று குறிப்பிட்டார்கள்.

அவரும் நேதாஜி சொக்கப்பா என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கண்டார். சிறு கூட்டங்கள், வாசகசாலை, இரவுப்பள்ளி, நூல்நிலையம் போன்றவற்றின் திறப்பு விழாக்கள் முதலியவைகளில் அவர் விசேஷ பங்கு ஏற்க நேரிட்டது.

ஊரை விட்டுப் போவதற்கு முன்பு அவருக்கிருந்த ஏக்கம் "இந்த ஊரில் நம்மை எவனய்யா கவனிக்கிறான்? நம்ம மதிப்பை உணரமாட்டேன் என்கிறார்களே!" எனும் குறைபாடு இப்பொழுது நீங்கிவிட்டதாகவே தோன்றியது.

அவருக்கு டிபன் காப்பி வகையறாவும், வெற்றிலை பாக்குப் புகையிலையும் தட்டில்லாமல் கிடைத்து வந்தன. ஆனால் 'வண்டி இதே வேகத்தில் ரொம்பக் காலம் ஓடவில்லை!'

சில மாதங்களுக்குத்தான் இந்த உற்சாகம், பரபரப்பு எல்லாம். புதுமைக் கவர்ச்சி மங்கிவிட்டது சீக்கி

ரமே. "நேதாஜி சொக்கப்பா" மீண்டும் பழைய சொக்கய்யா ஆகிவிட்டார். இதில் அவருக்குத்தான் நஷ்டம் வருத்தம் எல்லாம்.

அவர் பழையபடி புலம்பித் திரியலானார். வாழ்க்கை பெரிய சுமையாகி அவரை அழுத்துகிறது என்று சொன்னார் பிறகு, சிலரிடம் சிறிது சிறிதாகப் பணம் உதவி பெற்று, முக்கியமான ஒரு இடத்தில் டீக் கடை ஒன்று திறந்து விட்டார். அதற்கு அவர் வைத்த பெயர் "நேதாஜி தேநீர் விடுதி" என்பதுதான்.

"இது சுதந்திரமான தொழில். காசும் புரளும். பசித்தவர்களுக்குப் பணியாற்றும் புண்ணியமும் உண்டு. வருகிறவர் போகிறவர்களிடம் நமது வாழ்க்கை அனுபவங்களைச் சுவையாக அளந்து பொழுது போக்கவும் வசதி இருக்கிறது!" என்று மழ்ந்து போனார் அவர்.

## 25 புதிய குழப்பம்

தனது எதிர்காலம் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த காந்திமதிநாதனுக்கு, அவன், எதிர்பாராத விதத்திலே ஒரு வேலை கிடைத்ததும் அவனுடைய பிரச்னைகள் பல எளிதில் தீர்ந்து விட்டதாகவே தோன்றியது. உறைவிடம், உணவுக் கவலை, உத்தியோகப் பிரச்னை எல்லாம் இவ்வளவு சீக்கிரத்தில், மனசுக்குப் பிடித்தவகையில் நிறைவேறி விடும் என்று அவன் கனவில்கூட எண்ணியதில்லை. ஆகவே, தனக்கு உதவி செய்த "நல்ல கால"த்தின் மீது அவனுக்கு நன்றியும் நம்பிக்கையும் ஏற்பட்டன. தேடி வந்து தனக்கு உதவிய சுந்தரத்திடம் அவனுக்கு மதிப்பு உண்டாயிற்று.

சுந்தரம் அவனுக்கு எந்தவிமான குறையும் ஏற்படாமல் கவனித்துக் கொண்டார், பத்திரிகைகள் புத்தகங்கள் பலவும் தாராளமாகக் கிடைக்க வழிசெய்தார்; அவனுக்கு வேலை என்று சுமையாகவும் அலுப்புத் தரக் கூடியதாகவும் எதுவும் இல்லை. கடிதங்கள் எழுதுவது,

கணக்குகளைக் குறித்து வைப்பது என்ற சிறுசிறு அலு வல்கள் ஒவ்வொரு நாளும் இரண்டு மணி நேரத்துக்குக் கூட இருக்காது. சுந்தரத்தைப் பார்க்க வருகிறவர்களை வரவேற்று உபசரிப்பது. அவரைச் சந்திக்க முடியாத நிலையில் இருப்பவர்களுக்குத் திருப்திகரமான பதில் சொல்லி அனுப்புவது, அவரோடு வெளியே போய் அவர் சந்திக்கின்றவர்களோடு நிகழும் உரையாடல்களைக் கவ னிப்பது இப்படி அநேக அலுவல்களும் அவனுக்கு இருந் தன. இவையே நாளில் பெரும் பகுதியை விழுங்கித் தீர்த்தன.

ஆரம்பத்தில் இவை எல்லாம் புதுமையாகவும் வசீகரமான பொழுது போக்குப் போலவும் பட்டன காந்திக்கு. ஆனால் நாளடைவில் இவையே தொந்தர வாகவும் பொறுத்து ஏற்றுக்கொள்ள வேண்டிய தண் டனை போலவும் தோன்றலாயின. ஆயினும், அவனுடைய அனுபவ ஞானம் விசாலமடைவதற்கும், பலரகமான மனிதர்களைக் கண்டு பழகவும் அவர்களுடைய குணங்களை யும் வாழ்க்கை முறைகளையும் தெரிந்து கொள்ளுவதற் கும் இவை துணைபுரிந்தன. உண்மையான உலகத்தை' வாழ்க்கையின் நிர்வாணத்தன்மையை, சிறிது சிறிதாகப் புரிந்து கொள்வதற்கு இந்த உத்தியோகம் அவனுக்கு வாய்ப்பு அளித்தது. அந்த வகையில் காந்திக்கு நல்ல லாபமே.

வாழ்வின் போக்கையும் மனிதர்களின் சுபாவங்களை யும் ஊன்றிக் கவனித்து வருகையில், அவனுக்கு ஏமாற்ற மும் வேதனையும், இதன் பலனாக மனக்கசப்பும் வளரலா யின. அவனுடைய சிந்தனை, கனமும் கூர்மையும் பெற்றன.

சுந்தரத்தைக் கண்டு பேசுவதற்குப் பலர் வந்தார் கள். முக்கிய விஷயமாகக் கலந்து ஆலோசிக்க வேண் டும் என்று கூறிக்கொண்டு சுந்தரம் பல பிரமுகர்களைச் சந்திக்கப் போனார். எல்லோரும் கௌரவமான பெரிய மனிதர்கள். பணபலமும் வாழ்க்கை வசதிகளும் பெற்ற அவர்கள் பணத்தையும் பதவியையும்தான் மதித்தார்கள் என்றும்! அவற்றுக்காக மனித மாண்பு

களையும் மனிதத் தன்மையையும் காவு கொடுக்கத் தயங்குவதில்லை என்றும் காந்திமதிநாதன் உணர முடிந்தது.

சுந்தரமும், அவரைப் போன்றவர்களும் பளீரெனப் பிரகாசிக்கும் வெண்ணிறக் கதராடைதான் அணிந்தார்கள். ஆனால், புனிதத்தின், உழைப்பின், உண்மையின், ஏழ்மையின், உரிமை உணர்வின், விடுதலை வேட்கையின் சின்னம் என மகாத்மாவினால் மதிக்கப்பட்ட அந்தத் துணிகூடப் பழைய சிறப்பை இழந்து விட்டது என்றே காந்திக்குத் தோன்றியது. ஒரு "பாஷன்" போலவும் அந்தத் துணி அணிவதன் மூலம் தனிக் கௌரவமும் பெருமையும் பெறலாம் என்ற எண்ணத்தினாலும் இந்த வேஷத்தின் உதவியோடு சமூக அந்தஸ்தையும் தனிச் சலுகைகளையும் பெறமுடியும் எனும் நோக்கிலும் அநேகர் அதை விரும்பி உடுக்கிறார்கள் என்றும் அவன் கருதினான்.

ஒரு நாள் சுந்தரம் அவனிடம் சொன்னார். "நீங்கள் ஒரே சட்டையை ஒரு வாரத்துக்கு உபயோகிக்கிறீர்களே. ஏன், உங்களிடம் அதிகமான சட்டைகள் இல்லையா? அரை டஜன் சட்டைகளுக்கு ஆர்டர் கொடுத்து விடுவோம் என்று..."

"வேண்டாமே. என்னிடம் போதுமான சட்டைகள் இருக்கின்றன. தேவைக்கு அதிகமான சட்டைகள் ஏன்? அழுக்கு அதிகம் ஏறிவிட்டால், வேர்வை நாற்றம் படிந்திருந்தால், சட்டையை மாற்ற வேண்டியது தான். சும்மா அடிக்கடி வேறு சட்டை ஏன் போடவேண்டும்?" என்று குறிப்பிட்டான் காந்தி.

அவன் மீது அனுதாபப்படுவதுபோல் சுந்தரம் பார்வை வீசினார். "நான் சொல்வதை நீங்கள் தவறாக எண்ணிவிடக்கூடாது" என்று ஆரம்பித்தார் அவனிடம். அவன் கருத்துக்கு மாறுபட்ட அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்ல முற்படுகிற போதெல்லாம், அவர் இப்படிப் பேசுவது வழக்கமாகி விட்டது. எனவே, தனக்குப் பிடிக்காத உபதேச மொழிகள், நல்லுரை, நண்பரின்

வார்த்தை வெளிப்படப் போகின்றன என எதிர்பார்த்து அவனும் தயாரானான்.

"நம்ம மாவன்னா இருக்கிறாரே, அவரு தினந்தோறும் ஒரு சட்டை மாற்றிக் கொள்கிறார். அழுக்கு ஆகுமோ ஆகாதோ, தூசி படிகிறதோ இல்லையோ, அதைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை. ஒவ்வொரு நாளும் வெவ்வேறு சட்டை. அதுதான் அவர் பாலிசி. அவரைப்போல் எல்லோரும் நடந்து கொள்ள முடியாது தான். அதுக்கு அவசியமும் இல்லை. நான் ஒரே சட்டையை இரண்டு நாட்கள் போட்டுக் கொள்வேன். மேடை முதலாளி மாதிரிப் பிரமுகர்களும் இவ்விதம் தான் செய்கிறார்கள். இதுகூடத் தேவையில்லை. படாடோபம் என்று நீங்கள் நினைக்கலாம் மூன்று நாட்களுக்கு ஒருமுறை சட்டை மாற்றுங்களேன், அது எடுப்பாக இருக்கும் ஒரே சட்டையை ஏழெட்டு நாள் போடுவது என்கிறது..." என்று இழுத்தபடியே விட்டு விட்டார் சுந்தரம்.

"எனக்குப் பிடிக்கவில்லை" என்றும் அதைப் பூர்த்தி செய்யலாம். "நாகரிகம் அல்ல. பெரிய மனித வட்டாதுக்கு உகந்தது அல்ல, கௌரவக் குறைவு" என்று எதையாவது போட்டும் நிரப்பலாம். காந்தியின் மனம் இதைச் சுட்டத் தவறவில்லை.

"தரித்திர நாராயணர்களின் பிரதிநிதியாகவே நான் விளங்குகிறேன். என்றார் மகாத்மா காந்தி. அவர் பெரிய வேட்டியும் துண்டும்கூட உபயோகிக்க விரும்பியதில்லை நாட்டுப் பணி புரியும் தொண்டர்களிடம் இரண்டு வேட்டி, இரண்டு சட்டை, இரண்டு துண்டு இருந்தாலே போதும். அவற்றை அவர்களே சோப்புப் போட்டுத் தோய்த்து உலர்த்தி அணிந்து கொள்ளலாம் என்று சொல்லி, அவ்வழக்கத்தைக் கையாண்டும் வந்தார் ஒரு பெரும் தலைவர். எளிய வாழ்க்கை பற்றிச் சிந்தித்தும், தேவைகளைக் குறைத்துக் கொள்வது பற்றிப் பேசியும் வருகிறார்கள் பலர்..."

காந்தியின் பேச்சை வளரவிடாமலே சுந்தரம் குறுக்கிட்டார். "அவை எல்லாம் லட்சியங்கள். எழுத்துக்

கும் பேச்சுக்கும் ஜோராக இருக்கும். நடைமுறைக்குக் கட்டிவராதவை. மேலும் தலைவர்கள் மகாத்மாக்கள் என்று இருக்கிறவர்கள் இப்படி எதையாவது சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். எல்லோராலும் பின்பற்ற முடியாத அன்றாட வாழ்க்கையில் அனுபவ சாத்தியம் ஆக இயலாத யோசனைகளையும், திட்டங்களையும் அவர்கள் சொல்வதனாலும், செய்ய முற்படுவதனாலும்தான் அவர்கள் மகாத்மா என்றும், மகாப் பெரியவர் என்றும் மதிக்கப்படுகிறார்கள். நாம் எல்லாம் சாதாரண மனிதர்கள். நாலுபேரு மதிக்கும்படியாக நடந்து, வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் தானே!" என்று அறிவித்தார்.

சுந்தரத்தின் பேச்சு காந்திமதிநாதனுக்கு அதிர்ச்சி தரவில்லை; ஆச்சர்யமாக மட்டுமே பட்டது. 'மகாத்மா வளர்த்த கட்சி இன்று இவர் போன்ற நபர்களை நம்பி வாழ நேரிட்டுள்ளதே!' என்றுதான்.

ஒவ்வொரு முக்கிய விஷயத்திலும் சுந்தரத்தின் கருத்து அவனுக்குப் பிடிக்காததாகவே அமைந்தது. அவனுடைய மனச்சாட்சிக்கு மிகுந்த கஷ்டம் கொடுப்பதாகவும் இருந்தது.

காந்திமதிநாதன் உண்மையைப் போற்றி வளர்க்க ஆசைப்பட்டான். உண்மை பேசுவதில் ஆர்வம் காட்டினான். அதனால், உண்மைக்குப் புறம்பான பேச்சுகள் பெருமையாகப் பேசப்படுகிறபோதும், உண்மையாக நடந்த ஒன்றை வேண்டுமென்றே திரித்துக் கூறுகிறபோதும், அல்லது மறைக்க முயல்கையிலும், அவனுக்குச் சங்கடமாக இருந்தது. சில சமயம் கோபம் வரும், ஆத்திரம் உண்டாகும்.

ஒரு சமயம் சுந்தரமும் பிரமுகர். ஒருவரும் ஏதோ ஒன்றைப் பிரமாதப் படுத்திப் பேசினார்கள். அது உண்மை அல்ல என்று காந்தி சுட்டிக்காட்ட விரும்பினான். ஆயினும், சுந்தரத்துக்கு நல்லவனாக நடந்து கொள்ள எண்ணி அந்த நேரத்துக்கு வாய்திறவாமல் இருந்து விட்டான். பிறகு, தனியாக, அவரிடம் அதைச் சொன்னான்.

அவர் தங்கள் தவறை உணரவில்லை. அது தவறு என்றுகூட அவருக்குப் படவில்லை. "இதிலே என்ன இருக்குது!" என்று அலட்சியப்படுத்தினார். மேலும் அவர் பேசிய தோரணை காந்தியின் உள்ளத்திலே கசையடி மாதிரி தாக்கியது.

"உண்மை, உண்மை என்று ஜெபம் மாதிரி சொல்லிக் கொண்டிருப்பதுகூட ஒரு மனமயக்கம்தான். நேற்று உண்மையாக இருந்தது, இன்று உண்மை இல்லை என்றாகி விடலாம். உங்களுக்கு உண்மை என்று படுவது எனக்கு, அப்படிப் படாமலே போகலாம். பூமி தட்டை என்பதை உண்மை என்று நம்பினார்கள், ஒரு காலத்தில். இல்லை, பூமி உருண்டை என்றாகி விட்டது. சூரியன் சுற்றி வருகிறது, தோன்றுது, மறையுது என்பது உண்மையாகக் கருதப்பட்டது. இல்லை. அது சரியல்ல சூரியன் ஒரே இடத்தில் நிற்குது. பூமியும் பிறவும் தான் சுற்றி வருகின்றன; இதுதான் உண்மை என்றார்கள். அப்படி இருந்தாலும்கூட, சூரியன் உதிக்கிறான், மறைகிறான் என்று சொல்கிற வழக்கமும் போய்விடவில்லை. பெரிய விஷயங்களிலேயே இந்தக் கதை என்றால், சாதாரண காரியங்களில் உண்மை, ஆ ஊ என்று அவசியம் இல்லாமல் குழப்பிக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமாகாது. காலம் ரொம்பவும் மாறிப்போச்சு. அதுக்குத் தக்கபடி வாழ்க்கை முறைகளையும் அட்ஜஸ்ட் செய்து கொண்டு போகனும். அப்போதான் நன்றாக வாழ முடியும். சத்தியம், உண்மை என்பது காட்டில் வாழ்கிற சந்நியாசிகளுக்கும் மடங்களில் வாழ்கிற சாமியார்களுக்கும் சரி. அன்றாட வாழ்க்கையில், நம் போன்றவர்களுக்கு அது கட்டுபடியாகாத சங்கதி!" என்று ஒரே போடாகப் போட்டார் சுந்தரம்.

காந்திஜீயின்பெயரைச் சொல்லிக்கொண்டு, காந்தி வளர்த்த கட்சியில் இருந்து கொண்டு, நாட்டுப் பணி புரிவதாகப் பெயர் பண்ணும் ஒருவர் பேச வேண்டிய பேச்சா இது என்று அப்பாவி காந்திமதிநாதன் திகைத்துப் போனான்.

இத்தகைய திகைப்புகள் அவனுக்கு அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்தன. "இதே ரீதியில் இந்த இடத்

தில் சுந்தரத்தோடு நான் எவ்வளவு காலம் ஒத்துழைக்க முடியும் என்று எனக்கே புரியவில்லை. எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது!'' என்ற எண்ணமும் அவனுக்கு அவ்வப்போது உண்டாகத் தொடங்கியது.

''சரி. வண்டி ஓடுகிறவரை ஓடட்டும். இப்பவே வீணாக மனசைக் குழப்பிக் கொண்டிருப்பானேன்?'' என்று அவன் தன்னைத் தேற்றிக் கொள்ளவும் தவற வில்லை.

ஒவ்வொரு நாளும் அவனுடைய கொள்கைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் 'வேட்டு வைக்கும் விதத்திலே' தமது எண்ணங்களையும் ஆசைகளையும் சுந்தரம் ஒலிபரப்பத் தவறுவதுமில்லை.

## 26. திருவாளர் புன்னைவனம்

தனிமனிதன் சிறப்பாக இருந்தால், சமூகம் சீர்பெற்றுச் சிறக்கும். தனிமனிதன் சிறப்புறுவதற்கு அவசியமானவை என்று கருதப்பட்டு வந்த குணநலன்கள் சீர்கெட்டு, மதிப்பிழந்து போகுமானால், சமூக வாழ்வும் நலனழியும். நாட்டின் மாண்பும் மயங்கிவிடும். சுதந்தரம் வந்ததற்குப் பிறகு தனிமனித மனோபாவத்தில் பெருத்த மாற்றம் காணப்படுகிறது. அது உயர்வுக்கான மாறுதலாக இல்லை. இதுவரை இருந்துவந்த பெருமைக்கு உரியன என மதித்துப் போற்றப்பட்ட-நற்பண்புகளை நாசப்படுத்தும், சிதைத்துச் சீரழிக்கும் போக்கு ஆகவே தென்படுகிறது. இது வளர்ச்சிக்கு வகை செய்யாது...

காந்திமதிநாதன் இவ்வாறு சிந்தித்தான். சுந்தரத்தின் சுபாவங்களும், அவரைக் காண வந்துபோன பெரிய மனிதர்கள், முக்கிய நபர்களின் பேச்சும் போக்கும் அவனது சிந்தனையை இந்தக் கதியிலேயே வளர்த்தன-

பண்பு நலத்தைவிட, பண வளத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் மனித மனம் அதிக ஈடுபாடு காட்ட ஆரம்பித்து விட்டது. 'பணம்தான் முக்கியம்- பணம்

இருந்தால் எதையும் சாதித்து விடலாம்; இஷ்டம்போல் வாழலாம். ஆகவே, பணம் பண்ணுவோம். எப்படியும், எவ்வகையிலும், பணம் சேர்ப்போம். எவ்வளவு குறுகிய காலத்தில் எவ்வளவு மிகுதியாகப் பணம் சம்பாதிக்க முடியுமோ, அத்தனை வேகமாக அதிகம் அதிகமாகப் பணம் சேர்த்தாக வேண்டும்.' என்றொரு வெறிவேகம் மனிதரிடையே பரவியிருப்பதைக் காந்தி உணர முடிந்தது.

முடிவுதான் முக்கியம்; அதை அடைவதற்கான வழி வகைகள் எப்படி இருந்தாலும் கவலை இல்லை என்ற நோக்கு ஊறிப்போனதால், எல்லாத் துறைகளிலும் எத்துவேலை அதிகரித்து விட்டது. நாணயம், நேர்மை, நியாயம் முதலியன மூலையில் ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ளன.

—இந்த ரீதியில் எண்ணி அவன் வேதனைப்படுவதற்கு அன்று நிகழ்ந்த ஒரு சம்பவம்தான் காரணம்.

சுந்தரம், பிரமுகர் ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தார். காந்தியும் அவருடன் போகவேண்டியவன்தானே? போனான்.

திருவாளர் புன்னைவனம் ஒரு குட்டித்தலைவர் கட்சியின் பெயரைச் சொல்லியும், தனது வாக்கு பலத்தை உபயோகித்தும் அவர் எவ்வளவோ காரியங்களைச் சாதித்து வருகிறார். அவருடைய தயவை நாடிப் பலரும் வருவது வழக்கம். அவர் உதவி செய்ய இசைவார். அதற்கு அவர்கள் பணம் கொடுத்தாக வேண்டும். வெற்றிகரமாக எல்லாம் முடிந்த பிறகு அவர்கள் கொடுக்க வேண்டிய காணிக்கை வேறு.

புன்னைவனம் 'நல்ல பிரசங்கி'' என்று பெயர் வாங்கிவிட்டார். மக்களுக்குப் பிடித்த முறையில், அவர்களுடைய உற்சாகத்தைத் தூண்டும் முறையில் குட்டிக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் கற்பனைச் சரக்குகளும் கலந்து சுவையான சொல் விருந்து அளிக்கும் திறமைசாலி அவர். அதனால் அவருடைய சொற்பொழிவுகளுக்கு 'நல்ல கிராக்கி' ஏற்பட்டது. புகழ்பெற்று,

இப்படி ஒரு தேவையை உண்டாக்கிய பிறகு, பண அறுவடை பண்ணுவதில் அவர் அக்கறை காட்டலானார். ஒரு பிரசங்கத்துக்கு இவ்வளவு பணம் வேண்டும்; போகவரச் செலவுக்கு இவ்வளவு என்று குறிப்பிட்டு, முன் பணம் கோரினார். அப்படியே அனுப்பினார்கள் பல ஊர்க்காரர்களும்.

நாளடைவில் பிரசங்கி புன்னைவனம் இந்தப் பிசினஸில் லாபகரமான வழியைக் கையாளத் தொடங்கி விட்டார். வருகிறேன் என்று சொல்லி, முன்பணம் வாங்கி விடுவார். பிறகு அங்கே போகாமலே இருந்து விடுவார். நினைவு படுத்தும் கடிதங்கள், வேண்டுதல்கள். வசை மாரிகள் எவ்வளவுதான் வரட்டுமே. மன்னன் அசைய மாட்டார். காலச்சூறை, மழை வெயில் எதனாலும் பாதிக்கப்படாது நிற்கும் கருங்கல் பாறை போல் இருந்து விடுவார். அவரை யார்தான் என்ன செய்ய முடியும்? ஏசுவார்களா? காணாத இடத்தில்—அவர் காதுக்கு எட்டாத தூரத்தில்—தானே ஏசிக் கொண்டிருப்பார்கள்! அப்படியே ஏசிப் பேசினால்தான் அவருக்கு என்ன? "ஏச்சுகள் அவரைத் தேய்த்து நசுக்கி விடுமா என்ன? 'ஆயிரம் திட்டு ஒரு ஆனைப்பலன் என்று எங்க தாத்தா சொல்லுவார்!" என்று ஹாஸ்யம் வேறு பண்ணிக் களிப்பார் அவர்.

அன்று சுந்தரமும் காந்தியும் திருவாளர் புன்னைவனத்தைச் சந்திக்கச் சென்ற சமயம், அவர் வீட்டின் முன்னே இரண்டு பேர் நின்றார்கள். அவர்கள் வெகு நேரமாக அங்கே அப்படிக் காத்து நிற்பதாகத் தோன்றியது. அவர்களும் சுந்தரத்திற்குப் பெரிதாகக் கும்பிடு போட்டு, பரிதாபகரமாகச் சிரித்தார்கள்.

"என்ன? எங்கே இப்படி இவ்வளவு தூரம்?" என்று சுந்தரம் விசாரித்தார்.

அவர்கள் அழாத குறையாகப் புலம்பித் தீர்த்தார்கள். அவர்கள் ஊரில் ஒரு ஆண்டு விழாவுக்குச் சொற்பொழிவு ஆற்றப் புன்னைவனம் ஒப்புக்கொண்டிருந்தார். 'ஐம்பது ரூபாய் கொடுத்தாயிற்று. இவர் வரவேயில்லை,

ஆண்டுவிழாத் தேதியை இரண்டு தடவை இவருக்காக ஒத்தி வைத்துமாயிற்று. இனியும் தள்ளிப்போட முடியாது. இவரிடம் நேரில் பேசி முடிக்கவே வந்திருக்கிறோம்'' என்று சொன்னார்கள். ''தயவு செய்து நீங்களும் ஒரு வார்த்தை அவரிடம் சொல்லுங்கள்'' என்று சுந்தரத்திடம் கோரினார்கள்.

அவரும் ''சரி'' என்று தலையசைத்து விட்டுப் போனார். புன்னைவனத்தோடு பேசிக்கொண்டிருந்த போது, வேலையாள் வந்து, ''இரண்டு பேர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறாங்க. ரொம்ப நேரமாச்சு; வெளியூர், திரும்பிப் போகணும்னு சொல்கிறாங்க'' என்று தெரிவித்தான்

'போகட்டுமே! நானா தடுத்து நிறுத்தியிருக்கிறேன்?'' என்று கிண்டலாகச் சொன்னார் புன்னைவனம்.

''ஏதோ ஆண்டு விழாவாம். உங்கள் சொற்பொழிவுக்கு...'' என்று இழுத்தார் சுந்தரம்.

''வேலையத்தவனுங்க! பொழுது விடிஞ்சா, பொழுது போனால், இதே தொல்லைதான். அங்கே மகாநாடு, இங்கே ஆண்டு விழா, அந்த எழவு, இந்த இது என்று பிராணனை வாங்குகிறாங்க!... ஊம் ஊம் கொஞ்ச நேரம் இருக்கச் சொல்லு...'' என்று பிரசங்கியார் ஆளிடம் சொல்லியனுப்பினார். ''வாறேன்னு சொல்லவேண்டியது தான். வேறே என்ன பண்றது? அந்தத் தேதியிலே அங்கே போகாமல் இருந்தால் போகுது! இந்த மாதம் ஏகப்பட்ட வேலை. ரொம்ப அலைச்சல்!'' என்று அவர் அலுத்துக் கொண்டார்.

சுந்தரம் லேசாகச் சிரித்து வைத்தார். வேறு எதுவும் சொல்லவில்லை.

வெளியே வந்ததும், காத்திருந்த இரண்டு பேரும் திரும்பவும் கும்பிடு போட்டார்கள். ''உள்ளே போங்க. அவர் உங்க ஊருக்கு வருவார். நானும் சொல்லியிருக்கிறேன்'' என்று ஜம்பமாகக் கூறினார் சுந்தரம்.

அவ்விருவரும் வாயெல்லாம் பல்லாக முகமலர்ந்து, தங்கள் நன்றியை எப்படித் தெரிவிப்பது என்று புரியாது தவித்தார்கள்.

அந்த அப்பாவிகளைப் பார்க்கப் பார்க்க காந்திமதி நாதனுக்கு இரக்கமாக இருந்தது. அவர்களிடம் சுலபமாக நல்ல பெயர் பெறுவதற்காக சுந்தரம் பொய் சொன்னதை எண்ணி அவன் மனம் குமைந்தது. சாதாரண மக்களை ஏமாற்றிச் சுகம் பெற முயலும் புன்னைவனத்தை நினைக்க நினைக்க அவனுக்கு ஆத்திரம் பொங்கியது.

"அவர் செய்வது கொஞ்சம்கூட நல்லாயில்லை. அது நியாயமோ, நேர்மையோ அல்ல" என்று அவன் சுந்தரத்திடம் சொன்னான்.

அவர் வறண்ட சிரிப்புச் சிரித்தார். "என்ன செய்வது? அவர் சுபாவம் அப்படி இருக்கிறது. அதை நாம் மாற்ற முடியுமா?" என்று மட்டுமே கூறினார்.

புன்னைவனத்தின் தயவு சுந்தரத்துக்குத் தேவை. எனவே அவரைக் குறைவாக மதித்துப் பேச இவர் மனம் இடம் கொடுக்கவில்லை.

அவரைக் குறை கூறுவதை இவர் விரும்பவும் மாட்டார். காந்தியின் மனம் குறுகுறுத்து, அவனை மௌனமாக இருக்கும்படி செய்தது.

ஆயினும் அவன் சிந்தனை சதா கனன்று கொண்டிருந்தது.

திடீரென்று அவனுக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. தொண்டர் நாதனைச் சந்திக்க வேண்டும் என்றுதான். 'அவரைக் கண்டு பேசி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன; இன்று எனக்கு வேலை எதுவும் இல்லை. போக வேண்டியதுதான்" என்று தீர்மானித்தான்.

சுந்தரத்திடம் தெரிவித்துவிட்டு அவன் தொண்டரைத் தேடிப் போனான். நாதன் வீட்டில்தான் இருந்தார். அவனைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்று, அவனுக்கு மோர் தந்து உபசரித்தார். அவனுடைய நலன் பற்றி அன்போடும் அக்கறையுடனும் விசாரித்தார்.

"எப்படியோ சுகமாக நாள் கழியுது என்கிற வரையில் சரிதான். ஆனால், சுந்தரத்தோடு நீங்கள் ரொம்ப நாள் இருக்க முடியாது என்றுதான் எனக்குப் படுது.

புதுப் பணக்காரன், தேசப்பற்று, கட்சிப் பிடிப்பு எல்லா வற்றிலும் புது மோகமும்தான். அவருடைய போக்கு கள் வேறு தினுசு. உங்கள் மனமும் நோக்கும் வேறு ரகம். அதனுலேதான் சொல்கிறேன்'' என்று தொண்டர் 'எடை போட்டு நிர்ணயம் செய்தது போல்' பேசினர்.

## 27. நாதனின் வேதனை

தொண்டர் நாதனைப் பற்றி எண்ணும் போதெல் லாம் காந்திக்கு, 'இருவேறு உலகத்து இயற்கை, திருவேறு தெள்ளிய ராதல் வேறு' என்ற பொய்யா மொழியும் நினைவுக்கு வரும். சுந்தரம் போன்ற திருவின் தாசர்கள், பணத்தையும் புகழையும் மோகித்து எவ்வழியிலும் பெறுவதற்காக அலைகிறவர்கள், உயர்ந்த பண்புகளையும் நல்ல நோக்கங்களையும் ஒதுக்கி விடுகிறுர் கள். நல்லவர்களாக வாழ ஆசைப்படுகிற நாதன் போன்றவர்கள் செல்வச்சிறப்பு அடைய முடியாமல் அவ திப்படுகிறுர்கள் என்ற உண்மை அவனை உறுத்தி வந்தது.

'நாதன் ரொம்ப நல்லவராக வாழ முயல்கிறுர். லட்சியவாதியாக நடந்து கொள்ள விரும்புவதும், கொள்கைகளை விட்டுக்கொடுக்க மனம் இல்லாமலிருப் பதும் சரிதான். ஆனுல், லட்சியத்துக்கோ கொள்கை களுக்கோ தீங்கு செய்யாத சில செயல் முறைகளை ஏற்றுக் கொண்டால் என்ன? அவர் மகாத்மாவின் பாஷையிலே பேச ஆரம்பித்து விடுகிறுரே. ''என் அந்தராத்மா இடம் தரவில்லை; எனது அந்தராத்மா அதை அங்கீகரிக்க மறுக்கிறது'' என்ற தன்மையில் பேசி வேறு விளக்கம் தர அவர் மறுத்துவிடுகிறுரே!' இவ்விதம் காந்திமதிநாதன் நினைத்தான்.

தொண்டர் நாதனுடன் அவன் பேசிக்கொண்டிருந்த போது, தியாகிகளுக்கு நிலம் தருகிற விஷயம் பற்றியும் குறிப்பிட நேர்ந்தது. ''நீங்கள் அதைப் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து விட்டீர்களா?'' என்று காந்தி அவரிடம் கேட்டான்.

''என்னவோ எனக்கு அது பிடிக்கவில்லை. நான் தியாகி என்று பெரிய பெயர் பெற ஆசைப்படவில்லை;

சாதாரணத் தொண்டனாகத்தான் தேசப் பணிபுரிய முற்பட்டேன். இன்றும் தொண்டன்தான். சாகிற வரை நாட்டுப் பற்றோடு, மக்களுக்கு என்னாலியன்ற சேவை செய்ய விரும்பும் தொண்டனாகவேதான் இருப்பேன்'' என்று அவர் உறுதியோடு பேசினார்.

''அதற்காக, கிடைக்கிற பரிசை ஏற்று அனுபவிக்க ஏன் மறுக்கவேண்டும்? ஐந்து ஏக்கர் நிலம் கிடைத்தால் உங்கள் குடும்பத்துக்குக் கொஞ்சம் வசதி ஏற்படும் அல்லவா?''

''எனக்கு தியாகத்துக்குப் பரிசு, வீரத்துக்கு நன்கொடை என்கிற எதுவுமே வேண்டாம். அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும் என்று சொல்லி, நற்பணி புரிந்தவர்களின் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவன்தான் நானும்'' என்று நாதன் கூறினார்.

''நிலத்துக்குத் தேவை இல்லாதவர்கள், முன்பே சொத்தும் சுகமும் உடையவர்கள், பணக்காரர்கள், நல்ல பதவியில் இருக்கிறவர்கள் இப்படிப் பல ரகத்தினரும் நிலம் கிடைக்கிறது என்ற உடனேயே கொண்டு வா; எனக்குக் கொடு என்று அவசரம் அவசரமாக அதைப் பெறுவதில் ஊக்கம் காட்டுகிறார்கள். தங்களுக்கு உள்ள அந்தஸ்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி, ஊரில் நல்ல இடத்தில் நல்ல நிலமாகத் தேர்ந்து எடுத்துக் கொள்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. வாய்ப்பும் பொருள் பலமும் பெற முடியாதவர்களுக்கு மட்டமான நிலமே கிடைக்கிறது என்றும்சொல்லுகிறார்கள்...''

''இத்தனை காலமும் இவர்கள் பேசிவந்த காந்தீயம் இவர்களுக்கு இந்த வழியைத்தான் காட்டுகிறது போலும்!'' என்று குறிப்பிட்டார் தொண்டர்.

''அதற்குச் சொல்லவில்லை நான். இப்படி வசதி மிகுந்தவர்களும் செல்வர்களும்கூட நிலம் பெறுவதில் ஆர்வம் காட்டுகிறார்களே. வாழ்க்கையில் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகிற நீங்கள் கிடைக்கக் கூடிய நிலத்தை-ஏற்றுக்கொண்டால் அது தவறோ குறையோ

ஆகாது என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்'' என்று காந்தி சொன்னான்.

''எல்லோரும் ஒரே மாதிரித்தான் செயல் புரிய வேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லையே. நீங்கள் என்னதான் சொல்லுங்கள், என் மனம் அதை ஏற்றுக் கொள்ளாது. தியாகத்துக்காக நிலம் என்று அரசாங்கத்திடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ள என் அந்தராத்மா இணங்கவும் இணங்காது. இதோடு விட்டு விடுங்கள் அந்தப் பேச்சை'' என்று அவர் கண்டிப்பாக அறிவித்தார்.

அப்புறம் அவரிடம் அவன் என்ன சொல்ல முடியும்? 'மனித மனம் என்பது விசித்திரமானது. அது ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாக ஆட்டிவைக்கிறது. ஒருவரையே வெவ்வேறு வேளைகளில் வெவ்வேறு விதமாக ஆட்டிவைக்கும் குணமும் அதற்கு இருக்கிறது' என்று அவன் எண்ணிக்கொண்டான்.

தொண்டர் நாதன் வெறும் தேசபக்தராக மட்டும் வளரவில்லை; உண்மையான காந்திய வாதியாகவும் வாழ்ந்து வந்திருக்கிறார். அதனால்தான் காலத்துக்கு ஏற்றபடி தமது போக்குகளை மாற்றிக் கொண்டு வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொள்வதற்கு தமது இறந்த காலப் பெருமையைப் பயன்படுத்திக் கொள்ள அவர் மனம் இசையவில்லை என்று காந்திக்குத் தோன்றியது.

நியாயமான வாய்ப்புகளைக்கூடப் பயன் படுத்திக் கொள்ள விருப்பம் இல்லாமல், லட்சியத்தை மட்டுமே கருத்தில் கொண்டு செயல் புரியும் தொண்டர்கள் அபூர்வப் பிறவிகள்தான்; நாதன் போன்றவர்கள் ஒரு சிலரே இருக்க முடியும் என்று காந்தியின் உள்ளம் உணர்த்தியது.

மகாத்மாவின் ஆணைக்கு ஆட்பட்டு, அரிய செயல்கள் புரிய முன்வந்த தொண்டர்களில் பலப்பலர் வாழ்க்கைத் தீயால் கருக்கி எடுக்கப்பெற்றும், சந்தர்ப்பக் காற்றினால் எவ்வெவ்வாறோ சுழற்றி அடிக்கப்பட்டும் மாறிப்போயிருந்தார்கள். ஊக்கத்தோடும் உற்சாகத்

தோடும் உழைத்த சிலர் வேறு அரசியல் போக்கு களினால் வசீகரிக்கப்பட்டு, கட்சிமாறி, அந்தக் கட்சிக் காக சிரத்தையோடு பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

'நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, ஆட்சிப் பொறுப்பு தேசிய இயக்கத்தினர் கைக்கு வந்த பிறகு, மகாத்மாவும் மரணம் அடைந்து விட்டபிறகு, அந்த இயக்கத்தினரின் நோக்கம் பூராவும் பதவி வகிப்பதுதான்; கிடைத்த ஆளும் உரிமையை விட்டுவிடாமல் இருப்பது தான் என்றாகிவிட்டது. அவர்களுடைய நோக்கமும் செயலும் ஆட்சி, அதிகாரம், அந்தஸ்து, கௌரவம், ஆக்கினைகள் என்று வளையமிட்டுக் கொண்டிருக்கின்றன. மக்களோடு கொண்டிருந்த தொடர்பு குறைந்து விட் டது. முன்புபோல், நாட்டு மக்களோடு நல்லுறவும் நேரடித் தொடர்பும் கொள்ள வேண்டும், ஆண்டு முழு வதும் இவை நீடித்து நிலவவேண்டும் என்ற எண்ணம் தேசீய இயக்கத்தினருக்கு இல்லை. ஆளும் கட்சி என்றாகி விட்டதால், பதவிமோகிகளும், பணம் திரட்டுகிறவர் களும், புதிய பக்தர்களும் வலிய வந்து சூழ்கிறார்கள். மக்களின் நன்மதிப்பை சரியான வழியில் பெறமுடியா மல் போகிறபோது, பணத்தைக் காட்டியும் அதி காரத்தை உபயோகித்தும் பலம்பெற்று விடலாம் என்ற நம்பிக்கை, பணபலம் படைத்தவர்களுக்கு உண்டு. இத னால் உண்மையான தேச பக்தர்களும் காந்தியவாதிகளும் ஒதுங்கிவிட நேர்கிறது. அல்லது, வேறு அரசியல் தத்து வங்களினால் கவர்ச்சிக்கப்பட்டு, அவற்றைக் கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை செய்வது சாத்திய மாகலாம் என்று மயக்கமுற்று அத்தத்துவங்களை போதிக் கும் கட்சியில் சேர்ந்து விடுகிறார்கள். சோம்பியிருக்கும் ஒதுங்கியிருக்கும் தொண்டர்களின் சேவை தேர்தல் காலத்தில்தான் கட்சிக்குத் தேவைப்படுகிறது. தேர் தல் சமயத்தில் தானே கட்சியினரும் மக்களோடு தொடர்பு கொள்வதற்காக ஊர் ஊராக அலைந்து திரிகி றார்கள்!"

தொண்டர் நாதன் இவ்வாறு சொன்னார். மனக் கசப்புடன் வேதனையும் அவர் பேச்சில் கலந்து ஒலி செய் ததைக் காந்தி உணர முடிந்தது.

'எனக்குத் தெரியும்–தேசபக்தி காரணமாகவும், மகாத்மா காந்தியிடம் கொண்ட பக்தி காரணமாகவும், தங்கள் உள்ளத்தை, உழைப்பை, காலத்தை தங்களுடைய வாழ்க்கையையே தேசப்பணிக்காகவும், மக்களின் சேவைக்காகவும் அர்ப்பணித்தவர்கள் பலர் இன்று இருக்கிற இடம் தெரியாமல் - எப்படி எப்படியோ நாளோட்டிக் கொண்டிருக்கிறார்கள். அரை வயிற்றுச் சாப்பாட்டுக்குக்கூட வகை இல்லாமல், பரிதாபகரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால்...''

தொண்டர் நாதன் ஏதோ ஒரு நினைவு வந்தவராய் புன்னகை பூத்தார். தொடர்ந்து சொன்னார்:

''அந்தக் காலத்தில் கோவலன் நாடகம் நடத்துவார்கள். நாடகத்தில் வருகிறவர்கள் இஷ்டம் போல் பாட்டும் வசனமும் பொழிந்து தள்ளுவார்கள். அதில் கண்ணகி புலம்புகிற கட்டமும் வரும். தோட்டம் போட்டவள் கண்ணகியா; மலர் முடிப்பவள் மாதவியா? மரம் நட்டவள் கண்ணகியா; பழம் பறிப்பவள் மாதவியா? இப்படி கண்ணகி பார்ட் அடுக்குவது உண்டு. அது எனக்கு அடிக்கடி ஞாபகத்தில் எழுகிறது. தேசிய விடுதலைப் போராட்ட விஷயத்திலும் இந்த மாதிரியான நிகழ்ச்சிகள்தான் நடைபெறுவதாக என் மனம் சொல்லும். நாட்டின் விடுதலைக்காக, இயக்கத்தின் வளர்ச்சிக்காக உணர்வைக் கொட்டியும், வாழ்க்கையைக் கொடுத்தும், தியாகங்கள் செய்தும் பாடுபட்டவர்கள் எத்தனையோ பேர். யார் யாரோ! அவர்களில் அநேகருக்கு கௌரவமும் கவனிப்பும் கிட்டியிருக்கலாம். ஆனாலும், பலனை சுலபமாக எட்டிப் பறிக்கும் நிலையில் இருப்பவர்கள், வேறு யார் யாரோ தான். முன்பு இயக்கத்தின் பக்கம் அடிஎடுத்து வைக்காதவர்களும், விடுதலைப் போராட்டத்துக்கு எதிர்ப்புக் காட்டியவர்களும், வசைபாடியவர்களும் இப்போது பணத்தின் துணையோடு இயக்கத்தினுள் புகுந்து, பதவிக்கு வலைவீசுவது சகஜமாகிவிட்டது இயக்கத்தின் புனிதம் மங்கி மறைந்து விட்டது. புன்னைவனம் போன்ற பணதிபதிகளும் இயக்கத்திலே செல்வாக்குப் பெற்று விட்டால், அது வேறு எப்படி இருக்க முடியும்?''

தொண்டரின் வேதனைக் குரலைப் பொறுமையோடு கேட்டிருந்த சாந்திமதிநாதன் கேட்டான், "மகாத்மா காந்தி உயிரோடு இருந்தால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டிராது என்று எண்ணுகிறீர்களா?" என்று.

"எப்படிச் சொல்ல முடியும்? காலவேகம் மக்களின் வாழ்க்கையிலும் மனோபாவத்திலும் எவ்வளவோ மாறுதல்களைப் புகுத்தி வருகிறது. நாகரிகமும் விஞ்ஞானமும் புறவாழ்வில் சேர்த்துள்ள புதுமைகளும் வசதிகளும் மனிதரின் அகத்தையும் பாதிக்கத்தானே செய்யும்? அதன் மூலம் மக்களின் ஆத்மீக வாழ்வும்-தர்ம நியாய உண்மை உணர்வுகளும் பிறவும் வெகுவாக பாதிக்கப் படத்தான் செய்யும். மகாத்மாவின் ஆத்மபலம் ஓரளவுக்குப் பாதுகாப்பாக இருந்திருக்கக் கூடும். அவரால் கட்டுப்படுத்த இயலாத அளவுக்குச் சிதைவும் சறுக்கலும் அதிகரித்துவிடுமானால், அவர் இந்த இயக்கத்தையே கலைத்து விடுகிறேன்; வேறு எப்பெயரிலாவது ஒரு அமைப்பு ஏற்பட வேண்டிய அவசியம் என்றால் அவ்வாறே செய்து கொள்ளுங்கள் என்று சொன்னாலும் சொல்லி விடுவார் சுதந்தரம் என்கிற லட்சியம் சித்தி அடைந்ததுமே, தேசிய விடுதலை இயக்கம் கலைக்கப்பட வேண்டியதுதான் என்று மகாத்மா சொன்னார். அது உங்களுக்கும் தெரிந்திருக்கலாம். அதிகாரம், ஆட்சிப் பொறுப்பு, பதவி மோகம் என்றெல்லாம் வந்தவுடன் தேசிய இயக்கம் தனது தன்மையை இழந்து, குணம் கெட்டு, மதிப்புக் குறைந்து போகும் என்று அப்பொழுதே அவர் அந்தராத்மா உணர்ந்து விட்டதோ என்னவோ!"

நாதன் ஒரு பெருமூச்சுடன் பேச்சை முடித்து விட்டு, மௌனத்தில் ஆழ்ந்தார்.

## 28. திடீர் வருகை

இரவு ஒன்பது மணிக்கு மேலிருக்கும்

சாந்திமதிநாதன் அவனுடைய அறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

எங்கும் அமைதி நிறைந்து நின்றது. திருநகரில் இரவு எட்டரை ஒன்பது மணிக்கெல்லாம் கனத்த அமைதி கவிந்துவிடும். சீக்கிரமே ஊர் அடங்கிவிட்டது போல் தோன்றும். வீதிகளில் வாகனங்களின் போக்கு வரத்து ஏழுமணிக்கே குறைந்துவிடும். ஆள் நடமாட்டமும் மெதுமெதுவாகக் குறைந்து, தெருக்கள் வெறிச்செனவிளங்கும். சுந்தரத்தின் வீடு இருந்த பகுதி ஊரின் ஒரு ஓரத்தில், ஒதுக்குப் புறமாக இருந்ததனால், இரவின் தனித்த சூழ்நிலை இதர வட்டாரங்களைவிடச் சீக்கிரமாகவே புலனாகிவிடும், இங்கு.

காந்தி ஏழு ஏழரை மணிக்கே இரவு உணவை முடித்துக்கொண்டு தங்குமிடம் வந்துவிடுவான். இரவுச் சாப்பாடு என்று பெரிதாக எதுவும் கிடையாது. சில இட்டிலிகளும் பாலும்தான். பிறகு வெகுநேரம் வரை படித்துக் கொண்டிருப்பான். தினசரி படுப்பதற்குப் பத்தரை மணி ஆகிவிடும்.

அன்றும் அவன் படிப்பில் ஈடுபட்டிருந்தான். அறைக்கதவை யாரோ விரலால் ''டொக்,டொக்' என்று தட்டும் ஓசை கேட்டது. அவன் கவனித்தான். மீண்டும் அதே சத்தம். ''யாரது?'' என்று கேட்டான் அவன்.

''கதவைத் திற. சீக்கிரம்!''

இது யாராக இருக்கும் என்ற ஐயத்தோடு எழுந்து கதவைத் திறந்து பார்த்தால், நடராஜன் நின்றுகொண்டிருந்தான்.

எதிர்பாராத அவனுடைய திடீர் வருகை காந்திக்கு வியப்பு அளித்தது; அதிக மகிழ்ச்சியும் தந்தது. ஆனால், அவன் அமைதியாகக் காணப்படவில்லை. அவனுடைய போக்கில் ஒருவிதப் பரபரப்பும் மர்மமும் கலந்திருந்ததாக நண்பனுக்குத் தோன்றியது.

காந்தி கதவைத் திறந்துவிட்டு அந்த இடத்திலேயே நின்று அவனை ஆச்சர்யத்தோடு பார்த்தான். அவன் அப்படி நிற்பதை நடராஜன் விரும்பாதது போல் அவனை ஒதுக்கித் தள்ளி விட்டு, வேகமாக உள்ளே புகுந்தான்: கதவை அடைத்தான்.

"என்ன, என்ன விஷயம்? எங்கேயிருந்து வருகிறாய்? இங்கு எப்போது வந்தாய்? இப்போது எந்த ஊரில் இருக்கிறாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்று காந்தி கேள்விகளை அடுக்கினான்.

"அதெல்லாம் சுலபமாகச் சொல்லிவிடக் கூடிய சங்கதிகளா என்ன! நான் எவ்வளவோ மாறிப் போனேன் என்றுதான் எனக்குத் தோன்றும். நான் பழைய நடராஜன் இல்லை" என்று சொல்லியவாறே அவன் ஈஸிச் சேரில் சாய்ந்தான். "இங்கே யாரும் வரமாட்டார்களே?" என்று எச்சரிக்கையோடு விசாரித்தான். அவன் பார்வை கதவின் பக்கமும், சன்னல் களின் புறமும் ஓடிஓடி மீண்டுகொண்டிருந்தது.

"ஏன் இப்படிப் பயப்படுகிறாய்?" என்று காந்தி கேட்டான்.

"காரியமாகத்தான். நான் தலைமறைவு வாழ்க்கை நடத்துகிறேன். இப்போது நான் தேசிய இயக்கத் தொண்டன் இல்லை. பொதுவுடைமைப் பிரசாரம் செய்து வருகிறேன். ஒரு முக்கிய விஷயமாக இந்த ஊருக்கு வந்தேன். வந்ததுதான் வந்தோமே, உன்னையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நினைத் தேன். நாதன்தான் நீ இருக்கிற இடத்தைச்சொன்னார்" என்றான்.

அவன் அவனுடைய இயல்பின்படி உணர்ச்சி வேகத்தோடும், இப்போது அவன் ஏற்றுக் கொண்டுள்ள புதிய தத்துவத்தில் தீவிரமான பற்றுதலோடும், ஆர்வத் தோடும்தான் பேசினான். வறுமை மிகுந்த நம் நாட்டுக் கும் உலகத்துக்கும் விமோசனமளிக்கக் கூடியது பொது வுடைமைக் கொள்கைதான் என்று அறிவித்தான்.

"காந்தீயத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. அதுவும் ஒரு மதம் மாதிரித்தான். பொருளாதார நலனுக்கு வகை செய்யும் அரசியல் திட்டமாக அது வளரவில்லை. காந்திஜீயின் பெயரைச் சொல்லியும், அவர் வளர்த்த கட்சியின் பலத்தைத் துணைகொண்டும் முதலாளிவர்க்கம் லாபம் பெற்று வருகிறது. வெற்றிகரமாகச் சுரண்டிக்

கொழுக்கிற ஒருசில முதலாளிகளைப் பார்த்து, நாமும் இப்படி வாழலாமே என்று ஆசைப்பட்டு, அநேக குட்டி முதலாளிகள் தோன்றி வருகிறார்கள்" என்று பிரசங்க பாணியில் பேசினான் நடராஜன்.

"முன்பு மக்களின் நலனுக்காகச் செயல்புரிந்த தேசபக்தர்கள் பெருகியிருந்த இயக்கத்தில் இப்போது சுயநலம் மிகுந்தவர்கள், பணத்துக்கு மேல் பணம் திரட்ட ஆசைப்பட்டுச் செயலாற்றுகிறவர்கள் பெருத்து விட்டார்கள். எம்.எல்.ஏ, எம்.பி. என்று சொல்லிக் கொண்டாலும், பலர் தங்கள் சொந்தக்காரர்களின் பெயரால் லாரி, பஸ் சர்வீஸ், ரோடு கான்ட்ராக்ட், பலரகமான தொழிற்சாலைகள் போன்றவற்றை நிறுவி லாபம் அடைந்து, புதுப் பணக்காரர்களாக வளர்கிறார் கள். நாட்டின் பெயரைச் சொல்லி மக்களின் உழைப்பை யும், வாழ்வையும் சுரண்டித் தாங்கள் சுகவாழ்வு வாழ முயல்கிற இந்தரக வர்க்கம் மக்களின் உயர்வுக்கும் வளமான வாழ்க்கைக்கும்எப்படி வழி அமைப்பார்கள்?" என்றும் அவன் கேட்டான்.

நண்பன் நடராஜனின் புதிய போக்கும் வேகமும் சாந்திக்கு முதலில் வியப்பு அளித்த போதிலும், அவன் இயல்புகளை நன்கு அறிந்திருந்ததால் "இவன் இப்படித் தான் செயலாற்ற முடியும்" என்று சகஜமாக ஏற்றுக் கொள்ள முடிந்தது அவனால்.

"சரி, ஏதோ பத்திரிகை ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னாயே, அந்த முயற்சி என்ன ஆயிற்று?" என்று காந்தி விசாரித்தான்.

"சுதந்தரப் போராட்ட காலத்தில் பத்திரிகைகள் மகத்தான பணி புரிந்தன. மக்களுக்கு விழிப்பு உண்டாக் கவும் அந்நிய ஆட்சியைஎதிர்க்கவும், அரசியல் உணர்வை வளர்க்கவும் உரிமைப்போரில் உற்சாகம் பெறச் செய்ய வும் பத்திரிகைகள் மிகுதியாகப் பாடுபட்டன. சுதந்திரப் போரில் பத்திரிகைகளுக்கு உரிய பங்கு முக்கியமானது தான். ஆனால், சுதந்திரம் கிடைத்த சில ஆண்டு களுக்குள்ளாகவே, பத்திரிகைத் துறையும்லாபம் தேடும்

பணநாயகர்களின் ஆதிக்கத்தில் சிக்கிவிட்டது. முதலாளிகள்தான் வெற்றிகரமாகப் பத்திரிகைகள் நடத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஒரே முதலாளி ஒன்பது பத்திரிகைகள் நடத்துவதும், நாட்டின் வெவ்வேறு இடங்களில் பத்திரிகைகள் நடத்துவதும், லாபகரமான வழி என்று கண்டு, அவ்விதமே செயல் புரிந்து, வருகிற சூழ்நிலையிலே, சிறு பத்திரிகைகள் அவற்றுடன் போட்டியிட்டு வளரமுடியவில்லை. முதலாளிகள் முதலாளிப் பத்திரிகைகளையே ஆதரிப்பார்கள். அதனால் விளம்பரங்கள் எல்லாம் பெரிய அளவில் நடத்தப்படுகிற பத்திரிகைகளுக்கே கிட்டுகின்றன. விளம்பர பலமும் பணபலமும் பெற்றுவிடுகிற பத்திரிகைகள் மக்களின் ஆதரவை எளிதில் பெறுவதற்காக ரசனைக் குறைவான, தரக்குறைவான விஷயங்களையும், கதைகளையும் சித்திரங்களையும் அதிகம் அதிகமாகத் தருகின்றன.

ஒழுக்கம், மொழி, வளர்ச்சி போன்ற உயர்ந்த விஷயங்களைவிட, சுலபத்தில் பணம் சேர்ப்பது எனும் நோக்கமே பத்திரிகைக்காரர்களை ஆட்டுவிக்கிறது இவர்களோடு போட்டியிட்டு, உயிர்வாழும் பலம் என் போன்றவர்கள் ஆரம்பிக்கக் கூடிய பத்திரிகைக்கு எப்படி வாய்க்கும்? அதனாலேயே நான் பத்திரிகை நடத்தும் எண்ணத்தை விட்டுவிட்டேன்" என்று நடராஜன் சொன்னான்.

எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் 'லெக்சரடிப்பது போல்' பேசுகிற வழக்கம் அவனிடம் வளர்ந்துவிட்டதைக் காந்தி புரிந்து கொண்டான். நண்பனிடம் கேலி பேசாமல் மௌனமாக அவன் பேச்சைக் கேட்டிருந்தான்.

"நீ பழைய மாதிரியேதான் இருக்கிறாய். அது சரியல்ல. மாறுதல் தேவை. மாறுதல் வளர்ச்சியின் அறிகுறி. உன் வாழ்க்கையில் இப்போது இரண்டு மாற்றங்கள் அவசியம் தேவை. நீ பொதுவுடைமைக் கட்சியில் சேரவேண்டும். அது அரசியல் வளர்ச்சிக்காக. சொந்த வாழ்க்கை நலத்துக்கும், மனிதாபிமான வளர்ச்சிக்கும்

நல்லது செய்யக்கூடிய மற்றொரு மாறுதல்—நீ கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்...'' என்று உபதேசத்திலும் ஈடுபட்டான் நடராஜன்.

அவன் மனசுக்குப் பிடித்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டானும். இரண்டு வருஷங்கள் ஆகின்றன. காதல் கல்யாணம் தான். அவள் ஒரு அலுவலகத்தில் பணிபுரிகிருள். அதுபோல் காந்தியும் நல்ல பெண்ணைகத் தேர்ந்து, மணம் புரிந்துகொண்டு. இல்லற வாழ்வின் சுக அனுபவங்களைப்பெற வேண்டும்'' என்று நண்பன் வற்புறுத்தினன்.

''பார்க்கலாம் பார்க்கலாம், இப்போது உனது நல்லெண்ணத்துக்கும் அருமையான யோசனைகளுக்கும் நன்றி'' என்று காந்தி கூறிச் சிரித்தான்.

''இனிமேல் நாம் எப்போ சந்திக்கப் போகிருேமோ! அடுத்த தடவை நான் உன்னை இப்படித் தனிநபராகக் காணக்கூடாது. மனைவி மக்களோடு கண்குளிரப் பார்க்கவே ஆசைப்படுவேன்'' என்று சொல்லி விடைபெற்றுச் சென்றுன் நண்பன்.

## 29. அலைகள்

காந்திமதிநாதன் கவனத்தில் எத்தனையோ விஷயங்கள் பதிந்தன. அவன் உள்ளத்தில் எத்தனை எத்தனையோ எண்ண அலைகள் விம்மிப் புரண்டு, வீழ்ந்து வந்தன.

புதிய புதிய அனுபவங்களைப் பெறுவதற்குக் காலமும், அவன் சேர்ந்திருந்த சூழ்நிலையும் துணைபுரிந்தன. அவன் வித விதமான மனிதர்களைச் சந்தித்தான். பலப்பல இடங்களுக்கும் போனுன். ரகம் ரகமான பேச்சுக்கள் அவன் காதுகளில் விழுந்தன. எவ்வளவோ காட்சிகளைக் கண்டன அவன் கண்கள். சுற்றுப்புறங்களும் வாழ்க்கை முறைகளும் புது தினுசாய்மாறி வருவதாக அவன் உணர்ந்தான்.

மாறுதல்களில், விரும்பி வரவேற்கத் தகுந்தனவும் இருந்தன. வேண்டாதனவும் மிகுதியாகவே கலந்து செழித்தன.

காந்தி சுந்தரத்துடன் பல நகரங்களுக்கும் போக நேர்ந்தது. அநேக சிற்றூர்களுக்கும் கிராமங்களுக்கும் போக வேண்டியிருந்தது.

முன்பு போக்குவரத்துக்கு வசதியான பாதைகள் இல்லாதிருந்த இடங்கள் எல்லாம் இப்போது நல்ல ரஸ்தாக்களையும், அடிக்கடி போய்வருகிற பஸ் வசதியையும் பெற்றிருந்தன. அநேகமாக எல்லாக் கிராமங்களும் எலெக்ட்ரிக் லைட் வசதிகளைப் பெற்றுவிட்டன என்று எண்ணவும் இடமிருந்தது. அதன் பயனாக ரேடியோக்களின் அலறலை எங்கும் எப்போதும் கேட்க முடிந்தது.

ஆனாலும், காந்திமதிநாதன் பார்த்த கிராமங்கள் பலவும் வறண்டு தரித்திரத் தோற்றம் காட்டுவதாகவே அவனுக்குப் பட்டன. அங்குள்ள மக்கள் வாழ்க்கையில் முன்பிருந்த செழிப்போ, மன நிறைவோ இல்லை என்று அவன் உணரமுடிந்தது.

அநேக கிராமங்களில் அடைத்த கதவுகளும் இடிந்து விழும் வீடுகளும் அதிகரித்து வருவதாக அவன் கருதினான். அருகாமையில் மில்லோ, சிமிண்ட் ஆலைபோன்ற தொழிற்சாலைகளோ ஏற்பட்டிருந்தால், சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களும் சுறுசுறுப்புடனும் பசையோடு விளங்க வகையுண்டு என்பதை அவன் கண்டான்

பாரதத்தின் நுரைஈரல் போன்றவை கிராமங்கள். தேனடை போன்ற கிராமங்களில் வசிக்கின்ற, தேனீக்கள் போல் உழைக்கின்ற, மக்கள்தான் உண்மையில் பாரத நாட்டையும் அதன் புராதனப் பெருமைகளையும் பாதுகாத்து வருகிறார்கள் என்று மகாத்மா காந்தியும், மற்றும் பல அறிஞர்களும் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். கிராமங்கள் உயர்வடையவேண்டும், விவசாயம் வளர்ந்தோங்க வேண்டும் என்று யார்தான் சொல்லவில்லை? ஆனால் கண்கூடாகக் காணக்கூடிய

உண்மை...நாட்டின் நிலைமை-மக்களின் போக்கு எவ்வாறு உள்ளது?

'கிராமங்களின் ஆத்மாவே மெலிந்து நலிந்து பாழ்பட்டுவிட்டது என்றே சொல்ல வேண்டும்.' இப்படி எண்ணினான் காந்திமதிநாதன்.

மில்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலை வாய்ப்புகள் கிட்டக்கூடிய இடங்களில் வசித்தவர்கள் உழைக்கக் கூடிய உடல் வலிமை உடையவர்கள் இயந்திரங்களோடு இயந்திரங்களாக மாறிவிடுவதிலேயே பெரும் விருப்பு கொண்டுள்ளனர். மாதம் தோறும் கைநிறையப் பணம் சம்பளமாகக் கிடைக்கும்; எட்டுமணி நேரம்தான் வேலை; போனஸ் உண்டு; வீடு வைத்திய வசதி போன்ற வேறு வேறு சில சலுகைகளும் கிடைக்கும். விவசாயத்தில், இதர கிராமத் தொழில்களில், இவை கிட்டுமா? இவ்வாறுதான் பலருடைய மனமும் எண்ணமிட்டு, பிழைக்கும் வழியை வகுத்துக் கொடுத்தது.

படிக்கும் ஆர்வம் என்பது கிராம மக்களிடையே குறைவாகத்தான் உள்ளது. உழைக்கும் இனத்தில் வந்தவர்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப்போல் கஷ்டப்படக்கூடாது என்றுதான் பிள்ளைகளைப் படிக்கவைத்து குமஸ்தா வேலைக்கோ எதற்கோ அனுப்புவதில் அக்கறை காட்டுகிறார்கள். அல்லது பம்பாய், கல்கத்தா போன்ற மாபெரும் நகரங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். அங்கே போய் தையல் வேலையோ, எதுவோ ஏற்று பிள்ளைகளும் மாதம் தோறும் பிறந்த ஊருக்குப் பணம் அனுப்புகிறார்கள்.

பணம்-இதுதான் வாழ்வின் ஜீவன்; வாழவைக்கும் அருமருந்து, மனித குலத்தை உய்விக்கும் அற்புத சக்தி. இதை எப்படியும் அடைந்தாக வேண்டும். அதற்கு நகரங்கள்தான் உதவும். இப்படி ஒரு எண்ணம் எல்லோரிடமும் ஏற்பட்டு, வளர்ந்து வருகிறது.

ஆகவே நகரங்களை நோக்கி வருவோர் தொகை அதிகமாகி, நகரத்தின் ஜனத்தொகை பெருகுகிறது. நகரங்களின் வசதிக் குறைவுகளையும் பொருட்படுத்தாது,

நகரங்களை முற்றுகையிட்டு அவதிப்படுவோர் தொகை சிறிது அல்ல.

நகரங்களில் வாழ்க்கை நடத்துகிறவர்கள் உண்மையில் வாழவில்லை. அவசரம், நெருக்கடி, பற்றுக்குறை, அதிகச் செலவு, கட்டுப்படியாகாத வருமானம், கடன், வீண் உழைப்பு என்ற சிக்கல்களில் மாட்டிக்கொண்டு காலவேகம் இழுத்த இழுப்பில் அலைபட்டுத் திண்டாடுகிறார்கள்.

உயிர்க் குலங்களின் வளர்ச்சிப் பரிணமத்தில், ஆரம்ப காலத்தில், வாழ்க்கை என்பது உயிரோடு இருப்பதற்கான போராட்டம் ஆகவே கருதப்பட்டது. அவ்வாறே இயங்கியும் வந்தது.

பார்க்கப்போனால், அந்நிலை மாறி விடவில்லை. அறிவு வளர்ச்சி, அனுபவ முன்னேற்றம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எல்லாம் ஏற்பட்டிருந்த போதிலும், இந்த நவீன காலத்தில்கூட, வாழ்க்கை என்பது உயிர் வாழ்வதற்கான போராட்டம் என்ற நிலைமையே நீடிக்கிறது. இப்போது, போராட்டத்தில் ஈடுபடுத்தப் படுகிற கருவிகள், கையாளப்படுகிற முறைகள் முதலியன மாறியிருக்கலாம். பணம்தான் முக்கியமான கருவி. பதவி, சாதி, படிப்பு போன்றவை துணைக்கருவிகள். மகாத்மா காந்திஜி வளர்த்த இயக்கமும் அதைச் சேர்ந்தவர்களில் பல பேரும் இதற்கு விலக்குகள் ஆகிவிடவில்லை. மாறாக, அந்த இயக்கத்தைச் சேர்ந்திருப்பதனால் ஆளும் கட்சி என்ற தகுதியும், அதனால் அதிகார பலமும் இருப்பதனால் வாய்ப்புகளும் வசதிகளும் அதிகமாகவும் சுலபமாகவும் கிடைக்கக்கூடும் என்று எண்ணிச் செயல் புரிகிறவர்கள் அதிகரித்து வருகிறார்கள். பணப்புழக்கமும் தாராளமாகச் செலவு செய்யும் வசதியும் பெருகியிருப்பது போன்ற ஒரு போலித்தன்மை நகரங்களில் காணப்படுகிறது. பணக் கஷ்டமும் விலை உயர்வும், பற்றுக்குறையும் உள்ளூர அரிக்கின்றன. இதனால், வாழ்க்கையில் அமைதியும் இல்லை. ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள், நாட்டுக்குச் சுதந்தரம் பெற்றுத்தந்த பிறகு புதுவாழ்வும் வளமும் நிறுவப்போவதாக லட்சியக்

கனவு கண்டவர்கள் வெறும் சொல் வீரர்களாகவும் கையாலாகாதவர்கள் ஆகவுமே காணப்படுகிறார்கள்...'

காந்திமதிநாதனின் சிந்தனை இந்த ரீதியில்தான் இயங்கியது.

மகாத்மாவின் நோக்கமும் லட்சியக் கொள்கைகளும் தவறானவை, கோளாறானவை என்று அவனால் கருத இயலவில்லை. அவரைப் போலவே, அவற்றல் நம்பிக்கையும் ஆழ்ந்த பற்றுதலும் கொண்டு, தீவிரமாகச் செயல் புரிந்தவர்கள்— உன்னதமான கொள்கைகளில் அசைக்க முடியாத பிடிப்புக்கொண்டு லட்சிய வாழ்வு வாழும் ஆத்ம பலம் பெற்றவர்கள் - நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும்தான் இருக்கிறார்கள். காந்திஜீயின் கொள்கைகளிலும் அவரது லட்சியங்களிலும் பற்றுதல் இல்லாத, நம்பிக்கை கொள்ள முடியாத, சுகம் விரும்பிகளும், சுலபப் புகழ் விரும்பிகளும், பணமோகிகளும் இஷ்டம்போல் செயல் புரியும் உரிமை பெற்று விட்டதனால் தான் கோளாறுகளும் குறைபாடுகளும் மலிந்து வருகின்றன.

மதுவிலக்கினால் நன்மையே விளையும் என்றார் மகாத்மா. குடி மனிதரை மிருகமாக்குகிறது; பல வழிகளில் தீங்கு விளைவிக்கிறது. பொருளாதாரத்திலும் கேடு உண்டாகிறது என்று அவர் எடுத்துக் காட்டினார். மதுவிலக்கு சட்டபூர்வமாக அமுலுக்கு வந்த பிறகு, நன்மைகள் ஏற்பட்டுள்ளன என்பதை எளிதில் உணரலாம். முன்பெல்லாம் பொது இடங்களில், முக்கியமான பகுதிகளில், கள்ளுக் கடைகளும், சாராயக் கடைகளும் இருந்து சுற்றுப்புறத்தைக் கெடுத்து வந்தன. எந்நேரமும் குடி வெறியர்கள் ரகளை செய்து வெறித்தனமாக நடந்து வந்தனர். நாகரிகம் மிகுந்த பெரிய நகரங்களில் கூட இவை சகஜமான காட்சிகளாக இருந்தன. இப்போது 'கள்ளச் சாராயம்' தயாரித்து, திருட்டுத்தனமாக விற்கிறவர்களும் குடிக்கிறவர்களும் எண்ணிக்கையில் அதிகமாகவே இருக்கலாம். இருந்த போதிலும், இத் தீமைகளைவிட அளவில் பெருகிய நன்மைகள் நாடு முழுவதும் பரவலாக ஏற்பட்டிருப்பதும் நன்கு புலனாகும்.

குடித்துக் கெட்ட குடும்பங்கள் அந்தக் காலத்தில் எத்தனை எத்தனையோ. உழைத்துச் சம்பாதித்தவர்கள் பணத்தைக் குடியில் நாசமாக்கினார்கள். அவர்கள் குடும்ப வாழ்க்கை அமைதியின்றி, மகிழ்ச்சியின்றி, சண்டை சச்சரவு மிகுந்து காணப்பட்டது. மதுவிலக்கு ஏற்பட்ட பின்னர், எத்தனையோ குடும்பங்கள் நல்வாழ்வு கண்டுள்ளன, கலாட்டாவும் குழப்பமும் இயல்பாக நில விய அனேக சூழல்களில் இப்போது வசதிகளும் சுகமும் கொலுவிருக்கின்றன. முன்பு நல்ல துணிமணிகளை, நகை நட்டுகளைக் காணமுடியாத நிலையிலிருந்த அநேக குடும்பங்களில் இப்போது அழகான ஆடைகளும். கவர்ச்சி அணிகலன்களும், ரேடியோவும் எலக்ட்ரிக் விளக்கும் அழகுறுத்துவதைக் காண முடிகிறது. நகரங்களில் மட்டுமல்ல; கிராமங்களில் கூட.

இவை போன்ற நல்ல சீர்திருத்தங்கள் காந்தீயத்தின் வெற்றியாகக் கொள்ளப்பட வேண்டியவை. ஆயினும், அவர் பெயரால் வளர்ந்து வந்த இயக்கத்தில் அவர் பெயரைக் கெடுக்கும் வகையில் நடந்துகொள்ளுகிறவர்கள் செயலோடும் செல்வாக்கோடும் வாழ முடிகிறதே! இதை எண்ணுகிறபோதுதான் காந்திஜிக்குத் தோல்வி என்று கணக்கிட நேர்கிறது.

இந்த விதமாகப் பேசியது அவன் அறிவு.

## 30. சில நிகழ்ச்சிகள்

காந்திமதிநாதனுக்கு எண்ணிப் பார்க்க எத்தனையோ விஷயங்கள் இருந்தன. ஆனால், நினைப்பதற்கு உரியவற்றில் வீடும் சொந்தக்காரர்களும் சேரவே இல்லை! அப்படி ஆசையோடு எண்ணுவதற்கு யார் இருந்தார்கள் அவனுக்கு?

அவன் அத்தை மகள் அன்னத்தை நினைவுபடுத்தி சிறு மகிழ்வு பெற்றிருக்கலாம். ஆனால் அன்னம் தன் அத்தான் காந்திமதியைப் பற்றி எண்ணி, ஆசை வளர்த்து, கனவுகள் கண்டுவந்த அளவுக்கு அவன் அந்தப்

பெண்ணைப் பற்றி எண்ணியதில்லை. அந்தக் காலத்திலேயே அதாவது, அவன் அம்மா உயிரோடிருந்து, அன்னம் அடிக்கடி வீட்டுக்கு வந்து சிரித்துப் பேசி விளையாடிப் பொழுது போக்குவதில் ஆனந்தம் கண்டு வந்த நாட்களிலேயே அவள்தான் அவனைக் கல்யாணம் செய்து கொண்டு, சுகமாக வாழலாம் என்று மனோராஜ்யம் கட்டி வந்தாள். காந்திமதிநாதன் சுயராஜ்யத்துக்குப் பாடுபடக் கிளம்பியதுமே அறியாப் பெண் அன்னத்தின் மனக்கோட்டை தவிடு பொடியாகி விட்டது.

கடைசித் தடவையாகக் காந்தி வீட்டிலிருந்து வெளியேறிய—வெளியேற்றப்பட்ட நாளில் அன்னத்தைப் பார்த்ததுதான் அதற்குப் பிறகு அவன் அவளைக் காண நேரிட்டதேயில்லை. அவளும் அவனைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

காந்தி அந்தப் பெண்ணைப்பற்றி எப்பவாவது அபூர்வமாக எண்ணியிருப்பான். நல்ல பெண். சமூகத்தில் நடைபெறுகிற மாதிரி, எவனோ ஒருவனுக்கு மணம் செய்யப்பட்டு. ஏதோ ஒரு ஊருக்கு அனுப்பி வைக்கப்படுவாள். வந்து சேருகிற கணவன் நல்லவனோ, கெட்டவனோ, அவள் சகித்துக் கொண்டும், சந்தோஷம் அனுபவித்தும், சண்டை பிடித்தும் அழுதும், குழந்தைகள் பெற்றும்—இப்படியாக எல்லாச் சராசரிப் பெண்களையும் போலவே அன்னமும் நாளோட்டுவாள். மாப்பிள்ளை வீட்டில் வாழ்வதும், அம்மா வீட்டுக்கு வந்து பெருமைப் பட்டுக்கொள்வதும், உறவினர் வீடுகளில் நிகழக்கூடிய விசேஷங்களுக்குப் போய் வருவதும்தான் அவளுடைய வாழ்வின் சிறப்புகளாக அமையும் என்றுதான் அவன் அன்னத்தைப்பற்றி எண்ணினான்.

இவ்விதம் நினைப்பதில் என்ன சுவாரஸ்யம் இருக்க முடியும்? அதனால், நாளடைவில் அன்னம் அவன் நினைவுப் பரப்பிலிருந்து மறைந்தே போனாள். அவளுக்குக் கல்யாணம் ஆகி விட்டது என்ற செய்தி மட்டும் என்றோ அவன் காதுகளில் வந்து விழுந்தது. 'சரிதான். நடக்க வேண்டிய காரியங்கள் ஒழுங்காக நடந்து கொண்டிருக்

கின்றன' என்றுதான் எண்ண முடிந்தது அவனால். அவன் சுபாவம் அது.

'இதெல்லாம் சாதாரண விஷயம். இதுக்கெல்லாம் மனசை அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை' என்று அவன் அவ்வப்போது குறிப்பிடுவான். அவன் தந்தை செந்தில்நாயகம் செத்துப் போனதைக்கூட காந்தி அப்படித்தான் ஒதுக்கி விட்டான்.

அவர் ஆளு நல்லாத்தான் இருந்தார். ஆனாலும் உள்ளுக்குள்ளேயே சீக்கு இருந்து ஆளைத் தின்று வந்திருக்கிறது. கப்புனு ஒரு நாள் அடித்து விட்டது!' இரண்டு நாள் படுக்கையில் கிடந்தார்; போய் விட்டார். காந்திக்குச் சொல்லி அனுப்பவுமில்லை. அவரே ஆள் அனுப்ப வேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறியிருந்தார். அவர் அப்படிச் சொல்லாமலே கண்ணை மூடிவிட்டால் கூட, அவருடைய இளைய மனைவியும் அவளைச் சேர்ந்தவர்களும் கர்ம சிரத்தையாக அவனுக்குத் தகவல் அனுப்புவது பற்றி எண்ணியிருக்க மாட்டார்கள். ''அவன் எதுக்கு? வந்து சொத்து கித்தென்று தகராறுக்குக் கிளம்பினாலும் கிளம்புவான். அவனாக் கிளம்பாவிட்டாலும், ஊரிலே இருக்கிறவங்க தூண்டி விடுவாங்க. அதெல்லாம் ஏன் வீண்வேலை?'' என்று சுலபமாக முடிவு கட்டியிருப்பார்கள்.

'சொத்துக்கு வாரிசு சிருஷ்டிப்பதற்கு' என்று திட்டமிட்டுத்தான் செந்தில்நாயகம், தமது வயோதிகப் பிராயத்தில், ஒரு இளம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டார். அவருடைய அந்த ஆசை நிறைவேறவில்லை. அந்தப் பெண்ணும் அவளைச் சேர்ந்தவர்களும், அவருடைய சொத்து வேறு எங்கும் போய்விடக்கூடாது என்று திட்டமிட்டு வாழ்ந்தார்கள். அவர் சாகப் போகிற காலத்தில் அவள், தற்காப்பு உணர்வோடு சகல சொத்துக்களையும் தன் பெயருக்கு எழுதி வாங்கிக் கொண்டாள்.

அதெல்லாம் நிகழ்ந்து ஒரு சில வருஷங்கள் ஓடி விட்டன. 'சமூக வாழ்வில் இப்படி எல்லாம் நடக்கத்தான்

செய்யும். இதில் எண்ணி மனம் குழம்புவதற்கு என்ன இருக்குது?' என்று ஒதுக்கி விட்டான் காந்தி.

அறிந்து போகப்போவது ஒன்றுமில்லை என்று நாம் சில விஷயங்களை ஒதுக்கிவிட விரும்பினாலும்கூட, அவை தாம் இருப்பதை எப்படியாவது நமக்கு உணர்த்திவிடத் தவறுவதில்லை. இந்த வகையில்தான் காந்தியின் வீட்டு விவகாரமும் இருந்தது. அதனை அறிந்தவர்கள் அவனுடைய தந்தை வீடு இருந்த தெருக்காரர், அல்லது வட்டாரத்தினர் யாராவது எப்பொழுதாவது அவனைச் சந்தித்துவிட்டால், அவனுடைய சுக சௌகரியங்களைப் பற்றி விசாரிப்பது வழக்கம். தொடர்ந்து,"எப்படி இருந்த குடும்பம்! எவ்வளவு கௌரமாக விளங்கிய வீடு. அதன் மதிப்பு இப்படியா சீர் குலைய வேண்டும்?" என்று அனுதாப முன்னுரை கூறுவார்கள். பிறகு அந்தச் செய்தியை அறிவிப்பார்கள்.

நேரடியாகச் சொல்லி விடுவார்களா? "உன் அப்பாவுக்குக் கடைசி காலத்திலே இப்படிப் புத்தி கெட்டுப் போக வேண்டாம். என்னவோ சொல்லுவார்களே? தன் முகத்துக்கு புத்தி கற்பிக்கவேண்டும் என்று தன்னுடைய மூக்கைத் தானே வெட்டிக் கொண்டானாம் ஒருவன்! அந்தப் புத்திசாலியின் காரியம் மாதிரித்தான் உங்க அப்பா செய்ததும் முடிந்திருக்குது. மகன் தன்னுடைய பெயரை, குடும்ப கௌரவத்தை எல்லாம் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டான், அவனுக்கு சரியானபடி பாடம் கற்பிக்கப் போகிறேன் என்று அவர் சொன்னார். உன் தாயார் இறந்த உடனேயே அவர் வேறொரு கல்யாணம் செய்து கொண்டார். அதன் மூலம் அவருடைய அந்தஸ்து, பெயர் எல்லாம் உறுதியாக நிலைநாட்டப் படும் என்று கனவு கண்டார். ஆனால் என்ன நடந்தது? சொத்துக்கு ஆசைப்பட்டு, கிழவனை மணந்துகொண்டு பெரிய வீட்டுக்கு ராணியாக வந்தவள் சுகம் தேடுவதில் ஆர்வம் காட்டலானாள். செந்தில்நாயகம் உயிரோடு இருந்தபோது எப்படியோ, தெரியாது. யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால் அவர் செத்த பிறகு, அம்மா ராச்சியம்தானே—சுயராச்சியம்! ஊரு பூராவும்

சிரிப்பாய் சிரிக்குது. கடையிலே கணக்கு எழுதிக்கொண்டிருந்தானும் ஒரு வாலிபப் பிள்ளையாண்டான். அவன் மேலே ராணியம்மாளின் கருணைக்கண் பதிந்து விட்டது. அவளுடைய ஆசை நாயகன் அவன்தான்!'' இந்த விதமாகச் சுற்றி வளைத்து, கதைபோல் பேசுவார்கள்.

காந்திக்கு இவ்விவகாரம் வேதனையே தந்தது. ''எப்படியும் போகட்டும்! அவள் இஷ்டம்போல் சுகமாக வாழட்டும். வாழ வேண்டும், என்று ஆசைப்பட்டுத்தானே அவளைக் கல்யாணம் செய்த பெரியபிள்ளை தன் சொத்து வீடு வாசல் எல்லாவற்றையும் அவளுக்கு அளித்து சௌகரியம் பண்ணிக் கொடுத்திருக்கிறார்! அவள் அனுபவிக்கப் பிறந்தவள், வாழ வந்தவள்; அனுபவித்து வாழ்கிறாள்'' என்று அறிவித்து. பேச்சைமுடித்து விடுவான். தனிமையில் அவன் உள்ளம் சோகத்தால் சாம்பும்.

''பொது நலத்துக்காக, நாட்டின் சேவைக்காக, நான் உழைக்கக் கிளம்பியபோது எனது போக்கினால் அவருடைய மதிப்பும் மரியாதையும் குறைந்து விட்டதாக ஆத்திரப்பட்டார் அவர். இப்போது என்மீது பழி தீர்த்துக்கொள்ள ஆசைப்பட்டு. ஒரு இளம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள அவருடைய பண வெறி அவரைத் தூண்டியது. பணத்துக்கும் சொத்துக்கும் ஆசைப்பட்டு வந்த பெண், கணவன் பெயருக்குக் களங்கம் உண்டாக்கி விட்டாள். செந்தில்நாயகத்தின் குல கௌரவமும் சுயமரியாதையும் பாதுகாக்கப்பட்ட விதம் தான் என்னே என்னே!'' என்று கசப்போடு சிரிக்கும் அவன் மனக்குறளி.

இதுபோன்ற சமயங்களில் அவனுக்கு ஒரு பெண்ணைப் பயன்படுத்தி, வாழ்க்கை வசதிகளைத் தேடிக்கொள்வதில் முனைந்திருந்த டிரைவர் சோமுவின் நினைவும் வரும். பணமும் சௌகரியமான வாழ்க்கையும் இல்லாதவர்களும் இந்த வழியைக் கையாள்கிறார்கள்; அவர்களுடைய பசி ஒரு ரகமானது. வாழ்க்கை வசதிகளும் பணமும் மிகுதியாகப் பெற்றவர்கள்கூட இப்படி ஒரு போக்கை மேற்கொள்வதும் சமூகத்தில் சகஜமாகத்

தான் இருக்கிறது. இவர்களுடைய பசி வேறு ரகமானது! பசிகள் பலவிதம்; அவை மனிதரை எவ்வாறெல்லாமோ ஆட்டி வைக்கிறது.—இதுவும் காந்தியின் சிந்தனைதான்.

காந்திமதிநாதன் அன்னத்தை எதிர்பாராத விதமாகச் சந்திப்பதற்கு காலம் துணை புரிந்தது.

ஒரு நாள் சுந்தரத்தை வழி அனுப்புவதற்காக அவன் ரயில் நிலையம் சென்றான். அவர் பிரயாணமான பிறகு, அவன் அவசரம் இல்லாமல் அங்குமிங்கும் மெது நடை போட்டு, பார்வைக்கு விருந்தளித்துக் கொண்டிருந்தபோது, பிளாட்பாரத்தில் பெட்டியோடும் இரண்டு குழந்தைகளுடனும் காத்திருந்த ஒரு பெண் அவன் கவனத்தைக் கவர்ந்தாள். அவனையே அவள் கூர்ந்து நோக்குவதையும், அவனைப் பார்த்துச் சிரிப்பது போல் காட்சி தந்ததையும் அவன் கவனித்தான் 'யார் இது? எங்கோ பார்த்த முகம்போல் தோணுதே' என்று அவன் மனம் குறு குறுத்தது.

அவனை நோக்கி அவள் சிரித்துக் கொண்டே வந்தாள் "அத்தான்! என்ன, சௌக்கியமா?" என்று கேட்டவுடன்தான், 'அடாடா, அன்னமல்லவா! என்னமாக மாறிப் போனாள்!' என்று அவன் உணர்வு விழிப்புற்றது. முகம் மலர, "அன்னம், எங்கே போகிறே? உன்னைப் பார்த்து ரொம்ப வருஷமாச்சுதே!" என்றான்.

"நீங்கதான் என்னை அடியோடு மறந்து விட்டீர்கள். அன்னம் இருக்கிறாளோ செத்தாளோ என்ற கவலைகூட உங்களுக்கு ஏற்பட்டிருக்காது!" என்று மனக்குறையோடு பேசினாள் அன்னம்.

"நீ சௌக்கியமாக, குழந்தைகளோடும் மாப்பிள்ளையோடும் இருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். நேரிலே பார்ப்பதில்லையே தவிர, உன்னைப்பற்றி விசாரிக்காமலா இருப்பேன்" என்று. அவள் சிறிது திருப்தி கொள்ளட்டுமே எனும் எண்ணத்துடன், காந்தி கூறினான்.

"ஊம் இவ்வளவாவது சொன்னீர்களே!" என்று வறட்டுச் சிரிப்புடன் தெரிவித்தாள் அன்னம். "அத்தை

உயிரோடு இருந்திருந்தால், எவ்வளவோ நல்லாயிருக்கும். ஊரிலே ஏற்பட்டுள்ள அவச் சொல்லுக்கு இடமே வந்திருக்காது··· ஊம்...···அத்தை சொல்வாளே, விதி நாதன் படுத்துகிற பாட்டுக்கு நாம் என்ன செய்ய முடியும் என்று. அதைத்தான் நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்!'' என்றாள்.

அவள் செந்தில்நாயகத்தின் இளம் மனைவியையும், அவர் வீட்டின் பெருமை சரிந்து விட்டதையுமே குறிப் பிடுகிறாள் என்பதை அவன் புரிந்துகொண்டான். அந்தப் பேச்சை வளர்க்க மனம் இல்லாதவனாய், ''அது சரிதான்!'' என்று இழுத்து ''உன் சேமலாபங்களைப் பேசுவோம். நீ குறை இல்லாமல் வசிக்க வசதிகள் இருக் கின்றதல்லவா? குழந்தைகள் நன்றாக இருக்கிறார்களா?'' என்று விசாரித்தான். குழந்தைகளிடம் பேச்சுக் கொடுத்து, விளையாட்டுகள் காட்டி, சந்தோஷப்படுத்த முயற்சித்தான்.

குழந்தைகள் வெட்கமும் கூச்சமும் மிகுதியாகப் பெற்றிருந்தன. யாரோ அந்நியனை அவன் செயல்கள் அவற்றுக்கு உற்சாகம் தரவில்லை. பெரிய குழந்தை அழ ஆரம்பித்து விட்டது. அதைச் சமாதானம் செய் வதற்கு அன்னம் பெரும்பாடு பட வேண்டியிருந்தது.

''அப்போ நான் வாறேன். உன்னைத் திடீர்னு சந்தித்ததில் இரட்டிப்பு சந்தோஷம்'' என்று காந்தி சொன்னான்.

''இப்படி ஒரு சந்தர்ப்பம் வராமல் போயிருந்தால், நாம் எங்கே சந்தித்திருக்கப் போறோம். உங்களைப் பாராமலே தான், அத்தை மாதிரி, நானும் சாக நேரிட் டிருக்கும்···'' அவள் இதய வேதனையோடு பேசினாள். அவள் கண்களில் நீர் தேங்கியது.

''யார் யாருக்கு எப்படி எப்படி என்று வாழ்க்கை விதிக்கப்பட்டிருக்கிறதோ அதன்படிதான் வாழவேண் டும். வேறுவிதமாக வாழ முயன்றாலும் முடியாது

என்றான் காந்தி. ''எங்கிருந்தாலும் நன்றாக, சந்தோஷமாக வாழவேண்டும். அதுதான முக்கியம்'' என்று கூறி, அவளிடம் விடைபெற்றுக் கொண்டு, தன் வழியே நடக்கலானான்.

## 31. திடீர் தீர்மானம்

காந்திமதிநாதன் திடீர் முடிவு செய்து விட்டான். சுந்தரத்தின் தொடர்பை, அவரிடம் வேலை பார்த்து அவர் வீட்டில் தங்கியிருக்கும் வசதியான நிலையை, விட்டுவிடுவது என்று. அதற்குப் பிறகு என்ன செய்வது? எங்கே போவது? எங்கு தங்குவது? இவை போன்ற முக்கிய பிரச்னைகள் அவ்வேளைக்கு அவனை அச்சுறுத்தவில்லை. 'இந்த இடம் நமக்கு இனிச் சரிப்படாது!' என்று அவன் உணர்ந்தான். இச் சூழ்நிலையை விட்டு விலகிச் செல்வதுதான் நல்லது என்று வழிகாட்டியது அவன் மனம். உணர்ச்சி மீறிச் செயல்புரிகின்றவன் தானே அவன்!

இத்தனைக்கும் சுந்தரம் அவன் விஷயத்தில் குறை எதுவும் வைக்கவில்லை. அவனுக்கு மதிப்புக் கொடுப்பதை அவர் குறைத்துக் கொள்ளவுமில்லை. அவனை ஒரு நண்பன் மாதிரி அவர் நடத்தி வந்தார். ஆனால் அவருடைய போக்குகள் அவனுக்குப் பிடிக்கவில்லை.

முக்கியமாக அன்று நடந்த சம்பவம் — சுந்தரம் சொந்த அலுவல்மீது வெளியூர் சென்று திரும்பிய பிறகு, திருநகரில் ஒரு பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்தார். பாராட்டு அவருக்கு அல்ல! பிரசங்கி புன்னைவனம் அவர்களுக்குத் தான்.

அவருடைய தயவும் சேவையும் சுந்தரத்துக்குத் தேவைப்பட்டன. 'ஆள் தலையில் ஐஸ் வைக்கும் வகையில் தான்; பிரசங்கியாரின் ஏதோ ஒரு பிறந்த நாளை சாக்காகக் கொண்டு, ஒரு விழாவுக்குத் திட்டமிடப்பட்டது. சுந்தரம்தான் முன்னின்று முயற்சி செய்தார். செலவுகளையும் ஏற்றுக்கொண்டார்.

விழாவின்போது புன்னைவனத்தைப் பலரும் பாராட்டினார்கள். சுந்தரமும் அளவுக்கு அதிகமாகவே புகழ்ச்சி மலர்களைத் தூவி அவரைக் 'குளிப்பாட்டினார்' பிரசங்கியாரும் சுந்தரத்தைப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினார்.

இந்தப் பரஸ்பர முகஸ்துதியும் விழாவும் தகுதியற்ற, தேவை இல்லாத விளம்பர வெளிச்சமாகவே தோன்றியது காந்திக்கு. அவன் உள்ளத்தில் ஒருவிதக் கசப்பு உணர்வு படர்ந்தது.

தங்கள் 'சுயப் புராணங்களை' டமாரம் அடித்துக் கொள்ள, பணம் செலவு செய்து அவரவர்களே ஆடம்பரமாக நடந்து ஆனந்தப்பட்டுக் கொள்வதை விட, தேவையும் தகுதியும் உடையவர்களுக்கு உதவி செய்வது பயன் உள்ளதாக அமையும் என்று அவன் கருதினான்.

பேச்சுகள் முடிந்த பிறகு, ஒரு விருந்து நிகழ்ந்தது. குறிப்பிட்ட சிலரே அதற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். சுந்திரத்தின் பெரிய வீட்டில், தனியான ஒரு பகுதியில் அவ்விருந்து நடைபெற்றது. தடபுடலான சாப்பாடு தான். அச்சமயம் உயர்ந்த ரக மதுவும் வழங்கப் பட்டது.

இது காந்திமதிநாதனின் உள்ளத்தை வெகுவாகப் பாதித்தது. யார் யாரோ' திருட்டுச் சாராயம் குடிக்கிறார்கள்; அநேகர் பர்மிட் வாங்கிக் கொண்டு குடிக்கிறார்கள். அவற்றை எல்லாம் விட மோசமானதாகவும், தர்மம் கொள்கை முதலியவற்றுக்கு விரோதமானதாகவும் அவனுக்குப் பட்டது சுந்தரத்தின் செய்கை. அவர் இவ்விதம் செயலாற்றுவார் என்று அவன் எண்ணியதே இல்லை. அவன் மனம் அதைக் குறை கூறியது. எனினும், அவரைக் கண்டித்துப் பேச அவனுக்குத் துணிச்சல் இல்லை.

விருந்து முடிவதற்குப் பதினொரு மணி ஆகிவிட்டது. அதன் பிறகும் அவர்கள் ஓய்வு பெறவில்லை. பலர் விடைபெற்றுக் கொண்டுபோன பின்னர், ஒரு அறையில் சீட்டுக் கச்சேரி ஆரம்பமாயிற்று. சுந்தரமும் ஆட்டத்தில்

கலந்துகொண்டார். பணம் வைத்துத்தான் விளையாடினார்கள் அவர்கள். அங்கு வெறும் சில்லறைக் காசுகள் புரளவில்லை. ஐந்தும் பத்துமாக நோட்டுகள்தான் கைமாறிக் கொண்டிருந்தன.

* * *

காந்திமதி நாதன் சீக்கிரமே தன் அறைக்குப் போய்விட்டான். படுக்கையில் விழுந்து கிடந்தபோதிலும் அவனுக்கு உறக்கம் வரவில்லை. புனிதமான லட்சியத்துக்குப் பாடுபட்ட ஒரு மாபெரும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், இவ்வளவு தரக் குறைவாக நடந்து கொள்கிறார்களே என்ற வேதனை அவனுள் குடைந்து கொண்டிருந்தது. நல்லவர்போல் ஊரார் கண்முன்னே காட்சி அளிக்க ஆசைப்படுகிற சுந்தரம் பொது வாழ்விலும் அந்தரங்கத்திலும் குறைபாடுகள் உடையவர்தான் என்பதை அவன் நாளடைவில் உணர்ந்து வந்தவன் தான். ஆயினும் இவ்வளவு மோசமானவராக இருப்பார் அவர் என்று அவன் எண்ணியதே இல்லை.

அன்றைய நிகழ்ச்சிகளின் சிகரம்போல் அமைந்தது மற்றுமொன்று.

இரவு கனத்துத் தொங்கியது. சுற்றுப்புறம் எல்லாம் சவ உறக்கத்திலும், சுடுகாட்டு அமைதியிலும் ஆழ்ந்து கிடந்தன. சீட்டாடியவர்களின் கூச்சலும் கும்மாளியும்கூட, படிப்படியாய் ஒடுங்கி, அமைதி புகுந்து விட்டதாகத் தோன்றியது.

காந்தி சிறிது கண்ணயர்ந்திருக்கலாம். ஆனாலும் அசத்தும் தூக்கம் அவனை ஆட்கொள்ளவில்லை. விழிப்பதும் கண்மூடிக் கிடப்பதுமாயிருந்த அவனுக்கு, "மணி என்ன இருக்கும்? ஒரு மணி இருக்குமா?" எனும் சந்தேகம் குறுகுறுத்தது.

அவன் எழுந்து, சன்னல் வழியாக வெளியே பார்த்தான். நிலவு அமுத ஒளியால் உலகைக் குளிப்பாட்டிக்

கொண்டிருந்தது. கட்டிடங்கள், வெறும் வெளி, அசையாத மரங்கள் எல்லாம் புதுமைக்கோலம் பூண்டு திகழ்ந்தன. அம்மோகனப் பேரொளியிலே, ஏதோ அதிசயமாக சொப்பனபுரியைப் பார்ப்பதுபோல அவன் ரசித்து வியந்துகொண்டிருந்தான். "இவ்வளவு அற்புதமான அழகுக் காட்சியைக் கண்டு வியக்க மனிதர்களுக்குக் கொடுத்து வைக்கவில்லையே! எல்லோரும் உறக்கத்தில் உணர்விழந்து கிடக்கின்ற நிசி வேளையில் அல்லவா இயற்கை இவ்வாறு தன்னை அழகுபடுத்திக்கொண்டு கொலுவிருக்கிறது!" என்று அவன் நினைத்தான்.

அந்த நினைப்பு தவறானது என்று சுட்டுவதுபோல, சிரிப்பொலியும் பேச்சுக் குரலும் அவன் காதில் பட்டன. அருகில்தான் எழுந்து ஒலித்தன அவை. அவன் சிரமப்பட்டு எட்டி எட்டிப் பார்க்கவும் அவன் கண்கள் உண்மையைக் காண முடிந்தது.

இரண்டு பெண்கள் இளம் வயதினர்தான். முன்னும் பின்னுமாக நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களோடு...

ஒருத்தி தோள்மீது கையைப் போட்டபடி உல்லாசமாக நடந்தார் புன்னைவனம். இன்னொருத்தியின் இடையில் கைவளைத்து அவளை அருகே இழுத்துத் தன்னோடு சேர்த்தவாறு, ஜாலியாகப் போனார் சுந்தரம். புன்னைவனம் நகைச்சுவையோடு ஏதோ சொல்லவும் தான் அங்கு சிரிப்பு வெடித்தது.

"அனுபவிக்கிறார்கள்! நிலவு மய இரவை. அவரவர்கள் ரசனைக்குத் தகுந்தபடி அனுபவிக்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்!" என்று கிண்டலாகக் குறிப்பிட்டது காந்தியின் உள்ளம்.

அவ்விரண்டு பெண்களையும் அவன் முன்பே பார்த்திருப்பதாகத் தோன்றியது. கூர்ந்து கவனித்தான். ஆமாம்; நினைவு வந்து விட்டது. புன்னைவனம் வீட்டில் தான் பார்த்தான். ஒரு சமயம் சுந்தரத்தோடு அங்கு போயிருந்தபோது அவர் அங்கிருந்த அப் பெண்களை அறிமுகம் செய்து வைத்தார். "நல்லவங்க. சிரமப்படு

றுங்க. சமூக சேவை, அது இது என்ற எங்காவது சான்ஸ் வந்தால், இவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கலாம். உங்க தயவுவேண்டும். இவங்களை நீங்கள் நல்லாப் பயன் படுத்திக்கொள்ளலாம். எல்லா வழிகளிலும்!'' என்று பிரசங்கியார் சொன்னார். உள்ளே ஒரு அர்த்தம் வைத்துத்தான் பேசினார். சுந்தரம் புரிந்துகொண்டு சிரித்தார். அப்பெண்களும் சேர்ந்து சிரித்தார்கள்.

''இன்று அவர்கள் பயன்படுகிறார்கள்! பயன் படுத்தத் தயாராக இருப்பவர்கள் உதவி, தயவு என்ற பெயரில் அருள் புரிகிறார்கள். அனுபவிக்கிறார்கள்!'' என்று குத்தலாகக் குறிப்பிட்டது, காந்தியின் உள்ளம். 'சீ' என்ன மனிதர்கள்! 'பொது வாழ்வு மனித சேவை என்பதெல்லாம் போலித்தனமானது, ஏமாற்றும் வேலை என்றல்லவா கொள்ளவேண்டியிருக்கிறது. இவர்களைப் போன்றவர்களைப் பார்க்கிறபோது' என்று கொதித்தது.

''மனிதரே போல்வர் கயவர்.' அயோக்கியர்களும் நல்லவர்கள்போல் காட்சி அளிப்பதுதான் காலாகாலமாக நடந்து வருகிறது. இவர்கள் வெற்றிகரமாக வாழவும் முடிகிறதே! எந்த எந்தக் காலத்தில் எத்துறைமேலோங்கிச் சிறப்புறுகிறதோ, அங்கெல்லாம் விரைவிலே வேகமாக, இவர்கள் புகுந்து விடுகிறார்கள். இவர்களது ஆதிக்கம் வலுத்து விடுகிறது. மதம், கலை, தேசியம் எங்கும், எல்லாத் துறைகளிலும்தான். ஆரம்பத்தில் புனிதத் திருப்பணியாய், மக்களின் வாழ்வை மாண் புறுத்தும் நற்பணியாய், தனி மனித உயர்வுக்கு வழி செய்யும் லட்சியப் பணியாய் தொடங்குபவைதான் எல்லாம். ஆயினும் காலப்போக்கிலே, பெரும்பாலரின் செய்கையால், சுயநல ஆசையால் இவையும் பிழைக்க வழி செய்யும் பிசினஸ் ஆக மாறி விடுகின்றன. மகாத்மா காந்திஜீ வழிகாட்டிய அவருடைய ஆத்ம பலத்தால் கவர்ச்சிக்கப்பட்டு லட்சிய வேகம் பெற்ற உண்மைத் தொண்டர்கள் போற்றி வளர்த்த பலம் பொருந்திய இயக்கம், மனிதரின் சிறுமைப் போக்கினால், லாப நோக்கினால், பதவி மோகத்தால், அதிகார ஆணவத்தால் பலவீனம் அடைந்து விட்டது; மக்களின் நன்மதிப்பை இழந்துவிட்டது'' என்று அவன் சிந்தனை அறிவித்தது.

அவன் அமைதியற்று, பல பல எண்ணி நின்றான். அப்பொழுதுதான் அவனுக்கு ஒரு தீர்மானம் பிறந்தது. 'மனசுக்குப் பிடிக்காத இடத்தில் இருந்துகொண்டு, உணர்வு குழம்பி, உள்ளம் குமைந்து, அமைதி இழந்து பொழுது போக்குவதைவிட, பல இடங்களுக்கும் போய் ஊர்களைப் பார்த்து, நாட்டு மக்களின் வாழ்வைப் புரிந்துகொள்வது நல்ல காரியம் ஆகும்' இந்த எண்ணம் தோன்றியவுடன், அவன் புதிதாக ஞானம் பெற்றவன் போலானான்.

"சுந்தரத்திடம் தன் மனசைத் திறந்து காட்டமுடியாது. இந்த ஊரைவிட்டு வெளியேறி, நாடோடி மாதிரிச் சுற்றப் போகிறேன் என்று சொன்னால் அவர் அங்கீகரிக்கவே மாட்டார். அவரிடம் நேரில் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறுவதே நல்லது" என்று அவன் முடிவு செய்தான். தனது முடிவை அறிவித்து, சுந்தரத்துக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு இருளோடு இருளாக அந்த வீட்டை விட்டு வெளியேறினான் காந்திமதிநாதன்.

அவனிடம் சிறிதளவு பணம் இருந்தது. 'பஸ்ஸிலும், ரயிலிலும், காசு இருக்கிறவரை, பிரயாணம்செய்யலாம். அதன் பிறகு, நடந்து நடந்தே போகலாமே' என்று அவன் எண்ணினான். "ஏன் போகக் கூடாது? நடந்து நடந்தே நாடு சுற்ற முடியாதா என்ன? காந்திஜீயின் உண்மையான சீடராக வாழ்ந்து காட்டும் விநோபாஜீ நடக்கவில்லையா?" என்று கேட்டுக்கொண்டது அவன் மனம்.

## 32. இதய ஒலி

காலம் ஓடுகிறது. மக்களின் வாழ்க்கையில் பல சோதனைகளை வீசியவாறே, கண்மூடித்தனமாக அது ஓடிக் கொண்டிருக்கிறது.

மனிதர்கள் வாழ்வில் எதிர்ப்படும் தோல்விகளையும் வேதனைகளையும், வறட்சிகளையும், வெறுமைகளையும்,

ஏமாற்றங்களையும் சகித்துக் கொண்டிருக்கவும், பிறகு அவற்றை மறந்துவிடவும் காலம்தான் துணைபுரிகிறது.

காலம் மக்களைச் செயலற்றவர்கள் ஆக்குகிறது; செயலூக்கம் பெற்றுத் தீவிரமாய் இயங்கவும் அதுவே தூண்டுகிறது.

மக்கள் தான்-தமது-தங்களுடைய என்ற உணர்வில் செயல்புரிந்து, தங்கள் வீட்டை வளப்படுத்தி, தங்களைச் சேர்ந்தவர்களை வாழவைப்பதில் ஆர்வம் காட்டுவதை எடுத்துக்காட்டுகின்ற காலம், வேளைவரும்போது அவர்கள் நாட்டை மறந்து விடுவதில்லை என்று நிரூபிக்க விரும்புவது போலவும் சந்தர்ப்பங்களை விளைவிக்கிறது.

நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டுகொண்டிருந்த அந்நியருடன் போராடி உரிமை பெறுவதில் உற்சாகம் காட்டிய மக்கள், வேறு அந்நியர் நாட்டை அடிமை கொள்ளத் திட்டமிட்டுச் செயலாற்றத் துணிகிறபோது சோர்வுற்றுச் சோம்பியிருக்கமாட்டார்கள். இதை விளக்க விரும்பியது போலும் காலம்!

நாடெங்கும் சுற்றித் திரிய மனம்கொண்டு கிளம்பிய காந்திமதிநாதன், சிறிது காலத்திலேயே, இவ்வுண்மையை உணர்ந்துகொண்டான்.

நாடு பிடித்துத் தன் நாட்டின் வளத்தையும் வலிமையையும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று வெறிபிடித்துப் படை எடுக்கத் துணிந்தது, நண்பனாய் நடித்துப்பின் பகைவன் எனக் காட்டிக்கொண்ட சீனா.

பாரத நாட்டிலே பெரும் உணர்வு விழிப்பு. நகரங்கள்தோறும் மக்களின் அணிவகுப்பு. எதிர்ப்பைக்காட்டும் பகைவன்மீது வெறுப்பைக் கொட்டும்-வீர முழக்கங்கள். ஆண்களும் பெண்களும் நாட்டுப் பற்று மங்கிவிடவில்லை என்று நிரூபிக்கும் செயல் மலர்ச்சி-இவற்றை காந்திமதிநாதன் கண்டான்.

அவனது உணர்வு கிளர்ந்தது. உற்சாகம் பொங்கியது. அவனும் பல ஊர்வலங்களில் கலந்து கொண்

டான். உணர்ச்சி வேகத்தோடு, எதிர்ப்புக் கோஷங்களை ஓங்கிக் கூவினன்.

அவ்வேளைக்கு அவனுக்கு இவை எல்லாம் ஊக்கமும் உவகையும் தந்தன. எனினும் "இவை மட்டும் போதா. இன்னும் உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டும்" என்று தூண்டியது அவன் அறிவு.

பலப்பல வருஷங்களுக்கு முன்பு பாரதமாதாவின் சேவைக்காகத் தன்னைத்தானே தொண்டனுக அர்ப்பணித்துக்கொள்ளத் துணிந்த சந்தர்ப்பம் அவன் உள்ளத்தில் மின்னலிட்டது. தன்னை அவ்வாறு செயலுக்குத் தூண்டிய நண்பன் நடராஜனின் நினைவு வந்தது.

"அவன் எங்கிருந்தாலும் இப்பொழுதும் சும்மா இருக்க மாட்டான்" என்றது காந்தியின் மனம். அவன் என்ன செய்யத் துணிவான் என்ெறுரு கேள்வியும், அதற்கு ஒரு பதிலும் அவன் உள்ளத்தில் ஒலி செய்தன.

"ஆமாம். அதுதான் சரி. நானும் அவ்விதமே செய்வேன்" என்று தீர்மானித்தான் காந்தி. நாட்டின் பாதுகாப்புக்குப் போராடுவதற்கு தங்கள் உழைப்பை, உடலை, உயிரையே உவந்து தர முன்வந்த பலப்பல பாரத புத்திரர்களைப் போல அவனும் ராணுவத்தில் சேர்ந்து போரிடச் சென்றுன்.

"சுதந்திரம் நமது பிறப்புரிமை" என்று கோஷித்தார்கள்—அந்தக் காலத்தில். அதில் அவன் குரலும் கலந்திருந்தது.

"சுதந்திரம், அதைக் காப்பது நம் கடமை" என்ற வீரர் குரல் ஒலிக்கத் தொடங்கியிருந்தது இப்போது. காந்திமதிநாதன் ஆத்ம பூர்வமாகத் தன் இதய ஒலியைக் கலந்தான் இதிலே.